# எக்சைல் 84

84 ஏப்பிரலில் எனக்கு குருட்டுப் பூனை இருட்டில் பாய்வது போன்றது இந்தப் பயணம். நாட்டை விட்டு வெளியேறும் பலர் வியாபாரம், உல்லாசப்பணம் முதலான காரணங்களால் பிரியும் போது அந்தப்பயணம் உணர்வு கலந்தது அல்ல. ஆனால் நான் இப்போது வெளியேறும்போது எனது நாடு, மக்கள், உறவினர் முதலான பந்தங்கள் அறுபடுகிறது. எட்டு மாத கர்ப்பிணியான மனைவியையும் இரண்டு வயதே நிரம்பாத மகனையும் விட்டு எதற்கு பரதேசம் போகிறோம் என்பது தெரியாமல் எனது பயணம் தொடங்குகிறது.

தலைமன்னாரில் இருந்து இராமேஸ்வரம் செல்லும் கப்பலின் மேல் தட்டில் என்னுடன் மேலும் சிலர் இருந்தார்கள். அவர்கள் கொண்டு வந்த மூட்டை முடிச்சுக்கள் அவர்களை மலையகத்தில் இருந்து வந்தவர்களாக அடையாளம் காட்டியது.

கண்ணுக்கு எட்டியதாகவிருந்த மன்னார் கடற்கரையை முற்றாக மறையும் வரையும் தொடர்ச்சியாக பார்த்துக் கொண்டிருந்தேன். கலங்கிய கண்களும் கனத்த இதயமும் கொண்டவனாக மனதை அசைபோட்டேன். மறுபக்கம் கண்ணுக்கு எட்டியவரையும் நீலக் கடலாகத் தெரிந்தது பாக்கு நீரிணை.

எவருக்கும் நாட்டைவிட்டு வெளியேறுவது என்பது இலகுவான விடய மல்ல. சுற்றம், நண்பர்கள் என்ற புறக்காரணிகளோடு அனைத்திலும்

*வெறுப்பை ஏற்படுத்தவேண்டும் ஆனால் அது எனக்கு சாத்தியம் அல்ல, நாம் இருக்கும் நாட்டை வெறுப்பது என்பது. அதிலும் அரசாங்க வேலை. மனைவிக்கு வீட்டுக்கு பக்கத்தில் வேலை. பிள்ளைகளைப் பார்க்க மாமா, மாமி என சகல வசதிகளோடு இருந்த எனக்கு இந்தியப்பயணம் எனக்கே புரியாத புதிராக இருந்தது. எனக்கே புரியாதபோது எனது அம்மா, சகோதரங்களுக்கோ மனைவி, மாமா, மாமிக்கோ எப்படிப் புரியும்?*

*மதவாச்சியில் 83 இனக்கலவரத்தின்போது வேலை செய்துவிட்டு அதன்பின் மூன்றுமாதங்களை ஏதும் செய்யாமல் செலவிட்டேன். 1983 நவம்பர் மாதத்தில் இராகலையில் அரசாங்க மிருக வைத்தியராக வேலைக்குச் சேர்ந்தேன். இராகலை சென்றதும் புது அனுபவமாக இருந்தது. வரட்சியான யாழ்ப்பாணத்தில் பிறந்து வளர்ந்த எனக்கு குளிர்பிரதேசம் மாற்றமாக இருந்தது. ஆனால் நான் அதற்குத் தயாராகச் செல்லாதபடியால் முதல் இரண்டு நாட்கள் குளிரில் நித்திரை கொள்ள முடியவில்லை. பின்பு நுவரெலியாவில் எனது நண்பனது குவாட்டசில் சென்று தங்கினேன். அதன்பின் குளிருக்கான பெட்சீட், கம்பளி உடைகளோடு இராகலை வந்து சேர்ந்தேன்.*

*இறாகலையில் எனக்குப் பிடித்தவிடயம் 83 ஜூலைக்கலவரத்தில் எதுவித பாதிப்பும் தமிழர் கடைகளுக்கு ஏற்படவில்லை. இதற்குக் காரணம் அந்தப்பகுதி பாராளுமன்ற அங்கத்தவரும் நுவரெலிய மாவட்ட அமைச்சருமான ரேணுகா ஹேரத் கலவரம் நடந்த மூன்று நாட்களும் இரவு பகலாக கணவனுடன் ஜீப்பில் சென்று தீயசக்திகள், கடைகளுக்கு தீவைப்பதை தடுத்தார். இவ்வளவுக்கும் ரேணுகா ஹேரத்திற்கு முப்பது வயதுதான் இருக்கும். அதே வேளையில் சில கிலோ மீட்டர் தொலைவில் இருக்கும் நுவரெலியாவில், அமைச்சர் இராஜதுரையின் மகள் வைத்தியராக வேலை பார்த்தார். அவரை ஹெலிகப்டரில் ஏற்றிக்கொண்டு அப்போதைய பெருந்தோட்ட அமைச்சர் காமினி திசநாயக்க சென்றதன் பின்னர் நுவரேலிய கடைவீதிகளுக்கு தீ வைக்கப்பட்டது. இதற்குக் கூட இனவாதம் காரணமில்லை.*

*அக்காலத்து அமைச்சர் தொண்டமானுக்கும் காமினி திசநாயக்காவுக்கும் இருந்த தொழிற்சங்க போட்டியே காரணம். இருவரும் இரண்டு தொழிற்சங்கங்களுக்கு தலைமை வகித்ததால் வந்தவினையாகும். இப்படி இலங்கையில் பல விடயங்களுக்கு அரசியல்வாதிகளே காரணம். மூவின மக்களைப் பொறுத்தவரையில் அவர்கள் அமைதியான*

வாழ்வையே விரும்பினார்கள்.

84ம் ஆண்டு மார்ச் மாதத்தில் இறாகலை சூரியகாந்தித்தோட்டத்தில் நடந்த சம்பவம் எனது பயணத்திற்கு உடனடிக் காரணமாக இருந்தது.

எனது மிருகவைத்திய அலுவலகம் சூரியகாந்தித் தோட்டத்தில் இருந்தாலும் தொழிலாளர் குடியிருப்புகளுக்கு சற்று விலகியே அமைந் திருந்தது. எனது தங்குமிடம் அந்த கட்டிடத்தின் ஒரு அறையே யாகும். மலையகத்து காலை நேரம் மிகவும் இரம்மியமானது. ஈரமுகில்களால் போர்த்தப்பட்டு இரவில் நனைந்த தேயிலைச்செடிகள் கண்ணுக் கெட்டிய தூரம் பரந்திருக்கும். இடைக்கிடையே தொழிலாளர் குடியிருப் புகள், மற்றைய உத்தியோகத்தவர்களது இல்லங்கள் பச்சை வண்ண கம்பளத்தில் புள்ளிகள்போடும். தூரத்து மலைகளில் படிந்திருந்த சோம்பேறியான முகில்கள் மெதுவாக கலைவதும் கண்களுக்கு இதமானவை. தேயிலைத் தொழிற்சாலையில வறுக்கப்படும் தேயிலைத் துளிர்களில் இருந்து பரவும் நறுமணம் காற்றோடு கலந்து வரும் அந்த காலை வேளையை சிறிது நேரம் இரசித்துவிட்டுத்தான் எனது வேலையைத் தொடங்குவேன்.

காலைப்பொழுது புலரும்வேளையில் எழுந்து பார்த்தால் தொழி லாளர்களது குடியிருப்புகளின் கூரையிலிருந்து எழும் புகை தெரியும். ஆனால் நான் அன்று பார்த்தது அவர்களின் அன்றாட சமையலின் போது வரும் புகையல்ல.

பல காம்பராக்களில் கூரைகளைக் காணவில்லை. விடயத்தை ஆராய ஆவலாக இருந்ததால் எனது உதவியாளரான இரத்தினத்தை எதிர்பார்த்திருந்தேன். இரத்தினம் அந்தத் தோட்டத்தில் வசிப்பது எனக்குத் தெரியும்.

இரத்தினம் சிறிது நேரத்தில் கலவரமான முகத்துடன் வந்தான்.

“இரவு நடந்தது தெரியுமா?” எனக்கேட்டான்.

“இல்லையே”

“நடு இரவில் சிங்களவர்கள் கிராமத்தில் இருந்து வந்து நெருப்பு வைத்துவிட்டார்கள். தொழிலாளர்கள் எல்லாம் குடும்பத்துடன் தேயிலை செடிகளுக்கு மறைவிலும் மலைப்பாறை இடையிலும பதுங்கி இருந்து விட்டு இப்பதான் வருகிறார்கள்.”

*“என்ன நடந்தது?”*

*“சின்னத்துரையை ஒரு தொழிலாளி குத்தியதால், குத்து வாங்கிய சின்னத்துரை சிங்கள கிராமத்தவர்களிடம் போய் சொல்லியதால் இந்த காம்பரா எரிப்பு நடந்தது.”*

*மேலும் அவனைத் துருவியபோது, தோட்டத்தில் நிர்வாகியாக சுப்பிரிண்டனும் அவருக்கு உதவியாக ஒருவரும் இருப்பார்கள். உதவி யாக இருப்பவரை சின்னத்துரை என அழைப்பார்கள். சின்னத்துரை தொழிலாளியின் மனைவியை பாலியல் சேட்டை செய்ததால் தொழிலாளியால் குத்தப்பட்டான்.*

*தமிழ்த் தொழிலாளிகள் இரவில் மனைவி குழந்தைகளுடன் சென்று மலைகளிலும் புதர்களிலும் ஒளித்தனர். இந்தத் தோட்டத்தின் மத்தியில் அமைந்தது இறாகலை மிருக வைத்திய சாலை. தொழிலாளிகள் தேயிலைக் கொழுந்துகள் கிள்ளுவதோடு மாடுகள் வளர்த்தும் பால் கறந்து விற்றும் ஜீவனத்தை நடத்தியவர்கள். இவர்கள் எல்லோரும் பால் உற்பத்தியளர் கூட்டுறவு சங்கத்தில் அங்கத்தவர்கள். கிராம பால் கூட்டுறவுசங்கத்திற்கு நான் தலைவரானதால் இவர்களோடு எனக்கு தொடர்பு உள்ளது. இப்படியான தொடர்புகள் இருந்ததால் இரத்தினத்தோடு சென்று தொழிலாளிகளிடம் பேசினேன். அவர்களது துன்பங்களை விசாரித்த போது அவர்களது பயங்களை உணர்ந்தேன்.*

*இலங்கையில் சிறிய தகராறு இனக்கலவரமாகியது. சூரியகாந்தி தோட்டத்தை சுற்றிய கிராமங்களில் வசிப்பவர்கள் சிங்கள மக்கள். தமிழ்த்தொழிலாளி சின்னத்துரை என்ற சிங்களவரை குத்தியது என சின்னத்துரை கிராம மக்களிடம் சென்று சொன்னதால் தமிழன் சிங்களவனை குத்தியதாக தகவல் பரவி இனப்பகையாகியது.*

*“பறதெமலோ பலயாங்” என்றபடி அன்று தோட்டத்து காம்பராக் களை சிங்கள கிராமவாசிகள் எரித்தனர்.*

*நான் தமிழ்த்தொழிலாளர்களிடம் சென்று பேசியதால் கொட்டியா என சிலரால் அழைக்கப்பட்டேன்*

*இந்த கொட்டியா (புலி) என்ற சொல் பெரும்பாலானவர்களால் தமிழர்களுக்கு எதிராக பாவிக்கப்பட்டது. நான் அதைப்பற்றி ஆரம் பத்தில் பொருட்படுத்தவில்லை. ஆனால் பின்பு என்னை நுவரெலிய பொலிஸ் நிலயத்திற்கு அழைத்து விசாரிக்க இருப்பதாக என்னோடு*

வேலை செய்த சிங்கள இனத்தவர் ஒருவர் மூலம் தகவல் தெரிந்தது

சித்திரை வருடப்பிறப்பிற்கு யாழ்ப்பாணம் செல்ல நினைத்திருந்த படியால் அப்படியே கொழும்பு சென்று இந்திய விசா எடுத்தேன்

சூரியகாந்தி தோட்டத்தில் நடந்த கலவரம் மட்டுமா என்னை வெளியேறத்தூண்டியது?

நிச்சயமாக என்னை பொலிஸ் விசாரித்தாலும் பிரச்சினை வந்திராது.

வருடப்பிறப்புக்கு வீடு செல்ல முயன்ற போது, எனது மேலதிகாரி இந்தப்பகுதியில் பல மிருகவைத்தியர்கள் லீவில் நிற்பதால் விடுமுறை தரமறுத்தார். உடனேகண்டியில் உள்ள மேலதிகாரியிடம் பேசி லீவெடுப்பேன் என்று நான் சொன்னது அவருக்கு ஆத்திரமூட்டியது.

இந்தக் காரணங்கள் மட்டுமல்ல.

நிச்சயமாக இதற்கும் மேலான காரணங்கள் இருக்கவேண்டும்.

இந்தியாவில் தமிழ் இளைஞர்களுக்கு இந்திய அரசாங்கத்தால் பயிற்சியளிக்கப்படுகிறது என்ற தகவல் பல பத்திரிகைகளில் வந்திருந் தது.

இலங்கையின் தென்பகுதியில் வேலை செய்து கொண்டு எதிர்கால சரித்திரத்தில் பிழையான இடத்தில் நின்று விடுவேனோ என்ற பயம் வந்தது

இவ்வளவுக்கும் நான் அரசியலில் பெரிதளவில் ஈடுபட்டவன் அல்ல. யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரியில் படித்து முதல்முறையிலேயே பல் கலைக்கழகம் பிரவேசித்தபின் எனது வாழ்க்கை ஒழுங்காக நகர்ந்தது.

இலங்கையில் இன ரீதியான பிளவை ஏற்படுவதிலும் எனக்கு உடன்பாடில்லை. ஏராளமான சிங்கள, இஸ்லாமிய நண்பர்கள் எனக்கு இருந்தார்கள். இன, மதம் என்பவை எங்களுக்கு நாங்களாக போட்ட கவசங்கள் என்பது புரிந்தவன். ஆனால் அக்காலப்பகுதியில் எனது வயதையொத்த இளைஞர்கள் அரசியல்சாயம் படாமல் தப்பமுடியாது. ஹோலி பண்டிகை காலத்தில் ஹோலிபண்டிகையை கொண்டாடாதவனும் வர்ணத்தை பூசிக்கொள்வது போல் அரசியல் வாடை என்னைத் தழுவியது.

நான் பன்னிரண்டாம் வகுப்பில் படித்த காலத்தில் யாழ்ப்பாணத்தில் நாலாம் உலக தமிழ் ஆராய்ச்சி மகாநாடு நடந்தது. அப்போது நடந்த நிகழ்வுகள் என் மனதில் பசுமரத்தாணியாக பதிந்திருக்கிறது.

பதினொருவர் இறந்த நாளுக்கு முதல் இரவு (2-01-1974) மூவர் இறந்தனர். இவர்களின் இறப்புக்கு நான் சாட்சியாகினேன். இரவு 8 மணியளவில் மீன்களைப் போல் வடிவமைக்கப்பட்ட அலங்கார ஊர்தி யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரி வீதியால் வந்து கொண்டிருந்தது. வீதிக்கு மேலாக செல்லும் மின்வயரில் ஊர்தி முட்டியவுடன் மின்சாரவயர் அறுந்தது, அந்த இடத்திலே மூவர் இறந்தார்கள். வயர் அறுந்த போது மின் வெளிச்சம் அணைந்தாலும் நான் நின்ற இடத்துக்கு அருகில் தரையில் போட்ட மீன் போல் ஒருவர் துடித்து இறந்ததை என்னால் பார்க்க முடிந்தது. எங்கள் ஊரில் வலையில் சிக்கி மீன்துடிப்பதைப் போல் இருந்து. ஏற்கனவே இறந்தவர்களை பார்த்து இருக்கிறேன். ஆனால் அவரது மரணம் கண்முன்னே நான் பார்த்த முதலாவது. இறப்பு என்ற செயல்ப்பாடு கோரமாக அரங்கேறியது..

அதிர்ச்சியுடன் வீடு சென்றேன்.

அடுத்தநாள் மகாநாட்டின் கடைசிநாள். ஞானம் மாஸ்ரரிடம் பௌதிகம் பாடம் படித்துவிட்டு நாங்கள் ஐந்து பேராக மாலைநேரம் மகாநாடு நடக்கும் இடத்துக்குச் செல்ல எண்ணினோம். ஞானம் மாஸ்டர் மகாநாட்டு குழுவில் ஒருவராக இருந்ததால் வகுப்பு சீக்கிரம் முடிவடைந்தது.

சைக்கிளை மணிக்கூட்டு கோபுரத்தருகே வசிக்கும் எனது நண்பன் இரத்தினகாந்தனின் வீட்டில் விட்டுவிட்டு அவனுடன் வீரசிங்கம் மண்டபத்தை நோக்கிச் சென்றோம். மக்கள் கூட்டம் எங்கும் நிறைந்து வழிந்தது. வடமாகாணத்தில் வசிப்பவர்கள் எல்லோரும் அங்கு வந்துவிட்டார்களா என நினைத்தேன்.

முனியப்பர் கோயில், புல்லுக்குளம் போன்ற பகுதிகள் எமக்குத் தண்ணிபட்ட பாடமானதால் விரைவாக வீரசிங்கம் மண்டபத்தை அடைந்தோம். மண்டபத்தின் முன்னிலையில் மேடைபோடப்பட்டி ருந்தது. நாங்கள் அந்த மேடையின் பின்னால் நின்றோம்.

மேடையில் பலர் பேசினார்கள். ஆனால் அமிர்தலிங்கம் பேசும்போது மக்கள் ஆர்ப்பரித்தார்கள். அமிர்தலிங்கம் பேசி முடித்தவுடன் ஒருவர் மேடையில் ஏறினார். அவரை ஜனார்த்தனன் என மக்கள் கூறினார்கள்.

இரா. ஜனார்த்தனன் இலங்கைக்கு வருவதற்கு இலங்கை அரசாங்கம் விசா கொடுக்கவில்லை என்ற விடயம் எமக்கு முன்பு தெரிந்திருந்தது.

எங்களுக்குப் பக்கத்தில் இருந்த ஒருசிலர் இவர் வள்ளத்தில் வந்தார் எனக் கூறினார்கள்.

அது பேராசிரியர் நைனார் முகம்மது என்பவராகும். அவர் பேசிக் கொண்டிருக்கும்பொழுது மக்கள் ஜனார்த்தனன் பேசுகிறார் என ஆர்ப்பரித்தார்கள். அப்போது கண்ணாடிகள் நொருங்கும் சத்தம் கேட்டது. அத்துடன் கண்ணீர்ப் புகை குண்டுகளும் எம்மத்தியில் விழுந்தன. சுடுகிறாங்கள், சுடுகிறாங்கள், நிலத்தில் படுங்கள் என பலர் சத்தமிட்டார்கள்.

நான் படுத்ததால் எனக்கு மேல் குறைந்தது பத்துப்பேராவது படுத்திருப்பார்கள்.

திடீரென்று லைட்டுகள் அணைந்தன.எங்கும் கூக்குரலும் அலறலும் எதிரொலித்தது. இருட்டில் நடப்பது தெளிவாகத் தெரியவில்லை. எனக்கு மேல் படுத்தவர்கள் எழும்பிய பின்பு நானும் எழும்பி கண்ணீர்ப் புகையில் எரியும் கண்களை கசக்கியபடி பார்த்தேன். மண்டபத்தின் முன்பகுதியில் நான் நின்ற இரும்புகுளாய் அமைக்கப்பட்ட பகுதியில் எவரும் இல்லை. கேட்டை கடந்து செல்ல முயற்சிக்கும் போது இரும்பு குளாய் மேல் இருவர் சடலங்களாக தொங்குவது தெரிந்தது. இது என்றோ ஒருநாள் பார்த்த ஆங்கிலச் சண்டைப்படத்தை நினைவுக்கு வந்தது.

மின்சாரவயர் ஒன்று பக்கத்தில் கிடந்தது

இரும்பு குளாயிலும் மின்சாரம் பாயலாம் என்று நினைத்து கேட்டின் மேல் பாய்ந்து யாழ்ப்பாணம் தபால் நிலையம் நோக்கி ஓடினேன்.

என்னுடன் வந்த நண்பர்கள் எங்கு சென்றார்களோ எனக்குத் தெரியாது. தபால் நிலையத்தில் பெரிய தூணருகே நின்றபோது ஒரு தாயும் சிறுமியும் என்னுடைய கையைப் பிடித்தபடி சேர்ந்து கொண்டார்கள். அவர்களையும் இழுத்துக் கொண்டு கொட்டடிப் பக்கமாக ஓடினேன். கொட்டடியில் திறந்து இருந்த ஒரு வீட்டினுள் அவர்களை இருந்துவிட்டுப் போகும்படி கூறிவிட்டு, தட்டாத் தெரு சந்தியை நோக்கி ஓட்டமாக வந்து வீட்டை அடைந்தேன்.

அந்த இரவு, கண்ணீர்புகை, ஓட்டம் என்பனவற்றால் சாப்பிட முடியவில்லை. வீடடில் எதுவும் பேசவில்லை பாலை மட்டும் குடித்து விட்டு படுத்தேன்.

அடுத்தநாள் காலை சைக்கிளை எடுக்க மீண்டும் சென்றபோது எம்மில் சிலரோடு முதல்நாள் இரவுச்சம்பவம் தொடர்பாக உரையாடினேன். மீண்டும் சம்பவம் நடந்த இடத்திற்குச் சென்றோம்.

வீரசிங்கம் மண்டபத்தின் முன்னால் செருப்புகள் மலைபோல் குவிந்திருந்தது. பலருடன் பேசியதில் கிடைத்த விபரமாவது: பேராசிரியர் நைனார் முகம்மதுவை மேடையில் பார்த்தவுடன், அவரை இரா. ஜனார்த்தனன் என நினைத்த எஸ்.பி சந்திரசேகராவின், கட்டளையின் படி பொலிசார் மேடையை நோக்கி வந்தபோது ஆத்திரம் கொண்ட மக்கள் பொலிசார் மீது செருப்புகளை வீசினர். இதைத் தொடர்ந்து பொலிசார் கண்ணீர்ப்புகை குண்டுகளை மக்களுக்கு எறிந்ததோடு, துப்பாக்கியால் மேல்நோக்கியும் சுட்டார்கள். துப்பாக்கிவேட்டு உயர் அழுத்தம்கொண்ட மின்சார வயரை தாக்கியதால் வயர் அறுந்து மின்சாரம் தாக்கி சிலர் இறந்தார்கள்.

இந்தத்தகவல்கள் முற்றாகச் சரியா எனக் கூறமுடியாது. ஆனால் அரசாங்கமோ, தமிழ் தலைவர்களோ வேறுவிதமாக சொல்லவில்லை. விசாரணை வைக்கவில்லை.

சிவகுமாரன், எஸ்.பி சந்திரசேகராவை குண்டெறிந்து கொல்ல முனைந்ததற்கும் இந்தத் தமிழ் ஆராய்ச்சி மகாநாடுதான் காரணமாகும்.

-------

இந்தியாவில் இராமேஸ்வரக்கரையை அன்று மாலை கப்பல் தொட்டதும், அடுத்து என்ன செய்வது என்று தெரியவில்லை. கையில் ஐநூறு அமெரிக்கன் டொலர் இருந்தது. இந்தியப் பணம் எதுவும் இருக்கவில்லை.

வெளியே வந்த என்னை பலர் சூழ்ந்து கொண்டு, “என்ன சார் இலங்கையில் இருந்து கொண்டு வந்தீர்கள்?” எனக்கேட்டனர்.

உயிர்ப்பயத்தையும் கவலைகளையும் கொண்டுவந்திருக்கிறேன் எனவா சொல்லமுடியும்?

அக்காலத்தில் சிங்கப்பூர் குடை, லக்ஸ் சோப் இந்தியாவில் கிடைக்காததால் உனக்கு உபயோகமாக இருக்கும் என மன்னாரில் மாமி அவற்றை வாங்கித் தந்திருந்தார். அவற்றை அவர்களிடம் விற்றபோது மூன்னூறு இந்திய ரூபாய்கள் கையில் கிடைத்தது.

# யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி

■

அடுத்த நாள் மாலையில்தான் சென்னைக்கு ரயிலில் பிரயாணம் செய்ய முடியும் என்பதால் இரவு இராமேஸ் வரத்தில் தங்க வேண்டும். பத்து ரூபாய்க்கு ஒரு ஹோட்டல் அறை அந்த இரவு தங்குவதற்கு கிடைத்தது மிகவும் ஆச்சரியமானது.

இலங்கையில் சாமானியர்கள் தங்குவதற்கு வசதியான இது போன்ற ஹோட்டல்கள் இல்லை. எங்கள் காலத்தில் யாழ்ப்பாணத்தில் தங்கும் வசதியுள்ள ஹோட்டல்கள் இருந்ததாகத் தெரியாது. இராமேஸ்வரத் தில் அன்று எனக்குக் கிடைத்த அந்த அறை குளியல் அறையுடன் சுத்தமானதாக இருந்தது. படுப்பதற்கு சிறிய கட்டிலும் எனது தேவைக் கேற்றபடியாக இருந்தது.

காலையில் எழுந்தபோது எப்படியும் பன்னிரண்டு மணிநேரமாவது இங்கு தங்கவேண்டும். இந்த ஊருக்கு வந்தோம். குறைந்த பட்சம் இராமாயணத்தில் இடம்பெற்ற கோயிலையாவது பார்ப்போம் என நடந்து சென்றேன். அதிக தூரமில்லை. அப்படி ஒரு பெரிய கோயிலை அதற்கு முன்னர் வாழ்க்கையில் பார்த்ததில்லை.

இராமேஸ்வரத்தில் கோயிலின் மண்டபங்கள், தூண்களைப் பார்த்துக் கொண்டிருந்தபோது உடல் பருத்த கருமையான மனிதர் ஒருவர் அரையில் கட்டிய அழுக்கான வேட்டியுடன் கறுத்தநிற பானை வண்டியுடன் என் முன்தோன்றி, கங்கா தீர்த்தம் எனச்சொல்லி சிறிய

செம்பில் தண்ணீர் தந்தார்.

இதுபோன்ற தீர்த்தத்தில் நம்பிக்கை இல்லாதபோதும் தந்தவர் மனம் கோணாமல் இருக்கவேண்டும் என்பதால் அதைக் குடித்ததும், மீண்டும் ஒரு கிணற்றில் இருந்து செம்பு நிறைந்த தண்ணீரை எடுத்துத்தந்து, சரஸ்வதி தீர்த்தம் என்றார். அதனையும் மறுக்க முடியவில்லை. தொடர்ச்சியாக இப்படி கிட்டத்தட்ட இருபத்தைந்து தீர்த்தங்கள் குடித்தேன்.

அந்த மனிதர் கோயிலை தரிசிப்பதற்கு எனக்கு இடம் தரவில்லை. உடல்மொழியால் மற்றும் உதாசீனத்தால் அந்த மனிதரைப் புறந்தள்ள முடியவில்லை.பருத்தித் துணியில் பட்ட மசாலா குழம்பின் மஞ்சள் கறையாக என்மீது அவர் ஒட்டிக் கொண்டார்.

முதல்நாளே புதியநாட்டில் ஒருவருடன் கடுமையாகப் பேசி முகம் முறிக்க முடியவில்லை. முகத்தை முறிக்காத பெண்ணுக்கு காலம் முழுவதும் வயிற்றிலே குழந்தை என்பதுபோல் எனக்கு தண்ணீர் குடித்தே வயிறு நிரம்பிவிட்டது. அந்த மனிதருக்கும் மூச்சு வாங்கியும் விடவில்லை. மனிதர் கடைசியில் கோயிலின் வெளியே வந்துதான் ஓய்ந்தார். மனதில் அவரை பலதடவை கொலை செய்துவிட்டேன்.

இலங்கையில் நுவரெலியா பொலிஸிடம் அகப்பட்டிருந்தால் பரவாயில்லை என அன்றைய சம்பவம் நினைக்க வைத்தது. கடைசியில் அவர் என்னிடம் இருபத்தைந்து ரூபாய் கேட்டபோது கொடுக்க மறுத்தேன். தந்த தண்ணீருக்கு விலையா? நான் தண்ணீர் கேட்கவில்லையே என்று கூறியும் பிரயோசனம் இல்லை. அந்த விடாக்கண்டனுக்கு பத்து ரூபாயைக் கொடுத்து விட்டு இனிமேல் கோயில்களுக்கே செல்வதில்லை என எச்சரிக்கையாக இருந்தேன். இந்தக் கொள்கையை பிற்காலத்தில் இந்தியாவில் இருந்த மூன்று வருடங்களும் கடைப்பிடித்தேன். சிதம்பரம், மதுரை, திருச்சி என சென்றபோதெல்லாம் கோயில்களைத் தவிர்த்தேன். மனைவி பிள்ளை கள் உள்ளே சென்றால் நான் அவர்களது காலணிகளுக்கு காவல் காரனாகினேன்.

இலங்கையில் எந்தக் கோயில்களிலும், எனக்கு நம்பிக்கையில்லா விடிலும் அங்கு செல்லும் பழக்க உள்ள நான், இந்தியாவில் கோயில் களை தவிர்த்தேன்.

அன்றைய தினம் இராமேஸ்வரத்தில் விரைவாகவே அறைக்குத் திரும்பி வந்து படுத்தவாறு பழைய விடயங்களையும் அரசியல் புதினங் களையும் அசைபோட்டேன். தனிமையில் இருக்கும்போது நினைவு கள் மட்டும்தானே நம்மோடு வரும்.

காங்கேசன்துறை வீதியில்தான் இந்துக்கல்லூரி உள்ளது. மேல் மாடியில் நின்றால் எங்களுக்கு நேர் கீழே வீதி தெரியும். எழுபது களில் ஒரு நாள் மாணவர் பேரவையின் ஊர்வலம் போவதாக கேள்விப்பட்டேன். யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரியின் தாவரவியல் பரிசோதனைச்சாலை சென்றபோது எனது சகவகுப்பு மாணவர்கள் உடன் வந்தார்கள். வீதியிலே ஏனைய பாடசாலைகளின் சிரேஷ்ட மாணவர்கள் கொடும்பாவிகள் சகிதம் தாரை தப்பட்டைகளுடன் ஊர்வலம் போனார்கள். ஊர்வலத்திற்கு பொலிஸ் அனுமதியில்லை. எப்படியம் ஊர்வலத்தில் போனவர்களுக்கு பொலிசால் அடிவிழும் எனப் பலரும் பேசிக்கொண்டார்கள் .

பரிசோதனைச்சாலையில் நாங்கள் நின்று யன்னல் வழியே ஊர் வலத்தில் எமது பாடசாலையைச் சேர்ந்தவர்கள் யாராவது போகிறார் களா என பார்த்தேன். அப்போதைய கல்வி அமைச்சர் பதியுதீன் முகமத்தை போன்று வைக்கோலினால் செய்யப்பட்ட கொடும்பாவியை சிலர் தூக்கிக் கொண்டு சென்றார்கள்.

எனக்கு ஆச்சரியம் தரும்வகையில் எனது சக மாணவனாகிய செல்வவடிவேல் கையில் ஒரு உடுக்கையை தட்டியபடி மாடியில் நிற்கும் எம்மைப் பார்த்து சிரித்தபடி அந்த கொடும்பாவியின் பின்னால் போய்க் கொண்டிருந்தான். அவன்மீது எனக்கு அப்போது பரிதாபம்தான் தோன்றியது.

தம்பி பொலிசிடம் நல்ல அடி வேண்டப்போறான் என்று கவலைப் பட்டேன்.

மறு நாள் உடல் காயங்களோ வீக்கங்கள் போன்ற எந்தவொரு பாதிப்பும் இல்லாமல் இன்றி நிமிர்ந்த, நேர்கொண்ட பார்வையுடன் அவன் என்னைச் சந்தித்தபோதுதான் எனது கவலை தீர்ந்தது.

எங்கள் வகுப்பில் பெரும்பலானவர்களுக்கு எந்த மாதிரியான தரப்படுத்தல் வந்தாலும் நாம் பல்கலைக்கழகம் போக முடியும் என்ற நம்பிக்கை இருந்தது. மற்றைய சிலர் இலங்கையில் பல்கலைக்கழகம் போக முடியாவிடில் இந்தியா அல்லது இங்கிலாந்து சென்று படிக்க

முடியும் என்ற நம்பிக்கையுடன், வசதியுடன் இருப்பவர்கள். இந்த மன நிலையில் ஊர்வலம், போராட்டம் குறித்து எமக்கு நம்பிக்கை இருக்கவில்லை. மேலும் ஆர்ப்பாட்ட ஊர்வலம் சென்று அடிவாங்கும் அளவுக்கு உடம்பிலும் பலமும், மனதில் தைரியமும் இருக்கவில்லை. இந்த நிலையில் சக மாணவ நண்பன் செல்வவடிவேலை அந்த ஊர்வலத்தில் கண்டது மிகவும் ஆச்சரியத்தைத் தந்தது.

செல்வவடிவேல் வித்தியாசமாக சிந்தித்து ஊர்வலம் போனான் என்பதுடன் அவனது அன்றைய சிரிப்பு இன்றளவும் எனது மனதில் நினைவாக தங்கியிருக்கிறது. எப்பொழுதும் வித்தியாசமானவர்கள், மாறுபட்டநிகழ்வுகள் மனதில் அழுத்தமாக படியும். சாதாரணமான விடயங்களும் நாளாந்தம் சந்திப்பவர்களின் நினைவுகளும் மனஓடை யில் ஓடும் நீர்போல் கடந்து போய்விடும் என்பதும் நியதிதானே.

போராட்டம் எனவரும்போது ஏராளமானவர்கள் அதை தவிர்க்கத் தான் விரும்புகிறார்கள். ஓடி தப்பிவிட முயலுகிறார்கள். ஆனால் சந்தர்ப் பமும் சூழ்நிலையும் அவர்களை அதில் இழுத்து விட்டுவிடுகிறது. எமது வகுப்பில் இருபது பேரில் அன்று ஒருவன் ஊர்வலத்துக்கு சென்றது போல் 95 வீதமானவர்கள் அன்று அந்த ஊர்வல போராட்டத்தை முடிந்தவரை தவிர்க்கவே விரும்பினார்கள். காரணம் பலருக்கு வாழ்க் கையே போராட்டமாக இருந்தது.

இதே வேளையில் போராட்டத்தின் வாடையே தம்மீது படியாமல் வாய்சொல்லால் உசுப்பேற்றியவர்கள் அக்காலத்திலும் இருந்தார்கள். எனக்குத் தெரிய வண்ணை ஆனந்தனின் பொறிபறக்கும் பேச்சுகள், காசிஆனந்தனின் இரத்தத்திலகங்கள் அன்றைய காலகட்டத்தில் எப்படி உறைந்த இரத்தங்களை கொதிக்க வைத்தது என்பது எனது வயதுக்காரருக்குத் தெரியும். ஆனால் இப்போதைய இணையத்தில் ஆயிரக்கணக்கில், இலட்சக் கணக்கில் ஆனந்தன்கள் இருக்கிறார்கள். அக்காலத்தில் குறைந்தபட்சம் மக்கள் மத்தியில் வந்துபேசவேண்டும். சிறைவாசமும் அனுபவிக்கவேண்டும்.

நான் சொல்லும் 70 ஆம் ஆண்டு காலகட்டத்தில் அரசியல் என்பது நிழலாக எம்மைத் தொடர்ந்தது. நிழலுக்கு ஓடி மறைய முடியாது என்பதுபோல் இடைவிடாமல் துரத்தியது.

குடியரசு தினங்களில் பாடசாலைக்கு செல்லாதது மட்டுமல்ல மற்றவர்களையும் பகிஸ்கரிப்பு என்ற பெயரில் அப்படி செய்யத் தூண்டு

வது எமது ஆரம்ப செயலாக தொடர்ந்து நடந்தது.

இதில் இரண்டு சம்பவங்கள் மனதில் நிற்பவை.

ஒன்று எனது நண்பன் சொன்னது. நான் நேரடியாக சம்பந்தப்படாதது.

'முதலாவது குடியரசு தினத்தில் வைத்தீஸ்வரா பாடசாலையில் மாணவர்கள் பாடசாலையை பகிஷ்கரித்தபோது தலைமை ஆசிரியர் மணவர்களை அமைதியாக உள்ளே வரும்படி கேட்டுக்கொண்டார். ஆனால் பகிஸ்கரிப்பை ஒழுங்குபடுத்தியவர்கள் பாடசாலைக்கு கல்லெறிந்தபோது அந்த வழியால் சைக்கிளில் வந்த முதியவர் ஒருவர் 'தம்பிமாரே படிக்கிற பாடசாலைக்கு ஏன் கல்லெறிகிறீர்கள் ? அப்படி கல்லெறிய வேண்டுமானால் இந்தா போகிறதே அரசின் இலங்கை போக்குவரத்து சபை பஸ் வண்டி. அதற்கு எறியுங்கள்' என்றார்.

இது எப்படி இருக்கிறது?

யாவோ (Jehovah) கொடுத்த அருள்வாக்கின் பிரகாரம் இஸ்ரேலியர் களை எகிப்தில் இருந்து வெளியேற்றும் மோசஸே (Moses) வெளி யேற்றினார்.

அதுபோல் அன்று பெரியவரின் அருள்வாக்குப் பிரகாரம் பாட சாலையை பதம்பார்த்த அந்தக் கல்லுகள், போக்குவரத்துச்சபை பஸ் வண்டிகளை நோக்கி எறியப்பட்டது. நானறிந்தமட்டில் அரசியல் காரணங்களுக்காக அதுதான் யாழ்ப்பாணத்தில் நடந்த முதலாவது கல்வீச்சு சம்பவம் என நினைக்கின்றேன். அதன்பின்பு யாழ்ப்பாணம் குடாநாடெங்கும் இலங்கை போக்குவரத்து சபைக்குச் சொந்தமான பஸ் வண்டிகள் சேவையில் இல்லாமல் போகும் வரையும் கல்லெறந்து உடைத்து, எரித்தது எமது வரலாறு.

இரண்டாவது சம்பவம், 75 ஆம் ஆண்டு என நினைக்கிறேன். யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி மாணவர்கள் குடியரசுதினத்தில் கல்லூ ரியை பகிஸ்கரித்தார்கள். அது எங்களுக்கு இலகுவாக வரும் போராட்ட முறையாகும். நாங்கள் ஒழுங்காகப் படிப்பது வெளியே ரீயுசனில்தான். எங்கள் காலத்தில் ஒழுங்காக பாடசாலையில் படிப்பித்த பிரான்சிஸ் மாஸ்டர் வெளியே டியூட்டரி வைத்து எங்களைப் படிப்பித்தார். ஆனால் சென்ஜோன்ஸ் கல்லூரி மாணவர்கள் பகிஷ்கரிப்பில் ஈடுபடுவதற்கு விரும்பமாட்டார்கள். காரணம் அங்கு ஆசிரியர்கள் அவர்களுக்கு கல்லூரியில் ஒழுங்காக படிப்பித்தார்கள்.

இந்துக்கல்லூரி மாணவர்கள் முற்றாக பகிஷ்கரித்ததால் ஒருவித வெற்றிப் பெருமிதத்துடன் இராசாவின் ஊர்வலம்போல் சென்ஜோன்ஸ் கல்லூரிப் பக்கம் நடப்பதைப் பார்பதற்காக ஒரு நண்பன் சுந்தரேச னோடு சைக்கிளில் சென்றேன். சுந்தரேசன் சிறிது குள்ளமானவான். சைக்கிளை நிறுத்திவிட்டு கல்லூரி மதில்மேல் ஏறி எட்டிப் பார்த்தான். அவனது கெட்டகாலம் பின்னால் பொலிஸ் ஜீப் வந்து நின்றது. இருவரையும் நாலு பொலிஸ் கான்ஸ்ரபிள்களும் ஒரு இன்ஸ்பெக்ரரும் சுற்றி வளைத்தார்கள்.

நாங்கள் பயந்தபடி, விறைத்து மதிலில் ஒட்டிய சுவரொட்டியானோம்

மதிலோடு நின்ற சுந்தரேசனை ‘என்னடா எழுதினாய்?’ என்று தலைமயிரில் பிடித்தபடி அரை குறைத்தமிழில் கேட்டார் அந்தசிங்கள இன்ஸ்பெக்ரர்.

அந்த மதிலில் “குடியரசு தினத்தை பகிஷ்கரிப்போம்” என சிவப்பு மையால் ஆங்கிலத்தில் ஏற்கனவே கொட்டை எழுத்தில் எழுதப் பட்டிருந்தது

‘ஐயா, நான் எழுதவில்லை’ என்றான் தழுதழுத்த குரலில் சுந்த ரேசன்.

பொலிஸ் இன்ஸ்பெக்ரர் அவனை அடிக்க கையை ஓங்கிய போது ‘ஐயா இது சரியில்லை’ என்று கை கூப்பிய படி குனிந்து குறுகினான். அவனது முகத்தில் தோன்றிய பயஉணர்வை இன்றும் எழுத்துகளால் என்னால் வர்ணிக்க முடியாது. சுருக்கமாக சொல்வதானால் அவனது முகம் பேயறைந்தவன் போலாகியது. வாழ்க்கையில் அந்தமாதிரியான பயத்தை முகத்தில் தேக்கியவாறு ஒருவர் அடியை தவிர்க்க குனிந்தால் கொதிக்க வைத்த இறாலின் கூனல்தான் ஞாபகத்துக்கு வரும். நண்பன் அவ்வாறு கூனிக் குறுகியதைப் பார்த்ததும் எனக்கு சிரிப்பு வந்து தொலைத்துவிட்டது.

வள்ளுவர் சொன்ன இடுக்கண் வருங்கால் நகுக என்பதுபோல் அன்று நான் சிரித்தது இலங்கை அரசின் நகர்காவலர்களுக்கு பிடிக்கவில்லை.

எனது நகைப்பு அவர்களுக்கு மட்டுமா சுந்தரேசனுக்கும் பிடிக்க வில்லை என்பது பிறகுதான் தெரிந்தது. அவன் பின்னர் தனக்குத் தெரிந்த சகல தூசண வார்த்தைகளாலும் என்னைத்திட்டியபோது தான் அவனது கோபம் பொலிஸை விட என்னிடம்தான் அதிகம்

என்பதை புரிந்துகொண்டேன்.

இன்ஸ்பெக்டர் அவனை கண்டிக்க முனைந்தவிதம் எனக்கு நகைச் சுவையாகியது. எனது சிரிப்பு அவருக்கும் பிடிக்கவில்லை. என்னிடம் திரும்பி முகத்தை கடுமையாக்கிக் கொண்டுஇ

'எந்தப் பாடசாலை?' எனக்கேட்டார்.

'இந்துக்கல்லூரி'

'அப்ப ஏன் இங்கு வந்தீர்கள்'

'எனது உறவினரது வீட்டுக்கு'

'விலாசம் என்ன?'

எனது வருங்கால மனைவியின் வீடு சென்ஜோன்ஸ் கல்லூரிப் பக்கம்தான் இருந்தது. அந்த வீட்டின் விலாசத்தைக் கொடுத்தேன்.

'ஓடுங்கடா' என இருவரையும் துரத்தினார்கள் பொலிஸார்.

அந்தச் சம்பவத்திற்குப் பிறகு பல நண்பர்கள் சுந்தரேசனை எங்காவது கண்டால் "ஐயா இது சரியில்லை" என்பார்கள்.

இனி யாழ்குடாநாட்டிலிருந்து இராமேஸ்வரத்துக்கு வருகிறேன்.

அன்று மாலையில் சென்னை செல்வதற்கு ரயில் ஏறினேன். அது எனக்கு நீண்ட பயணமாக இருந்தது. மனிதர்களின் முகங்களை துருவிப்பார்ப்பது எனக்கு மிகவும் விருப்பமான பொழுது போக்கு. எழுதுவதற்கான உந்துதலும் இதிலிருந்துதான் வந்திருக்கவேண்டும்.

யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி விடுதியில் இருந்த காலத்தில் சினிமா கருப்பு வெள்ளையில் இருந்து வர்ணப்படங்களாக வெளிவந்த காலம். அந்தக்காலத்தில் சினிமா எனக்கு போதையாகவே இருந்தது. ஆரம்பத்தில் சினிமாத் தியேட்டரில் வேலை செய்யவேண்டும் என்பதே எதிர்கால கனவாகவும் இருந்தது. அந்த அளவு நிழலாக இருந்தவற்றை நேசித்தேன். இந்துக் கல்லூரி விடுமுறைக்குப்பின்னர் தொடங்கும் முதல்நாளில் விடுதியில் இருந்த எங்களுக்கு எதுவித நேரக் கட்டுப்பாடும் இல்லை. எந்த நேரத்திலும் வரலாம் போகலாம் என்பதால் ஒரே நாளில் மூன்று படங்களைக் கூடப் பார்த்திருக்கிறேன். சிவாஜி கணேசனின் ரசிகன் .

*இப்படி தென்னிந்திய சினிமாவைப் பார்த்ததால் எங்களது மனதில் இந்தியா ஒரு வர்ணமயான தோற்றத்தைக் கொடுத்தது. வண்ணக் கோட்டு சூட்டுகள் மட்டுமல்ல சிவப்பு, வெள்ளை என சப்பாத்து போடும் எம்ஜியார், சிவாஜி என திரையில் பார்த்திருந்தோம். இது மட்டுமா பெண்கள் எல்லோரும் அப்பிள் முகத்தில் அலைந்து திரியும் காட்சிகள் மனதில் இருந்தன. நாங்கள் படித்ததமிழ் கதைப்புத்தகங்களிலும் கருப்பானவர்களை மாநிறமானவர்கள் என்றுதான் சொல்வார்கள். எனக்கு மாநிறமென்றால் அரிசிமா கோதுமை மாவுதான் நினைவுக்கு வரும். அது எப்படி மனிதர்கள் மா நிறத்தில் இருக்கமுடியும்? என்ற கேள்வியும் நீண்ட நாட்களாக இருந்தது.*

*இப்படி சொல்கிறாய் ஜெயகாந்தனின் கதைகளைப் படிக்கவில் லையா? அவரது சித்தரிப்புகளில் புரிந்திருக்குமே? சேரிமக்கள்தானே அவரது கதை மாந்தர்கள். என்று இதனைப்படிப்பவர்கள் கேட்கக் கூடும். ஆனால் எனக்கோ இந்தியாவில் மாந்தர்கள் நான் பார்த்த சினிமாவிலும் படித்த கதைகளிலும் வந்தவர்கள் போல்தான் இருப் பார்கள் என்ற எண்ணம்தான் இருந்தது.*

*அன்றைய பயணத்தில் முழு ரயிலிலும் கோட் சூட் போட்ட மனிதர்களை காணமுடியவில்லை. இதை ஒரு சிரிப்பிற்காக எழுத வில்லை. தென் இந்திய கலாச்சாரத்தின் யதார்த்தத்தை தமிழ் சினிமாவும் கதைப்புத்தகங்களும் வெளியே இருப்பவர்களிடம் அக் காலகட்டத்தில் எவ்வாறு கொண்டு சேர்த்தன, எவ்வாறு நாம் உள் வாங்கிக் கொண்டோம் என்பதற்கு நானும் ஒரு சாட்சியாகிறேன்.*

# இலங்கை - இந்திய தமிழரை இணைக்கும் சங்கிலி

■

இராமேஸ்வரத்தில் தொடங்கிய எனது இரயில் வண்டிப் பயணம் எக்மோர் இரயில் நிலையத்தில் முடிந்தது. எனக்குத் தெரிந்த கொழும்பு கோட்டை இரயில் நிலையத்தை ஒப்பிட்டுப் பார்த்தால் பத்து மடங்கு இருக்கும். எங்கும் வாரி இறைத்த மணல்போல் மக்கள் கூட்டம். சிறியநாடான இலங்கையில் இருந்து வந்த எனக்கு, இவ்வளவு கூட்டம் என்பது மிகவும் பிரமிப்பைக் கொடுத்தது. இந்தக் கூட்டத்தில் தனிமனிதன் வாழ்வதற்கு எவ்வளவு பாடுபடவேண்டும்? இயற்கை மற்றும் உற்பத்தி வளங்களை எவ்வாறு ஒவ்வொருவரும் பிரிப்பது?

அபரிமிதமான இயற்கை வளங்கள் கொண்ட இலங்கை நாட்டில் இருந்து போர் காரணமாக இந்தியா வந்திருக்கும் எனக்கு, இந்தியக் கரையில் இறங்கியதில் இருந்து இலங்கையில் தோன்றியிருக்கும் இனப்பிரச்சினையானது, தாயின் அரவணைப்பிற்காக முரண்டு பிடிக்கும் இரண்டு குழந்தைகளின் செயலோ என்ற சிந்தனையும் மனதில் தோன்றியது.

பத்து வருடங்களுக்கு முன்புவரையும் தமிழ்நாட்டில் இருந்து எத்தனையோ தமிழர்கள் படகுகளில் (கள்ளத்தோணி) பிழைப்பதற்கு இலங்கை வந்தார்கள். அவர்களில் பலர் எனது எழுவைதீவின் ஊடாக வந்திருக்கிறார்கள். அங்கு நான் பிறப்பதற்கு முன்பே சிறுபையனாக

இராமனாதபுரத்தில் இருந்து எங்கள் ஊருக்கு வந்து, வளர்ந்து இளைஞனாக கள்ளிறக்கும் தொழில் செய்ததுடன், என்னைத் தூக்கி வளர்த்த இராமலிங்கண்ணையின் வேர்வை மணம் இன்னமும் நினை வில் இருக்கிறது.

வாட்டசாட்டமான விரிந்த தோள்கள் கொண்ட தேகம். சுருட்டைத் தலை. இருளுடன் போட்டி போடும் தோல் நிறம். ஆனால், அதில் எப்பொழுதும் மினுக்கம் இருந்தது. தோலின் வேர்வைத் துவாரங் களில் இருந்துவரும் வேர்வை கள்ளுமணத்துடன் கலந்திருக்கும். தேகத்தில் மழைக்கால ஆறாக உடலெங்கும் பெருக்கெடுத்தோடும் வேர்வையுடன் அவர் என்னை தூக்கித் தோளில் போடுவது அவரது வழக்கம்.

பலமுறை அம்மா ‘குளித்துப்போட்டு அவனைத்தூக்கடா’ எனக் கத்துவதும் அதற்கு இராமலிங்கண்ணை ‘நீ போ உன் வேலையை பார் சின்னம்மா’ எனக் கூறுவதும் எனது இளமைக்கால ஞாபகம். கள்ளத்தோணியாக பலர் வந்து தங்கி எங்கள் வீட்டில் சாப்பிட்டுவிட்டு இலங்கையின் ஏனைய பகுதிகளுக்கு தப்பிச்சென்றுவிடுவர். சிலர் பொலிசாரிடம் பிடிபடுவர். இக்காட்சிகள் சிறுவயதில் நான் பார்த்த சம்பவங்கள். இராமலிங்கம் மட்டும் பாதுகாப்பாக எங்கள் வீட்டில் பல வருடம் இருந்துவிட்டு மீண்டும் இராமநாதபுரம் சென்று தனது நாடார் சாதிப் பெண்ணைத் திருமணம் செய்ததாக பிற்காலத்தில் அறிந்தேன்.

84ஆம் வருட காலத்தில் இலங்கையில் ஓட்டோ ரிக்ஷா இருக்க வில்லை சாணிவண்டுகளின் தோற்றத்தில் வரிசையாக எக்மோரில் அவற்றைப் பார்த்தது புதுமையாக இருந்தது. அக்கால சினிமா படங்களிலும் ஓட்டோவைப் பார்த்த ஞாபகம் இல்லை. அந்த இடத்தை விட்டு விலகவேண்டும் என்பது குறிக்கோளாக இருந்ததால் நிறுத்தப் பட்டிருந்த ஒரு ஓட்டோ வாகனத்தில ஏறி அமர்ந்தேன்

ஐந்தரை அடி உயரத்தில் ஒரு மெல்லிய இளைஞன் என்னை நோக்கி வந்தான். சுமார் இருபத்தைந்து வயது இருக்கும். சிறிது வாக்குக் கண் தோற்றமுள்ளவன்.

‘எங்கே போகணும் சார்?’ என்றபடி சிரித்தபோது அவனது கண்கள் எனக்குப் பின்னால் நின்றவரைப் பார்ப்பது போல் இருந்தது.

என்னைக் கேட்கவில்லை என்ற எண்ணத்தில் மவுனமாக இருந் தேன்.

‘உன்னைத்தான் சார். எங்கே போகவேண்டும்?’’

படிப்பித்த ஆசிரியர்களையும் பிற்காலத்தில் பல்கலைக்கழகத்தில் கற்பித்த பேராசிரியர்களையும் தவிர்ந்த எவரையும் சேர் என சொல்லி பழக்கமில்லாத எனக்கு முன்பின் தெரியாத ஒரு இளைஞன் என்னை சேர் என்பதும் மெதுவான அதிர்ச்சியை கொடுத்தது.

‘மாம்பலம் பக்கம்’’

‘சிலோனா இல்லை மலையாளியா சார்’’

‘சிலோன்’

‘குந்துசார். ஆமா எப்பிடி அங்க தமிழங்களை கொல்லுறாங்களாம் பேமானிங்க’

நான் அவனுடன் அரசியல் பேசத்தயாராக இருக்கவில்லை. மேலும் பயணக்களைப்பு வாயைக் கட்டிப்போட்டது.

‘எவ்வளவு காசு?’

‘என்ன காசு? நீ நம்மாளாய் இருக்கிறாய். சரி முடிஞ்ச துட்டைத்தா’

‘இல்லை இன்றைக்குத்தான் இந்த நாட்டுக்கு வாறன் எவ்வளவு என்று சொன்னால் நல்லதுதானே’

‘இன்னா சார் நமக்குள்ளே’

‘இல்லை. எவ்வளவு சொல்லப்பா’

‘சரி ஐந்து ருபாய்’

எனக்கு அந்தக்கூலி சரியான கட்டணமா? அல்லது கூட்டித்தான் கேட்கிறானோ என்பது தெரியாது விட்டாலும் அவனது வெளிப்படையான பேச்சில் உண்மையான தன்மை தெரிந்தது.

‘எங்கே தங்கப் போற?’

‘அதுதான் மாப்பலம் போகிறேன்’

‘படிச்சது போல இருக்கிறாய். நல்ல ஹோட்டலுக்கு கூட்டிப் போகட்டுமா?’

'அதிகம் பணமில்லை ஆனாலும் சுத்தமாக இருந்தால் சரி'

'நாற்பது ரூபாயில் எல்லாம் இருக்கு. நல்ல வசதி.'

உண்மையில் அவன் காண்பித்த அந்த ஹோட்டலில் அடிப்படை வசதிகள் இருந்தன.

உடல் அலுப்புத்தீர குளித்துவிட்டு கீழே இருந்த சாப்பாட்டு கடைகளை தேடினேன். பெரும்பாலானவை சைவ உணவகங்களாக இருந்தன. எழுவைதீவில் பிறந்து வளர்ந்தபோது மீன் குழம்பு, மீன்சொதி, மீன் பொரியல், கத்தரிக்காய் பால்கறி அல்லது முருங்கைக்காய் மட்டும் உண்டு வளர்ந்ததால் எங்கு சென்றாலும் அசைவ உணவைத் தேடுவது எனது பழக்கமாகிவிட்டது. வெள்ளிக்கிழமை மச்சம்மாமிசம் சமைக்காத நாட்களில் குறைந்த பட்சம் பரணில் இருந்த கருவாட்டை நெருப்பில் சுட்டோ அல்லது முட்டையை பனை ஓலையில் வைத்து சூடாக்கிய பின்பு சாப்பிடுவது வழக்கம். ஆடி அமாவாசை போன்ற நாட்களில் மரக்கறி உணவும் வெந்தயக்குழம்பும் தொண்டைக்குள் கசாயம்போல் இறங்கும்.

கப்பல் ஏறுவதற்கு முன்பு கடைசியாக மன்னாரில் மாமி கயல் மீனின் பொக்கணங்களை தனியே எடுத்து குழம்பு வைத்து எனக்கு விருந்து வைத்திருந்தார். இராமேஸ்வரத்தில் இறங்கிய நாளில் இருந்து கிட்டத் தட்ட நாற்பத்தியெட்டு மணிநேரமாக மச்சம், மாமிசம் கண்ணில் கூட படவில்லை. இரயிலில் குறைந்த பட்சம் மாமிச மணமாவது மூக்கையடையாதா என்று நினைத்தேன். தயிரும் சாம்பாரும் புளி யோதரையுமாக நான் பயணித்த ரயில் மணம் பரப்பியது.

மச்சம் மாமிசத்திற்காக வேறு வழியில்லாமல் அரை மணித்தியாலம் நடந்து ஒரு மதுரா முனியாண்டி விலாஸை கண்டுபிடித்தேன். சென்னையில் அக்காலத்தில் மதுரை முனியாண்டி அல்லது கேரளத்து முஸ்லிம்களது கடைகள்தான் என் உயிருடன் உடலை ஒட்டவைத்தன.

மத்தியானம் படுத்துவிட்டு படம் பார்க்க வேண்டும் என நினைத்த வாறு ஹோட்டல் யன்னலால் வெளியே பார்த்தபோது இலங்கை எதிர்கட்சித்தலைவர் என்ற எழுத்துக்கள் தூரத்தே தெரிந்த போஸ்டரில் தென்பட்டது. அமிர்தலிங்கம் அவர்களைக் குறிப்பதாக இருந்தாலும் எனக்கு அப்பொழுது செல்வநாயகம்தான் நினைவுக்கு வந்தார்.

ஏழு அல்லது எட்டு வயது எனக்கு இருக்கும் காலத்தில் ஒரு தேர்தல் நடந்தது. அப்பொழுது தமிழரசுக்கட்சித் தலைவர் செல்வநாயகம் அக்கால தீவுப்பகுதி பாராளுமன்ற உறுப்பினர் வீ ஏ கந்தையாவுடன் எழுவைதீவுக்கு வந்தபோது எங்கள் வீட்டிற்கும் வந்தார். எனது தாய்வழிப் பேரனார் நமசிவாயம் ஓய்வு பெற்ற வாத்தியார். அத்துடன் தபாலதிபராகவும் இருந்தவர். தீவுப்பகுதியில் மோட்டார் வள்ளங்களை ஓட்டியவர்கள் சங்கத்தில் முக்கியமானவர். இதனால் எங்கள் வீட்டுக்கு செல்வநாயகம் வந்தபோது தனது சாய்மனை கதிரையில் அவரை அமரச் சொல்லிவிட்டு எதிரில் இருந்த ஆசனத்தில் அமர்ந்தார். அவருக்குப் பக்கத்தில் வீ ஏ கந்தையா அமர்ந்தார்.

செல்வநாயம் மிகவும் மெதுவான குரலில் 'வாத்தியார் இந்த முறையும் தமிழரசுக்கட்சிக்குத்தான் நீங்கள் போடவேண்டும். உங்கள் உதவிவேண்டும்' என்றார்.

'ஐயா இதற்காக ஏன் நீங்கள் போட் ஏறிவந்தீர்கள். ஒரு கங்கு மட்டையை தமிழரசுக்கட்சியென்று நிறுத்துகள். உங்களுக்கு ஊர்சனம் போடும்.'

'அது எனக்குத் தெரிந்துதான். உங்களையும் பார்க்க வந்தேன். மேலும் சிலர் மற்றவர்களுக்கு வேலை செய்வதாக கேள்விப்பட்டேன்'

'சில நாய்கள் சாராயத்தை நக்குவதற்காக காசை வேண்டியிருக்கும். அதைப் பற்றி கவலைப்படாதீர்கள்'.

இந்த சம்பாசணையை என்னோடு எங்களது ஊரில் பலர் எங்களது வீட்டு கொட்டகையில் நின்று கேட்டுக்கொண்டு இருந்தார்கள்.

தமிழரசுக் கட்சித்தலைவர் செல்வநாயகமும் வீ ஏ கந்தையாவும் எங்கள் வீட்டில் மதிய உணவு அருந்திவிட்டு மாலை நேரத்து மோட்டார் போட்டில் போய்விட்டார்கள்.

இதன்பிறகு அடுத்த கிழமை தமிழ்க் காங்கிரஸ்காரர்கள் ஊரில் உள்ள சிலரைப் பிடித்து ஒரு கூட்டத்திற்கு ஒழுங்கு பண்ணியிருந்தார்கள். எங்கள் ஊரில் அந்தக் காலத்தில் மின்சாரம் இல்லாதபடியால் பெட்ரோல்மக்ஸின் ஒளியில்தான் இரவில் கூட்டம் நடத்தவேண்டும்.

அந்தக்கூட்டத்திற்கு பத்துக்கும் குறைவானவர்கள்தான் போயிருப்பார்கள். ஆனால் கூட்டத்திற்கு ஒளி கொடுத்த பெட்ரோல்மக்ஸ் மீது

சரியாக குறி பார்த்து கல்லெறிந்தபடியால் அந்தக் கூட்டம் கலைந்தது.

அந்தக்கூட்டத்தைக் கலைத்தவர்கள் எங்களது உறவினர்கள். மேலும் அவர்கள் நமசிவாயம் வாத்தியாரால் கண்டு பிடிக்கப்பட்டு திட்டப்பட்டார்கள்.

இதைவிட முக்கியமான விடயம் முழு எழுவைதீவிலும் தமிழரசுக் கட்சிக்குதான் ஆதரவு. ஆனால் எப்படி சிலபேர் மட்டும் தமிழ்காங்கிரஸ் பக்கம் சாய்ந்தார்கள்?

அதற்குக் காரணம் இருந்தது. சிலருக்கு நமசிவாயம் வாத்தியாரை பிடிக்காது அதனால் அவர்கள் எதிர்கட்சியின் பக்கம் நின்றார்கள்.

இந்தச் சிறு சம்பவம் பல விடயங்களை பிற்காலத்தில் எனக்குப் புரியவைத்தது.

ஒரு பிரபலமான கட்சியை அரவணைத்துப் பிடித்தால் அதன் சார்பாக வாக்குக் கேட்பவர்களுக்கு எந்தவிதமான அறிவோ, திறமையே, ஏன் ஒழுக்கமோ கூடத்தேவையில்லை. எனது பாட்டனார் நாற்பது வருடகாலமாக ஆசிரியராகவும் தலைமையாசிரியராகவும் இருந்தவர் அத்துடன் பெரிய மனிதராக அக்காலத்தில் தீவுப்பகுதியெங்கும் அறியப்பட்டவர். அவரே தமிழரசுக்கட்சி சார்பாக கங்கு மட்டைக்கும் போடுவோம் என்கிறார்.

பெட்ரோல்மாக்ஸ் மீது கல்லெறிந்த வன்முறை அக்காலத்தில் அற்பமாக இருந்தாலும் பிற்காலத்தில் நடந்த துப்பாக்கிப் பிரயோகங் களுக்கு ஒப்பானதுதான்.

என்ன.... புடையன் பாம்பு அக்காலத்தில் குட்டியாக இருந்தது அவ்வளவுதான்.

நமசிவாயம் வாத்தியார் சொல்லாமலே வன்முறை நடந்தது. இதை நமசிவாயவாத்தியாரும் வரவேற்பார் உத்வேக உணர்வில் கல்லெறி நடந்தது.

இவை எல்லாவற்றிலும் முக்கியமானது - அக்காலத்தில் தமிழரசுக் கட்சியினருக்கு எதிர்கட்சியாக வேறு எந்தவொரு சிங்களக் கட்சியும் அங்கே இருக்கவில்லை. தமிழ் காங்கிரஸ் சார்பாக ஒரு சிலர் அங்கு வேலை செய்தது தமிழரசுக் கட்சியினருக்கு பொறுக்க முடியாததாக இருந்தது.

நமது ஊர் அரசியலை மூட்டை கட்டிவிட்டு அருகில் உள்ள தியேட்டரில் படம் பார்போம் என பாண்டிபசாரை நோக்கி நடந்தேன். சிறிது தூரம் கூடச் செல்லவில்லை. எதிர்பார்க்காத காட்சியொன்று எனக்காக காத்திருந்தது. மக்கள் வட்டவடிவமாக தெருவை வளைத்து கூட்டமாக நின்றார்கள். நானும் உட்புகுந்து பார்த்தபோது திரைப்பட சூட்டிங் நடப்பது தெரிந்தது.

படம் பார்க்க தியேட்டர் போக நினைத்த எனக்கு வழியில் படம் எடுப்பதைப் பார்க்கும் சந்தர்ப்பம் வாய்த்தது. வாழ்க்கையில் முதன் முறையாக திரைப்படம் எடுப்பதை பார்க்கும் வாய்ப்பு சென்னைக்கு வந்த முதல்நாளே கிடைத்திருக்கிறது. நான் எந்தப் படத்திலும் பார்க்காத நடிகர் ஒருவர் பொலிஸ் இன்ஸ்பெக்டர் உடையில் பாய்ந்து ஒருவரை பல முறை வித்தியாசமான கோணத்தில் காலால் உதைத்து அடித்துக்கொண்டிருந்தார். நல்ல கறுப்பு நிறம் கட்டுமஸ்தான தேகம். கண்கள் மட்டும் சிவப்பாக இருந்தது. கண்விழிகளில் சிறு இரத்த நாளங்கள் தெரிந்தன. இவ்வளவு காலமும் திரையில் பார்த்த கதாநாயகர்களின் தோற்றத்திற்கு நேர் எதிராக அவரது தோற்றம் இருந்தது எனக்கு வியப்பைத்தந்தது.

பக்கத்தில் நிற்பவரிடம் 'யார் இவர்?' எனக்கேட்டேன்.

அந்தமனிதர் என்னை வேற்றுலகவாசியாக விசித்திரமாக பார்த்து விட்டு 'விஜயகாந்து சார்' என்றார்.

'புது நடிகரா?'

'இரண்டாவது படம். ஆமா சார் நீ எங்கே இருந்து?'

'சிலோன்காரன்"

'அப்படியா சார் அதான் தமில் டிபரண்டாக இருக்கு. நான் மதுரை பக்கமோ என நினைத்தேன். நம்ம விஜயகாந்த் இங்கு பக்கத்திலதான் இருக்கிறார். அவருக்கு இலங்கையர்மேல் மிகுந்த அன்பு' என தொடர்ந்து பேசினார்.

விஜயகாந்த் பலதரம் பாய்ந்து பாய்ந்து அடித்தார். இடையில் கட் கட் சொன்னார்கள்.

ஒவ்வொரு அடிக்கும் விஜயகாந்தை குறைந்தது ஐந்து முறை பாய்ந்து அடிக்க வைத்தார்கள்.

சினிமா எடுப்பதைப் போன்ற போர் அடிக்கும் விடயம் வேறு எதுவும் இருக்குமா என நினைத்தேன். ஒவ்வொரு விடயத்தையும் பல முறை ஒருவர் செய்யவேண்டி இருந்தது. சடலத்தைக்கூட பல தடவை சூட்டிங் எடுக்க வேண்டி வரும் என நினைத்தேன். அன்றே சினிமா பட சூட்டிங் பார்க்க வேண்டும் என்ற எண்ணம் மனதை விட்டு அகன்றது. விரைவாக அந்த இடத்தை விட்டு விலகி தியேட்டருக்குள் நுழைந்தேன்.

எதுவும் பிரயோசனமாக செய்வதற்கு இல்லை என நினைத்தால் - வெய்யில் மழை மற்றும் வெக்கை என்பனவற்றில் இருந்து ஒதுங்கு வதற்கு சினிமா தியேட்டர் எனக்கு புகலிடமாகியது. பிற்காலத்தில் பலதடவை நேரம் போக்குவதற்காக மட்டுமே தமிழ் சினிமாவை பயன் படுத்தினேன். நான் நினைக்கிறேன் தமிழ் சினிமாவின் முதலாவது நோக்கமும் அதுவாகத்தான் இன்னமும் இருக்கிறது. சில வேளையில் அதுவே இறுதி நோக்கமாகவும் உள்ளது.

இலங்கைத் தமிழரை இந்தியத் தமிழரோடு இணைப்பது பாக்கு நீரிணைக்கு அடுத்ததாக இந்த தமிழ்சினிமாவே சங்கிலியாக தொடர்ந்து வருகிறது. அரசியல் மொழி மற்றும் சங்கீதம் மற்றும் மதம் என்பனவெல்லாம் இரண்டாம் பட்சமானவை.

# மகனின் பிறந்தநாள் : மனைவியின் துணிச்சல்

■

இரண்டு நாட்கள் ஹோட்டலில் இருந்துவிட்டு கோடம்பாக் கத்தில் ஆர்காடு ரோட்டில் அமைந்த பழைய கட்டிடத்தில் மேலே உள்ள சிறிய அறையை மாத வாடகைக்கு பெற்றுக்கொண் டேன்.

அந்த அறையில் யன்னலையும் கதவையும் விட பெரிய இரும்புக் கட்டில் - சந்தமிட்டபடி சுழலும் ஒரு பழைய கறள் பிடித்த காற்றாடி மற் றும் அதோடு ஒட்டிய ஒரு லைட் மட்டுமே எனக்குத் துணையாக இருந்தன. தனிமை அந்த அறையில் கோடை வெப்பத்தை விட மோசமாக வாட்டியது. அந்தப் பெரிய சென்னைப்பட்டணத்தில் தனி மையாக இருப்பதாக உணர்ந்தேன். குடும்பம் சுற்றம் நண்பர்களது அருமையை உணர்வதற்கு அந்தக் காலம் தேவையாக இருந்தது.

தேவையில்லாமல் இலங்கையை விட்டு வெளிக்கிட்டுவிட்டேனோ என்ற சிந்தனை தொடர்ச்சியாக - கடல் அலை பாறையில் மோதுவது போல் மோதிக்கொண்டிருந்தது. இலங்கையில் சிறிதளவு இருந்த சிகரட்புகைக்கும் பழக்கம் ஊதிய பலூனாக பெரிதாகியது. ஆர்காடு ரோட்டில் அருகே இருந்த லெண்டிங் லைபிரரியில் இருந்த சுஜாதா ராஜேந்திரகுமார் மற்றும் புஷ்பா தங்கத்துரை போன்றவர்களது புத்த கங்கள் உற்ற துணையாக உதவி செய்தன.

ஒருநாள் இரவு : எனது மனைவி இலங்கையில் வேலை செய்யும் குருநகரில் உள்ள ஹோலி குறோஸ் வைத்தியசாலையில் குண்டுகள் விழுவதாகவும் அங்குள்ளவர்கள் உயிர்தப்ப சிதறி ஓடுவதாகவும் கனவு கண்டு எழுந்து அழுதேன். கனவுகள் கண்ணீர் என்பது எனக்கு நினைவு தெரிந்த காலத்தில் மிகவும் அருமையாக இருந்தது. மத்திய தர குடும்பத்தில் மூத்த பிள்ளையாக பிறந்தது ஒருவித அதிஷ்டமே.

மனதில் நினைத்தவுடன் இந்தக்காலம் போன்று பேசுவதற்கு தொலைபேசியில்லை. வேறு வழியுமில்லை. கனவுகள் நடக்காது என்பதில் நம்பிக்கை வைத்து அன்று நடு இரவில் எழுந்து ஒரு வில்ஸ் சிகரட்டை புகைத்தபோது ஜூலை 83 நினைவுக்கு வந்தது.

மதவாச்சியில் வேலை செய்த நான், கொழும்பில் ஜூலை 21ம் திகதி அனுராதபுர மாவட்டத்தில் உள்ள மிருகவைத்தியர்களுடன் கிராமிய தொழில்துறை அமைச்சர் தொண்டமானின் அலுவலகத்தில் நடந்த கூட்டத்தில் பங்கு பற்றினேன். அக்காலத்தில் பல அபிவிருத்தித் திட்டங்கள் அனுராதபுரத்தில் நடந்தபோது ஐக்கியதேசியகட்சி ஆட்சியில் இருந்ததால், மதவாச்சி மைத்திரிபால சேனநாயக்கவின் தொகுதியானதால் புறக்கணிக்கப்பட்டது.

இலங்கையில் தமிழர்கள் மட்டும் புறக்கணிப்பதாக குறை கூறினாலும் உண்மையில் எந்த அரசாங்கமும் எதிர்கட்சி ஆதரவாளர்களையும் அவர்களது தொகுதியையும் கண்டுகொள்வதில்லை. சிங்களவர்கள் இதற்கு அரசியல் சாயம் பூசும்போது தமிழர்கள் நித்தமும் அரசாங்கங்களுக்கு எதிராக இருப்பதால் இனச்சாயம் பூசுவது தான் உண்மை.

எனது காலத்தில் பலத்த எதிர்ப்புகளுக்கு மத்தியில் மதவாச்சி - பதவிய ஆகிய இரண்டு இடத்திலும் பால் சேகரிக்கும் நிலையமும் புதிதாக மதவாச்சியில மிருக வைத்தியசாலையும் எனது முயற்சியால் திறக்கப்பட்டன. அனுராதபுர மாவட்ட அபிவிருத்தி கூட்டங்களில் மைத்திரிபால சேனநாயக்கா கலந்து கொள்வதில்லை.

மிருகவைத்திய கால்நடை விடயங்களில் நான் ஒரு மதவாச்சி மக்கள் பிரதிநிதி என அக்கால மாவட்ட அமைச்சர் சந்திரபண்டார ஒரு நாள் எனது கையை பிடித்தபடி சொன்னார் ஒருவிதத்தில் இருபத்தைந்து வயதான என்னை மதித்து அவர் பேசியது எனக்கு உற்சாகத்தைக் கொடுத்ததுடன் - எக்காலத்திலும் அரசியல்வாதிகளுடன் நேரடியாக

பேசக்கூடிய தைரியத்தை அளித்தது அந்த கூட்டங்களே.

கொழும்பில் இப்படியான கூட்டமொன்றில் கலந்துகொண்டபின்னர் – வெள்ளிக்கிழமை நின்று வார இறுதி நாட்களில் கொழும்பில் தங்கியிருக்க விரும்பினார்கள். என்னோடு வந்த மற்றைய அனுராதபுர மாவட்ட வைத்தியர்கள். என்னையும் தங்களுடன் நிற்கும்படி வலியுறுத்தினார்கள். உண்மையில் அனுராதபுரம் போன்ற இடத்தில் இருந்து கொழும்பு சென்றால் நகரவாழ்வை அனுபவிக்க விரும்புவது இயற்கை.

எனக்கு, எனது மகனது முதலாவது பிறந்த நாள் ஜூலை 25ஆம் திகதி வருவதால் யாழ்ப்பாணம் செல்லவேண்டும் என்று 21ம் திகதி மாலையே வெளிக்கிட்டபோது – சக மிருகவைத்தியர் களுஆராய்ச்சி யின் அனுராதபுர வீட்டின் ஒரு சாவியை பெற்றுக்கொண்டேன். ‘இரவு நடுச்சாமத்தில் அனுராதபுரத்தில் தங்கியிருந்து பின்னர் யாழ்ப்பாணம் செல்லவிரும்புகிறேன். எனவே உனது வீட்டில் படுக்கிறேன்’ என்ற போது அவனும் தந்தான்.

நான் நேரடியாக கொழும்பில் அல்லது கண்டியில் இருந்து யாழ்ப் பாணம் செல்வதில்லை என்ற விடயத்தை பாதுகாப்பு நடவடிக்கையாக பலகாலமாக கடைப்பிடித்து வருகிறேன். கொழும்பில் இருந்து யாழ்ப்பாணம் செல்பவர்கள் – இராணுவத்தால் பரிசோதிக்கப்படுவதும் விசாரிப்பதும் அக்காலத்தில் நடக்கும் வழமையான விடயங்கள்.

நான் கொழும்பில் அல்லது கண்டியில் இருந்து அனுராதபுரம் அல்லது மதவாச்சி செல்லும்போது அந்த மார்க்கத்தில் பெரும்பாலும் சிங்களமக்களே பிரயாணம் செய்வார்கள். மேலும் அங்கிருந்து வவுனியாவிற்கு செல்லும்போது வாகனங்கள் நிறுத்தப்படுவதோ சோதிக்கப்படுவதோ இல்லை. பயணநேரம் கொஞ்சம்கூட எடுத்தாலும் இது வசதியானது.

மீசையில்லாமல் ஆங்கிலப்பத்திரிகையோடு பிரயாணம் செய்யும் போது பலரும் சிங்களவராக நினைத்து பேசியபடி வருவார்கள். அதிகம் பேசாமல் ஓரிரு வார்த்தைகளில் பத்திரிகையில் என்னைப் புதைத்துக் கொள்வேன். மீசையற்ற முகம், நல்லெண்ணை வைக்காத தலை, சிங்கள மொழியில் கொஞ்சம் பரிச்சயம் என்பன எனது பாதுகாப்பு கவசங்கள் என எனக்கு ஒரு நினைப்பு அக்காலத்தில் இருந்தது.

*81ஆம் ஆண்டு என நினைக்கிறேன் - அனுராதபுரத்தில் இருந்து வேனில் கண்டி செல்லும்போது மாத்தளையருகில் வரும்போது மாலை 6 மணி சிங்கள செய்தியில் இரண்டு பொலிசார் கொலை செய்யப்பட்டதாக சொன்னபோது அந்த வேனில் இருந்த சில சிங்கள இளைஞர்கள் எழுந்து கோபத்தில் தமிழர்களை கொல்லவேண்டும்' என சுற்றி சுற்றி பார்த்தார்கள் நான் சாரதிக்கு பின்புறமாக இருந்தேன். இதைக்கேட்டதும் சன் ஆங்கிலப்பத்திரிகையை தூக்கியபடி "ஏக்கத் தமாய்" என்ற ஒரு வார்த்தையை மட்டும் சொல்லிக்கொண்டு எழும்பினேன். அவர்களும் "ஏக்கனே மாத்தயா" என்றார்கள். அந்தச் செய்தி முடிந்ததும் அந்த இளைஞர்களது கோபம் திறந்த சம்பேயின் போத்தலின் சத்தமாக அடங்கிது. நானும் தொடர்ச்சியாக சன் பத்திரிகையை படித்தபடி பிரயாணத்தை கண்டிவரை தொடர்ந்தேன்.*

*அன்று இரவு அனுராதபுரத்தில் படுத்திருந்துவிட்டு; மறுநாள் அருகில் இருந்த களுவாராச்சியின் உறவினர்கள் எனக்கு ஏற்கனவே பழக்கமானதால் அவர்களுடன் காலையுணவை அருந்திவிட்டு மத வாச்சி சென்று; எனது வைத்தியசாலையில் சில விடயங்களை முடித்து விட்டு எனது அலுவலக மோட்டார் சைக்கிளை எடுத்துக்கொண்டு யாழ்ப்பாணம் புறப்பட்டேன். அங்கு சென்றடைவதற்கு இரவு எட்டு மணியாகிவிட்டது. வீட்டில் இரண்டு நாளில் பிறந்த தினம் கொண்டாட இருந்த மகனுடன் கொஞ்சி விளையாடிக் கொண்டிருந்தபோது, வைத்தியசாலையில் இருந்து வந்த மனைவி 'யாழ்ப்பாணம் ரவுணில் கேக்கிற்காக ஓடர் கொடுத்திருக்கு' என்றாள்.*

*மறுநாள் காலை எழுந்ததும் யாழ்ப்பாணம் வைத்தியசாலையில் வேலை செய்யும் அவளை அங்கு விட்டு விட்டு கேக்கை எடுப்பது எனது வேலையாகியது.*

*அந்த இரவு என்னை பொறுத்தவரை சந்தோசமாக இருந்தது. கிழமைக்கு ஒரு முறை மனைவியையும் குழந்தையையும் பார்க்கும் அரசாங்க உத்தியோகத்தனது வாரவிடுறைகள் வேறு எப்படி இருக்கும்?*

*எந்த ஒரு கவலையும் இல்லாது எதிர்காலம் நிகழ்காலம் என்று எதைப்பற்றிய சிந்தனையும் அற்றவாழ்க்கை. இரண்டு வருமானம். யாழ்ப்பாணம் வந்தால் ஓடுவதற்கு மாமாவின் கார் வசதியான வீடு. அப்படியே கொக்குவிலில் எங்கள் வீட்டிற்கு சென்றுவிட்டு; அதற்குப் பின்னர் ஆனைக்கோட்டைக்கு நண்பனுடன் சென்று கள்ளு அடித்துவிட்டு வரும்போது அந்த இரண்டு நாட்களும் எப்படிப் போகும்*

எனத் தெரியாமல் வாழ்ந்தகாலம்- வசந்தகாலம்தான்.

சனிக்கிழமை மனைவியை வேலைக்கு அழைத்துச் செல்வதற்காக எழுந்து காலை எட்டு மணியளவில் யாழ்ப்பாணம் ரவுணுக்கு புறப்பட்டேன். எனது மோட்டார்சைக்கிளில் யாழ்ப்பாணம் பிரதான வீதியால் சென்று ஆஸ்பத்திரி வீதியை அடையும் வரை எல்லாமே வழமைபோல் இருந்தது. வைத்தியசாலைக்கு முன்பாக சென்றபோது அனுராதபுரத்தில் எனது மேலதிகாரியான டொக்டர் பத்மநாதன்- அவரது வீட்டின் முன்பாக நின்றவாறு எனக்கு கையை காட்டினார். நான் அவருக்கு கையை அசைத்தபடி வைத்தியசாலை முன்பு மோட்டார் சைக்கிளை நிறுத்தினேன். எனது மனைவி வைத்தியசாலை யுள்ளே நூழைந்து விட்டாள்.

சுற்று வட்டாரத்தில் ஏதோ மாற்றம் தெரிந்தது. வைத்தியசாலைக்கு முன்பாக இரண்டு பக்கமாகச் செல்லும் வீதியின் நடுவே வாடகைக்கார்கள் மினி பஸ் வண்டிகள் என குறைந்தது அரைகிலோ மீட்டர் தூரத்திற்கு நிறுத்தியிருப்பார்கள். அதாவது வேம்படி வீதியில் இருந்து காங்கேசன்துறை வீதிவரையும் உள்ள இந்த இடம் வாகனங் கள் நிறுத்தும் பிரதேசமாகவிருந்தது. ஆனால் அன்று எந்த வாகன மும் எனது கண்ணுக்குத் தெரியவில்லை கண்ணுக்கெட்டியவரை வெளியாக இருந்தது. மேலும் கண்ணாடித் துண்டுகள் சிதறி எனக்குப் பக்கத்தில் நிலமெங்கும் கிடந்தது. ஆச்சரியத்துடன் பார்த்துக் கொண்டிருந்த என்னை யாரோ பெயர் சொல்லிக் கூப்பிட்டார்கள். மேலே பார்த்தபோது என்னுடன் படித்த டொக்டர் ஜெயச்சந்திரன் நண்பர்களுடன் டொக்டர்கள் விடுதி பல்கனியில் நின்றபடி ‘உள்ளுக்கு வாடா. இல்லையேல் உடனே வீடு செல்’ என்றான்.

அவனது வார்த்தைகள் கேட்டாலும் அர்த்தம் புரியாமல் சிரித்தபடி நின்றபோது;

‘மீண்டும் ஆமிட்ட அடிவாங்கப் போகிறாய் உடனே போ’ என்றான்

சுற்றிவர எவரும் இல்லை ஏதோ அசம்பாவிதம் நடந்துவிட்டது என நினைத்துக்கொண்டு எனது மோட்டார் சைக்கிளை திருப்பிக்கொண்டு டொக்டர் பத்மநாதன் வீடு சென்றேன்.

‘உனக்கு விடயம் சொல்லத்தான் மறித்தேன். இரவு பெடியங்கள் சில ஆமிக்காரரைக்கொன்று விட்டார்கள் என்ற ஆத்திரத்தில் ஆமி வந்து இங்குள்ள பல கார்களை அடித்து நொருக்கியது, பிள்ளையார் விலாஸ

க்குச் சொந்தமான வேனும் நொருக்கப்பட்டது. மீண்டும் வருவார்கள் என்பதால் வீதிகள் எங்கும் வெறிச்சோடிக்கிடக்கிறது. இன்று எந்தக் கடையும் திறக்கமாட்டார்கள்.' என்றார் பத்மநாதன்.

மகனுடைய பிறந்தநாள் கேக்கை மறந்து விட்டு குறுக்குவழியால் சுண்டிக்குழி சென்று விடயத்தை மாமா மாமியிடம் சொன்னேன்.

இப்பொழுது மனைவி மாலையில் வேலை முடித்து எப்படி வீட்டுக்கு வருவாள் என்ற கவலை மனதில் படிந்து கொண்டது. வைத்தியசாலை யில் இருக்கும்வரையும் பாதகமில்லை. வரும் வழியில் ஏதாவது நடக்காமல் இருக்கவேண்டும் என நினைத்துக் கொண்டிருந்தோம்.

மாலையில் எனது மனைவி வந்ததுமல்லாமல் அந்த கேக்கையும் கொண்டு வந்தாள்.

'எப்படி வந்தாய்?' எனக்கேட்டேன்.

'நடந்துதான்.' என்றாள்.

பல விதத்தில் பெண்கள் ஆண்களைவிட தைரியசாலிகள் என புரிந்து கொண்டேன். இராணுவத்திற்குப் பயந்து நான் கேக்கை விட்டுவிட்டு வந்தாலும்; தனது மகனுக்காக கேக்கை எடுத்துக்கொண்டு குறைந்தது மூன்று கிலோ மீட்டர் தூரம் நடந்து வந்ததன் காரணம் தாய்மையா? அல்லது பெண்களுக்குரிய அசாத்திய துணிவா?அல்லது யதார்த்த நிலைமையை புரிந்துகொள்ளாத அறியாமையா?

எனது மகனின் பிறந்த நாள் ஞாயிற்றுக்கிழமையன்று இரண்டு குடும்பங்களுடன் நடந்தது.

24ஆம் திகதி இரவு கொழும்பில் நடந்த எந்தச் சம்பவங்களும் தெரியாமல்; நான் திங்கட்கிழமை காலை வழமைபோல் எழுந்து; அரசாங்க மோட்டார் சைக்கிளில் மதவாச்சி சென்றேன். வழி எங்கும் எதுவித தடைகளும் இருக்கவில்லை. ஐக்கிய தேசியக் கட்சி யின் முக்கியஸ்தர்களில் ஒருவரான கந்தசாமி என்ற பிரமுகர் - பருத்தித்துறைத் தமிழர் அந்தப்பிரதேசத்தில் இருந்ததால் அங்கு பார தூரமான சம்பவங்கள் எதுவும் நடைபெறவில்லை.

எனது மகனின் பிறந்தநாள் இல்லாமல் இருந்திருந்தால்; நான் நிச்சயமாக கொழும்பில்தான் நின்றிருப்பேன். வானுலகத்தில் இருந்து தான் இந்த சுய வரலாறு எழுதியிருக்க வேண்டியிருக்கும்.

சென்னை...

அடுத்தநாள் என்னிடம் இருந்த ஒரே ஒரு விலாசத்தில் இருந்த வர்களிடம் சென்று உதவி கேட்பது என நினைத்தேன். எனது மனைவியின் சகோதரன் தந்த முகவரியில் உள்ளவர்கள் ஏற்கனவே எனக்கும் தெரிந்தவர்கள். என்னோடு இந்துக்கல்லூரியில் படித்து, பேராதனை பல்கலைக்கழகம் சென்று என்ஜினியராக தற்பொழுது அமெரிக்காவில் வசிக்கும் செல்வகுமாரின் தந்தையான காசி விஸ்வநாதன் மாஸ்டரின் வீடு அமைந்தகரையில் இருந்தது. ஓட்டோ வில் மாஸ்டரின் வீட்டைத் தேடிப் பிடித்துக் கொண்டு சென்றபோது அங்கு என்னுடன் இந்துக்கல்லூரியில் படித்த சாவகச்சேரியை சேர்ந்த பரந்தாமன் இருந்தார்.

# சிக்னல் பற்பசை தலையிடி மருந்தாகியது.

அமிஞ்சிக்கரையில் அடுக்கு மாடியில் ஒரு வீட்டில் காசி விஸ்வநாதன் மாஸ்டர் மனைவியுடன் இருந்தார். மாஸ்டரும் மனைவியும் ஏற்கனவே என்னுடன் படித்த செல்வகுமாரின் பெற்றோர்கள் என்பதால் ஏற்கனவே அறிமுகமானவர்கள்.

அவர்கள் வீட்டில் பரந்தாமன் என்ற சிறுவயது நண்பன் எனக்கு ஞானம் என்ற பெயரில் அறிமுகப்படுத்தப்பட்டதுடன், ஈழமக்கள் புரட்சிகரமுன்னணியின் முக்கியஸ்தராகவும் காசி விஸ்வநாதன் மாஸ்டரால் அறிமுகப்படுத்தப்பட்டார்.

என்னுடன் படித்தவர்கள் இப்படி அரசியல் முக்கியஸ்தர்களாக இருப்பது ஒருவிதத்தில் ஆச்சரியமளித்ததுடன், அந்த அறிமுகம் எனக்கு அதிர்ச்சியையும் தந்தது.

அதுவரையும் இயக்கம் என்பது எனக்கு தெரியாத - சம்பந்தப் படாதவர்கள் என்ற சிந்தனைதான் இருந்தது. நான் நினைக்கிறேன். பல மத்திய வகுப்பினருக்கு பொதுவானதாக அந்த சிந்தனை இருக்கும். 83 கலவரம், தூரத்துப் பச்சையாக இருந்த ஆயுதக்குழுக்களை தங்களவராக நினைக்க வைத்திருக்கும் எமது யாழ்ப்பாணத் தமிழ் மக்களுக்கு. ஆனால் நான் சிங்களப்பகுதிகளில் வேலை பார்த்தபடி யால் அந்த எண்ணம் என்னைத் தொற்றிக் கொள்ள இந்தியா வர வேண்டியிருந்தது. ஒருவன் வாழும் சூழ்நிலை அவனது சிந்தனை

கலாச்சாரம் மற்றும் பண்பாடுகளை உருவாக்குகிறது என்பது எவ்வளவு சரியானது என்பதை அத்தருணத்தில் உணர்ந்தேன்

பரந்தாமன் ஒரு வித்தியாசமானவனாக மாணவனாக படிக்கும் காலத்தில் இருந்தான். யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரியில் வேறு வகுப்பில் படித்தாலும் ஒரே தரத்தில்தான் இந்துக்கல்லூரியில் சேர்ந்தோம். பல வருடங்கள் பழகிய நட்பு.

அக்காலத்தில் விடுதியில் இருந்தபோது எமது பொதுவான பொழுது போக்கு தமிழ்சினிமாப் படங்கள் பார்ப்பது. இதைத்தவிர அக்காலத்தில் முக்கிய நடிகருக்கு இரசிகர்களாக இருந்து அவர்கள் பற்றி பேசுவதும் அவர்கள் பற்றிய தகவல்கள் சேரிப்பதும் எமது கல்லூரி வாழ்வில் முக்கிய அமம்சங்களாக விளங்கின.

நான் சிவாஜி கணேசனது இரசிகன். அதேபோல் பலர் எம்ஜி இராமச்சந்திரன் ஜெய்சங்கர் முதலானவர்களது இரசிகர்களாக இருந்தார்கள். ஆனால் அப்பொழுது சாந்தி நிலையம் என்ற திரைப்படத்தில் சிறுமியாக நடித்த மஞ்சுளாவுக்கு இரசிகனாகவும் அந்த சாந்திநிலையம் படத்தை ஒன்பது தடவைகள் பார்த்தவனாகவும் இருந்த நண்பன் பரந்தாமன் மட்டும்தான்.

அதனால் அவன் வித்தியாசமான சினிமா இரசிகனாக எம்மிடையே அறிமுகமானான். எப்பொழுதும் பரந்தாமனை பார்க்கும் போது நடிகை மஞ்சுளாவின் உருவம் எனக்கு மனதில் நிழலாடும்.

காலங்கள் கடந்து நான் பல்கலைக்கழகம் போனபின் பரந்தாமனது தந்தையார் இறந்தார் என்ற தகவல் காதில் விழுந்தது. வாழ்க்கை என்ற இரயில் பிரயாணத்தில் வேறு வேறு திசைகளில் பயணப்பட்டதால் நாங்கள் பிற்காலத்தில் பல வருடங்களாக சந்தித்துக்கொள்ளவில்லை

மாஸ்டர் வீட்டில் சந்தித்த பரந்தாமனைக்கண்ட வியப்பிலிருந்து மீள்வதற்கு முன்னால் பரந்தாமன் என்னிடம் ‘உனது நண்பர் குஞ்சி என்பவர் இங்கே இருக்கிறார்’ - என்றபோது இந்துக்கல்லூரியின் விடுதியில் இருந்த இடைக்காட்டைச் சேர்ந்த குணசேகரம் என்பவர் மனதில் வந்து சென்றார்.

அவரை நான் மதவாச்சியில் வேலை செய்யும் நாட்களில் ஒரு நாள் யாழ்ப்பாணம் பஸ்நிலையத்தில் சந்தித்தேன். அந்த மாலைநேரத்தில் தாடிவளர்த்த ஒருவர் கையில் சுரண்டியபோது திரும்பினேன்.

பார்ப்பதற்கு பிச்சைக்காரன்போல் தாடிவளர்த்து தலையில் ஒரு டவலால் மொட்டாக்கிட்டபடி இருந்தார்.

என்னிடம் 'எப்படி இருக்கிறாய்?" என்று கேட்டுவிட்டு தாழப் பறந்து முகத்தருகே வந்துவிட்டு மீண்டும் பறந்து சென்ற பறவைபோல் மறைந்துவிட்டான். பின்பு யோசித்தேன் - அவன் வாழ்வு ஏதோ தலை மறைவு வாழ்வு போல் இருக்கிறது என்று.

'வேறு யார் நமக்கு தெரிந்தவர்கள் நம்மோடு படித்தவர்கள் இங்கே இருக்கிறார்கள்?' புதிய இடத்தில் அறிமுகமானவர்களை தெரிந்து கொள்ளும் சாதாரண விருப்புடன் கேட்டேன்.

'குகனும், ஹரிசந்திரா என்ற இந்துக்கல்லூரியில் படித்தவர்கள் இருவர் புலியோடு இருக்கிறார்கள்.

'அப்படியா ஹரிசந்திரா இயக்கத்தில் இருப்பான் என கற்பனை பண்ணமுடியாது எனக்கு.

இப்படி பேசிக் கொண்டிருந்தபோது 'இரண்டு இளம்தாரியள் இருக்கி றீர்கள்' எங்களை நோக்கி சொல்லிக்கொண்டு என ஒரு லீட்டர் பிளாக் அன்ட் வையிட் போத்தலை எங்கள் முன்பு வைத்தார் மாஸ்டர்.

அந்த போத்தில் மதுவோடு வேறு சில விடயங்களும் வெளியே வந்தன.

பரந்தாமன் இராணுவத்தால் பிடிக்கப்பட்டு ஜெயிலில் இருந்தது தெரியவந்தது. வாழ்க்கையில் பொலிஸ் ஸ்ரேஷனே போய் இராத எனக்கு இத்தகவல் பெரிய விடயமாக இருந்தது.

நான் படிக்கும் காலத்தில் வண்ணையானந்தன், மாவை சேனாதி ராசா, காசியானந்தன் போன்றவர்கள் சிறையில் இருந்து வெளிவரும் போது அவர்களுக்கு நடந்த வரவேற்புக் கூட்டங்களையும் இரத்த திலகங்களையும் உணர்வு கொந்தளிக்க பார்த்திருக்கிறேன்.

அக்காலத்தில் சிறை மீண்ட செம்மல் என்ற வார்த்தைகள் எனக்கு அடிக்கடி காதில் விழுந்தன. சங்கிலித்திருட்டில் யாழ்ப்பாணத்தில் சிறைசென்றவர்களும் தங்களை சிறை மீண்ட செம்மல்களாக காட்டிக் கொண்டார்கள். படித்த இளைஞர்களுக்கு எப்பொழுதும் யாழ்ப்பாணத்தில் மரியாதை இருந்தது. பிற்காலத்தில் இப்படியான "செம்மல்களால்" அந்தச் செல்வாக்கு சரிந்தது உண்மையே.

'அப்ப நமது பரந்தாமனும் சிறை மீண்ட செம்மல்தானே?'

'உனக்கு நக்கலாக இருக்கு. மேலும் சிலநாட்கள் நான் இருந்திருந்தா நான் வெலிக்கடையில் கொலை செய்யப்பட்டிருப்பேன்.'

நான் கவலையடைந்த மனநிலைக்குப் போனேன்.

'நான் குட்டிமணி , ஜெகன் போன்றவர்களோடு சிறையில் இருந்தேன். 83 ஜூலை கலவரத்ததுக்கு சிலநாட்கள் முன்பாகத்தான் வெளியே வந்தேன். இருந்திருந்தால் நானும் அம்போதான்.

'அதுசரி குட்டிமணி தங்கத்துரை முதலானோர் பிடிபடுவதற்கு பிரபாகரன்தான் காரணம் என பலர் பேசுகிறார்கள். அதில் உண்மை யுள்ளதா?' என்றபோது–

'தம்பிமாரே இங்கே இந்த விழல் கதைகளை கதையாதீங்க' என்றார் மாஸ்டர்.

'குட்டிமணியும் தங்கத்துரையும் அப்படி நம்புகிறார்கள். மேலும் குட்டிமணி "வெளியே சென்றபின் அந்த முழியனுக்கு நான் யார் என காட்டுகிறேன் என கூறியதை எனது காதால் கேட்டேன்" என்று பரந்தாமன் சொல்லியபோது மீண்டும் மாஸ்டர் 'இந்தக் கதைகளை விடுங்க. உறுதிப்படுத்த முடியாதவை.' என்றார்

81 ஆம் ஆண்டில் சித்திரை மாதம் தங்கத்துரை குட்டிமணி ஆகியோர் கடற்கரையில் காத்திருந்த போது அவர்களுக்கு பிரபாகரன் இந்தியா செல்ல படகோட்டியை ஒழுங்கு பண்ணுவதாக இருந்தது . அந்தப் படகோட்டிக்கு காத்திருந்த போது கைது செய்யப்பட்டதாக அரசல்புரசலாக சில கதைகள் யாழ்ப்பாணத்தில் உலாவின. ஆனாலும் மாஸ்டரின் வீட்டில் அவரது பிளக் அன்ட் வைட்டைக் குடித்துக் கோண்டு இதற்குமேல் கதைப்பது நாகரீகமில்லை என்பதால் அந்தப் பேச்சுகளை விஸ்கியுள் அமிழ்த்தினோம்.

மாஸ்டரின் மனைவி கொண்டு வந்த தோசையை சாப்பிட்டுவிட்டு அன்று இரவு அவரது வீட்டில் தங்கினேன் என்பதைவிட தரையில் கிடந்தோம் என்பதே உண்மை

பரந்தாமன் என்ற ஞானத்தின் அழைப்பின் பேரில் எபிக் என்ற ஈழமக்கள் புரட்சிகர முன்னணியின் தகவல் நிலையத்திற்கு சென்றேன். சூளைமேட்டில் ஒரு கட்டிடத்தின் மேல்மாடியில் அது அமைந்திருந்தது.

*அங்கிருந்தவர்கள் இனிய முகத்துடன் தோழர் என வரவேற்றது மட்டுமல்லாமல் அன்று இரவு சாப்பாடும் தந்தார்கள்.*

*ஐந்து தமிழ், ஆங்கில பத்திரிகைகள் மற்றும் புத்தகங்கள் இருந்தன. இரண்டு மணிநேரம் அங்கு இருந்து விட்டு வெளியே வந்தபோது வாசலில் நான் கழற்றிப் போட்ட செருப்பைக் காணவில்லை. மற்ற வர்களது செருப்பை எடுக்கவும் மனமில்லாமல் வெறும் காலோடு ஆர்காடுரோட்டில் அரைக்கிலோ மீட்டர் சென்று புதிய இரப்பர் செருப்பை வாங்கி அணிந்து கொண்டு அறைக்கு வந்து சேர்ந்தேன்*

*செருப்பை பறி கொடுத்தாலும் தோழமையான அந்த இடம் என்னைக் கவர்ந்து விட்டது. மேலும் எனது பால்யகால நண்பரான குண்சி - நீ எப்பொழுதும் இங்கு வரலாம் எனச் சொல்லியிருந்தர். தொடர்ச்சியாக புத்தகத்தை வாசித்துக்கொண்டு இருந்துவிடுவேன். அந்த இடத்தில் பேசுவதற்கு துணையும் வசிப்பதற்கு புத்தகங்களும் எனது முக்கியமான கவர்ச்சியாக இருந்தன.*

*சில இரவுகள் எபிகில் படுத்தும் உள்ளேன். அழுக்கான தலை யணைகளை போட்டுக்கொண்டு தரையில் படுத்துவிடுவேன். நடு இரவில் எழும்பியபோது தலைக்கு கீழ் இருக்கும் தலையணை காணாமல் போய்விடும். சுற்றியுள்ள சுவரில் உள்ள கார்ல் மார்க்ஸ், லெனின், ஸ்ராலின் போன்றவர்கள் படங்களில் இருந்து வெளியேறி 'எப்பொழுது நீ கம்யூனிஸ்டாக மாறுவாய்' என முறைத்தபடி இருந்தன. அங்கு மாவோவின் படம் இல்லாதது கொஞ்சம் ஆறுதலை அளித்தது. என்னைப் பொறுத்தவரை கம்யூனிசத் தத்துவங்களை படித்தறிய முடிந்த இடம் அந்த எபிக்கேயாகும். அவுஸ்திரேலியா வரும்வரைக்கும் அக்காலத்திலே மாவோ ஸ்ராலினை உலக வரலாற்றில் மாபெரும் கொலைகாரர்களாக இனம்கண்டு கொண்டாலும் லெனின்மீதும் கார்ல் மாக்ஸின் பாலும் இளம்சிவப்பு அபிமானம் இருந்தது.*

*84 ஆம் வருடம் வைகாசி மதிய வெயில்வேளை - நான் எபிக்கில் இருந்த போது ரோட்டில் பெரிதாக சத்தம் கேட்டது. மாடிப்படிகளில் இறங்கி எபிக் கட்டிடத்திற்கு அருகே உள்ள சிறிய பாதையைப் பார்த்த போது பல ஈபிஆர்எல்எவ் தோழர்கள் ஒரு முப்பது வதான மனிதரை மொத்து மொத்தென அடித்தார்கள். அவன் அம்மே, அம்மே என சத்தமிட்டான்.*

*சிங்கள உளவாளி என சிலர் கூக்குரல் இட்டார்கள். எனக்கு என்ன செய்வதென்று தெரியவில்லை. ஒரு மனிதனை பலர் அடிப்பதை பார்ப்பது இதுவே முதலாவது தடவை.*

*ஒருவர் - அடிப்பதை நிறுத்திவிட்டு விசாரித்தபோது அந்த மனிதன் மலையாளி எனப்புரிந்தது.*

*அவன் அம்மே என்றது இவர்களுக்கு அவனை ஒரு சிங்களவராக அடையாளம் காட்டியிருக்கிறது.*

*இந்தச் சம்பவத்தை அதில் பங்கு பற்றியவர்கள் மறந்திருக்கலாம். ஆனால் என்னால் மறக்கமுடியாத சம்பவம் அந்த அடிவாங்கிய மலையாளத்து மனிதன் மெதுவாக திரும்பி பார்த்தபடி நடந்து போனது - அடித்தவர்கள் அவனிடம் மன்னிப்புக் கேட்டது - அடித்த தோழர்கள் பலர் மனம் நொந்து பேசியது என்பன என்னால் மறக்கமுடியாத காட்சிகள்.*

*நல்லவேளை அப்பாவியான ஒரு சிங்களவர் அகப்பட்டிருந்தால் அவரது நிலை எப்படி இருக்கும் என்பதையும் அந்தக்கணத்தில் எண்ணிப் பார்க்கவும் மனம் தவறவில்லை.*

*ஒரு மாலை நேரம் சினிமாவுக்குச் சென்றுவிட்டு ஒரு நாள் எபிக்கிற்கு போனபோது மிகவும் தலையிடியாக இருந்தது . அங்கிருந்த தோழர்களிடம் தலைவலி மருந்து கேட்டேன்.*

*எல்லோரும் இல்லை என்று சொன்னார்கள்.*

*அப்போது ஆறடி உயரமான நெய்யில் வளர்ந்த செழிப்பான உடலுடன் ஒருவர் சிரித்தபடி வந்தார். எனது வயதுதான் இருந்தாலும் - அவரது உடலும் புன்னகையும் அவரை மதிப்புக்குரிய மனிதராக உயர்த்தி விட்டது.*

*இயக்கத்தவர்கள் எல்லோரும் மெலிந்தவர்கள். அதுவும் ஈழமக்கள் புரட்சிகர முன்னணியினர் நித்திய பஞ்சத்தில் எத்தியோப்பியா சோமாலி நாட்டில்வாழ்ந்தவர்கள் போன்ற தோற்றம் உடையவர்கள். மேலும் அவர்களுக்கு கிடைக்கும் உணவைத்தான் நான் பார்த்திருக்கிறேன் .பகிர்நதிருக்கிறேன். நிச்சயமாக இந்த மனிதர் அவர்களில் ஒருவராக இருக்க முடியாது என்பதை எனது உள்ளுணர்வு சொல்லியது.*

அந்த செழிப்பான மனிதர் இதோ நான் மருந்து தருகிறேன் எனக் கூறிவிட்டு ஏதோ வெள்ளைப்பசையை எடுத்து எனது நெற்றியில் சூடு ஏறத் தேய்த்தார். நானும் மனிதர் ஏதோ வைத்தியம் தெரிந்தவர் என நினைத்து அவர் தேய்த்தபின்னர் எனது அறைக்குச் சென்று படுத்து விட்டேன். நிச்சயமாக தலையிடி குறைந்துவிட்டதாக உணர்ந்தேன்

அடுத்த நாள் நான் எபிக்கிற்கு சென்ற போது குன்சி அங்கு என்னை கையில் பிடித்து சமையல் அறைக்கு அழைத்துச் சென்று 'நீ கொஞ்ச நாளைக்கு இங்கு வரவேண்டாம்' எனச் சொன்னார். அதற்கு எதுவும் கேட்காமல் - நான் வெளியே வந்தபோது முதல்நாள் நான் சந்தித்த அதே மனிதர் வந்து 'எப்படி தலையிடி? என்றார் சிரித்தபடி

'ஏதோ உங்கள் புண்ணியத்தில் இரவு தூங்க முடிந்தது'

'நான் உங்களுக்கு நெற்றியில் தடவியது சிக்னல் பற்பசை' என சிரித்து விட்டு தனது பெயர் விசாகன் யாழ்ப்பாணம்ப் பல்கலைக்கழகத்தில் படித்தேன் என அறிமுகமானார். அவருடன் அன்று அவரது பல் கலைக்கழக நண்பனான மகேஸ்வரராஜாவும் சேர்ந்து கொண்டார்.

எனது மனதில் எதற்கு என்னை வரவேண்டாம் என சொன்னார்கள் என்பது தலைக்குள் வண்டாக குடைந்து கொண்டிருந்தது. ஏதாவது ஓபரேசன் இலங்கையில் செய்யப்போகிறார்கள் என விசாகன் கோடி காட்டினார்.

ஏற்கனவே செல்வநாயகம் சந்திரகாசனோடு ஒஃபரில் தான்வேலை செய்வதாகவும் அங்கு வந்து தனக்கு ஒத்தாசை செய்யும்படியும் காசி விஸ்வநாதன் மாஸ்டர் கூறியிருந்தார்.

அடுத்த நாள் எக்மோரில் உள்ள ஒஃபரது அலுவலகத்திற்குப் போன போது மாஸ்டர் - 'ஏன் இவ்வளவு நாளும் வரவில்லை?' எனக்கேட்டார்.

'ஞானத்தின் ஆட்களோடு இடத்திற்கு போய் வந்தனான்' என்றேன்.

'அவன்கள் சரிப்படான்கள். அவன் நாபா மட்டும்தான் நல்ல மனுசன். இவன்கள் தேவையில்லாத கம்யூனிசம் பேசிக்கொண்டு நேரத்தை வீணாக்குகிறார்கள். புலியளைப் பார் - அவர்கள் இந்த மாக்சிசம், கம்யூனிசம் என்று ஏதாவது பேசுகிறார்களா ? அவங்களுக்கு தெரியும் சிங்களவருக்கு எங்கேயடித்தால் விடயம் நடக்கும் என்று' - என்று மாஸ்டர் பேசிய விடயங்கள் தெளிவாக புரிந்துகொள்ளக்கூடியதாக இருந்தன.

*ஆனால் புலிகளின் போக்கு சரி என என்னால் எண்ண முடியவில்லை. என்னைப் பொறுத்தவரை ஆயுதப்போராட்டத்தை மறுக்க முடியாத போதிலும் மனிதாபிமானமான விடயங்களில் ஈடுபடுவது சாலச்சிறந்தது என நினைத்தேன்.*

*'பேராதனை - கொழும்பு என பல்கலைக்கழகத்தில் இருந்து அரை வாசியில் படிப்பு முடியாமல் பல மாணவர்கள் இங்கு வந்துள்ளார்கள். அவர்களுக்கு தமிழ்நாட்டில் பல்கலைக்கழகத்தில் இடம் எடுப்பது சம்பந்தமான வேலையை நான் செய்கிறேன். அதுவிடயமாக கல்வி அமைச்சர் அரங்கநாயகத்தை நாளை சந்திக்கவேண்டும். அதற்கு நீ வருகிறாயா' எனக்கேட்டார் மாஸ்டர்.*

*அடுத்த நாள் கல்விஅமைச்சரை சந்திப்பதற்கு நான் தயாராகினேன்.*

# தமிழக அமைச்சருடன் சந்திப்பு

காலை எழுந்ததும் எனக்குள் ஒரு அவசரம், ஆவல், பரபரப்பு என பல உணர்வுகள் நோய்க்கிருமிபோல தொற்றிக்கொண்டன. இலங்கையில் அமைச்சர்கள் அதிகாரிகள் என பலருடன் பேசிப் பழகியிருந்தேன். நான் கடமையாற்றும் கால்நடைத் துறைக்குப் பொறுப்பான தொண்டமானை சந்தித்திருக்கிறேன். அநுராதபுரத்தில் பல சிங்கள அமைச்சர்களுடன் நான் பணியிலிருந்த மதவாச்சிய பிரதேசத்தை அபிவிருத்தி செய்வது விடயமாக பேசியிருக் கிறேன். இப்பொழுது சென்னையில் அகதியாக இருக்கும் காலத்தில் ஒரு அமைச்சரை பார்ப்பதற்கு அதுவும் மற்றவர்கள் தேவைக்காக சந்தித்து பேசுவது என்பது எனக்கு உற்சாகத்தை ஊட்டியது.

சென்னைக்கு வந்த பின்பு எனது உடைகளில் எனது கவனிப்பு குறைந்து விட்டது. சென்னை வெய்யிலும் புழுதியும் என்மீது படிந்தன. கால்நடையாகவோ அல்லது பஸ்சிலோ செல்வதால் வேர்த்து கசங்கி இந்த நகரத்தில் பிதுங்கி வழியும் இலட்சோபலட்சம் மனிதர்களில் நீயும் ஒருவன் என்ற சமத்துவ எண்ணத்தை மனத்தில் உருவாக்கிவிட்டது. யார் பார்ப்பது? யார் கேட்பது? மனைவியோ குடும்பமோ இல்லை. வேலையே அற்றவன்தானே என்ற நினைப்பு பெரும்பாலும். ரீ சேட்டுகளும் பாட்டா இரப்பர் காலணியோடு சென்னை வாசியானேன்.

அன்று வெள்ளை சேர்ட் நீளக்கால்சட்டையும் சப்பாத்தும் அணிந்து ஈழஏதிலியர் கழகம் சென்றேன். எனக்காக அங்கு காத்திருந்த காசி விஸ்வநாதன் மாஸ்டர் என்னிடம் 'பொம்பிளை பார்ப்பதற்கு மாப்பிளை போல வருகிறாய். ஏதாவது சேட்டை விட்டால் அமெரிக்காவில் இருக் கும் மச்சானுக்கு அறிவித்து விடுவேன்' எனச் சொல்லிக் கொண்டு அங்கு நின்ற ஓட்டோவில் ஏறினார்.

பதிலளிக்காமல் அவரைப் பின்தொடர்ந்தேன்.

காசி விஸ்வநான் மாஸ்டரைவிட ஈழஏதிலியர் கழகத்தில் ஈழவேந்தன் மூன்று பேரைக் கொண்ட கட்சியை வைத்திருந்தார். அவருடன் பேசிய ஒவ்வொரு தடவையும் மேடம் இந்திராகாந்தியை சந்தித்தது பற்றியே உடைந்த கிராமப்போன் போல்பேசினார். அலுத்துப்போய் மனிதரை தவிர்த்து விடுவேன். சிலவேளைகளில் ஒளித்துவிடுவேன் .செல்வநாயகம் சந்திரஹாசன் வார்த்தைகளை அளந்து பேசுவார். வேறு பலர் இருந்தாலும் எனது பெரும்பாலான விடயங்கள் காசி விஸ்வநான் மாஸ்டரோடுதான் இருந்தது.

அவரது மகனோடு படித்த என்னைதனது நண்பனாக நடத்திய அவரது சினேக மனப்பான்மை என்னைக் கவர்ந்தது. எந்த அரசியலி லும் சம்பந்தப்படாது தமிழ் மக்களுக்கு உதவி மட்டும் செய்வது என்ற மனப்பான்மை அவரிடம் இருந்தது. வலதுசாரி போக்காகவும் கொம்யூனிச எதிர்ப்பாளராகவும் அவர் இருந்தாலும் - பத்மநாபாவை 'அவன்தான் இந்த இயக்கத்தவர்களில் ஒழுங்காகவும் நேர்மையாகவும் இருக்கிறான் என்றும் அடிக்கடி சொல்லுவார்.

பலகாலம் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியில் ஆசிரியராக இருந்த தால் எல்லோரையும் போடா வாடா என்றும் அழைப்பார். அந்த வார்த்தைகளில் அன்பு கசிந்திருப்பதால் எவராலும் அவரைப் புறக் கணிக்க முடியாது. அத்துடன் நேர்மையாக நினைத்ததையே சொல்லி விடும் இயல்புள்ளவர்.

அவரோடு பழகிய காலங்கள் எனக்கு இனிமையானவை.

அரங்கநாயகம் அமைச்சரை காண்பதற்காக நானும் காசி விஸ்வநான் மாஸ்டரும் அவரது வீட்டு முன்றலில் காத்திருந்தோம். தமிழ்ப் படங் களில் காண்பிப்பதுபோல் வெள்ளை வேட்டி சட்டை அணிந்து மீசையுடன் கரிய நிறத்தோற்றத்தில் அங்கு பலரும் இருந்தனர்.

*வழுக்கையும் தொப்பையுமாக பெரும்பாலானவர்கள் அடையாளங் கள்.*

*83 வன்முறையின் பின்பு இலங்கையின் தெற்குப் பல்கலைக்கழகங் களில் தொடர்ந்தும் படிக்க முடியாது. தமிழ்நாட்டுக்கு வந்தவர்களை அந்த வருடங்களிலே தமிழ்நாட்டு பல்கலைக்கழகங்களில் படிப் பதற்கு ஏற்றுக் கொள்ளவேண்டும் என்ற கோரிக்கை நாம் கைவசம் எடுத்துச்சென்ற கோப்பில் இருந்தது. எம்.ஜி.ஆரின் மந்திரிசபையில் கல்வி அமைச்சரான அரங்கநாயகத்திடம் அதனைக் கையளிக்க விருந்தோம்.*

*அந்தக்கோரிக்கை மனுவில் தமிழகம் வந்த இலங்கை மாணவர்கள் சுமார் இருபத்தைந்துபேரின் பெயர்கள் வரையில் இருந்திருக்கலாம். இந்தவிடயத்தில் எங்களை முயற்சி எடுப்பதற்கு தூண்டியவர்கள் யாழ்ப்பாணத்தில் உண்ணாவிரதம் இருந்தபோது விடுதலைப்புலி களால் தமிழ்நாட்டுக்கு கடத்தி வரப்பட்டவர்களே. அவர்களில் சிலர் ஓஃபர் என்ற ஈழஏதிலியர் கழகத்தில் வந்து இந்தக் கோரிக்கையை வைத்தார்கள். அவர்களால் மீண்டும் இலங்கைக்குப் போய் படிப்பைத் தொடரமுடியாது என்பது தெளிவானபோதே இதை மற்றவர்களுக்கும் ஏற்ற பொதுவான ஒரு கோரிக்கையாக முன் வைத்தோம்.*

*இப்பொழுது பார்க்கும்போது விடுதலைப்புலிகள் செய்த பொறுப் பற்ற பல செயல்களில் இதுவும் ஒன்றகத் தெரிகிறது. ஆனால் என்ன அந்த மாணவர்களைப் பற்றி எவரும் அக்காலத்தில் கவலைப்பட வில்லை. அவர்களின் பெற்றோர்கள் மாத்திரம் தமக்குள் குமைந்தபடி இருந்திருக்கலாம். பலகாலமாக மதிவதனியின், தமிழாசிரியரான தந்தை ஏரம்பு மாஸ்டர் அவரது ஊரான புங்குடுதீவில் விடுதலைப் புலிகளை திட்டிக் கொண்டிருந்தாக அறிந்தேன்.*

*அமைச்சரிடம் கொடுப்பதற்கான கோரிக்கை மனுவை ஓஃபரை நடத்திய சந்திரகாசனும் காசி விஸ்வநான் மாஸ்டரும் தயாரித்திருந் தார்கள். என்னைப் பொறுத்தவரையில் நான் தமிழ்ப்படங்களில் வரும் எப்பொழுதும் கதாநாயகனுக்கு துணை செய்யும் துணை நடிகன் போன்று உடன் சென்றேன்.*

*அமைச்சருக்கு காத்திருந்தோம். எங்களது முறை வந்ததும் உள்ளே சென்றோம். வீட்டின் ஹோலில் அமைச்சர் அரங்கநாயகம் நீண்ட ஷோபாவில் சம்மணமாக வெள்ளை வேட்டி சட்டையணிந்து, புன்னகை*

செய்வதற்கு விருப்பமற்றவர் போன்று அமர்ந்திருந்தார். அவரைச் சுற்றி பலர் நின்றனர்.

அவர் எங்களை ஏறெடுத்து பார்த்தபோது விஸ்வநாதன் மாஸ்டர் வணக்கம் சொன்னார். நான் அவருக்கு பின்னால் நின்று இலங்கையில் அமைச்சர்களுக்கு சொல்வதுபோன்று குட்மோர்ணிங் என்றேன்.

அமைச்சர் வார்த்தைகளை வீணாக்க விரும்பாமல் இருந்திருக்க வேண்டும். என்னை ஏறெடுத்தும் அமைச்சர் பார்க்கவில்லை. ஆனால் மாஸ்டரிடம் இருந்து அந்த மனுவை வாங்கிவிட்டு தலையை ஆட்டினார்.

அமைச்சருடனான சந்திப்பு அத்துடன் முடிந்தது. அமைச்சரின் புறக்கணிப்பு எனக்கு ஏமாற்றமாக இருந்தது. வீட்டின் வாசல்வரை திரும்பி வந்தபோது அவரது காரியதரிசி மிகவும் அவசரமாக வந்து கண்களை அகலமாக விரித்தபடி 'அமைச்சருக்கு வணக்கம்கூட சொல்லத் தெரியாதா? என்ன படிப்பு படித்திருக்கிறாய்?' என மிக சீரியசாககேட்டார்.

கறுத்த குண்டான முன் வழுக்கையான அந்த மனிதரைப் பார்த்ததும், அவர் கேட்டவிதம் எனக்கு சிரிப்பைமூட்டியது.

'மிருகவைத்தியம் படித்தேன்' என்றேன்.

அந்தக காரியதரிசி முகத்தில் கோபம் அடங்காமல் பதில் பேசாமல் திரும்பிப் போய்விட்டார்.

'இவங்களுக்கு தலைகுனிந்து வணக்கம் சொல்லவேண்டும். அது நீ செய்யவில்லை. அதுதான் பிரச்சினை' என்றார்.

'நான் அப்படி இலங்கையில் புத்த பிக்குகளுக்கு மட்டுமே செய்திருக் கிறேன்'

இலங்கையில் இருந்தபோது அநுராதபுரம் வந்த பல இலங்கை அமைச்சர்கள் அரசாங்க அதிபரால் அறிமுகப்படுத்தப்பட்டதும் சிரித்து இரண்டு வார்த்தைகளாவது பேசுவார்கள். அக்கால விவசாய உதவி அமைச்சர் சந்திரா பண்டாரவோடு விவாதித்திருக்கிறேன். வவுனியா மாவட்ட அமைச்சர் மகிந்தசோம எனக்கு கைஓங்கி அடிக்கவந்து பின்னர் மன்னிப்புகேட்டார்.

தமிழ்நாட்டில் நிலவுடமை சமுதாய அமைப்பு எப்படியான போலிக் கவுரவங்களை காவியபடி செல்கிறது என்பது எனக்குப் புரிந்தது. இலங்கையில் பாதிக்கப்பட்ட சிறுபான்மை சமூகத்தில் இருந்து வந்த நான் இலங்கையில் அதிக சுயமரியாதையோடு வாழ்ந்ததாக அந்தச் சம்பவம் எனக்கு உணர வைத்தது.

அந்தக் காலத்து தமிழ்நாட்டு அமைச்சரவையில் பல ஈழத்து அனுதாபிகள் இருந்தார்கள். அதில் முக்கியமானவர் ஓரத்தநாட்டைச் சேர்ந்த சோமசுந்தரம் அவர் மற்றும் முதலமைச்சரின் சிபார்சில் பல மணவர்கள் நேரடியாக தமிழக பல்கலைக்கழகங்களுக்குப் பிரவேசித்தார்கள். விடுதலைப்புலிகளால் கடத்தப்பட்டவர்களில் விடுதலைப்புலிகளின் தலைவருக்கு மனைவியாகிய மதிவதனியைத் தவிர ஏனையோர் இந்தியாவில் படிப்பைத் தொடர்ந்து நல்ல பதவி களில் ,தொழில் துறைகளில் இருப்பார்கள் என நம்புகிறேன்.

----------------

நான் ஈழபுரட்சிகர விடுதலை முன்னணியின் அலுவலகத்தில் சந்தித்த விசாகனுடன் சேர்ந்து பாண்டிபஜாரில் உள்ள கல்யாணமண்டபத்தில் மேல்மாடியில் ஒரு சிறிய அறை எடுத்து தங்கினேன். அந்த இடம் போக்குவரத்து , உணவு என பலவிடயங்களுக்கும் இலகுவாக இருந் தது. எங்கள் அறைக்குப்பக்கத்தில் சினிமாத் துறையை சேர்ந்தவர்கள்: உதவி இயக்குநர்கள் தங்கியிருந்தார்கள். அவர்களிடம் பேசுவதன் மூலம் சினிமாவைப்பற்றியும் நாங்கள் அறிந்தோம். அவர்களுக்கு ஈழத்து பிரச்சினையை விளக்கினோம்.

இதில் ஒரு முக்கியமான விடயம் தமிழ்நாட்டில் இலங்கைப்பிரச்சி னையை அறிந்தவர்கள் என்றால் இடதுசாரிகள் மட்டுமே. அவர்களுடன் மட்டுமே புத்திசாலித்தனமாக உரையாடலை நடத்த முடியும்.

மற்றவர்கள் தமிழ் சிங்கள இனப்பிரச்சினையை - அதாவது சிங்களவர் தமிழரை கொல்கிறார்கள் என்ற தோரணையில் மட்டுமே புரிந்து கொண்டிருந்தார்கள். அக்காலத்தில் பலருக்கு சிலோன் என்ற பெயர் ஸ்ரீலங்காவாக மாறிவிட்டதும் தெரிந்திருக்கவில்லை.

இதற்கு ஏற்றாற் போலவே தமிழ்நாட்டு ஊடகங்களும் செய்திகளை வெளியிடுவார்கள். இலங்கையில் தென்பகுதியல் தமிழர்கள் வாழ்வதோ இஸ்லாமியர்கள் தமிழ் பேசுவதோ அவர்களுக்குத் தெரியாது. பெரும் பாலன தமிழ் இயக்கங்களும் இந்த விடயத்தை கறுப்பு - வெள்ளையாக

வைத்திருப்பது நன்மை என நினைத்து அந்த உணர்வையே அங்கு வளர்த்தார்கள்.

இடதுசாரி இயக்கங்களான ஈழவிடுதலை அமைப்பு, ஈழப்புரட்சிகர விடுதலை முன்னணி என்பனவும் இதையே செய்தார்கள்.

நான் பாண்டிபஜாரில் இருந்த காலத்தில நடந்த சம்பவங்கள் பல சுவையானவை. குறிப்பிடத்தக்தவை.

விடுதலைப்புலிகள் தமிழ்நாட்டில் அக்காலத்தில் பயிற்சி முகாம்களை நடத்தியபோது அந்த முகாம்களில் பயிற்சிக்குப் பொறுப்பான குகன் என்ற பொன்னம்மான் என்னை கோடம்பாக்கத்தில் தெருவில் ஒருநாள் தான் வந்த ஜீப்பை நிறுத்தி என்னைச்சந்தித்த போது ஆச்சரியத்துடன் வரவேற்றேன்.

குகனது வீடு இருக்கும் யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரிக்கு அருகே இருக்கும் சீனியர் லேனில்தான் சிலகாலம் நாங்கள் குடியிருந்தோம் .எனது வீட்டுக்கு அருகில்தான் அவனது வீடும் இருந்தது. குகன் எனக்கு ஒரு வகுப்புக்கு கீழே இந்துக்கல்லூரியில் படித்தாலும் சிநேகிதமாக இருந்தோம்.

குறைந்தது வாரத்துக்கு இருமுறையாவது எனது வீட்டுவாசலில் சைக்கிளை நிறுத்திப் பேசி விட்டுத்தான் போவான். இது நடந்த காலம் 1971 – 1972 அளவில். இதேவேளை எனக்கு ஒரு மேல் வகுப்பு படித்த அவனது அண்ணன் நரேன், யோகி மாஸ்டர் என்ற பெயரில் பிற்காலத்தில் விடுதலைப்புலிகளின் அரசியல் பொறுப்பாளராக இருந்தவர் ஆனால்அவனுடன் பழகி இருந்தாலும் அதனை நட்பு என்று சொல்லமுடியாது உருவத்தில் மாத்திரமல்ல குணத்திலும் இருவரும் வேறானவர்கள். நரேன் காலையில் பறித்த திராட்சைபோலும் குகன் சுல்தானா போலும் இருப்பார்கள். குகன் உணர்வுமயமாகவும் நட்பாகவும் நடப்பான். நரேன் ஒரு கம்பனியை நடத்தும் முதலாளிபோன்ற தன்மையுடன் பழகுவான்

குகன் ஆரம்பத்திலேயே விடுதலைப்புலிகளில் சேர்ந்ததால் அவனு டைய குடும்பம் இலங்கை அரசாங்கத்தின் பல நெருக்கடிகளை சந்தித்ததை நான் அறிவேன். குகனில் நட்புடன் அவனது தன்னலமற்ற செயலால் அவன்மீது மதிப்பும் மரியாதையும் வைத்திருநதேன்.

சென்னைத் தெருவில் எதிர்பாராமல் அவனைக்கண்டது சந்தோச மாக இருந்தது.

‘இந்தியாவில் என்ன செய்கிறாய்?’ எனக்கேட்டு நேரடியாக விடயத்திற்கு வந்தான்.

‘ நான் ஒஃபர் நிலையத்துடன் தன்னார்வமாக வேலை செய்கிறேன்’

‘இவர்கள் பிரயோசனம் இல்லாதவர்கள். எங்களிடம் வந்து உதவி செய். அத்துடன் உனது மனைவியால் எங்களுக்கு மருத்துவ உதவியளிக்கவும் முடியும். மாதம் வாழ்க்கைச்செலவுக்கு 3000 ருபாய் தருவதற்கு நான் பொறுப்பு’

அவசரமாக என்னை விலைபேசி முடித்தான்.

‘எனக்கு பணம் பெரிதல்ல. நான் உங்களுக்கு முடிந்த உதவிகள் செய்ய சம்மதம். அதேவேளை மற்றவர்களுக்கும் நான் உதவிகள் செய்வது உங்களுக்கும் சம்மதமென்றால் நான் தயார்.’ என்றேன்.

‘அது சரிவராது. நீ எங்களுடன் மட்டும்தான் இருக்கவேண்டும்’

‘அது எனக்குச் சரி வராது. நான் சுதந்திரமான ஒரு சேவையில் ஈடுபடத்தான் விரும்புகிறேன்.’ என்று சொல்லிவிட்டு தமிழ்விடுதலை இயக்கங்களின் ஒற்றுமையை வலியுறுத்தினேன்.

‘உனது வீட்டில் வேறு ஒருவரை குடியேற்ற சம்மதமா?’ என்ற ஆத்திரமான குரல் அவனிடமிருந்து தொனித்தது.

மேலும் இவனிடம் பேசிப் பிரயோசனமில்லை என கதையை மாற்றினேன்.

‘நான் இங்கு வந்து சில வாரங்கள்தான். என்ன செய்வது என யோசிக்கிறேன். மேலும் படிப்பதற்கும் ஒரு எண்ணமுள்ளது’ என்றேன்.

குகன் என்னிடமிருந்து விடைபெற்றான்.

விடுதலைப்புலிகளிடம் இருந்த ஏகபோகமான குத்தகைத்தன்மை அவர்களது தலைவரில் இருந்து வெளிநாடுகளில் அவர்களின் ஆதரவாளர்களர்கள வரையில் புற்றுநோய்போல் பரவியிருந்தது. இதுவே இவர்களது உயிர்க்கொல்லியாக மாறியது. இந்தத் தன்மையை பல தமிழ் புத்திஜீவிகள் புரிந்து கொள்ள முடியாது போனது கவலைக்கிடமானது. வேறு ஒரு நாகரீகமான சமூகத்தில் இப்படி ஒரு இயக்கத்தால் தலை எடுக்க முடியாதிருந்திருக்கும்.

விடுதலைப்புலிகளின் ஆரம்ப காலத்து அங்கத்தவர்கள் பலர் விடுதலைப் புலிகளில் இருந்து விலகியபோது வேறு காரணங்களைச் சொல்லியபோதும் இந்தமாதிரியான எதேச்சாதிகாரமான போக்கை ஷோபாசக்தி போன்ற ஓரிருவர் தவிர மற்றவர்கள் வெளிக்கொணர வில்லை.

இலங்கை அரசாங்கத்தையும் இராணுவத்தையும எதிர்ப்பதற்கு விடுதலைப்புலிகளின் எதேச்சதிகாரம்தான் வலுவான ஆயுதம் என நினைத்து மவுனம் காத்தார்கள்.

இதன் தொடர்ச்சிதான் பிற்காலத்தில் முழுச்சமூகமும் அழிந்து மீண்டும் புத்துயிர்ப்பு அடையவேண்டிய தேவையை உருவாக்கியிருக் கிறது.

# நாளையை நாளை பார்ப்போம்

சென்னையில் நகைக்கடைகள், ஜவுளிக்கடைகள் நிறைந்த பாண்டிபஸாரில் நான்கு மாடிக்கட்டிடம். அதன் கீழ்ப் பகுதியில் கல்யாணமண்டபம் மேல்பகுதிகளில் சிறிய அறைகள் வாடகைக்கு விட்டிருந்தார்கள். ஆண்கள் மட்டும் இருப்பதற்காக அமைந்தவை.

இரவு நடுநிசி வரையும் ஜனநடமாட்டமான பிரதேசமானதால் நாங் களும் பம்பலாக இருந்தோம். நண்பர் விசாகனுடன் சேர்ந்து இருந்த காலம் சில மாதங்களே ஆனாலும் சுவாரஸ்யமானது.

விசாகன் யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்தில் படித்தவர். திருமண மாகி மனைவியையும் குழந்தையையும் பிரிந்து என்னைப்போல் வந்திருந்ததால் எனக்கு அவருடன் இணக்கமாக இருக்க முடிந்தது. அவர் நகைச்சுவை உணர்வுடன் அரசியலும் பேசுபவர்.

யாழ் பல்கலைக்கழகத்தில் படித்ததால் பல இயக்கத்தினரையும் தெரிந்து வைத்திருந்தார். அக்காலத்தில் இடதுசாரி அரசியல் பேசுவது டன் மட்டுமல்ல பல இடதுசாரிகளையும் அறிந்து வைத்திருந்தார்.

இலங்கை கம்மியூனிஸ்ட் கட்சியில் இருந்து பிரிந்து பின் செந்தமிழர் இயக்கத் தலைவராக இருந்த வி பொன்னம்பலம் அவர்களை எனக்கு அறிமுகப்படுத்தியவர்.

வி. பொன்னம்பலம் நேர்மையான அரசியல்வாதியென எல்லோரா லும் அறியப்பட்டவர். எனக்கு அவர் நடமாடும் பல்கலைக்கழகமாகத் தெரிந்தார் என்பது மட்டுமல்ல பிற்காலத்தில் எனக்கு பலரை அறி முகப்படுத்தி தமிழ்நாட்டில் வேலை செய்வதற்கும் உதவினார்.

அவர் எனக்கு முதலாவதாக அறிமுகப்படுத்தியவர் சாவித்திரி தேவ நேசன் என்ற பெண்மணி. இவர் இந்தியாவில் பேராசிரியர் சந்திரன் தேவநேசன் என்ற சென்னை கிறீஸ்துவ கல்லூரியில் கற்பித்த தமிழ் நாட்டு பேராசிரியரை மணம் முடித்த, இலங்கையின் பிரபல இடது சாரியான லெஸ்லி குணவர்தனாவின் சகோதரியாவார்.

சாவித்திரி தேவநேசன் கூரையற்றவர்களுக்கு கூரை (*Roof for the Roofless*) என்ற தன்னார்வு நிறுவனத்தை சென்னையில் நடத்துபவர். அவரது நிறுவனத்தில் சேர்ந்து செங்கல்பட்டு மாவட்ட கிராமங்களில் மிருக வைத்தியராக ஒரு மாதம் வேலை செய்தேன்.

அக்காலத்தில் தி. நகரில் தோழர் வி பொன்னம்பலத்திடம் உரை யாடச் செல்லும்போது அவரது இடத்தில் ஒண்டிக்குடித்தனம் செய்யும் மாவை சேனாதிராஜாவை சந்திப்பேன். தமிழ் அரசியலின் பல விட யங்களின் முடிச்சுகளை புரிந்து கொள்ளுவதற்கு தோழர் பொன்னம் பலம் உதவியாக இருந்தார் அவரிடம் உமா மகேஸ்வரன், பத்மநாபா என்போர் அடிக்கடி வருவார்கள். இளம்தலைமுறை இயக்க இளஞர்கள் அரசியலுக்கு ஒரு பாலமாக இருந்தார்.

ஆனால் - அவரது கருத்துகள் ஏற்கப்பட்டு செயல்படுத்தியதாக நான் அறியவில்லை.

நண்பர் விசாகன், மானிடவியல் பட்டதாரி. சமூகவியல் மற்றும் அரசியல் விடயங்களில் ஆர்வமானவர் சென்னைப் பல்கலைகழகத்தில் படிப்பதற்கு வந்து நிற்பதாகக் கூறினார். அவரைப் பொறுத்தவரை யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்தில் பட்டப்படிப்பை முடித்தவுடன் விரிவுரையாளராக சேராததற்குக் காரணம் பேராசிரியர் இந்திரபாலா என்று அடிக்கடி கூறுவார். 'அவர் தன்னை அறுத்ததாக' தினமும் கூறுவார்.

இது உண்மையாகவும் இருக்கலாம். பொய்யாகவும் இருக்கலாம்

யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்தில் மட்டுமல்ல பேராதனைப் பல்கலைக்கழகத்திலும் இப்படியாக விருப்பு வெறுப்பு பார்த்து

மாணவர்களை தெரிவு செய்தல் நடந்திருக்கிறது.

பேராதனைப் பல்கலைக்கழகத்தில் பேராசிரியர் மகாலிங்கத்தினால் நான்கு முறை மைக்கிரோபயலஜியை மீண்டும் மீண்டும் எடுக்க வேண்டியிருந்ததால் எனது சிறப்பு சித்தி மற்றும் கிளாஸ் என்பன இல்லாமல் போய்விட்டது.

ஆண் பேராசிரியர்களின் பாலியல் பலவீனங்கள் விருப்பு வெறுப்புக்கு முதன்மையான காரணமாகிறது. என்னைப் பொறுத்தவரை சாதாரண மாகவோ பல்கலைக்கழகத்தை முடித்து வந்தாலும் மிருகவைத்திய ராக வருவதைத் தடுக்க முடியாது.

ஆனால் விசாகனின் குறை தொடர்ச்சியாக நீடித்தது. இப்படியான சுய வரலாறு இலங்கையில் பலருக்கும் இருந்தாலும் அதை தினமும் சொல்லி தண்ணியடிப்பதற்கு விசாகனால் மட்டுமே முடியும்.

பேராசிரியர் இந்திரபாலாவை அதிகமாக நினைவு கூர்ந்த மாணவன் எனது நண்பன் விசாகன் மட்டுமே என்பதில் பேராசிரியர் பெருமை கொள்ள முடியும்.

சென்னையில் கோடைகாலத்தில் ஒரு நாள் - வழக்கத்திற்கு மாறாக நேரத்தோடு அறைக்கு சென்றுவிட்டோம். விசாகனது வட்டமான அவரது முகம் நீண்டு இருந்தது. மிகவும் கவலையுடன் இருந்தார். அன்று மாலை வழக்கமாக பேராசிரியரை சொல்லியபடி மது அருந்த பணமும் இல்லை.

'என்ன வழக்கத்தைவிட அப்படி என்ன கவலை'

'விடுதலைப்புலிகள் இயக்கத்தில் சமீபத்தில் ஒரு களையெடுப்பு நடந்ததாம் என செய்தி வந்தது. எனது மச்சானுக்கு ஏதாவது நடந் திருக்குமோ என நினைக்கிறேன்' எனச் சொல்லிவிட்டு எழுதமுடியாத பல வார்த்தைகளால் விடுதலைப்புலிகள் தலைவருக்கு அர்ச்சனை நடந்தது.

சென்னையில் நான் இருந்த காலத்தில் அதிக களையெடுப்புகளை தமக்குள் நடத்தியவர்கள் உமா மகேஸ்வரன் தலைமையிலான தமிழ் மக்கள் விடுதலைக்கழகம் - PLOT.

இந்த களையெடுப்பு என்ற வார்த்தை நாங்கள் சிறுவயதில் இருக்கும் போது விவசாயப் பின்புலம் இல்லாத மாணவர்கள் மத்தியிலும்

பிரபலமானதற்கு காரணம் அறுபதுகளின் பிற்பகுதியில் வந்த டட்லி சேனாநாயக்கா அரசாங்கத்தின் காலத்தில் யாழ்.குடாநாட்டு மாணவர் களை களை பிடுங்குவதற்கு பஸ்களில் கிளிநொச்சி பரந்தன் முதலான நெல்விளையும் பிரதேசங்களுக்கு கொண்டு செல்வார்கள்.

அக்காலத்தில் மாணவர்கள் பிடுங்கிய நெற்கதிர்கள், களைகளிலும் பார்க்க அதிகமாகும். அதன்பின்பு இந்த வார்த்தை துரோகிளை களை யெடுப்பதற்கான இரட்டைப் பதமாக தமிழ் அரசியல்வாதிகள் வாய் களில் மந்திரமாகி பின்னர் மாணவர் இளைஞர் என ஆட்கொண்டது.

விடுதலைப்புலிகள் இயக்கத்தில் விசாகனின் மனைவியின் தம்பி ஹரிச்சந்திரா அக்காலத்தில் சேலத்தில் இருந்தார்.

அப்பொழுது நான் சொன்னேன்:-

'விடுதலைப்புலிகள் என்ன செய்தார்கள் என அறிய முடியாது. என்னால்ச் செய்யமுடிந்த உதவி என்னிடம் ஐம்பது ரூபாய் மட்டுமே உள்ளது. அதைத் தருகிறேன். என்னவாவது செய்யுங்கள். ஆனால் இன்று இரவுக்கு எனக்கு மச்சத்துடன் சோற்றுப் பார்சல் மட்டும் வேண்டித்தர வேண்டும். நாளையை நாளை பார்ப்போம்' என்றேன்.

சிறிது உற்சாகத்துடன் உடைமாற்றிக்கொண்டு கீழே சென்றவர் ஒரு மணிநேரத்தில் இரண்டு பார்சல்கள் கொண்டு வந்தார். அத்துடன் அவரது கையில் வெள்ளை நிறமான சாராயப்போத்தலும் இருந்தது.

இந்தியாவில் தயாரிக்கப்படும் மிகச்சிறந்த குடிவகை. இலங்கையில் உள்ள மிக மலிவான சாராயத்திற்கு மட்டுமல்ல கிராமங்களில் வடிக்கும் வடிசாராயத்திற்கும் ஈடாகாது.

இலங்கையில் வடிசாராயம் காய்ச்சுபவர்கள் அதை ஒரு சேவையாக, பக்தி சிரத்தையோடு செய்வார்கள். எப்பொழுதாவது வடிசாராயம் குடித்து எவராவது அங்கு இறந்ததாக இலங்கைப் பத்திரிகைகளில் செய்தி வந்துள்ளதா…?

நீர்கொழும்பு வடிசாராயமான தங்கொட்டுவை வடிசாராயம் உண் மையில் ரஷ்ய வொட்காவிற்கு இணையானது. சிங்கள சமூகத்திற்கும் மட்டும் சொந்தமானது இந்தக்கலை. இலங்கையர் வசிக்கும் மத்திய கிழக்கு நாடுகளில்கூட இது பிரசித்தமானது.

விசாகன் கொண்டு வந்த சாராயப் போத்தலின் விலை நாற்பது ரூபாய். மிகுதி பத்து ரூபாய்க்கு உணவு கொண்டு வந்தார். என்னால் சிறிதளவுக்கு மேல் அருந்த முடியவில்லை. வயிறு எரிந்தது. ஆனால் நண்பர் போத்தலை காலியாக்கிய பின்பு சாப்பாட்டுப் பார்சலை பார்த்த போது அது தனி சோற்று பொதியாக இருந்தது.

வெறும் சோறை எப்படிச் சாப்பிடுவது எனக்கேட்டுபோது கோழிக்கறி என்று சொல்லி சிறிய பார்சலைத்திறந்தார். அதைப் பார்த்தபோது கோழியின் சிவப்பு கொண்டையுடன் அலகுகள் மற்றும் சிவப்பு விரல்கள் இருந்தன. அத்துடன் குடலும் இருந்திருக்கலாம். மிருக வைத்தியரான எனக்கு அது லெக்கோன்கோழியின் பகுதிகள் என்பது மடடும் புரிந்தது.

ஆத்திரத்துடன் ‘ எங்கே வாங்கினீர்கள்?’ எனக்கேட்டேன்.

சாராயத் தவறணைக்குப் பக்கத்தில் இருந்த பெட்டிக்கடை என்றார்.

எனக்கு விளங்கிவிட்டது. சென்னையில் ஒவ்வொரு தவறணைக்கும் பக்கத்தில் சிறிய பாத்திரங்களுடன் இப்படி விற்பவர்கள் இருப்பார்கள்.

எதுவும் பேசாமல் ஒரு பிடி சோற்றை விழுங்கி சாராயத்தால் ஏற்பட்ட வயிற்று எரிவை தணித்துக் கொண்டேன். பணம் வேறு எதுவும் இல்லாததால் பட்டினி கிடப்பதைத் தவிர வேறுவழியில்லை.

‘ஒரு நேர சாப்பாடு இல்லாமல் பட்டினியாக இருந்து நாட்டு விடு தலைக்காக எத்தனைபேர் போராடுகிறார்கள். எப்படி இயக்க பொடியள் கஷ்டப்படுகிறார்கள் தெரியுமா? எத்தனை செல்வந்த குடும்பத்தில் இருந்தவர்கள், தங்களை ஒறுத்து ஆயுதப்பயிற்சி எடுக்கிறார்கள்?’ எனத் தொடர்ச்சியாக நான் நித்திரைக்கு செல்லும் வரை உபதேசம் நடந்தது.

பேராசிரியர் இந்திரபாலாவின் செயலால் ஏற்பட்ட கவலையுடன் அவனது மனைவியின் தம்பியாகிய ஹரிச்சந்திராவை நினைத்து கவலையுடன் போதையில் இருக்கும்போது எனது பக்க நியாயத்தை எப்படிச் சொன்னாலும் அது எடுபடப்போவதில்லை என்பதால் மவுன மாக இருந்தேன்.

ஒரு சில நாட்களில் நடந்த மற்றுமொரு சம்பவம் இதைவிட வேடிக்கையானது.

மாலைவேளையில் வரும்போது பாண்டி பஜாரில் இறங்கி உள்ளூர் குளிர்பானம் ஒன்றை வாங்கி அதில் பாதியை குடித்துவிட்டு மிகுதிக்கு சாராயத்தை ஊற்றி நிரப்பி நின்று கொண்டே குடித்துவிட்டு வருவது விசாகனின் வழக்கம்.

தமிழ்நாட்டில் குடிப்பதென்றால் பெரிய ஹோட்டலுக்குப் போக வேண்டும். அல்லது தவறணைகளுக்குப் போகவேண்டும். தவறணை களில் சென்னையின் தொழிலாள வர்க்கத்தினருடன் சேர்ந்து மது அருந்தவேண்டும். அங்கு இலங்கையர்களின் நடை உடை பேச்சு எல்லாம் அந்நியப்பட்டுவிடும். இடைப்பட்ட மத்திய வகுப்பினர் குடிப் பதற்கு இடங்கள் இல்லை. பல மத்திய வகுப்பினர் மறைவில் அடிப்பதும் குளிர்பானத்துள் விட்டு குளிர்பானம்போல் அருந்துவதும் வழக்கம்.

நான் பார்த்தவரை சந்தோசத்துக்காக அளவோடு மது அருந்து பவர்களைப் பார்ப்பது அரிது. பலரும் கிளைமாக்ஸக்குச் செல்லும் வரை குடிப்பதைத்தான் பார்த்திருக்கிறேன்.

ஒரு நாள் அவ்வாறு குளிர்பானத்துடன் அடிக்கும்பொழுது பலரை பாண்டிபஜார் பொலிசார் அப்பிக்கொண்டு சென்று விட்டார்கள். அதில் விசாகனும ஒருவர் என நான் அறிந்து அங்கு சென்றேன்.

நமது நண்பர் உள்ளாடையோடு தமிழ் சினிமாவில் காண்பிப்பதைப் போல் இருப்பார் என நினைத்துச் சென்றபோது அதற்கு மாறாக அங்கு நிலைமை இருந்தது.

ஏராளமானவர்கள் கைகளில் தோல் பேக்குகளுடன் அப்பொழுது தான் ஒஃபீஸ் விட்டு வந்திருப்பவர்கள் போன்று தெரிந்தார்கள். உள்ளே சென்று ஒரு பொலிசாரிடம் நாங்கள் ஈழத்தவர் எங்களுக்கு சட்டவிதி கள் தெரியாது என்றேன். உடனே இனிமேல் அவ்வாறு செய்யக்கூடாது என்ற எச்சரிக்கையோடு விசாகனை விட்டு விட்டார்கள்.

அக்காலத்தில் ஈழம் என்ற பெயருக்கு மந்திர சக்தி இருந்தது. சாதாரண தமிழக மக்கள் மத்தியில் மதிப்பு மரியாதையும் இருந்தது. ஈழ அகதி என சொல்லிக் கொண்டு ரயிலில் டிக்கட் எடுக்காது போனவர் கள் பலரைத் தெரியும். நம்மவர் செய்கையால் மலரது வாசனையாக இருந்தது. பிற்காலத்தில் செத்த எலியின் வாடைபோல் ஈழவாசனை அங்கு வீசத் தொடங்கியது.

நான் விசாகனை அன்று சிறை மீட்டபோது 'நான் மட்டுமல்ல பல தமிழ்நாட்டு அரசாங்கத்தின் உயர் பதவியில் வகிக்கும் பிராமணர்கள்

*இருக்கிறார்கள். அவர்களால், வீட்டில் வைத்து குடிக்க இயலாது' என்று விசாகன் எனக்கு விளக்கம் சொன்னார்.*

*மைசூரில் பல்கலைக்கழகத்தில் அக்காலத்தில் படித்த விசாகனின் மனைவியின் தம்பி ஹரிச்சந்திராவை ஒன்றுவிட்ட தம்பியான பிரதாபன் மூலம் தொடர்பு கொண்டு மைசூருக்கு அழைத்து அங்கு சந்தித்து பேசினார்.*

*அப்பொழுது பல விடயங்களை அறிந்தோம். ஹரிச்சந்திரா விடு தலைப்புலிகளின் மிக நம்பிக்கைக்கு பாத்திரமானவனாகவும் முக்கிய பொறுப்புகள் வகிப்பதையும் அறியமுடிந்தது. ஹரிச்சந்திரா இயக்கத் தின் மீதான விசுவாசத்தையோ அல்லது ஈழத்து அபிமனத்தையோ விட பிரபாகரன் மீதுதான் அபரிமிதமான விசுவாசத்தைக்கொண்டிருந்ததை அவதானிக்க முடிந்தது.*

*இந்துக்கல்லூரியில் இரண்டு வருடங்கள் குறைவாகப் படித்த ஹரிச் சந்திராவை நேரில் பார்க்கும்போது அவனிடத்தில் சிநேகமோ சகோதர பாசமோ உடனே தோன்றும். அவனது வார்த்தைகளில் எதுவித பொய்யோ அல்லது யாழ்ப்பாணத்து நக்கல் வார்த்தைகளோ அல்லது தூஷண வார்த்தைகளோ இராது.*

*எந்த அரசியல் பற்றியும் பேசியோ அல்லது அதில் அவன் ஈடுபட்ட தாகவே நான் அறியவில்லை. நான் கல்லூரியில் இருந்து பல்கலைக் கழகம் போனபின்பு தொடர்புகள் விடுபட்டுவிட்டாலும் அவனை எனது நண்பர்களிடம் விசாரித்தபோது ஹட்டன் நாஷனல் வங்கியில் கொழும் பில் வேலை செய்வதாக கேள்விப்பட்டேன்.*

*பிற்காலத்தில் என்னோடு படித்த ஜெயக்குமாரின் மூலம் நான் அறிந்த தகவல்:*

*அவன் 83 கலவரத்தில் அவன் பாதிக்கப்பட்டு ஊருக்கு வந்ததாகவும் பின்பு விடுதலைப்புலிகள் இயக்கத்தில் சேர்ந்துவிட்டதாகவும் அறிந் தேன். அங்கு லெவ்டினணட் கேணல் இராதாவாகி பிற்காலத்தில் யாழ் மாவட்ட பொறுப்பாளராகி மரணமடைந்தான.*

*83 கலவரம் அரசியலில் எந்த கவர்ச்சியும் இல்லாதவர்களையும் இயக் கங்களை நாடி போகவைத்தது. வன்முறைக்கு வன்முறை என்பதே தீர்வாக எண்ணவைத்தது. பயங்கரவாதத்தை பயங்கரவாதத்தைக் கொண்டு எதிர்க்கவேண்டும் என்பது பிரபாகரனது தாரக மந்திரமாகியது.*

# *இந்திரா காந்தியற்ற ஈழவிடுதலை*

■

*யாழ்ப்பணத்தில் திருக்குடும்ப கன்னியர் மடத்தினரது வைத்தியசாலையில் வேலை செய்து கொண்டிருந்தபொழுது அங்கேயே 1984 ஜூன் மாதம் 18 ஆம் திகதி எனது மகள் யாழ்ப்பாணத்தில் பிறந்ததும் அடுத்தது என்ன என்ற கேள்வி எழுந்தது.*

*தொடர்ச்சியாக குண்டுகள் யாழ்ப்பாணத்தில் வெடித்துக் கொண்டிருந்தது. வேலை செய்யும் வைத்தியசாலைக்கு அருகிலும் அக்காலத்தில் குருநகர் இராணுவ முகாம் இருந்தது. எனது ஆலோசனைப்படி மனைவியும் இந்தியா வரத்தயாரானார்*

*இந்தக்காலத்தில் சென்னையில் எனக்கும் எதிர்காலம் விடையில்லாத வினாவாக நீடித்து இருந்தது. அடுத்து என்ன செய்வது...? ஒரு சமூகமே பிறந்து வளர்ந்த நாட்டை விட்டு வெளியேறி அகதியாக அலையும் வேளையில் எனது மனைவிக்கு இந்தியாவுக்கு புறப்படும் நேரத்தில் ஏற்கனவே சொல்லியபடி அங்கு மேல் படிப்பு படிப்பதற்கு விருப்பமில்லை. ஓஃபருடன் செய்த வேலைகள் எனக்கு முற்றாக திருப்தி தரவில்லை. குகன்(பொன்னம்மான்) மூலம் விடுதலைப்புலிகளிடம் இருந்து வந்த அழைப்பை நிராகரித்து விட்டேன். இந்த நிலையில் ஈழ மக்கள் புரட்சிகர முன்னணியில் இருந்த குணசேகரம் என்ற குண்சியை சந்தித்தேன். நாம் இருவரும் யாழ். இந்துக்கல்லூரியில் ஒரு வகுப்பு முன்-பின்னாக படித்தாலும் ஒன்றாக ஹொஸ்டலில் இருந்தோம்.*

சென்னையில் அக்கினி வெய்யில் அடித்தோய்ந்தாலும் இரும்படிக் கும் உலைபோல் இருந்த மாலைப்பொழுதில் சூளைமேட்டில் உள்ள பெட்டிக்கடை அருகே இருவரும் தேநீர் குடித்தபடி வில்ஸ் சிகரட் ஒன்றை நான் பற்றவைத்தபோது அவன் தனது பில்டர் இல்லாத சர்மி னார் சிகரட்டை நுரையீரல் எங்கும் இழுத்து நிக்கொட்டின் மூளையில் ஏறியதும் தனது தாடியை தடவியபடி 'ஏன் நீ எங்களோடு கும்பகோணம் வந்து தங்கக் கூடாது. இங்கு இருந்து என்ன செய்கிறாய்..?' என சிறு வர் பாடசாலை வாத்தியாரின் தொனியில் கண்டிப்பாக விசாரித்தான். அப்படி பேசுவதுதான் அவனது வழக்கம்.

'நான் எதுவும் முடிவு செய்யவில்லை. மேலும் இந்த விடுதலைப் போராட்டம் பற்றிய தெளிவான அபிப்பிராயம் எனக்கில்லை. அதே நேரத்தில் மக்களுக்கு உதவி செய்ய நினைக்கிறேன்.' எனச் சொல்லி விட்டு நான் யோசித்தபடியே கூர்மையான அவனது கண்களைப் பார்த்தேன்.

'நீ சுதந்திரமாக இயங்கலாம். எங்கள் இயக்கத்துக்கு ஆட்கள் தேவையில்லை. இருப்பவர்களுக்கே உணவளிக்க முடியாது திண்டாடு கிறோம். இயக்கத்தோடு சேரவேண்டியதும் இல்லை.'

அவனது கிண்டலை சட்டை செய்யாமல் 'இன்னும் சிலநாட்களில் எனது குடும்பம் யாழ்ப்பாணத்தில் இருந்து வருகிறார்கள். அதன்பின் னர் அது பற்றி யோசிக்கிறேன்' என்றேன்.

'கும்பகோணத்திலிருக்கும் ஸ்ராலின் அண்ணையின் வீட்டில் நீ தங்குவதற்கு ஏற்பாடு செய்கிறேன். எதைப்பற்றியும் யோசிக்காதே' என்றான்.

இயக்கத்தின் மத்திய குழுவிலும் நிதி விடயங்களுக்கும் பொறுப் பாக குண்சி இருந்தான். மேலும் மட்டக்களப்பு சிறை உடைப்பு சம்ப வத்தில் முக்கிய பாத்திரமாகவும் அவன் இருந்தான் என்று கேள்வி. இரகசியமாக விடயங்களை வைத்திருப்பதிலும் மறைந்து திரிவதிலும் அதிசய அசாத்தியமான திறமை அவனிடம் இருந்து.

அக்காலத்தில் கும்பகோணத்திற்கு அருகே உள்ள சிவபுரத்தில் இவர்களின் பயிற்சி முகம் இருப்பதை அறிவேன். மற்ற இயக்கங் களினது பயிற்சி முகாம்கள் ஓரத்தநாடு - சேலம் - தேனி என தமிழ்நாட்டின் பல இடங்களில் சிதறி இருந்தன.

மனைவி பிள்ளைகளுடன் எனது மாமா மாமியார் விமானமூலம் கொழும்பு ஊடாக சென்னை வந்து இறங்கினர். அவர்களை நண்பன் பரந்தாமனின் வீட்டில் தங்க வைத்தேன் அந்த வீட்டிற்குத்தான் எல்லா ஈழமக்கள் புரட்சிகர முன்னணியிரும் வருவார்கள் அங்குதான் எனது மகள் வந்து இறங்கியபோது வரவேற்று உள்ளே அழைத்து சென்றார் பத்மநாபா. பிற்காலத்தில் அந்த இடமே விடுதலைப்புலிகளின் கொலைக்களமானது.

இரண்டு கிழமையில் கும்பகோணம் சென்று ஸ்ராலின் அண்ணாவின் வீட்டில் தங்கினோம்.

இந்த ஸ்ராலின் வை. கோபாலசாமி போன்றவர்களோடு ஒன்றாக படித்த வழக்கறிஞர். திராவிடர் கட்சி ஆதரவாளராக இருந்தவர். பெரியாரின் மறைவின் பின்பு வீரமணி - ஆனைமுத்து என பிளவுகள் - சொத்துக்கள் - கொள்கைகள் என பிரிந்தபோது இயக்க கொள்கை யுடன் மட்டும் நின்றதுடன் ஈழ மக்களிடமும் அவர்களின் விடுதலை மீது மிகவும் பற்றுக்கொண்ட மனிதர்தான் இந்த ஸ்ராலின், உயர மானவர். மீசை வைத்தவர் மலையாள நடிகர் மம்மூட்டி மெலிந்தால் எப்படி இருப்பாரே அப்படிப்பட்ட தோற்றத்தில் இருப்பார். ஈழமக்கள் முன்னணியின் ஒரு காவலனாக அவர் அங்கு இருந்தார். அவரது வீட்டிற்கு எந்த நேரத்திலும் ஆட்கள் வருவதும் அங்கு தொடர்ச்சி யாக சமையல் நடப்பதும் அன்றாடக்காட்சிகள். அண்ணை என சொல்லிக்கொண்டு அவரோடு எப்பொழுதும் குறைந்தது இரண்டு பேராவது இருப்பார்கள்.

அவர்கள் வீட்டில் இருக்கும்போது எனது மாமியாருக்கும் எனக்கு பிரச்சினை உருவாகியது. எனது மகளை - தனது பேத்தியை நான் யாரோ ஒரு அந்நியர் வீட்டில் வைத்திருப்பதாகவும் குழந்தை பெற்ற தனது மகளை அங்கு வைத்து கவனிப்பதற்கு வசதிகளும் இல்லை என்றும் படுக்க கட்டில் இல்லை என்றும் என்மீது குற்றச்சாட்டுக்களை அடுக்கியவாறு இருந்தார் மாமியார். அவரது நச்சரிப்பு நாளுக்கு நாள் அதிகரித்தன.

கும்பகோணத்தில் நான் எதிர்பார்த்த விதமாக வேலை எதுவும் இல்லை. நான் இயக்கத்தின் பயிற்சி முகாமுக்குச் சென்று பார்த்தேன். கும்பகோணத்தில் புறமே அமைந்த பெரிய தோட்டத்தில் பயிற்சிமுகாம் அமைந்த இடம் காவேரியாற்றின் கரையில் அமைந்திருந்த அழகான பிரதேசம். நான் பார்த்த காலத்தில் மிகக்குறைந்த ஆயுதங்களை

மட்டும் வைத்துக்கொண்டு பயிற்சி செய்தார்கள். அத்துடன் அங்கு தேகப்பயிற்சியும் நடந்தது. மோட்டார் குண்டுகள் செய்யும் கடைச்சல் பட்டறை ஒன்றையும் அங்கு பார்த்தேன். ஒரு நாள் பத்மநாபா முகாமுக்கு வந்தபோது ஒரு ஏ கே 47 தூக்கி எனது கையில் தந்தார். கையில் எடுத்துப் பார்த்துவிட்டு வைத்துவிட்டேன்.

எனக்கு ஆயுதங்கள் மீது எக்காலத்திலும் கவர்ச்சி இருந்தது இல்லை. எனது சிறிய வயதுப் பருவகாலத்தில் எங்கள் வீட்டில் ஒரு துப்பாக்கி இருந்து. அதை எக்காலத்திலும் தொடவேயில்லை. பிற்காலத்தில் மதவாச்சியில் வேலைபார்த்தபோது வேட்டைக்கு போன போதும்கூட துப்பாக்கியைத் தொட்டதில்லை. செட்டிகுளம் பகுதியில் வேட்டைக்கு சென்றாலும் ஆயுதத்தை பாவிப்பது எனது நண்பர்களே.

ஆதிகாலத்தில் இருந்து தன்னம்பிக்கை இல்லாதவர்கள் ஏந்துவது தான் ஆயுதம் என்பது எனது நினைப்பு. ஆனாலும் ஆயுதம் இல்லாத உலகம் இராது என்பதுதான் நிதர்சனம்.

ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் பயிற்சி முகாமில் எனக்கு அதிர்ச்சி கொடுத்த விடயமும் அதேவேளை என்னைக் கவர்ந்த விடயம் ஒன்றும் இருந்தது. அக்காலத்தில் அங்கு இருந்தவர்களில் பெரும்பாலானவர்கள் எழுதப்படிக்க தெரியாதவர்கள் என்பது முக்கி யமாக யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த எனக்கு அதிர்ச்சியைக் கொடுத்தது. அதேவேளையில் அங்கு பயிற்சி எடுத்தவர்கள் பயிற்சி முடித்தபோது எழுதப் படிக்கத்தெரிந்தவர்களாக வெளியேறியது எனக்கு மிகவும் மகிழ்ச்சியை கொடுத்தது. பெரும்பாலனவர்கள் யாழ்ப்பாணத்தின் ஒடுக்கப்பட்ட சமூகத்தையும் மலையகத்தையும் சேர்ந்தவர்கள் என் பதும் இதற்குக் காரணம்.

பயிற்சி முகாமில் உள்ளவர்களுக்கு ஒழுங்காக உணவு கொடுக்க முடியாதிருந்ததையும் அங்கு பார்த்தேன். பெரும்பாலான நாட்களில் அவித்த கொண்டல் கடலையை அல்லது பயறு வகையறாக்களை அவர்களது தட்டுகளில் கண்டேன். அரிசிச் சோறு மதியத்தில் பார்க்க முடியும். பல உறுப்பினர்கள் கும்பகோணத்தை சுற்றியுள்ள கிராமங்களில் உண்டியல் குலுக்கி காசுக்கு கையேந்துவதையும் அரிசி – பருப்பு என கடைக்காரர்களிடம் வாங்கியதையும் பார்த்தேன்.

நாட்டிற்கு விடுதலை வாங்கித்தரப்போகிறோம் என ஆயுதம் ஏந்திய ஏனைய இயக்கங்கள் இவ்வாறு மக்கள் மத்தியில் – அதுவும் தமிழக

விவசாய மற்றும் கிராமத் தொழிலாளர் மத்தியில் பணம் திரட்டுவதற்கு இறங்கியிருக்கவில்லை. ஆனால் - இப்படியான சிந்தனைக்கு மாவோ யிசம் - லெனினிசத்தில் ஊறிய இந்திய மாக்சிசதோழர்களுடன் தோழமை கொண்டிருந்த பத்மநாபாவால் மட்டுமே முடிந்தது என நினைக்கிறேன்.

எழுதப் படிக்கத் தெரியாத அந்த இளம் தலைமுறையினர் மத்தி யில் மிகவும் வசதியான குடும்பத்தில் இருந்து வந்தவர்கள் - பல் கலைக்கழகங்களை அரைவாசியில் விட்டுவிட்டு வந்தவர்கள் என பலர் இருந்தார்கள். நாட்டின் விடுதலை என்ற பேரில் துன்பங்களை தாங்குவது மட்டுமல்ல - ஏழைகள் தொழிலாளர்களுடன் வாழ்வது எப்படி என்பதையும் பயிற்சியாக எடுத்து இயக்கத்தை ஒரு சமூக சீர்திருத்தமான இயக்கமாக பத்மநாபாவின் தலைமையில் சில காலங் களாவது ஈழமக்கள் புரட்சிகர முன்னணி இயங்கியதை அவதானித்து இலங்கையில் தமிழர் மத்தியில் மீண்டும் ஒரு நல்ல தலைமை வருமானால் அவர்களின் கீழ் மக்கள் அணிசேர்வதற்கான சாத்தியம் உண்டென்பதை மட்டும் என்னால் எதிர்வு கூற முடியும்.

ஒரு விவசாய நாடான இலங்கையில் மத்தியதர வர்க்கத்தினரையும் விவசாய தொழிலாளர்களையும் இனத்துவேச அரசியல் பேசாது ஒரேஅணியில் சேர்ப்பது என்பது மிகக் கடினம். ஆனால் அந்தக் கடினமான வேலை சில வருடங்களாவது பத்மநாபாவின் தலைமையில் மேற்கொள்ளப்பட்டிருந்தது.

இந்தியத் தலையீடு, விடுதலைப்புலிகளின் மிலேச்சத்தனம் என்பன பத்மநாபா மட்டுமல்ல எவருமே எதிர்பார்க்க முடியாதது.

கும்பகோணத்தில் தனிவீடு எடுத்த பின்பு குடும்ப நிலைமை ஒரு அளவில் சீரடைந்தது. இந்தக் காலத்தில் எனது யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி நண்பனாகிய கிருபாகரனை சந்தித்தேன். அவன் கிழக்கு மாகாணம் காரைதீவில் இருந்து வந்தவன். மிக வளமான உடற்கட்டுடன் எட்டாம் வகுப்பில் இருந்து இந்துக்கல்லூரியில் ஹொஸ் டலில் இருந்து படித்தவன். இருவரும் அங்கு நியூ போடிங் ஓல்ட் போடிங் இரு கட்டிடத்திலும் ஒன்றாக இருந்தோம். அவனை சந்தித்தபோது நம்பிக்கையுடன் பேசினான். 'ஈழம் வந்திடும். ரோ நமது தோழர்களுக்கு வட இந்தியாவில் பயிற்சி கொடுக்கிறது' என்பான். அவனுக்கு அடிக்கடி குலாப் ஜாமுன் வாங்கிக் கொடுப்பேன். அவனுக்கு இனிப்பில் அளவு கடந்த ஆசை.

*சில கிழமைகளில் உத்தரப்பிரதேசத்தில் பயிற்சி எடுத்தவர்களை சந்தித்தேன். அதில் ஒரு சுவையான விடயம் இங்கு குறிப்பிட வேண்டும். இலங்கைக் காட்டில் எப்படி கரந்துறைந்து, உயிர் வாழ்வது என்பதுபற்றி அவர்கள் சொல்லியிருந்தார்கள். இலங்கையில் கபரக்கொய்யா என்ற முதலை இனத்தைத் தவிர எல்லா இறைச்சியையும் சாப்பிட முடியும் என்று சொல்லியிருந்தார்கள். அந்தப் பயிற்சியை முடித்த இருவர் அங்கு நின்ற மெலிந்த கரும்பூனை ஒன்றை துரத்தியதைப் பார்த்தேன். இவர்களால் இலங்கை இராணுவத்திற்கு அபாயம் உண்டாகிறதோ இல்லையோ கோடம்பாக்கத்தில் நின்ற பூனைகளுக்கு ஆபத்து வந்ததுவிட்டது என்பதை உணர்ந்து கொண்டேன்.*

*இக்காலத்தில் 1984 ஓகஸ்ட் 6 ஆம் திகதி நடந்த ஒரு சம்பவம் முக்கியமானது. மீனம்பாக்கத்தில் பனாகொடை மகேஸ்வரனால் கொழும்புக்கு அனுப்பவிருந்த குண்டு வெடித்தது. இந்த சம்பவம் இந்தியாவை குறிப்பாக தமிழ்நாட்டை அதிர்ச்சிக்குள்ளாக்கியது. அக் காலத்தில் சூரியா என்ற இந்திப்பத்திரிகையில் விபரமாக இந்தியா ஈழத்தமிழ் இளைஞர்களுக்கு பயிற்சி கொடுப்பது பற்றி எழுதியிருந் தாலும் இந்தியா தொடர்ச்சியாக அதனை மறுத்தது. ஆனால் - இந்தக் குண்டு வெடிப்பு சம்பவம் குதிருக்குள் இருந்த திருடனை காட்டிக் கொடுத்தது.*

*கும்பகோணத்தில் இருந்த காலத்தில் பல முறை நான் சென்னை வந்து தங்குவேன். ஒரு நாள் 1984 நவம்பர் முதலாம் திகதி காலையில் எழுந்து காலை ஆகாரத்திற்கு வெளியே சென்றபோது பாண்டிபஜார் முற்றாக வெறிச்சோடியிருந்தது. பெரிய கடைகள் மட்டுமல்ல நடை பாதைக் கடைகள் எல்லாம் மூடப்பட்டு இருந்தன.*

*வழக்கமாக இடியப்பம் சாப்பிடும் மலையாளியின் கடை நோக்கி சென்றபோது அது மட்டுமல்ல அங்கு எந்த உணவுக்கடைகளும் திறக்கப்படவில்லை. மக்கள் நடமாட்டமற்றிருந்தது. சில நிமிடம் நடந்தபோது ஒரு மரத்தடியில் பிச்சைக்காரனைப்போல் தோற்றம் கொண்ட ஒருவரை சந்தித்தேன்.*

*அவர் - நேற்று இந்தியப்பிரதமர் இந்திரா காந்தி கொலை செய்யப் பட்டதாக சொன்னார். வெளியே உணவுண்ணும் எனக்கு சென்னை யில் பட்டினிதான் என நினைத்துக்கொண்டு நடந்து கோடம்பாக்கம் நோக்கி நடந்தபோது மேம்பாலத்தருகில் மூடப்பட்ட ஒரு சிறிய பெட்டிக்கடையில் ஆளரவம் தெரிந்தது. அந்தக் கடையின் கதவைத்*

தட்டினேன்.

‘பந்... நடக்குது. போ சார்’ என ஒருவர் விரட்டினார்.

பசிக்கிறது என்றபோது நாலு பழங்களைத் தந்து ‘சீக்கிரம் வீடு போ சார்.’ என்றார்.

நான் நாடற்று வீடற்று திரிபவன் என அவருக்குச் சொல்ல முடியுமா?

பணம் கொடுத்தபோது வாங்க மறுத்தார்.

அப்படியே சூளைமேடுவந்து ஈழமக்கள் புரட்சிகர விடுதலை இயக்கத்தின் எபிக் என்ற இடத்தில் உணவு உண்டுவிட்டு அங்கிருந்தவர்களுடன் இந்திராகாந்தியற்ற இந்தியாவையும் அவர் அற்ற ஈழவிடுதலையையும் அங்குள்ள தோழர்களுடன் பேசிக்கொண்டிருந்தேன்.

# தமிழர் மருத்துவ நிலையம்

1984 சித்திரை மாதத்தில் நான் இந்தியாவுக்கு சென்றிருந்த காலத்தில் (ENLF) என்றொரு அரசியல் கூட்டணி அக்காலத்து ஆயுத இயக்கங்களான தமிழ் ஈழவிடுதலை இயக்கம் (TELO) ஈழப்புரட்சிகர முன்னணி (EROS) மற்றும் ஈழமக்கள் புரட்சிகரமுன்னணி (EPRLF) ஆகிய மூன்றிற்கும் இடையே உருவாகியிருந்தது. இந்தக்கூட்டணியின் தலைவர்கள் திராவிட முன்னேற்றக் கழகத்தலைவர் கருணாநிதியை சந்தித்து படமெடுத்துக்கொண்டனர். இந்தப் படம் தமிழக பத்திரிகைகள் யாவற்றிலும் பிரசுரமாகியிருந்தது.

இந்த நிகழ்வு அக்காலத்தில் பலருக்கும் மகிழ்வைக் கொடுத்தது. எனினும் இந்த நிகழ்வையிட்டு கவலை கொண்டவர்களையும் ஒன்று சேர்க்க உதவியது.

அத்துடன் இந்தக் கூட்டணியினர் அவ்வேளையில் தமிழக முதலமைச்சர் எம்.ஜி. இராமச்சந்திரனின் ஆதரவை இழந்தது என்றும் பல கதைகள் அக்காலத்தில் பேசப்பட்டது. எனக்கும் அந்தச்செய்தி காற்றுவாக்கில் எட்டியது.

இந்தக் கூட்டணி இந்திய உளவு (RAW) அமைப்பால் உருவாக்கப் பட்டது என்றும் பிற்காலத்தில் சொல்லப்பட்டது.

(ENLF) கூட்டணியில் அதன் தலைவர்களுக்கிடையே தனிப்பட்ட ரீதியாக ஒருவரை ஒருவர் சந்தித்துப் பேசுவதற்கான சுமுகமான உறவும்

*இருந்தது. இந்த உறவிற்கு அக்காலத்தில் பத்மநாபாவே காரணம் என்பதை பிற்காலத்தில் தெரிந்து கொண்டேன்*

*இந்த இயக்கங்கள் கூட்டணியாக இருந்த போதிலும் அதிலிருந்த வர்களிடம் பரஸ்பரம் நம்பிக்கையும் தோழமையும் இந்தியாவிலோ இலங்கையிலோ இருந்ததாகத் தெரியவில்லை. சந்தேகம்தான் இவர் களைப் பற்றிய பொது நோயாக இருந்தது. அதற்கான மருத்துவம் அக்காலத்தில் எவரிடமும் இருக்கவில்லை. இயக்கங்களிற்கிடையே மட்டுமல்ல ஒவ்வொரு இயக்கத்துள்ளேயும் இருந்த இந்த நோயின் கூறுகளை நான் கண்டும் கேட்டும் இருந்தேன். அவைகள் பின்னால் வரும்.*

*இந்தக் கூட்டணியில் இருந்தவர்களுடன் காலம் தாழ்த்தி – அதாவது 84 ஆம் ஆண்டு இறுதியில் விடுதலைப்புலிகள் உறவு கொண்டார்கள். 'நாபா சிறியையோ, பாலகுமாரையோ நான் நம்பி வரவில்லை. உன்னைத்தான் நம்பிவந்தேன்' என பிரபாகரன் நாபாவைப் பார்த்து கூறிய வசனத்தை பிற்காலத்தில் பிரபாகரனே மறந்துவிட்டார். அந்த வார்த்தைகள் அக்காலத்தில் எனக்கு ஈழ மக்கள் பரட்சிகர முன்னணியில் இருந்தவர்களால் பிரபாகரனின் நாவில் இருந்து வெளிவந்து காற்றில் கலக்கும்போது எனக்கும் சொல்லப்பட்டது.*

*விடுதலைப்புலிகளின் இணைவின் உள்நோக்கம் தமிழ் மக்கள் விடுதலை இயக்கம் என்ற புளட்டை இந்தக் கூட்டணிக்கு வெளியே வைத்து தனிமைப்படுத்துவதுதான் என்பது அக்காலத்தில் அரசியல் தெரியாதவர்களுக்கும் புரிந்திருந்தது. பதினைந்தாயிரம் இளைஞர் களை இந்தியாவில் வைத்து பயிற்சி கொடுத்த பெரிய இயக்கமாக புளட் இருந்தது. அந்த இயக்கத்தின் சிதைவு சோவியத் ரஷ்ஷியாவின் சிதைவுக்கு ஒப்பானது. ஆங்கிலத்தில் Implosion என்ற வார்த்தைக்கு வரைவிலக்கணமாக உமா மகேஸ்வரன் தலைமை தாங்கிய இயக்கம் இருந்தது.*

*84ஆம் ஆண்டு இப்படியான விடுதலை இயக்கங்களுக்கு ஒரு பொதுவான மருத்துவ நிறுவனம் உருவாக்குவது பற்றி பலரால் சிந்திக்கப்பட்டாலும் அதற்கு ஆணிவேராக இருந்தவர் அக்கால ஈழ மக்கள் புரட்சிகர இயக்கத்தின் இராணுவப் பொறுப்பாளர் டக்ளஸ் தேவானந்தா. அந்த நிகழ்விற்கான முதல் கூட்டத்திற்கும் என்னையும் அவரே அழைத்திருந்தார். முதல் கூட்டத்தில் சமூகமளித்தவர்கள் சிலரின் பெயர்களை தற்போது மறந்தாலும் எல்லா இயக்கத்தினரும்*

அன்று அதில் சமூகமளித்திருந்தனர்.

விடுதலைப்புலிகளின் பிரதிநிதிகளாக யோகியும் மற்றும் ஒருவரு டன் வந்திருந்தார். அதேபோல் புளட் அமைப்பின் சார்பாக மட்டக் களப்பு வாசுதேவாவும் உண்ணாவிரதத்தால் உயிர் இழந்த திலீபனின் அண்ணன் என பிற்காலத்தில் அறிமுகமானவரும் வந்திருந்தார். ரெலோ மற்றும் ஈரோஸின் சார்பில் தலா இருவர் சமூகமளித்திருந் தார்கள்.

இப்படியான மருத்துவ அமைப்பின் தேவையை எல்லோரும் உணர்ந் தாலும் அந்தக் கூட்டத்தில் அதிகம் பேசியவர்கள் வாசுதேவாவும் தேவானந்தாவுமே.

எந்த வார்த்தைகளும் பேசாமல் தலையை அசைத்தபடி இருந்தவர் யோகி என்பது இன்னமும் மனதில் பதிந்துள்ளது. அப்பொழுதே இவர்களுக்கு தலைவர் பிரபாகரனிடம் இருந்து திடமான கட்டளை பேசக்கூடாது என இருந்திருக்கவேண்டும். அமைதியாக அவதானித்து விட்டு வாருங்கள் என்பதாகவே இருக்கவேண்டும் என நான் நினைத்தேன்.

இந்த நிறுவனத்தின் தலைவராக விடுதலைப்புலிகளின் சார்பில் டொக்டர் ஜெயகுலராஜாவும் வாசுதேவாவால் உபதலைவராக டொக்டர் சாந்தி இராஜசுந்தரமும் காரியதரிசியாக மாஸ்டர் காசிவிஸ்வநாதர் தேவானந்தாவால் பிரேரிக்கப்பட்டனர்.

முதல் இருவரும் ஏற்றுக்கொள்ளப்பட்டபோது புளட்டையும் ஈரோஸையும் சேர்ந்தவர்களால் காரியதரிசியாக மாஸ்டர் காசிவிஸ்வ நாதர் டொக்டராக இல்லை என எதிர்த்தபோது மிருகவைத்தியரான என்னை டக்ளஸ் தேவானந்தா காரியதரிசியாக்கினார்.

அப்பொழுது பொருளாளராக டொக்டர் சிவநாதன் தெரிவு செய்யப் பட்டார். இப்படியே இந்த இயக்கங்களால் உருவாக்கப்பட்ட மருத்துவ நிறுவனத்திற்கு தமிழர் நல மருத்துவ நிறுவனம் (MUST) எனப் பெயரிட்டு மருத்துவரான எனது மனைவி அதில் டொக்டராக வேலை செய்வது எனத் தீர்மானிக்கப்பட்டது.

இதில் என்னைத் தவிர மற்றவர்கள் அனைவரும் இயக்கங்களிடையே யும் மக்களிடமும் அறியப்பட்டவர்கள். டொக்டர் ஜெயகுலராஜா விடுதலைப்புலிகளுக்கு வைத்தியம் செய்தமையால் கைதுசெய்யப்

பட்டு வெலிக்கடையில் நடந்த தமிழ்க்கைதிகள் கொலைச்சம்பவத்தில் இருந்து உயிர்தப்பிய பின்பு மட்டக்களப்பு சிறையில் இருந்து தப்பி வெளியேவந்தவர். டொக்டர் ஜெயகுலராஜா இந்தியாவுக்கு விடுதலைப்புலிகளால் கொண்டு வரப்பட்டவர். அதேபோல் காந்திய நிறுவனத்தின் நிறுவனராக இருந்து 83ஆம் ஆண்டு வெலிக்கடைச் சிறையில் வைத்து கொலைசெய்யப்பட்ட டொக்டர் இராஜசுந்தரத்தின் மனைவியே டொக்டர் சாந்தி இராஜசுந்தரம்.அவர் தமிழ்நாட்டு அரசின்கீழ் உள்ள எழும்பூர் பொலிஸ் மருத்துவமனையில் முழுநேர வைத்தியராக இருந்தார.

எமது பொருளாளராகிய டொக்டர் சிவநாதன் வாகரையில் வைத்திய ராக இருந்தபோது அந்த வழியாக மட்டக்களப்பு சிறையில் இருந்து தப்பியவர்களுக்கு உதவி புரிந்ததால் பாதுகாப்பு படையால் தேடப்பட்டு தமிழ்நாட்டுக்குத் தப்பிவந்தவர். டொக்டர் சிவநாதன் தமிழ்நாட்டுக்கு புளட் இயக்கத்தால் கொண்டு வரப்பட்டிருந்தார். சிறிதுகாலம் தேனீ யில் புளட் புதிதாக பயிற்சி முகாம் அமைத்தபோது அவர்களோடு இருந்தவர். இப்படி இவர்கள் இயக்கங்களுக்கு அறிமுகமானாலும் பொதுவானவர்கள் என்ற கருத்தில் தமிழர் மருத்துவ நிறுவனத்தின் இயக்குநர்களாக அவர்கள் நியமிக்கப்பட்டதுடன் இந்த ஐந்து இயக்கங்களின் சார்பில் ஒவ்வொருவர் இயக்குநர்களாக இருப்பார்கள் என்ற நிலையில் உருவாக்கப்பட்ட இந்த நிறுவனம் தமிழ்நாட்டில் அரசு சட்டத்தின் கீழ், ஒரு தன்னார்வ தொண்டு அமைப்பாக பதிவு செய்யப் பட்டது.

ஒரு விதத்தில் எதிர்காலத்தில் மண்ணில் அமையவிருக்கும் தமிழ் ஈழத்தின் சுகாதார நிறுவனம் என்ற எண்ணம் அக்காலத்தில் அதற்கு இருந்தது என்பதை என்னால் மறுக்க முடியாது.

இந்த நிறுவனத்திற்கு காரியதரிசியான நான் குடும்பத்துடன் கோடம் பாக்கத்தில் இருந்ததால் இந்த நிறுவனத்தின் அலுவலகம் அதற்கு அருகாமையில் இருப்பதற்காக சூளைமேட்டில் ஒரு சேட்டின் வட்டிக் கடையின் மேல்மாடி வாடகைக்கு எடுக்கப்பட்டது.

இந்த நிறுவனத்தை நடத்துவதற்கு எந்த இயக்கமும் பணம் கொடுப்பதற்கு தயாரில்லை. நாங்கள் எல்லோரும் பணம் வாங்காது தொண்டர்களாக வேலை செய்வதற்கு தயாரானாலும் சேட்டின் வீட்டிற்கு வாடகை கொடுத்தாகவேண்டும்.

அத்துடன் அலுவலகம் நடத்துவதற்கு சில அடிப்படை செலவுகளும் இருந்தன. இந்த நிலையில் கிழக்கு மாகாணத்தில் இருந்து இயங்கிய நாகப்படையில் இருந்து வந்த கருணாநிதி என்ற இளைஞன் சென்னை பல்கலைக்கழகத்தில் படிப்பதாகவும் தங்குவதற்கு இடமில்லாமல் இருப்பதாகவும் தகவல் வந்தது. டொக்டர் சிவநாதனை தொடர்பு கொண்டு கேட்டதின் பிரகாரம் அவனை எங்கள் உதவியாளராக நியமித்தோம். குறைந்த பட்சம் அவன் தங்கியிருக்க வசதியும் செய்து கொடுத்து சாப்பாட்டுக்கும் சிறு தொகை கொடுக்க வேண்டும்.

யாரிடம் கடன் வாங்க முடியும் என சிந்தித்து வெளிநாடுகளில் வசித்த சில தெரிந்தவர்களுக்கு கோரிக்கை வைத்தோம். முக்கியமாக விடு தலை இயக்கங்கள் ஒன்றிணைந்து ஒரு மருத்துவ நிறுவனம் அமைத் தது பலருக்கும் விருப்பமான செய்தியாக இருக்குமென்ற நம்பிக்கை எமக்கு இருந்தது.

அந்தக்காலத்தில் அமெரிக்காவில் டொக்டராக இருக்கும் எனது மனைவியின் சகோதரர் அருள் ரஞ்சிதன் தமது தங்கை பெற்றோரைப் பார்ப்பதற்கு இந்தியா வந்தார். பலகாலமாக வவுனியாவில் இயங்கிய காந்தியத்திற்கு பண உதவி செய்யும் மனித நேயமுள்ள மனிதர் அவர் என்பது எனக்குத் தெரியும்.

பிற்காலத்தில் அமெரிக்காவில் விடுதலைப்புலிகளின் அமைப்பான தமிழர் புனர்வாழ்வுக்கழகத்தின் தலைவராகவும் அவர் இருந்தார்.

அவர் சென்னை வந்தபோது கோடம்பாக்கத்தில் எங்களுடன் தங்கினார். அவரை ஈழ மக்கள் புரட்சிகர முன்னணியின் அலுவலகத் திற்கு கூட்டிச் சென்று பத்மநாபா உட்பட பல முக்கியமானவர்களை அறிமுகப்படுத்தினேன்.

அங்கு சுவர்களில் தொங்கிய கார்ல்மார்க்ஸ், லெனின், ஸ்ராலின் படங்களைப் பார்த்ததும் அவருக்கு அடிவயிற்றைப் புரட்டி இருக்க வேண்டும். எனக்கு அப்போது அவரது உணர்வு புரியாவிட்டாலும் பின்பு அவரது செய்கையின் மூலம் புரிந்தது.

என்னையும் ஒரு கம்யூனிஸ்டாக அவர் கருதியிருக்கவேண்டும். ஏற்கனவே அவரது தங்கையை மணம் முடித்து இரண்டு பிள்ளைகளும் இருப்பதால் அமைதியாக அந்த இடத்தைவிட்டு நகரும்பொழுது ‘இவங்கள் கம்மியூனிசம் கதைக்கிறங்கள்.’ என்று மட்டும் சொல்லி விட்டு வெளியேவந்தார்.

அருள் ரஞ்சிதனும் தலைவர் டொக்டர் ஜெயகுலராஜாவும் ஒன்றாக பல்கலைக்கழகத்தில் படித்தவர்கள். அவர் எமது மருத்துவ நிறுவனத்தில் இருப்பதை அறிந்து 12 ஆயிரம் இந்திய ரூபாய்களை எமது நிறுவனத்துக்கு கொடுத்ததாகவும் அந்தப் பணத்தை ஜெயகுலராஜா என்னிடமும் சிவநாதனிடமும் தந்தார். அத்துடன் பொதுவாழ்வில் நானும் மனைவியும் இருப்பதால் நூறு அமெரிக்க டொலர்கள் மாதமொருமுறை அவர் தங்கைக்கு அனுப்பியதால் நாம் இருவரும் பணமுடை இல்லாமல் மருத்துவப்பணிகளைத் தொடங்கினோம்.

இதேவேளையில் வெளிநாட்டிலும் பல தமிழர்கள் சிறிதாக பணம் அனுப்பத் தொடங்கினார்கள்.

மலேசியாவில் வாழ்ந்த இலங்கை வம்சாவளி தமிழர்கள் பலர் எதுவித கேள்விகளையும் எம்மிடம் கேட்காமல் அனுப்பியது எனது இதயத்தை நெகிழவைத்தது. இயக்கங்களுக்கு கொடுத்தவர்கள் பலரதும் நோக்கங்கள் வேறுபாடானது. சிங்களவரை பழிவாங்குதல் , தனி ஈழம், அதற்கும் அப்பால் தமிழ் வீரர்கள் என்ற ஒரு பழமையான நினைவுகள் அதற்கு காரணமாக இருந்திருக்கலாம். ஆனால் இந்த மருத்துவ சேவைக்கு தந்தவர்களது நோக்கம் மிகவும் தூய்மையானது.

சேட்டின் மேல் மாடி வாடகைக்கும் கருணாநிதி என்ற மாண வனுக்கு மாதம் முன்னூறு ரூபா கொடுப்பதற்குமான சக்தியை எமக் குக்கொடுத்த அருள் ரஞ்சிதனுக்கு நன்றி கூறவேண்டும்.

எமது நிறுவனம் இயங்கும்போது ஆரம்பத்தில் இலங்கையைச் சேர்ந்தவர்களுக்கு இலவச மருத்துவ சேவை என்றே அந்தக் கிளினிக்கை நடத்தினோம்.

அதன் பின்பு எமது நிறுவனத்தை சுற்றியுள்ள சென்னை மக்களுக் கும் எமது சேவை விஸ்தரிக்கப்பட்டது. இதைத் தொடர்ந்து அக் காலத்தில் தமிழ்நாட்டுக்கு அகதிகளாக வந்தவர்கள் தங்கி இருந்த முகாம்களுக்கு சிவநாதனும் நானும் சென்று மருந்துகள் விநியோகித் தோம். அங்கிருந்தவர்களில் சிலரை தேர்ந்தெடுத்து மருத்துவத் தொண்டர்களாக சென்னையில் பயிற்சி கொடுத்தோம்.

முதல் முதலாக ஜெய்ப்பூரில் கால்கள் தயாரிப்பதற்கு இருபதுக்கும் மேற்பட்டவர்களை ஜெய்ப்பூர் அனுப்பி பயிற்சிகொடுத்தோம்.

இயக்கங்களில் இருந்து போரில் காயப்பட்டு வருபவர்களுக்கு சென்னையில் வைத்தியசாலைகளுக்கு செல்வதற்கு எமது நிறுவனம் உதவியது. இவ்வாறு எமது சேவைகள் அங்கு கூடிக்கொண்டு சென்றன.

இதனால் முகாம்களுக்குப் பொறுப்பாக பலரை நியமித்து மேலும் இலங்கையில் இருந்து வந்த வைத்தியர்களை அந்தப்பணிகளுக்கு உள்வாங்கினோம்.

இரண்டு வருடகாலத்தில் பன்னிரண்டாயிரம் ரூபாவில் பல இலட்சம் ரூபா நிதியை கொண்டு நடத்தும் நிறுவனமாக அதனை வளர்த்தோம்.

வெளிநாட்டில் வாழ்ந்த தமிழர்களுக்கு அக்காலத்தில் இயக்கங் களுடன் நேரடி தொடர்பிருக்கவில்லை. பலர் அவர்களுக்கான பணத்தை எங்களுக்கு அனுப்பி இயக்கங்களுக்கு கொடுக்கும்படி எழுதி இருந்தார்கள். பலருக்கு முகவரி தந்தது தமிழர் மருத்துவ நிறுவனம்.

அக்காலத்தில் இயக்கங்களில் இருந்தவர்களை அவற்றிலிருந்து விடுவிப்பதற்கு நானும் சிவநாதனும் உதவினேம். ஐரோப்பா செல்வ தற்காக ஏஜென்டுகளால் சென்னை கொண்டு வரப்பட்டு பின்னர் கைவிடப்பட்ட சில பெண்கள் ஆண்களுக்கும் பல வழிகளில் அவர்கள் மேற்கொண்டு பயணம் செய்ய உதவினோம்.

விடுதலைப்புலிகளின் தலைவரைத் தவிர்ந்த மற்றையவர்களை எக்காலத்திலும் எம்மால் சந்திக்க முடிந்தது. இதனால் எம்மை இந்திய உளவுப்பிரிவு (RAW) தமிழ்நாட்டு இரகசியபொலிசார் (Q Branch)) மிகவும் நட்பாக வந்து விடயங்களை அறிந்து கொள்ளவிரும்புவார்கள்.

# உண்மைகள் இரண்டு

■

The day we see the truth and cease to speak is the day we begin to die

-Martin Luther King Jr

நானும் விசாகனும் பாண்டிபஜாரில் இருந்த காலத்தில் நடந்த ஒரு விடயம் மனதை பலகாலமாக நெருடிக் கொண்டிருந்தது.

ஏன் இன்னமும் அந்த விடயம் என்னைப் பாதிக்கிறது?

அது ஒரு சகோதரனை பறிகொடுத்த தொடரும் சோகத்தின் நிழல்.

ஈழ மக்கள் புரட்சிகர முன்னணியின் தலைவரான பத்மநாபவை பொறுத்தவரை, நாம் அவரை இரஞ்சன் என அழைப்பதுதான் வழக்கம். 84 ஆம் ஆண்டில் ஒரு காலைநேரம் என்னையும் விசாகனையும் எமது அறையில் சந்தித்து ஒரு இருபது அல்லது இருபத்திரண்டு வயதான இளைஞனை எமக்கு அறிமுகம் செய்து அவரை ஊருக்கு (இலங்கை) அனுப்பும் வரையில் எமது அறையில் சில வாரங்கள் வைத்திருக்கும்படி கேட்டார்.

அவனது பெயர் புனைபெயர் என்பதால் அதை இங்கு எழுதவில்லை. அவனது தோற்றம் மிகவும் திடகாத்திரமானதுடன் வட இந்தியர் போன்ற நிறங்கொண்டவன். பார்த்தவுடன் பொலிவூட் சினிமா நடிகனின்

தோற்றம் மனதில் வந்து போகும். ஆனால் அவனது தமிழ் உச்சரிப்பில் இருந்து அவன் கிழக்கு மாகாணம் அதிலும் தென்கிழக்கு எனப்புரிந்து கொள்ள முடிந்தது. நாங்கள் அவனது ஊரையோ, உறவையே அறிய முற்படவில்லை. அவனும் எங்களிடம் சொன்னதும் இல்லை.

எங்களோடு வெளியே சாப்பிடுவதும் சினிமாப் படம் பார்ப்பதும் என இருந்தாலும் அவனது முகத்தில் ஒரு சோகத்தின் நிழல் படர்ந்திருந் தது. எங்களை ஒரு மூத்த சகோதரர்களாக நினைத்து பழகிவந்தான். அவன் கராத்தே கற்றவன் என்பது நாம் அறிந்து கொண்ட விடயம். உலோக சில்லுகளை எறிவது, கத்தியை வீசுவது போன்ற பாதுகாப்பு கலைகளில் பயிற்சி பெற்றவனாகவும் இருந்தான்.

அவனோடு இருந்த காலத்தில் சென்னையின் பல இடங்களில் நடு இரவு சினிமா பார்த்துவிட்டு இரவுவேளையில் நடந்து வருவோம்

அவன் எங்களை விட்டுச் சென்ற பின்பு மீண்டும், பத்மநாபா எம்மை சந்தித்து அவனை வைத்திருந்ததற்கு நன்றி சொல்லிவிட்டு 'அவர் இந்தியாவில் பயிற்சி பெற்ற இஸ்லாமியத்தோழர். எங்களோடு சேர்ந்து பலகாலமாக இயங்கியவர். தற்பொழுது கிழக்கு மாகாணத்தில் நடந்த தமிழ் - முஸ்லிம் நெருக்கடியால் கொஞ்சம் மனம் கலங்கிவிட்டார். மேலும் ஊருக்கு போவதற்கும் விரும்புகிறார். அதுவரையும் அவரை மற்றத் தோழர்களோடு கலந்து இருக்கும்போது அவருக்கு மனக் கஷ்டமாக இருக்கலாம். அதுதான் உங்களுடன் சேர்த்துவிட்டேன்' என்றார்.

பிற்காலத்தில் அந்த இஸ்லாமியத் தோழர் இஸ்லாமிய ஊர்காவல் படையோடு சேர்ந்து இயங்கியபோது ஈரோஸ் இயக்கத்தினரால் கொலை செய்யப்பட்டதாக அறிந்து மிகவும் மனவருத்தப்பட்டேன். பல தடவைகள் ஒரே உணவுப்பொதியில் ஒன்றாக சாப்பிட்டு கிட்டத்தட்ட மூன்று மாதம் வாழ்ந்திருந்தோம்.

இலங்கையில் கிழக்கு மாகாணத்தில் ஒன்றாக வாழ்ந்த சிறுபான்மை சமூகங்களை இரண்டாக பிளந்ததும், அதற்கான ஆப்பை வைத்ததும் இலங்கை அரசாங்கமோ அல்லது விடுதலைப்புலிகளே அல்ல. இந்த இருதரப்பிலும், இலகுவாக நாம் சேறை வீசினால் அங்கு அழுத்தமாக ஒட்டிக்கொள்ளும். ஏனென்றால் அவர்கள் சென்னை மாநகரத்தில் இரயில்வே தண்டவாளத்தருகே தொடர்ச்சியாக அமைந்திருக்கும் குட்டி சுவர்கள் போன்றவர்கள். அந்தச் சுவரின் அருகே குடிசையில்

*வாழும் பெண்கள் மாட்டுச்சாணியை வட்டியாகத் தட்டி உலர்த்துவதற்கு பயன்படுத்துவார்கள். ஏற்கனவே அசிங்கமான வசனங்களும் சுவ ரொட்டிகளில் எழுதப்பட்டிருப்பதால் அதில் எறியப்பட்ட சாணி மேலும் அசிங்கப்படுத்த முடியாது.*

*84 ஆம் ஆண்டு சித்திரையில், கிழக்குமாகாணத்தில், அம்பாறையில் அமைந்த காரைதீவு என்ற கிராமத்தில் முதன்முதலாகக் கலவரம் வெடித்தது. இதில் முஸ்லிம்களின் பங்கு எதுவும் இல்லை என என் னால் கூறமுடியாவிட்டாலும் - அக்காலத்தில் ஆயுதம் தரித்திருந்த ஈழ மக்கள் புரட்சிகர முன்னணி மற்றும் தமிழ்ஈழ விடுதலை இயக்கத் தைச் சேர்ந்த காரைதீவு இளைஞர்கள் பங்குபற்றியதால் சாதாரண மக்களிடம் உருவாகிய பிரச்சினை இரு இனங்களிடையே உருவான நெருக்கடியானது. இதற்கு முன்பாக பல இஸ்லாமிய இளைஞர்கள் முக்கியமாக புளட் மற்றும் ஈ பி ஆர் எல் எஃவ் என்ற இரு இயக்கங்களில் கிழக்கு மாகாணத்தில் இணைந்திருந்தது மட்டுமல்ல, இந்தியப் படைகளிடமும் பயிற்சியும் பெற்றார்கள்.*

*அவ்வாறு பயிற்சி பெற்ற இளைஞர்கள் அந்தச் சம்பவத்தின் பின்பு மனக்கசப்படைந்து இருந்தபோது அக்காலத்தில் சென்னையில் இலங்கை பிரதி தூதுவர் ஒருவரால் இளைஞர்கள் இயக்கங்களுக்கு எதிராக இயங்குவதற்கு கிழக்கு மாகாணத்தில் முக்கியமாக அம்பாறை மாவட்டத்தில் ஒருங்கிணைக்கப்பட்டார்கள். இந்த கைங்கரியத்தில் சில கிழக்கு மாகாண அரசியல்வாதிகளும் பங்கு பற்றினார்கள். ஏற்கனவே கிழக்குமாகாணத்தில் இயக்கங்களில் சேர்ந்து, பின்னால் விலகியவர்கள் பலர் ஊர்காவல்படைகளில் சேர்ப்பதும், அவற்றை ஒருங்கிணைத்து பயிற்சியளிப்பதிலும் விசேட அதிரடிப்படையினர் ஈடுபட்டனர். அப்படியான அமைப்புகள் மத்தியகிழக்கில் உள்ள பற்றா (Fatah) மற்றும் ஜிகாத் (Jihad) என்ற பெயரில் செயல்பட்டார்கள். இவைகளில் சாதாரணமான இஸ்லாமிய மக்கள், பங்கேற்ற மக்கள் அமைப்பாக இல்லாதபோதும் - இவைகள் இரு இனங்களைப் பிரிப் பதற்கு பாவிக்கப்பட்டது.*

*இப்படியாக இந்த அமைப்புகள் எதிர்ப்புரட்சி அமைப்பாக வளர்க் கப்பட்டது. இந்தப் போர்முறையை கொண்டு வந்தவர் அக்காலத்து தேசிய பாதுகாப்பு அமைச்சர் லலித் அத்துலத் முதலி. பிற்காலத்தில் இது மிகவும் பிரயோசனமான புலிப்பொறியாக மாறியது. அவரது முயற்சி உண்மையில் மிகவும் சாணக்கியமானது. இதற்கான பாராட்டுதலை*

*அவர் பிற்காலத்தில்கூட பெறவில்லை. அமைச்சர் லலித் அத்துலத் முதலி மிகவும் சாணாக்கியமானவர். இந்தியாவின் தலையீடு இல்லா மல் இருந்தால் விடுதலைப்புலிகள் 2009 வரை நீடித்திருக்க முடிந்திராது. மேலும் இவ்வளவு தமிழர்கள் சிங்களவர் இறந்திருக்க நேர்ந்திராது.*

*பற்றா (Fatah) மற்றும் ஜிகாத் (Jihad) அமைப்புகள் செய்த செயல் களுக்கும் பல படிமேலே சென்று, புலிகள் பலமடங்கு பாதகமான செயல்களான காத்தான்குடி பள்ளிவாசல் கொலைகள், வடபகுதியில் இருந்து முஸ்லிம்களை வெளியேற்றுதல் என்பவற்றில் ஈடுபட்டு உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் பயங்கரவாதிகள், இன அழிப்பாளர் என்று தங்களுக்கு தாங்களே சூனியம் வைத்துக் கொண்டார்கள்.*

*----------------------*

*தமிழ்நாட்டில் நான் வாழ்ந்த காலத்தில் பலர் பல்வேறு வயதில், பின்புலத்தில் எனது நண்பர்கள் ஆகினார்கள். அவர்களது நினைவுகள் என் இதயத்தில் ஆழமானவை. அவர்களில் முக்கியமானவர் தோழர் பாண்டியன் ஈ பி ஆர் எல் எஃவ் இயக்கத்தை சேர்ந்தவர். இவரது குடும்பம் திருகோணமலையில் இருந்து இடம்பெயர்ந்து சென்னை யில் குடியிருந்தவர்கள். பாண்டியன் அக்காலத்தில் என்னிலும் பதினைந்து வயது மூத்தவராக இருந்த போதிலும், எமது நட்பு நெருக்கமானது. வல்வெட்டித்துறை பாரம்பரியத்தைக் கொண்ட இவர் – திருகோணமலையில் உதவி மேயராக இருந்தவர். இவரது மனைவி வல்வெட்டித்துறை. இவர்களுக்கு எட்டு ஆண்குழந்கைள் இருந்திருக்க வேண்டும். ஊரில் வசதியாக வாழ்ந்தவர்கள். இவர்களின் ஒரு மகன் அக்காலத்தில் ரெலோ இயக்கத்தில் சேர்ந்திருந்தான். மற்றைய ஒரு மகன் கப்பலில் வேலை செய்தான்.*

*சென்னையில் ஒரு நாள் இவரது வீட்டிற்குச் சென்று மாலை உண வருந்தியபோது அவரது மனைவி சொன்னார் 'நம்முடைய இயக்கப் பொடியள் மதியம் வந்து சாப்பிட்டு விட்டுச் சென்றார்கள்'*

*எனக்கு ஒரு சந்தேகம் எழுந்தது. தோழர் பாண்டியன் ஈபிஆர் எல் எவ்ஃ. ஆனால் மகன் ரெலோ இந்த வகையில் அவரது மனைவி "நம்மடை இயக்கமென்பது" யாரை குறிக்கிறது...?*

*தாங்க முடியாத மனக் குழப்பத்தை தவிர்க்க அவரை தனியே அழைத்துக் கேட்டேன்.*

‘உங்கள் மனைவி நம்மட இயக்கமெனச்சொல்வது யார் தோழர்...?

‘அவ சொல்வது விடுதலைப்புலிகள் இயக்கத்தை’

எனக்கு அதிர்ச்சி தாங்க முடியவில்லை.

அவர் மேலும் சொல்லிய விடயங்கள் ஆச்சரியமளித்தன.

ஏற்கனவே தனது மகன் உட்பட வல்வெட்டித்துறை இளைஞர்கள் எண்ணூறுக்கு மேற்பட்டவர்கள் கப்பலில் வேலை செய்கிறார்கள் எனவும், இவர்கள் மாதம் தலா பத்து பவுண்ட்கள் விடுதலைப்புலிகளுக்கு வழங்குவதாகவும் கூறினார்.

‘உங்களது வல்வெட்டித்துறையினர் எல்லோரும் விடுதலைப்புலி களின் பின்னால் நிற்கும்போது நீங்கள் மட்டும் ஏன் ஈ பி ஆர் எல் எஃவ் வோடு இருக்கிறீர்கள்...?’

‘என்ன செய்வது...? இந்த நாபாவோடு பேசித்தொடர்புவைத்தபடியால் அந்த மனுசனை விட்டுப் போகமுடியவில்லை.’

ஐம்பது வயது இருக்கும்... ஆறு அடிக்கும் மேல் உயரமான பாண்டி யன் முப்பத்தைந்து வயதான பத்மநாபவைப் பற்றி பேசிய விதம் எனக்கு மேலும் ஆச்சரியம் அளித்தது.

இந்தச் சம்பவம் மேலும் ஒரு உண்மையை புரியவைத்தது. விடுதலைப்புலிகள் இயக்கத்தின் அசுர வளர்ச்சிக்கு கோழித்தீனியில் கலந்த குறோத்ஓமோன் போன்ற புறக்காரணிகள் தவிர்ந்த சில அகக்காரணிகள் இருந்தன. அதில் முக்கியமானது வல்வெட்டித் துறையை சேர்ந்தவர்களது ஒருமித்த பொருளாதார ஆதரவுடன் அவர்கள் காலம் காலமாக சேர்த்து வைத்திருந்த சட்டத்தை மீறிய விடயங்களை செய்த தொழில்நுட்பம் அவர்களால் விடுதலைப் புலிகளிடமும் அப்படியே மாற்றம் (Skill transfer) செய்யக் கூடியதாக இருந்தது.

பிரித்தானிய காலனி ஆட்சியில் மட்டுமல்ல ஏன் அதற்கு முன்பே - வல்வெட்டித்துறையினர் இந்தியா - இலங்கைக்கு இடையில் கடல் வாணிபம் செய்தவர்கள். நியாயமாக அவர்கள் செய்த வாணிபம் பிரித்தானியர் இலங்கைக்கும் இந்தியாவுக்கும் சுதந்திரம் கொடுத்த பின்பு சட்டவிரோதமாகியது. அவர்கள் இலங்கை - இந்திய சுதந்திரத்தின் பின்பாக உருவாகிய சட்டத்தை மதிக்கவில்லை. மேலும்

*நிலத்தின் சட்டம், நீரில் வாழும் அவர்களைப் பாதிக்காது என்று கூட அவர்கள் நினைத்து இருக்கலாம். இலங்கையின் நிலப்பகுதியில் வாழ்ந்தாலும் மனதளவில் மட்டுமல்ல, பொருள் நுகர்வதிலும் தமிழ் நாட்டவர்களைப்போல் தென்பட்டார்கள்.*

*77ஆம் ஆண்டில் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் படித்துக் கொண்டு இருந்தபோது நான் உட்பட பத்து மாணவர்கள் உடுப்பிட்டி யில் தமிழர் கூட்டணியினரால் நிறுத்தப்பட்டு தேர்தலில் நின்ற சிறு பான்மைத் தமிழர் இராஜலிங்கத்திற்கு (அக்காலத்தில் தமிழ்கட்சிகள் பாவித்த சொற்பதம் எனக்கு விரல் கூசினாலும் பாவிக்கின்றேன்) சார்பாக பத்து நாட்கள் பிரசாரம் செய்தோம். அப்பொழுது வல்வெட்டித்துறையின் ஒரு பகுதியான பொலிகண்டி ஊரில் இருந்த ஒவ்வொரு வீடாக சென்றோம். ஒவ்வொரு வீட்டிலும் நான் கண்ட பொருட்கள் பல இந்தியாவைச் சேர்ந்தவை. சுவர்களில் இருந்த உருவப்படங்களில் இருந்தவர்கள் இந்தியத் தலைவர்கள். இப்படி இருந்தது ஆச்சரியமில்லை. அக்காலத்தில் யாழ்ப்பாணத்தில் பலருக்கு தமிழ்நாட்டு மோகமிருந்தது.*

*இவற்றுக்கும் மேலாக எனக்கு அதிர்ச்சியளித்த விடயம் என்ன வென்றால் எங்களுடன் வந்து பத்துநாளும் வழிகாட்டியாக நடந்த பதினைந்து வயது சிறுவன் கடைசிநாள் என்னிடம் சொன்னதுதான்.*

*'நீங்கள் கண்டியில் சிங்களவர்களுடன்தானே இருக்கிறீர்கள்...? பயமில்லையா...?'*

*'பிரச்சினையில்லை. ஏன் கேட்கிறாய்?.' என்றபோது சங்கு மார்க் வெள்ளை சாரம் கட்டியிருந்த அவன் தனது மடியில் இருந்து கறுப்பான சிறிய ரிவோல்வரை எடுத்தபடி 'என்னிடம் ஒரு ரிவோல்வர் இருக்கு. தேவைப்பட்டால் எடுத்துக்கொண்டு செல்லுங்கள். யாராவது சிங்களவன் உங்களோடு சேட்டைவிட்டால் உதவும்' என்று எனக்கு நீட்டினான்.*

*'நான் தேவை வராது என நினைக்கிறேன்' எனச்சொன்னவாறு எனக்கு வந்த அதிர்வை சமாளித்தபடி பின்வாங்கினேன்.*

*அவனது முகத்தில் தெரிந்த ஏமாற்றம் இன்னமும் நினைவில் தங்கியுள்ளது.*

அவனைப் பொறுத்தவரை கண்டி எதிரிகளின் பிரதேசம். எதிரிகள் மத்தியில் நாங்கள் வசிப்பதாக அவனது எண்ணம் இருந்திருக்க வேண்டும்.

ஏராளமான வல்வெட்டித்துறை வீடுகள் கடத்தல் பொருட்களை வைப்பதற்காக பங்கர்களுடன் கட்டப்படவை என வல்வெட்டித்துறை நண்பனே சொல்லியிருந்தான்.

இலங்கை சுதந்திரம் அடைந்தபின்பு வட இலங்கையில் முதல் இராணுவ முகாம்களாக பலாலியிலும் பின்பு ஆனையிறவிலும் உருவாகியது. அவைகள் யாழ்ப்பாணத்தமிழரை அடக்குவதற்காக ஆரம்பத்தில் உருவாக்கப்பட்டதல்ல. வல்வெட்டித்துறை கடத்தலைத் தடுக்கவும் இந்தியாவில் இருந்து தோணியில் இலங்கை வருவதைத் தடுப்பதற்குமே இராணுவ முகாம்கள் அமைக்கப்பட்டன.

தமிழ்நாட்டவர் இலங்கை வருவதை தடுக்கவும் வல்வெட்டித்துறை கடத்தல்காரரை பிடிப்பததற்கும் உருவாகியவை என்பது கசப்பான இரு உண்மைகள்.

சரித்திரகாலமாக நிலத்தில் உள்ள சட்டங்களை புறக்கணித்த இடமான வல்வெட்டித்துறையில் இருந்து எங்களது விடுதலைப் போராட்ட தலைவர்கள் உருவாகியது ஒரு முரண்நகையா...? இல்லை நியதியா...?

வெளிநாடுகளில் உருவாகிய விடுதலை இயக்கங்கள் குறைந்த பட்சம் தங்களுக்குள் சில விதி செய்வார்கள். ஆனால் விடுதலைப்புலிகள் போட்ட விதிகளையே இவர்கள் மீறியது எப்படி...?

இயக்கத்தவர்கள் திருமண விதிகளில் இருந்து - பாதுகாப்புப் படையிடம் சரணடையாமல் தற்கொலை செய்வது போன்ற விதிகள் எல்லாம் மீறப்படுவதற்காகத்தானா?

# வெளிநாட்டுத் தமிழர்களின் உதவிகள்...?

தமிழர் மருத்துவ நிலையத்தை சென்னையில் தொடங்கிய காலத்தில் எமக்கு வெளிநாடுகளில் இருந்து பல உதவிகள் வந்து சேர்ந்தன. பெரும்பாலானவை தமிழ்நாட்டில் உள்ள இலங்கைத் தமிழ் அகதிகளின் தேவைகளை நிறைவேற்ற வேண்டும் என்ற கோரிக்கையுடன் வந்தன.

சில உதவிகள் நாங்கள் கேட்காமலேயே எங்களிடம் எதையும் விசாரித்து தெரிந்து கொள்ளாமலேயே அழையாத விருந்தாளியாக வந்து எங்களை சங்கடத்தில் மாட்டின. அவற்றின் விளைவாக தலையைப் பிய்த்துக்கொண்டு நின்றோம். இன்று நினைத்தாலும் சங்கடம்தான். அவை எல்லாம் வெளிநாட்டுத் தமிழர்களால் நிகழ்ந்த சங்கடங்கள்தான்.

எமது அலுவலகத்திற்காக ஒரு இடத்தை வாடகைக்கு எடுத்த சில காலத்தில் எமது பெயரில் சென்னை துறைமுகத்தில் அமெரிக்காவில் இருந்து ஒரு பெரிய கொல்கலன் (Container) வந்திருப்பதாகவும் அதில் பாவித்த உடைகள் இருப்பதாகவும் தகவல் வந்தது.

நாங்கள் விழித்தோம்.

இப்பொழுது அந்தக் கொல்கலனை நாங்கள் எடுக்காதுவிட்டால் ஒவ்வொருநாளும் சென்னைத் துறைமுகத்தினருக்கு பணம் கட்ட

வேண்டும். அதேநேரத்தில் முகவர்கள் இல்லாமல் இந்தியாவில் ஒரு விடயத்தை செய்வது எவ்வளவு கடினம் என்பது சிலகாலம் இந்தியாவில் இருந்தவர்களுக்குத்தான் தெரியும். நானும் சிவநாதனும் தலையறுந்த கோழிகளைபோல் சென்னைத் தெருவில் ஓட்டோக் களில் ஓடித்திரிந்து கேட்டபோது போராளி இயக்கத்தினர்கள் எமக்கு உதவி செய்ய மறுத்துவிட்டனர். இந்தியாவில் இலஞ்சம் கொடுக்காமல் எதுவும் நகராது. அதற்கு எம்மிடம் பணமில்லை. இந்த நிலையில் துறைமுகவிடயங்களைக்கவனிப்பது மத்திய அரசு அதிகாரிகள். இவர்களிடம் தமிழ்நாட்டு அரசியல்வாதிகள் உதவியும் சரிவராது. இந்த நிலையில் ஈழத்து அகதிகள் என்ற அனுதாபத்தை மட்டும் வைத்துக் கொண்டு துறைமுக அதிகாரிகளிடம் பேசி அந்த கொல்கலனை ஒரு கிழமையில் வெளியே எடுத்தோம்.

துறைமுக கொடவினில் (Godown) இருந்து சூளைமேட்டுக்கு கொண்டுவர மட்டுமே பணத்தை செலவளித்தோம். அக்காலத்தில் இப்படி சிங்கப்பூரில் இருந்து வந்த ஆயுத கொண்ரயினர் சென்னைத் துறைமுகத்திலே பிடிபட்டது. அந்தக் கொண்டயினரை புளட் இயக்கத் தினர் வெளிக் கொண்டுவந்திருந்தால் ஈழப்போரின் கதாநாயகர் உமா மகேஸ்வரனாக இருப்பார்.

எமது அமைப்பின் பெயருக்கு வந்த கொன்ரயினரை வெளியே எடுத்தாலும்கூட எமது பிரச்சினை தொடர்ந்தது. அமெரிக்காவில் இருந்து அதை அனுப்பியவர்களை தூற்றியபடியே இருந்தோம். அதிலும் டொக்டர் சிவநாதனுக்கு ஆத்திரம் வந்தாலோ அல்லது கொஞ்சம்போதை ஏறினாலோ அவர் வாயிலிருந்து தூசணம் தாராள மாக வரும். அதைக்கேட்டு ரசித்தபடி ‘இடுக்கண் வருங்கால் நகுக’ என கலைஞர் தமிழ்நாடு பஸ்களில் எழுதிவைத்த குறளை நினைவில் வைத்து ஓடித்திரிந்த நாட்கள் அவை.

எமது துன்பம் கொன்ரயினரை கொண்டு வந்த பின்னரும் எப்படித் தொடர்ந்தது தெரியுமா…?

அந்தக் கொன்ரயினரில் இலங்கை – அமெரிக்க பெண்கள் அணிந்த உள்ளாடைகள் ஆண்களின் பெனியன்கள் முதலானவற்றுடன் பாண்டுகள், சேர்ட்டுகள் மற்றும் சேலைகள் என ஐயாயிரத்துக்குக்கும் மேலான உருப்படிகள் இருந்தன. எமது அலுவலகத்தின் கூரைவரை யும் முட்டிக்கொண்டு குவிந்திருந்தன. எல்லாவற்றையும் தரம்பிரிக்க வேண்டும்.

இலங்கைத் தமிழ் அகதிகள் வைக்கப்பட்டிருந்த புயல் நிவாரண பாதுகாப்பு மண்டபங்கள் எல்லாம் தமிழக கடற்கரையில் இருந்தன. இவற்றை சுற்றியிருப்பது மீனவ மக்களது கிராமங்கள். இலங்கைப் பெண்கள் சட்டைகள் அணிந்து தங்கள் கணவர்களை வசியம் செய்கிறார்கள் என்ற குற்றச்சாட்டு அகதிமுகாம்களுக்கு நாங்கள் சென்றபோது குப்பங்களில் பேசப்பட்டது எமக்குத் தெரியும்.

அங்கு சென்ற இலங்கைத் தமிழ்ப் பெண்கள் இலங்கை வழக்கப்படி கவுணுகள் அணிந்திருப்பார்கள். பெண்களின் கால்களை சினிமாவில் மட்டும் பார்த்த மீனவகுப்பத்து ஆண்களுக்கு இது வித்தியாசமான கலாச்சார அதிர்வாக இருந்தது. பிற்காலத்தில் பல இளம் பெண்கள் தமிழ்நாட்டு பெண்கள்போல் நீளப்பாவாடை தாவணியுடன் உடை யணிந்தார்கள் அத்துடன் பஞ்சாபி - சுடிதார் உடையும் வந்து இந்த கலாச்சார அதிர்வை பிற்காலத்தில் குறைத்தது.

'இந்த உடுப்புகளையெல்லாம் பெட்டையளுக்கு கொடுத்தால் அங்காங்கு சிறிய ஈழப் பிரச்சினைகள் குப்பங்ளைச்சுற்றி உருவாகும். அதனால் இதனை நீயே பார்த்துக்கொள்' எனச் சொல்லிவிட்டு சிவநாதன் போய்விட்டார். அவர் முப்பத்தைந்து வயதையும் தாண்டி விட்ட திருமணமாகாத ஒழுக்கசீலரான பிரமச்சாரி.

எமக்கு வந்த உடைகளை தரம்பிரிக்கும் வேலை எனது தலையிலும் எங்கள் உதவியாளராக இருந்த கருணாநிதியிலும் விழுந்தது. கருணாநிதி பகலில் பல்கலைக்கழகத்தில் படிக்கச் செல்வதால் ஒரு வாரகாலம் நான் உடைகளைத் தரம் பிரித்தேன்.

அமெரிக்காவில் இருந்து வந்த வண்ண வண்ண சேலைகளை அகதி முகாம் பெண்களுக்கு கொடுத்து அவற்றை அவர்கள் அணிந்தால் அவர்களின் தோற்றம் எப்படி இருக்கு என நினைத்து பார்க்காமல் இருக்க முடியவில்லை. புதிய பறவை திரைப்படம் மனதில் வந்தது. புதிய பறவையில் சௌகார் ஜானகி உடுத்த சேலை அக்காலத்தில் பிரபலமானது.

உள்ளாடைகளை எறிந்துவிட்டேன். சேர்ட்டுகளை முகாம் ஆண் களுக்கு கொடுப்பது என தீர்மானித்தேன் ஆனால் பாண்டுகளைத் தரம் பிரித்தபோது அவை எண்ணிக்கையில் 500 ஆக இருந்தது. 83-84 காலத்தில் இலங்கையில் இருந்து அகதியாக வந்தவர்கள் மன்னார் மாவட்டத்தில் தலைமன்னார், வங்காலைப்பகுதி மீனவர்கள். 85இன்

ஆரம்பத்தில் வந்தவர்கள் திருகோணமலைப்பகுதி மீனவர்கள். அதன் பின்னர் மற்றவர்கள் தமிழகத்திற்கு இடம்பெயர்ந்தார்கள். ஆரம்பகாலத்தில் இலங்கை கடற்படையினரின் நெருக்கடி தாங்காமல் இந்தியாவுக்கு அவர்கள் வள்ளங்களிலே வந்தவர்கள். இலங்கை கடற்படையினர் போராட்ட இயக்கங்களின் ஆயுத மற்றும் போராளிகள் கடத்தலுக்கு மீனவ மக்கள் துணைபோவதாக நினைத்திருந்தார்கள். அது உண்மையும் கூட

அகதியாக வந்தவர்கள் மன்னார் என எப்படித் தெரியும் எனக் கேட்கிறீர்களா...?

இந்திய கடற்கரையில் வந்து ஒதுங்கும் பெரும்பாலான படகுகளில் லூர்து மேரி - அமலோற்பவ மேரி என மடு மாதாவின் பெயர்கள் எழுதியிருக்கும். ஆழ்கடலில் செல்லும் படகுகிற்கு மடுமாதாவின் பெயர் காப்புறுதி பத்திரம்போல் இருக்கும் என மன்னார் மீனவர்கள் நினைத்திருந்தார்கள்.

அமெரிக்காவில் இருந்து வந்த ஆண்கள் பாண்டுகளை இவர்களுக்கு கொடுக்க முடியாது. அவை நம்மட இயக்கப் பையன்களுக்கு உதவும் என நினைத்தேன். ஆயுதப்போராளிகளும் நல்ல பாண்டுகளை அணிந்து ஆயுதம் ஏந்தட்டும் என நினைத்து பாகுபாடில்லாமல் ஐந்தாகப் பிரித்து தலா நூறு பாண்டுகள் வீதம் ஒவ்வொரு இயக்கத்திற்கும் கொடுக்கத் தீர்மானித்தேன்.

இந்தக் காலத்தில் நாங்கள் விரும்பாத இன்னும் ஒரு செயலில் ஈடுபட நேர்ந்தது. அவுஸ்திரேலியாவில் சிட்னியில் இருந்து இயங்கும் ஈழத் தமிழ் சங்கம் - எழுபத்தையாயிரம் ரூபா இந்தியப்பணத்தை எமது தமிழர் நல மருத்துவ நிலையத்தின் பெயரில் செக்காக எழுதி அதனை விடுதலைப்புலிகளுக்கும் ரெலோ இயக்கத்திற்கும் கொடுக்கும்படி கேட்டிருந்தார்கள்.

இவர்கள் எவ்வளவு முட்டாள்களாக இருக்கவேண்டும் என அவ் வேளை நினைத்துக் கொண்டேன்.

செக்கை அனுப்பினால் அது காசாக ஒரு மாதத்திற்கு மேல் செல்லும். மேலும் ஆயுதம் தாங்கிய போராளிக்குழுக்களுக்கு கொடுக்கச் சொல்லி எமது பாதுகாப்பையும் தங்களது பாதுகாப்பையும் சிந்திகாமல் அனுப்பியிருக்கிறார்களே...? இந்தப் புலம்பெயர்ந்தவர்கள் என நினைத்துக் கொண்டு அந்தச் செக்கை கிழித்து எறியவும் பல

தடவைகள் யோசித்தோம்.

ஆனால் - போராளிகளின் மேல் உள்ள அபிமானம் எம்மை அந்தச் செக்கை காசாக்கச் செய்ததுகோடம்பாக்கத்து வங்கி முகவர் எங் களது நண்பர் என்பதால் உடனே பணத்தை தரமுடியும் என்றார்.

பாண்டுகளை ஒவ்வொரு இயக்கத்திற்கும் - விடுதலைப் புலிகளைத் தவிர மற்றவர்களிடம் இலகுவாக கொடுக்க முடிந்தது. நன்றியுடன் ஏற்றுக்கொண்டார்கள். தகவல் சொல்லி இப்படி பணமும் நூறு பாண்டுகளும் உங்களுக்காக இருக்கிறது என விடுதலைப்புலிகளிடம் சொல்லியனுப்பிய போது யோகி வந்தான். ஏற்கனவே இந்துக் கல்லூரியில் படித்தபோது அறிமுகமானவன். இருவரும் கடையில் தேனீர் அருந்திவிட்டு பாண்டுகளை ஓட்டோவில் ஏற்றிக்கொண்டு நண்பகல் நேரத்தில் கோடம்பாக்கம் வங்கியை நோக்கிச் சென்றோம்.

அப்பொழுது ஏற்கனவே இயக்கங்களிடையே உரசல் தொடங்கி விட்டது. ஏற்கனவே ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியில் இயக்கத்தில் இருந்த ஒருவரை வவுனியாவில் விடுதலைப்புலிகள் சுட்டுக்கொன்றிருந்த தகவல் எனக்கு தெரிந்திருந்ததால் 'நரேன் அது சரி நீங்கள் எல்லாம் ஒன்றாக சேர்ந்து இருக்கிறீர்கள் மேலும் ஈழ விடுதலை என்ற நோக்கம் பொதுவானது என்கிறீர்கள் ஏன் வவுனியா வில் ஈபிஆர் எல் எவ் காரரை சுட்டீர்கள்' என்றபோது...

நரேன் என்னைப்பார்த்து புன்னகைத்தபடி சொன்னான் 'தம்பி சொன்னதால் சுட்டோம்'

எனக்கு அதிர்ச்சியால் உடல் குலுங்கியது. ஒரு கணம் எதுவும் கண்ணுக்குத் தெரிய மறுத்தது. மனிதர்களது கொலைகளை இவ் வளவு எளிதாக எடுக்கும் மனிதனாக இவன் எப்போது மாறினான்? பாடசாலைக்காலத்தில் மடிப்பு குலையாத சேட்டை முழங்கைக்கு சிறிது கீழே மடித்து விட்டு கிரிக்கட் - உதைப்பந்தாட்டம் எல்லாம் விளையாடியபடி இந்துக்கல்லூரியில் பல மணவர்களுக்கு ஹீரோவாக இருந்தவன் இப்படியான வார்த்தையை எப்படி உதிர்த்தான்? இவன் என்னோடு பல வருடங்கள் படித்தவன். நண்பனாக இல்லாமல் இருந்தாலும் ஒரே ஒழுங்கையில் பலவருடங்கள் இருந்தவன். குறைந்த பட்சம் கொலையைநியாயப்படுத்தியிருக்கலாம். கொலை செய்யப் பட்டவன் சமூகவிரோதி அது இது என்று வழமையான காரணத்தை சொல்லியிருக்கலாம்.

நடைப்பிணமாக வங்கியுள்ளே சென்று பணத்தை மாற்றி கொடுத்து விட்டேன். அதன் பின்பு எதுவும் பேச மனமில்லை. அப்பொழுது நினைத்தேன் எமது சமூகம் நஞ்சுண்ட சிவனாகி விட்டது என்று. தொண்டையுடன் ஆலகால விஷத்தை தடுத்து நிறுத்த உமாதேவி அங்கிருந்தார் இங்கு யாருமில்லையென...

-----------------

இந்தக் காலகட்டத்தில் முப்பத்தைந்து வயதான தமிழர் ஒருவர் ஜெர்மனியில் இருந்து வருவதாகவும் ஜெர்மனிய அரசியல் கட்சி யொன்றின் (Free democratic party) முக்கிய அங்கத்தவர் எனக் கூறி அத்துடன் அவர் அக்காலத்து ஜெர்மன் வெளிநாட்டு அமைச்சரின் (Hans-Dietrich Genscher) பிரதிநிதி என்றும் சொல்லப்பட்டது.

'இலங்கையில் சமாதானம் ஏற்பட்டால் ஜெர்மன் பல கோடி பணத்தில் வட கிழக்கை அபிவிருத்தி செய்யும். அதன் பொருட்டு இங்குள்ள இயக்க பிரதிநிதிகளை சந்தித்து பேசவேண்டும். அதற்கு உதவி செய்யும்படி அவர் கேட்டார். தனது கட்சின் அங்கத்துவ கார்டையும் எமக்கு எடுத்துகாட்டியபோது நாங்கள் அவரை நம்பினோம்.

நல்ல விடயம்தானே என நம்பி போராளி இயக்கத்தவர்களிடம் அனு மதி பெற்று இந்த மனிதருக்காக சந்திப்பு ஒழுங்கு பண்ணியதோடு ரெலோ இயக்கத்திடமும் சிவநாதன் மற்றும் ஈபிஆர்எல் எவ் இடமும் அவரை கூட்டிச் சென்றோம்.

இயக்கங்களிடம் இந்த மனிதர் ஜெர்மன் முதலீட்டிற்கு பதிலாக போராட்டத்தை நிறுத்தி சமாதானம்பேசும்படி கேட்டதனால் இவர் நோக்கம் வெற்றி பெறவில்லை... அந்த மனிதரும் போய்விட்டார்.

அந்த மனிதர் அன்று காலையில்போன பின்பு இந்திய மத்திய உளவு நிறுவனத்தின் சென்னை அதிகாரி எம்மிடம் வந்து 'உங்களோடு தங்கிய அந்த இலங்கை அரசின் மனிதர் உளவாளி என கருதுகிறோம் அவரை விசாரிக்கவேண்டும்' என்றாரர்கள்

நாங்கள் திடுக்கிட்டோம்.

'எங்களுக்குத் தெரியாது' என்று சொல்லி அவரது நடத்தையை விளக்கினோம்.

பின்பு யோசித்துப் பார்த்தபோது ஜெர்மன் நாட்டில் இருந்து வந்த அந்த மனிதர் படுக்கை வசதியில்லாத எமது அலுவலகத்தில் ஐந்து நாட்கள் நிலத்தில் படுத்து வாழ்ந்தார் என்பது எங்களுக்கு ஆரம்பத்தில் புதுமையாக இருந்தது. அதே நேரத்தில் உளவாளியாக இருக்கலாம் என்ற சந்தேகமும் வலுப்பட்டது.

இதைவிட ஐந்து தமிழர்கள் வடஅமரிக்காவில் இருந்து வந்து சோழா ஹோட்டலில் தங்கியிருந்து என்னையும் டொக்டர் சிவநாத னையும் அழைத்தார்கள். அவர்களை சந்தித்து பேசியபோது அவர்கள் ஒரு பெரிய தொகையை வைத்திருப்பதாகவும் எந்த இயக்கம் ஒரு தாக்கு தலை கொழும்பில் நடத்த விரும்புகிறதோ அதற்கு தருவதற்கு தயார் எனவும் கூறினார்கள். இவர்களை எங்களால் நேரடியாக கண்டிக்கமுடியவில்லை. நானும் சிவநாதனும் இதன்பின் அவர்களை தொடர்பு கொள்ளவில்லை. இவர்களது பணம் எந்த இயக்கத்திற்கு சென்றது என்பது நிச்சயமாகத் தெரியாததால் அதைச் சொல்ல வில்லை. ஆனால் நிச்சயமாக கொழும்பில் அந்தப்பணம் குண்டாக வெடித்து உயிர்களைப்பலி கொண்டது.

மேற்கூறிய நான்கு சம்பவங்கள் புலம்பெயர்ந்த தமிழர் தொடர் பானவை. அவர்களைப் பற்றிய எனது அபிப்பிராயம் மிகக்காரமானது.

புலம் பெயர்ந்த தமிழர்களில் 99.9 வீதமானவர்கள் இலங்கையை விட்டு வெளியேறும்போது அரசியலில் ஈடுபட்டவர்கள் அல்ல. இலங்கை அரசியல் மட்டுமல்ல உலக அரசியலும் தெரியாதவர்கள். ஆனால் இயக்க அங்கத்தவர்களாக இருந்தவர்கள் உணர்வு ரீதியாக ஆயுதம் ஏந்த முனைந்தவர்கள். அவர்களில் சிலர் முக்கியமாக புளட் - ஈரோஸ் மற்றும் ஈபிஆர் எல் எவ். இவர்களுக்கு ஓரளவு அரசியல் தெரிந்தாலும் அவர்களால் புலம்பெயர்ந்த நாடுகளில் இயங்க வசதி கள் இல்லை. தங்களை புதிய வாழ்க்கையில் நிலைநிறுத்துவதே பெரிய பாடாக இருந்தது.

இந்த நிலையில் மேற்கு நாடுகளில் பிற்காலத்தில் விடுதலைப்புலி கள் சார்பாக இயங்குபவர்கள் தங்களை முன்னகர்த்தவும், தங்களது முக்கியத்துவத்தை ஏற்படுத்தவும், இலங்கை அரசாங்கத்தின் பல நடவடிக்கைகள் இவர்களுக்கு முற்காலத்தில் ஏற்படுத்திய பாதிப்பால் ஏற்படுத்திய மனக்கசப்பைக் காட்ட இந்தப் போராட்டம் அவர்களுக்கு சாதகமானது. ஈழப்போராட்டத்தில் தமிழர்களின் தோல்விக்கு இவர் களே காரணம். இவர்கள் எந்தச்சிந்தனைத்திறனும் அற்ற இராட்சத

மிருகம் ஒன்றை உணவூட்டி ஊட்டி வளர்த்திருக்கிறார்கள். அந்த மிருகம் முள்ளிவாய்கால் கரையில் இறுதி மூச்சை விட்டது. இதனால் தமிழர்களின் நியாயமான பல விடயங்கள் தற்பொழுது உலகமெங்கும் ஏன் போராட்டத்திற்கு உதவிய பல தமிழர்களுக்கு அநியாயமானதாக தோற்றமளிக்கிறது.

# தமிழ் ஈழக்கனவுடன் இறுதிவரை வாழ்ந்து மறைந்த டேவிட் ஐயா

மறைந்த கட்டிடக்கலைஞரும் இலங்கை காந்தீயம் அமைப்பின் ஸ்தாபகருமான டேவிட் ஐயாவை நாம் நினைவு கூரவேண்டும். அதை எப்படி என்பதுதான்...? என் முன்னால் நிற்கும் கேள்வி.

இறந்தவர்களை நினைவில் நிறுத்துவது நமது கலாச்சார விழுமியத்தை சேர்ந்தது. உறவினர்கள், பழகியவர்கள் ஒருவரது பிரிவை துயராக கருதுவார்கள்.

நன்றாக முதுமையடைந்து முனிவர்போல் வாழ்ந்து இறந்தவர் டேவிட் ஐயா. மரணத்தை வெல்லமுடியாத நிலையில் இதில் துயரப் படாமல் அவர் செய்தவற்றை நினைக்கவேண்டும். அவர் இலங்கைத் தமிழராக திருமணம் செய்யாது பொது வாழ்வில் இருந்துவிட்டுச் சென்றவர். அவர் வாழ்வையும் பணிகளையும் உணர்வு நிலைக்கு அப்பால் நின்று பார்ப்பது எமக்கு அவசியம்.

ஐம்பதுகளில் உலகின் மிகசிறந்த பல்கலைக்கழகமென கருதப்பட்ட அவுஸ்திரேலியா மெல்பன் பல்கலைக்கழகத்தில் கட்டிடக்கலை பயின்றவர். அதன் பின்பு இங்கிலாந்தில் நகர் மயமாக்கத் துறையில் கற்றவர்.

அதன்பின்பு கென்யாவில் சிலகாலம் தொழில் புரிந்தவர்.

ஐம்பதிற்கு பின்பே ஐரோப்பா வட அமெரிக்கா தவிர்ந்த உலகத்தின் மற்றைய நாடுகளில் நகர்மயமாக்கம் நடந்தது. இந்தக்கால கட்டத்தில் டேவிட்ஐயா எவ்வளவு முக்கியமான மனிதராக இருந்தார்?

அவராலும், டொக்டர் இராஜசுந்தரத்தாலும் உருவாக்கப்பட்ட காந்தீயம் அமைப்பு அக்காலத்தில் வெளிநாட்டு தமிழர்களின், ஆதரவு பெறப்பட்ட முதலாவது தன்னார்வ நிறுவனம். அவர்கள் இருவரும் தமது காந்தீயம் ஊடாக காணியற்ற மலையக மக்களுக்கு காணிகள் வழங்கி குடியமர்த்துவதற்கு முன்வந்த பணி சாதாரண முயற்சியல்ல.

இலங்கைத் தமிழர் அரசியல் முக்கியமாக மூன்று தரப்பினால் உருவாகியது.

1) அதிகாரத்தில் ஆசையுள்ளவர்கள் சாகும் வரையும் கதிரையில் இருப்பவர்கள்.

2) பணம் சம்பாதிக்க விரும்பியவர்கள்.

3) மற்றவர்கள் முக்கியமாக இளைஞர்கள், உணர்வு மேலிட்டு உயிரையும் உறுப்புகளையும் காவுகொடுத்தவர்கள்.

இப்படிப்பட்ட இடத்திற்கு டேவிட்ஐயா தான் உருவாக்கிய காந்தீயத்தையும் தன்னையும் பலியிட்டதன் மூலம் அவரது அறிவு, படிப்பு எல்லாம் அவரைக் கைவிட்டது.

பலநாடுகளில் போராட்ட இயக்கங்களில் இருந்து விரக்தி அடைந்தவர்கள் தன்னார்வ தொண்டு நிறுவனங்களில் ஈடுபடுவதை கேள்விப்பட்டிருக்கிறேன். அதேபோல் போராட்ட இயக்கங்கள், தன்னார்வ நிறுவனங்களை நிறுவி அதன்மூலம் பணம் வசூல் பண்ணுவதையும் பார்த்திருக்கிறேன். இதற்கு உதாரணங்கள் விடுதலைப்புலிகள், தமிழர் புனர்வாழ்வுக்கழகம் (TRO) மற்றும் தமிழர் மருத்துவ நிலையம் (TAMED) என சில அமைப்புகளை அவுஸ்திரேலியாவில் வைத்திருந்தார்கள். ஆனால் காந்தீயம் போன்ற நேர்மையான தன்னார்வுத்தொண்டு நிறுவனத்தை போராளிகள் அமைப்பாக மாற்றியதில் டேவிட்ஐயாவுக்கு முக்கிய பங்குண்டு.

இங்கே நாம் சொல்ல விரும்பும் விடயம் ஒன்றுள்ளது. அதாவது தமிழர்களில் பலதுறைகளில் நிபுணத்துவமும், திறமையும் உள்ள பலர் அநியாயத்துக்கு நல்லவர்களாகவும், அதேநேரத்தில் அரசியலில்

அரிச்சுவடி கூடத் தெரியாதவர்களாக இருந்து வருகிறார்கள் என்பதற்கு டேவிட் ஐயா உதாரணமாகத் திகழ்ந்தார்.

எனது நண்பர் ஒருவர் பொறியியலாளர். அடிக்கடி என்னுடன் டேவிட் ஐயாவைப் பற்றி பேசுவார். மெல்பன் பல்கலைக்கழகத்தில் தாம் இரு வரும் ஒன்றாக படித்ததாகவும் சொல்வார். அப்பொழுது நான் அவரை எனக்கு நன்றாகத் தெரியும் என்பேன். ஈழ விடுதலைப்போராட்டம் என்ற கனவின் சிறையில் தனது செட்டையை மாட்டிக்கொண்டு தொடர்ந்தும் பல துன்பங்களை அனுபவித்த மனிதர் அவர். ஆனால் அவரது அரசியலில் எந்த நம்பிக்கையும் எனக்கிருக்கவில்லை.

இந்த பொறியியலாளர் மலையகத்தைச் சேர்ந்தவர் என்பதால் வட-கிழக்குக்கு வெளியே இருக்கும் தமிழ் மக்களுக்கு நியாயம் கிடைக்காத விடுதலைப் போராட்டம் என்ற எனது அரசியலில் ஒத்துபோவார்.

2005 ஆம் ஆண்டளவில் முன்னர் மெல்பனில் டேவிட் ஐய்யர்வுடன் படித்த அந்த நண்பர், கடிதமொன்றை எனக்குக் காட்டினார். அந்தக் கடிதம் அவருக்கு அவரோடு படித்த டேவிட் ஐயா எழுதியது.

அதைப் படித்தபோது, அதில் இருந்த ஒரு வசனம் என்னைச் சிந்திக்க வைத்தது.

'தமிழர்கள் எல்லோரும் தற்பொழுது தம்பி பிரபாகரனது இளந் தோள்களில் எல்லா பாரத்தையும் திணித்துள்ளோம். அவனால் இதை தனியே சுமக்க முடியாது. வெளிநாட்டுத்தமிழர்கள் இந்தப்பாரத்தை குறைத்து உதவவேண்டும்' என்பது அந்த வாக்கியம்.

இதைப் பார்த்ததும், பின்னர் அவரைப்பற்றிய நேர்முகத்தை வாசித்த பின்பும் பலமுறை நான் சந்தித்திருக்கும் டேவிட் ஐயாவை நினைத்துப் பார்க்க வேண்டியிருந்தது. ஆனால் - எழுதுவதற்கு சந்தர்ப்பம் வர வில்லை.

அவரை எனக்கு அறிமுகப்படுத்தியவர் எனது நண்பர் டொக்டர் சிவநாதன்.

மட்டக்களப்பு சிறையில் இருந்து தமிழ்ப் போராளி இயக்கத்தினர் சிறையுடைத்து வெளியேறியபோது அவர்களில் டேவிட் ஐயாவும் ஒருவர். இந்தச் சிறையுடைப்பிற்கு இரண்டு இயக்கங்கள் அதாவது, தமிழ் மக்கள் விடுதலை இயக்கம் (PLOT) மற்றும் ஈழ மக்கள்

விடுதலை இயக்கம் (EPRLF) என்பன உரிமை கோரி துண்டுப்பிரசுரம் விநியோகித்தன. இவர்கள் தப்பி வந்தபோது கிழக்கு மாகாணத்தின் வாகரைப்பிரதேசத்தில் அரசாங்க மருத்துவராக இருந்த டாக்டர் சிவநாதன் தப்பியவர்களுக்காக உதவி செய்ததால் இலங்கையை விட்டு பின்னர் வெளியேறியவர். இப்படி ஒன்றாகத் தப்பியவர்கள் பின்பு தங்களது இயக்க வள்ளங்களில் பிரிந்து இந்தியாவுக்கு புறப்பட்டனர்.

எனது நண்பர் டொக்டர் சிவநாதன் வந்த வள்ளம் புளட் எனும் தமிழ்ஈழமக்கள் விடுதலைக்கழகத்தை சேர்ந்ததால் அவர்களுடன் பின்பு தேனி பிரதேசத்தில் அவர்கள் அமைத்த முகாமில் சிலகாலம் தங்கியிருந்தார். டேவிட் ஐயா மீது வாரப்பாடாக இருந்தவர் டொக்டர் சிவநாதன்

சிவநாதன் புளட் இயக்கத்தில் இருந்து தனது தொடர்புகளை துண்டித்துக் கொண்டாலும் தனிப்பட்ட ரீதியில் அவர்களுடன் பழகுவார். அவரை தமிழர் மருத்துவ நிதியத்தின் (MUST) பொருளாளராக பிரேரித்தவர் அக்காலத்தில் வாசுதேவா. அவரே அதேபோல் டொக்டர் இராஜசுந்தரத்தின் மனைவியான சாந்தியக்காவை தமிழர் மருத்துவ நிதியத்தின் உபதலைவராக்கியவர். சாந்தியக்கா எந்த இயக்கங்களுடனும் தொடர்புபடாமல் சென்னை எக்மூர் பொலிஸ் வைத்தியசாலையில் வேலை செய்தபடி அந்த அமைப்பின் உதவித் தலைவராக இருந்தார்.

இந்தக்காலத்தில் தமிழ் மக்கள் விடுதலைக் கழகத்தைப் பற்றி ஒவ்வொரு நாளும் பல தகவல்கள் டொக்டர் சிவநாதனுக்கு வரும். அந்தப் தகவல்கள் குறித்து தனது தலையில் அடித்தபடி ‘இவங்களைத் திருத்த இயலாது’ என்று வேதனையுடன் எனக்குச் சொல்வார்.

தமிழ் ஈழ மக்கள் விடுதலைக் கழகத்தின் (PLOT) உள்மோதலில் பலர் கொல்லப்படுவதாகவும் காணாமல் போய்விடுவதாகவும் அதன் செயலதிபரான உமாமகேஸ்வரனது தலைமை பிடிக்காது இயக்கத்தில் பிளவு ஏற்படுவதாகவும் பலர் வந்து வந்து அவரிடம் சொல்வதும் அதை அவர் என்னிடம் திருப்பிச்சொல்லிவிட்டு உமா மகேஸ்வரனை திட்டுவார்.

ஒரு நாள் நடுப்பகலான நேரம். நானும் சிவநாதனும் வேலை செய்து கொண்டிருந்தபோது எங்களது சூளைமேடு தெருவில் உள்ள அலுவலகத்திற்கு சந்ததியாரும் டேவிட் ஐயாவும் வந்தார்கள்.

ஏற்கனவே பலமுறை அறிமுகமானவர்கள். அவர்கள் மிகவும் கலவர மடைந்திருந்தார்கள்.

அன்று சந்ததியார் பேசியதைக் கேட்டபடி இருந்தேன். நான் அதிகம் பேசவில்லை. அவர்கள் பேச்சுக்கள் இயக்கத்தில் நடக்கும் உட்கொலைகளைப் பற்றியும் உமாமகேஸ்வரனது சர்வாதிகாரமான போக்கையும் பற்றியதாக இருந்தது.

இதில் சந்ததியார் மிகவும் நேர்மையான மனிதர் எனக்கேள்விப் பட்டதால் அவர் மீது மதிப்பு இருந்தது. அதேவேளையில் அக்காலத் தில் தமிழ் மக்கள் விடுதலைக் கழகம் (PLOT), இந்திய அயலுறவுக் கொள்கையின் தவறான செயற்பாட்டை சுட்டிக்காட்டி, சந்ததியார் வங்கம் தந்த பாடம் என்ற சிறிய கைநூலை வெளியிட்டார். அந்தக் கைநூல் தமிழ்மக்கள் விடுதலைக்கழகத்தின் இந்திய விரோதப் போக்கை எடுத்துக்காட்டியதாக பலரால் சொல்லப்பட்டது. எனக்கும் அந்த கருத்தியல் கசப்பாக இருந்தது. இந்தியாவை விரோதித்து இலங்கைத் தமிழர் எந்த முன்னேற்றமும் அடைந்துவிட முடியாது என்பது எனது அறிவுக்கு அக்காலத்தில் புரிந்திருந்தது.

தொடர்ச்சியாக அவர்களின் உள்கட்சி மோதல்களைப் பற்றிப் பேசியதை கேட்டுக்கொண்டிருந்த என்னை அவர்களும் பொருட் படுத்தவில்லை. கடைசியாக சந்ததியாரிடம் நான் உங்களிடம் ஒரு கேள்வி கேட்கலாமா என்றேன்.

சந்ததியார் ‘ஆம் கேளுங்கள்’ என்றார்.

‘நீங்கள்தான் உமாமகேஸ்வரனோடு மிக நெருங்கிப் பழகிய மனிதர். அதுவுமல்லாது உமாவை தற்போதைய நிலைக்கு கொண்டு வந்தவர். பலகால நட்பும் பழக்கமுமுடைய உங்களுக்கு அக்காலத்தில் உமா வின் சர்வாதிகாரத்தன்மை புரியவில்லையா?’

சந்ததியார் சிறிது நேரம் யோசித்துவிட்டு ‘உங்கள் கேள்வியில் நியாயம் உள்ளது’ எனக்கூறிவிட்டு எழுந்து போகும்போது ‘உங்களை மீண்டும் சந்திப்பேனா என்பது தெரியாது’ என சொல்லிவிட்டு டேவிட் ஐயாவுடன் வெளியேறினார்.

அந்த வார்த்தை என்னை கதிகலங்க வைத்தது. மக்கள் விடுதலை கழக இயக்கத்தில் (PLOT) நேர்மையான மனிதன் என சிவநாதன் சந்ததியார் பற்றிச் சொல்லியிருக்கிறார்.

*சிலநாட்களின் பின் ஒரு செய்தியைக் கேள்விப்பட்டேன்*

*இரவு நேரத்தில் சந்ததியாரைத் தேடிச்சென்ற தமிழ் மக்கள் விடு தலைக் கழக கோஷ்டியினர், சந்ததியார் என நினைத்து டேவிட் ஐயாவை ஒரு சாக்கில் கட்டி தூக்கிச்சென்றனர். பின்னர் தாம் தூக்கியது டேவிட் ஐயா என அறிந்ததும் சென்னையில், அண்ணாநகர் அருகே உள்ள மயனமொன்றின் அருகில் அவரை விட்டுச் சென்றனர்.*

*டேவிட்ஐயாவால் கொலைகார முகுந்தனும் (உமா மகேஸவரன்) கூட்டாளி வாசுவும் (மட்டக்கிழப்பைச் சேர்ந்த வாசுதேவா) என பிர பலமான கட்டுரை எழுதப்பட்டது.அக்காலத்தில் அவரது துணிவை நாங்கள் எல்லோரும் பாராட்டினோம் ஒருவிதத்தில் உமாவின் சரிவிற்கு அவரது இந்தக்கட்டுரை உதவியது.*

*அதன் பின்பு கிட்டத்தட்ட உமா மகேஸ்வரன்குழுவால் வர இருந்த சாவை பல வருடங்கள் ஏமாற்றி 30 வருடங்கள் அவர் வாழ்ந்திருக்கிறார். அந்தக் கடத்தல் சம்பவத்தின் பின்பு சில நாட்களில் சந்தியார் காணாமல்போனது செய்தியாகியது.*

*தமிழ் மக்கள் விடுதலைக்கழகம், ஈழவிடுதலைப் போராட்டத்தில் நம்பிக்கை தரக்கூடியதாக முற்போக்கு கொள்கைகளும், வெளித் தொடர்புகளும் கொண்டு போராட்ட இயக்கமாக ஆரம்பத்தில் இருந் தது. ஒரு காலத்தில் 6000 இற்கும் மேற்பட்ட பயிற்றப்பட்ட இளைஞர் கள் இருந்தனர்.*

*ஈழ மக்கள் புரட்சிகர முன்னணி (EPRLF) மற்றும் தமிழ்ஈழ விடுதலை (TELO) இயக்கத்தை அழித்தும் ஈழ புரட்சிகர (EROS) இயக்கத்தை தங்களுடன் சேர்த்தும், அழித்த விடுதலைப்புலிகளுக்கு, அதிக வேலை வைக்காமல் தன்னைத்தானாக அழித்த இயக்கமாக தமிழ் மக்கள் விடுதலைக்கழகம் (PLOT)இருந்தது.*

*87 ஜூலை மாதம் நான் இந்தியாவை விட்டு வெளியேறும்போது எனது இலங்கை பாஸ்போட்டில் இருந்த இந்திய விசா காலாவதியாகி கிட்டத்தட்ட மூன்று வருடங்கள் ஆகிவிட்டது. அப்பொழுது எனக்குத் தெரிந்த ஒரு இந்திய உளவுத்துறை அதிகாரியின் மூலமாக விசாவை புதுப்பித்தேன். அக்காலத்தில் இந்திய மண்ணில் ஈழ இயக்கங்கள் செய்த உட்கொலைகளின் பட்டியல் ஒன்றை அந்த அதிகாரி தம்வசம் வைத்திருந்தார். அதில் 250 இற்கும் மேற்பட்டவர்களை கொலை செய்து உமா மகேஸ்வரனின் தலைமையிலான தமிழ் மக்கள் விடுதலை*

*இயக்கம் (PLOT) முன்னணியில் இருந்தது. விடுதலைப்புலிகள் (LTTE) 32 கொலைகளையும் தமிழ் ஈழ விடுதலை இயக்கம் (TELO) 18 கொலைகளையும் செய்திருந்தன. ஈழமக்கள் விடுதலை இயக்கமும் (EROS) ஈழ மக்கள் புரட்சிகர முன்னணியும் (EPRLF) செய்த கொலை கள் பற்றிய பட்டியல் அவரிடம் இல்லை.*

*ஆனால, விசாவை புதுப்பித்து நான் வெளியேற இருந்த கால எல்லையில் 4 பேரை ஈழவிடுதலை இயக்கம் (EROS) மதுரையில் கொலை செய்ததாக தகவல் வந்தது. இந்தப் பட்டியலும் அந்த அதிகாரியிடம் இருந்தது. இதை விட பல கொலைகள் அவர்களிடம் போகாது இருக்கவும் சாத்தியம் உள்ளது...? மேலும் அந்தப் பட்டியலின் காலம் 87 நடுப்பகுதியாகும். அதாவது இலங்கை... இந்திய ஒப்பந்தம் நடந்த காலப்பகுதியாகும்.*

*நான் அவுஸ்திரேலியாவுக்கு வெளியேறிய பின்பாக டேவிட் ஐயாவை மீண்டும் ஒரு முறை இந்தியாவில் சந்தித்தேன். அவரோடு பேசியதில் தெரியவந்த விடயம் அவர் தமிழர் தரப்பு பிரிவினையை மிகவும் பலமாக ஆதரிக்கும் மனிதராகவும் சிங்கள எதிர்ப்பில் மிகவும் உறுதியானவராகவும் இருந்தார்.*

*அவரது சிங்கள எதிர்ப்பு, இன எதிர்ப்பாகத்தான் தெரிந்தது. அதனாலேதான் அவரால் பின்னாட்களில் விடுதலைப்புலிகளில் நம்பிக்கை வைக்க முடிந்தது.*

*டேவிட் ஐயா கிறிஸ்தவராக இருந்தாலும், அவரது வாழ்க்கை இந்து சமயத்து சாமிகள்போல் இருந்தது. திருமணம் செய்து கொள்ளாதது மட்டுமல்ல, உடைவிடயத்திலும் அவர் மிகவும் உறுதியாக இருந்தார்.*

*இங்கிலாந்து போன்ற நாடுகளில் நிச்சயமாக சப்பாத்து அணிந் திருப்பார். ஆனால் இந்தியாவில் அவரை செருப்புடன் நான் கண்டதில்லை. டொக்டர் சிவநாதன் 'ஐயா தமிழீழம் கண்டபின்புதான் செருப்பு அணிவார்' என்று சொல்லி சிரிப்பார். அதில் எவ்வளவு உண்மை... பொய் இருக்கிறது என்பது தெரியாது.*

*ஒரு ஈழப் பிரிவினைவாதியாக தன்னை ஒறுத்து முனிவராக நடந் தார். ஆனால் அவரது பிடிவாதத்தில் பல பிற்போக்கான தன்மைகள் தான் தெரிந்தன. ஆரம்பத்தில் காந்தீயம் என்ற அழகான குழந்தையை பெற்று அதை பொறுப்பாக அவர் வளர்க்கவில்லை. ஆயத இயகத்தின ரிடம் அதனைக்காவு கொடுத்தார். ஆரம்பத்தில் உமா மகேஸ்வரனை*

யும் பின்பு பிற்காலத்தில் பிரபாகரனையும் நம்பினார். புலிகள் மூலம் ஈழத் தமிழர்களுக்கு விடிவு வரும் என்ற நம்பிக்கையில் இருந்தார்.

கடைசிவரையும் தமிழர் பிரச்சினைக்கு தீர்வுவரும் என ஒரு யோகிபோல் அதேநேரத்தில் பிடிவாதமான குழந்தையாகவும் தன்னை சுற்றி கற்பனைகளால் சுவர் எழுப்பியபடி வாழ்ந்த மனிதர்.

ஈழப் போராட்டத்தில் ஏதோ வகையில் பங்கு கொண்டவர்கள் எல்லோரும் தோல்வியைத்தான் தழுவினார்கள். ஒருவரும் வெல்லாத அந்தப் போராட்டத்தில் பலர் காலம் கடந்து தங்களை சுதாகரித்துக் கொண்டார்கள். வேறும் பலர் கிடைத்த நன்மைகளோடு வாரிச் சுருட்டினார்கள்.

ஆனால், டேவிட் ஐயா எவ்வளவு மனச்சுமையுடன் தனது இறுதி நாட்களை கழித்திருப்பார் என்பதை எண்ணித்தான் என்னால் அவரை நினைவு கூரமுடியும்.

# அப்பாவிகளைக் கொல்லும் பயங்கரவாதம்

இராசா ஒருவர் தமது ஊரில் தான் பார்த்திராத பழத்தை கொண்டு வந்து காண்பித்தால் இளவரசியை திருமணம் செய்துவைக்கவிருப்பதாகவும், ஆனால் அந்தப்பழம் பற்றி நான் அறிந்திருந்தால் அதையே கொண்டு வந்தவனின் வாயில் திணித்து அனுப்புவதாகவும் அறிவித்தார். பலர் திராட்சை, வாழை என பலதரப் பட்ட பழங்களைக் கொண்டுவந்து காண்பித்தபோது, அவைகளை தான் அறிந்திருந்திருப்பதாக சொன்ன இராசா அவர்களது வாய்களில் அவற்றைத்திணித்து அனுப்பினார் .

அவர்கள் சிரித்தபடியே சென்றார்கள். ஒருவன் அன்னாசிப்பழத்தை கொண்டுவந்தான் அப்பொழுதும் இராசா இதை நான் பார்த்திருக் கிறேன் எனச்சொல்லி அவனது வாயில் திணித்தார். அவன் வாய் கிழிந்த போதும் அவன் அழவில்லை அப்பொழுது இராசா கேட்டாராம்

'வலிக்கவில்லையா ? ஏன் அழுகிறாய்?'

'இல்லை எனக்குப் பின்பாக ஒருவன் பலாப்பழத்துடன் நிற்பதை நினைத்து சிரிப்பு வந்தது' என்றானாம்.

அதுபோல் ஏமாந்துகொண்டிருக்கும் இலங்கைத் தமிழரைவிட விட மிகுந்த அனுதாபத்திற்குரியவர்கள் பல சிங்கள இடதுசாரிகள். தமிழ் இயக்கங்களின் ஈழவிடுதலைப்போராட்டம் ஒரு நியாயமான போராட்

டம் இதன் மூலம் தமிழர்களுக்கு உரிமை கிடைப்பது மட்டுமல்ல சிங்களப் பாட்டாளி மக்களுக்கும் விமோசனம் கிடைக்கும் என நம்பிய பல சிங்கள இடதுசாரிகள் இருந்தார்கள். அவர்களில் சிலர் புளட் இயக்கத்துடன் தொடர்பு வைத்திருந்தார்கள் என அறிந்தேன். ஆனால் அவர்களை எனக்கு நேரடியாகத்தெரியாது. ஆனால், ஈ.பி. ஆர். எல். எஃப் இயக்கத்துடன் தோளோடு நின்ற விகல்பகண்டாயம் என்ற தயான் ஜயத்திலக குழுவினரை இந்தியாவில் சந்தித்தேன். அதில் நான்கு பேர்என்னிடம் மிகவும் வாரப்பாடாக பழகுவார்கள். இவர்கள் ஜோ செனவிரத்ன, சிதன் டீசில்வா (கமல்), பியால் மற்றும் சிறி லால். இவர்களால் இலங்கையில் இருக்கமுடியாது என்பதால் சென்னைக்கு அகதிகளாக வந்தவர்கள்.

ஈழத்தமிழ் விடுதலை இயக்கங்களை நம்பிய இலங்கை தமிழ் மக்கள் மிகவும்

பாவப்பட்டவர்கள் என்பது எனது கருத்து. அவர்களின் பின்னால் சென்று உயிரையும் உடல் உறுப்புகளையும் இழந்தவர்கள் எப்பொழுதும் எனது நெஞ்சில் இருப்பவர்கள். சில காரணங்களால் அப்படி அவர்களைப்போன்று ஒருவனாக நான் வராமல் இருந்தது எனது அதிஷ்டம். அரசாங்கத்தில் அவமானப்பட்டு அநீதி இழைக்கப்படும் பொழுது ஆத்திரம் கொள்வது மனித இயல்பு. அந்த நிலையில் சில வருடகாலம் நானும் இருந்திருக்கிறேன். எனது மனதில் ஆத்திரம் கொழுந்துவிட்ட காலம் கல்லூரிப்பருவமாகும். பல்கலைக்கழகத்தில் நீறுபூத்து பின்னர் 1983 கலவரத்தில் தணலாக மீண்டது. ஆனால் தமிழினப் போராட்டத்தின் ஒரு தருணத்தைப் பார்த்தபோது அணைந்தது.

நான் கற்ற யாழ். இந்துக்கல்லூரியில் இருந்து வருடாந்தம் குறைந்தது ஐம்பது மாணவர்கள் பல்கலைக்கழகத்திற்கு செல்வார்கள். இந்த எண்ணிக்கை தரப்படுத்தலின் விளைவாக குறைந்து கொண்டு வந்து, நான் பல்கலைக்கழக புகுமுக பரீட்சை எடுத்த 74 இல் மாவட்டரீதியான தேர்வும் சேர்ந்து வந்து கழுதை தேய்ந்து கட்டெறும்பென ஐந்து பேராகியது. நான் மட்டும்தான் உயிரியல் பகுதியில். இரண்டு மாணவர்கள் பொறியியல்துறைக்கும் இருவர் கலைப்பீடத்திற்கும் தெரிவானார்கள். கல்லூரிக்கு வரவேண்டாம் என அடித்துத் துரத்திய அதிபர் சபாலிங்கம் எனக்கு எதிரே கதிரைபோட்டு என்னிடம் பேசினார். இந்தக்காலத்தில் நான் பரீட்சையில் எடுத்த புள்ளிகள் குறைக்கப்பட்

டது தெரிந்தது. அதாவது மருத்துவபீடத்துக்கு தமிழ் மாணவர்கள் 250 புள்ளிகள்

நான்கு பாடங்களில் எடுக்கவேண்டிய நேரத்தில 229 புள்ளிகள் மாத்திரம் சிங்கள மாணவருக்கு போதும் என்ற நிலை. இதேபோன்று, பொறியியலுக்கு 250 தமிழ் மாணவருக்கும் 227 சிங்கள மாணவருக்கும் என்றாகியது.

இந்த அதிரடி மாற்றம் தமிழ் மாணவர்கள் பெற்றோர்கள் மத்தியில் ஆத்திரத்தை வரவழைத்தது.

அப்பொழுது தமிழ் அரசியல்கட்சிகள் இலங்கையில் தமிழர் போராட்டத்திற்காக முன்வைத்த காரணங்கள் பல இருந்தன.

இப்பொழுது பார்த்தால் அவை பெரிதாகத் தெரியவில்லை. குறைந்த பட்சம் உயிரைக் கொடுத்து போராட வேண்டியவைகளா என்ற கேள்வியும் எழும்.

1) ஆரம்பப் பிரச்சினையாகிய மலையக மக்களின் வாக்குரிமை பறிப்பு – உண்மையில் நல்லதல்ல.

   ஆனால், இந்திய அரசே அவர்களை இந்தியர்களாக ஏற்றுக் கொள்ளும்போது நாம் என்ன செய்வது...? தொடர்ந்து வந்த இலங்கை – இந்திய ஒப்பந்தமும் அதைத்தானே உறுதி செய்கிறது...?

2) கிழக்கு மாகாணத்தின் அரச காணிகளில் சிங்களக் குடியேற்றத் திலும் கூட கிழக்கு மாகாணத்தவர்களுக்கு முன்னுரிமை கொடுத்துவிட்டு, ஆறுமாதத்தின் பின்பாகத்தான் மற்றைய மாவட்டத்தவர்களுக்கு வழங்கப்பட்டது. இலங்கையில் கிழக்கு மாகாணத்தில் காணியற்றவர்கள் மிகவும் குறைவு. மூன்றாவதாக எமது தமிழ்த்தலைவர்கள் தூக்கிப்பிடித்தது சிங்கள ஸ்ரீ விவ காரம். ஆங்கில இலக்கத்திற்குப் பதிலாக சிங்களம். கொஞ்சம் கடுப்பாக இருந்தாலும் அதற்காக உயிரை விடத்தேவையில்லை. அரசாங்க பஸ்களில் ஸ்ரீ விவகாரத்தைப் பற்றி டி.பி.ஸ் ஜெயராஜ் சொன்னதகவலின்படி, அன்று புதிதாக இறக்குமதி செய்யப்பட்ட பஸ்களில் சிங்கள ஸ்ரீயும் பழைய பஸ்களில் ஆங்கில எழுத்தும் இருந்தது. பழைய பஸ்களை யாழ்ப்பாணம் அனுப்பினால் அரசாங்கம் பழைய பஸ்களைத் தருகிறது என்ற கூக்குரல் வரும்

என்பதாலேயே புதியபஸ்களை அனுப்பியதாக போக்குவரத்துத் துறை அதிகாரி சொன்னாராம். மேலும் சிங்கள ஸ்ரீக்கு தார் பூசுவதற்கு ஆரம்பத்தில்

சில தமிழ் இளைஞர்கள் தார்வாளியுடன் சென்றபோது சில தமிழ் எம்.பி. க்கள் அந்தவேலையை தாங்கள் செய்வதாக முன் வந்தார்கள். இந்த இளைஞர்கள் சிலர் தற்பொழுது அமெரிக் காவில் இருப்பதால் அந்தத்தகவலை உறுதிப்படுத்த முடிந்தது என்கிறார் டி.பி.ஸ் ஜெயராஜ்.

இலங்கைத் தமிழர்கள் தொடர்ந்தும் தங்கள் தலைகளை தமிழ்த்தலைவர்கள் இன்னமும் மிளகாய் அரைப்பதற்கு கொடுத்தபடியே இருக்கிறார்கள்.

3) சிங்கள மொழியை அரசகரும மொழியாக்கிய பண்டாரநாயக் காவின் சட்டம்

தமிழர்களைப் பாதிக்கும். ஆனால் மீண்டும் இரண்டு மொழிகளது பாவனைத் திருத்தம் தமிழ் இயக்கங்கள் ஆயுதம் ஏந்த முதல் சட்டமூலமாக வந்து விட்டது.

ஆனால் அதனை அமுல் படுத்துவதில் பல சிக்கல்கள் இருந்தன என்பதை நான் ஏற்றுக்கொள்கிறேன். இவற்றையெல்லாம் பேசித் தீர்த்து உயிர்க்கொலைகளைத் தவிர்த்திருக்கமுடியும்.

இந்த மொழிவாரியான தரப்படுத்தல் மட்டுமே தமிழ் இளைஞர் களை பாதித்தது. பல்கலைகழகம் செல்ல எண்ணியவர்களை மட்டுமல்ல படிக்க விருப்பமில்லாதவர்களும்கூட 'என்ன படித்தா லும் சிங்களவன் பல்கலைக்கழகத்திற்கு போக விடமாட்டான்' என்றவாதத்தை முன்வைத்தனர்.

பிரபாகரன்கூட இப்படி நினைத்திருக்கக்கூடும். யார் கண்டது?

தமிழ் வாத்தியாரின் மகன் மிருக வைத்தியம் படித்ததுபோல் காணி அதிகாரி வேலுப்பிள்ளையின் மகன் வைத்தியராகவோ பொறியியலாளராகவோ வந்திருக்க முடியும்.

தரப்படுத்தல் இல்லாவிடில் இந்தப் போரே நடந்திராது.

நான் பரீட்சையில் தோற்றிவிட்டு இருந்த காலத்தில் 1974 ஜூன் மாதம் எமது கல்லூரி மாணவனாகிய சிவகுமாரனின் மரணம் சம்பவித்தது. நானும் நண்பர்கள்

பலருடன் மரண வீட்டுக்குச் சென்றோம்.

நல்ல வேளையாக அக்காலத்தில் நான் வீட்டின் தலைப் பிள்ளை யாக வீட்டுப்பொறுப்புகளுடன் இருந்ததுடன் காதலிக்கவும் தொடங்கிய தால் வேறு வழியில்லாமல் கிடைத்த மிருகவைத்தியத்துறைக்கு சென்றுவிட்டேன். எனினும் இந்த தரப்படுத்தல் விடயத்தில் அன்றைய இலங்கை அரசாங்கத்தின் மீதான எனது கடுப்புக் குறையவில்லை.

நாட்கள் செல்லச்செல்ல பல்கலைகழகத்தின் சூழல் என்னை மாற்றியது. முக்கியமாக சிங்கள நண்பர்கள் கிடைத்தார்கள். அதற்கும் அப்பால் மக்கள் விடுதலை முன்னணியிலிருந்து சிறை சென்ற பலர் மீண்டும் பல்கலைக்கழகத்திற்கு படிக்க வந்தவர்கள். அவர்கள் பலரோடு நட்புடன் இருந்தேன். இப்படியான நண்பர்கள் மற்றும் ஆசிரியர்கள் என்னை யாழ்ப்பாணத்தின் நிலைப்பாட்டிலிருந்து பிரித்து வைத்தபோதும் 1977 ஏப்ரலில் தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர் செல்வநாயகம் இறந்தபோது பேராதனைத் தமிழ்மாணவர்கள் சார் பாக பெரிய மலர்வளையத்தை கண்டியில் இருந்து வாங்கிக்கொண்டு, ரயிலில் பொல்காவலை வழியாக வந்து அவருடைய மரண ஊர்வலத் தில் கலந்து கொண்டேன்.

1983 கலவரம் மீண்டும் ஆத்திரத்தை கொழுந்து விட்டெரியச் செய்தது.

இந்திய அரசாங்கம் போராளி இயக்க இளைஞர்களுக்கு ஆயுதப் பயிற்சி கொடுக்கிறது என்ற தகவல் வந்தபோது குறைந்த பட்சமான ஒரு இறைமை எமக்குக் கிடைப்பது உறுதி என்ற உணர்வு வந்தது. தொடர்ச்சியான இனக்கலவரங்கள் ஏற்படாது தன்மானமாக வாழ் வதற்கு இந்த ஆயுதப்போராட்டம் வழிசமைக்கும் என்பதை சில வருடங்களாவது நான் நம்பவில்லை என பொய் சொல்ல எனது மனச்சாட்சி இடம் கொடுக்காது. ஆனால் - அந்த நினைப்பை மிக விரைவில் காற்றுடன் போக வைத்த சம்பவத்தையே இங்கு எழுதவிரும்புகிறேன்.

சென்னையில் இருந்த இலங்கைத் தமிழருக்கு வழக்கமாக வரும் இரு நோய்கள் தைபோயிட் - ஹெப்பரைரிஸ். இந்த இரண்டும்

சுத்தப்படுத்தாத தண்ணீரால் பரவுவது. உணவுக்கடைகளில் ஒரே வாளியில் உள்ள தண்ணீரில் பாத்திரத்தைக் கழுவுவதும் உடல் உபாதைகளை நீங்கிவிட்டு கைகளை கழுவாததும் இதன் காரணங்கள்.

அங்கு நான் சந்தித்த விகல்ப கண்டாயத்தைச் சேர்ந்த ஜோ செனவிரத்னவுக்கு அவர் சென்னையில்இருந்தபோது தைபோயிட் நோய் வந்து விட்டது. சிங்களவரான அவரை சென்னை வைத்திய சாலையில் வைத்து குணப்படுத்த விரும்பாமல் ஒரு தனி மாடி வீட்டில் வைத்திருந்தார்கள் ஈ.பி. ஆர். எல். எஃப் இயக்கத்தைச் சேர்ந்தவர்கள். அதன்பின்பு அவரை பார்த்துக் கொள்ளும்படி . பத்மநாபா என்னிடம் சொன்னார். அவரது வேண்டுகோளின் பிரகாரம் இரண்டு தரம் எனது மனைவியையும் அழைத்துக்கொண்டு ஜோ செனவிரத்ன இருந்த மாடிவிட்டுக்குச்சென்று உரையாடினேன். கம்யூனிசம் மற்றும் உலகவிவகாரம் என பல விடயங்களைப் பேசுவோம்.

ஒரு நாள் எனது டிவி எஸ் ஐ மோட்டார்சைக்கிளை நிறுத்திவிட்டு ஒருநாள் அவரிடம் செல்லும் வழியில் எனக்குஅறிமுகமான ரெலோ இயக்கத்தைச் சேர்ந்த ஒரு இளைஞர் ‘அண்ணே அநுராதபுரத்தில் பெருமளவு சிங்களவர்கள் கொலை செய்யப்பட்டிருக்கிறார்களாம்’ என்றான்.

‘யார் செய்தது?’

‘ வேறு யாரு?புலிகள்தான்’ என்றுசொல்லிவிட்டு அவன் அகன்றான்.

அவன் அந்த விடயத்தை பெரிதாக எடுக்கவில்லை என்பது அவனது வார்த்தையில் தெரிந்தது.

இந்த விடயத்தை ஒரு சிங்களத் தோழரிடம் எப்படிச் சொல்வது என எனக்கு மனம் கனத்தது.

இரண்டு நிமிடங்களில் தாவிக்கடக்கும் அந்த மாடிப்படிகள் ஏதோ மலை ஏறுவது போல் இருந்தது.

உள்ளே சென்றதும் ‘என்ன கொம்ரேட்?’ என்றார் ஆங்கிலத்தில்.

நான் விடயத்தை கூறியதும் அந்த சிங்கள நண்பன் தலையில் கைவைத்து ‘ஒக்கம இவறாய்’ (எல்லாம் முடிந்துவிட்டது) எனக் கூறினார்.

*‘நான் உடனடியாக இருநூறு சிங்களவர்கள் கொல்லப்பட்டு விட்டதற்காக கூறுகிறீரா...? என வினவினேன்.*

*இல்லை இதன்பின் இறக்கப்போகும் தமிழர்களை எண்ணித்தான் கவலைப்படுகிறேன்’ என பதிலளித்தார்.*

*‘ தயவுசெய்து எனக்கு விளக்கமளிக்கும்படி ” கேட்டேன்.*

*‘தற்போதைய சூழ்நிலையில் தமிழ்ப்போராளிகள், விடுதலைப் போராளிகள் அல்ல.*

*இவர்கள் பயங்கரவாதிகள் என சிங்களமக்களுக்கும், உலக நாடு களுக்கும் ஜே.ஆர்.ஜயவர்தனா கூறுவார். இதன்மூலம் முழுசிங்கள மக்களினதும் உலக நாடுகளினதும் ஆதரவை அவர் பெறவிரும்புவார். தமிழ் மக்களுக்கு அரசாங்கம் தீங்கு இழைப்பதாகச்சொல்லி ஆயுதம் ஏந்திக்கொண்டு போராடும்போது சிங்களப் பொதுமக்களை கொல்வதன் மூலம் இலங்கை இராணுவத்துக்கு சமமான நிலைக்கு தாழ்ந்துவிடுகிறார்கள். இது விடுதலைப்போராளிகள் செய்யும் மனிதாபிமான செயல் அல்ல. பழிவாங்கும் செயலாகும். இதனால் விடுதலைப் போராட்டத்திற்கு இழுக்கு வந்துவிடுகிறது.*

*இரண்டாவது அரசாங்கப்படைகளுடன் போரிட்டாலும் பல சிங்கள மக்கள் தம்மை போரில் ஈடுபடுத்துவதில்லை. அதைவிட எம்மைப் போன்ற சிறிய அளவு சிங்களவர்கள் உங்கள் போராட்டத்தில் உள்ள நியாயத்தைப் பார்த்து உதவிசெய்கிறார்கள். சாதாரண சிங்களமக்கள் கொலை செய்யப்படும்போது இந்த நிலைமாறி இரு இனங்களுக்கு இடையிலான இனப்போராட்டமாக மாறுகிறது. இப்படியான இனப் போராட்டத்தில் நீங்கள் வெல்ல வாய்ப்புகளே இல்லை.*

*முழுத் தமிழர்களும் சேர்ந்து ஆயுதம் ஏந்தினாலும் உங்களால் சிங்களவர்களை வெல்லமுடியாது.*

*மூன்றாவதாக சர்வதேச மட்டத்தில் பயங்கரவாதம் எப்பொழுதும் அங்கீகாரம் பெறப்போவதில்லை. நீங்கள் குறுகிய காலத்தில் விளம் பரமும் புகழும் பெற்றாலும்*

*காலப்போக்கில் இதனால் ஒரு பயனும் ஏற்படாது. (So this is morally, strategically and tactically wrong) என கூறிமுடித்தார்.*

*அந்த சிங்களத்தோழர்களுடன் பழகிய காலங்கள் இனிமையானது.*

*சித்தன டீ சில்வா பார்ப்பதற்கு விஜயகுமாரதுங்கா மாதிரி இருப்பார். சிறுவயதிலிருந்து காக்காய் வலிப்பினால் பாதிக்கப்பட்டவர். பியால் தான் பாக்கிஸ்தானில் இருந்த காலத்தை நினைவு கூருவார்.*

*சிறில் குடும்பஸ்தர். ஏழ்மையான குடும்பத்தைச் சேர்ந்தவர். அவரது*

*அரசியல் தேர்வால் ஊரே அவரை வெறுத்தது. நான் அவுஸ்தி ரேலியாவிற்கு வந்த பின்பு தனது குடும்ப நிலையை எழுதி உதவி கேட்டபோது நான் அக்காலத்தில் படித்துக்கொண்டிருந்ததால் எனது நண்பன் திவ்வியநாதனிடம் அக்கடிதத்தைக் காட்டி அவரிடம் பணம் பெற்று சிறிலுக்கு அனுப்பினேன்.*

*அநுராதபுரத்தில் கொலை செய்யப்பட்ட சிங்கள மக்கள் எனக்கு விடுதலைப்புலிகளின்சுயத்தை அன்றே வெளிப்படுத்தினார்கள். இவர் கள் பயங்கரவாத செயல்களில் தொடர்ந்து ஈடுபட்டதைப் பார்த்ததும் ஆயுதப்போராட்டத்தில் இருந்த எனது ஆர்வம் முற்றாக மறைந்தது.*

*அதன்பின்னர் தொடர்ச்சியாக நடந்த சம்பவங்கள் நமது போராட்டம் கரைசேராது என்பதையும் தெளிவாக்கியது.*

*அவுஸ்திரேலியாவுக்கு 1987 ஜூலை வந்தவுடன் சுமார் 50 பேர் கொண்ட கூட்டத்தில் இதைச்சொல்லிவிட்டு, எனது பொக்கட்டில் இருந்த கைக்குட்டையை எடுத்துக்காட்டி 'துன்புறும்மக்களுக்கு நீங்கள் கண்ணீரைத் துடைக்க இது மாதிரி பயன்படுவது நல்லது' என்ற போது - அந்தக் கூட்டத்தில் இருந்த விடுதலைப்புலி ஆதரவாளர்கள் பலர் உறுமினார்கள்.*

*இன்னமும் பலர் ஆங்காங்கு உறுமிக்கொண்டு இருக்கிறார்கள்.*

# இரத்தக்கறை படிந்த அங்கிகள் ▪

"IS IT TRUE TELO KILLED KAVALOOR JEGANATHAN…? "

"YES"

*முகநூலில் ஒரு நண்பரிடம் சமீபத்தில் பெற்றுக்கொண்ட பதில் தான் இங்கு மேலே சொல்லப்பட்டது.*

*சென்னையில் தமிழர் மருத்துவ நிலையம் (MUST) நடத்திய காலத்தில் நடந்த விடயங்களை முன்னர் எழுதிக்கொண்டிருந்தேன்.*

*நான் எழுதும் சில விடயங்கள் சிலரை பாதிக்கும் என்ற தயக்கத்தின் காரணத்தால்தான் அந்தப்பத்தியை இடை நிறுத்தியிருந்தேன். சமீபத்தில் எனது முகநூலில் ஒரு நண்பரால் எழுதப்பட்ட விடயம் எனக்கு அதிர்ச்சியைத் தந்தது. இதுவரையும் நான் யோசிக்காத ஒரு புதிரின் யன்னலைத் திறந்து காட்டியது. அவருக்கு எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். அவரது பெயரை இங்கு குறிப்பிடவில்லை.*

*85 ஆம் ஆண்டளவில் சென்னையில் ஒரு மாலை நேரம். ஆதவன் மறைந்து சென்னை நகரத்தின் மின்சார விளக்குகள் எரியத் தொடங்கிவிட்டன. நான் சூளைமேடு வீதியில் உள்ள தமிழர் மருத்துவ நிலையத்தில் இருந்து ஈழமக்கள் விடுதலை முன்னணியினர் நடத்திய தகவல் நிலையத்திற்குச் சென்றேன். அதிக தூரமில்லை. ஐந்து நிமிட*

நடை போதுமானது.

மாலைப் பத்திரிகையான மக்கள் குரல், அவர்களது அலுவலகத்திற்கு (எபிக் (EPIC)) வந்திருக்கும். வீடு செல்வதற்கு முன்பு இலங்கையில் நடந்த போர் செய்திகளைப் பற்றி தெரிந்து கொள்ளவேண்டும் என்பது எனது நோக்கம். எபிக் கட்டிடத்தில் எப்பொழுதும் என்னை வரவேற்கும் இயக்கத் தோழர்கள் இருப்பார்கள்.

அந்த இரண்டு மாடிக் கட்டிடத்தின் அருகே சென்றபோது இருட்டில் ஒரு பெண் ஒரு குழந்தையை நெஞ்சில் அணைத்தபடி நிற்பதைக் கண்டேன். உண்மையில் அந்தக் குழந்தை பெரிய குழந்தை என்பதால் அந்தப் பெண் சுமக்கும் பாரம் முகத்தில் தெரிந்தது.

அருகில் சென்றபோது அந்தப் பெண் சிரித்தாள்.

தெரிந்த முகமாக இருந்தாலும் உடனடியாக அடையாளம் தெரியவில்லை.

தயங்கியபடி '... நீங்கள்?' என்றேன்.

'ஜெகநாதனின் மனைவி. எங்கள் வீட்டுக்கு வந்திருக்கிறீர்கள்'

'அதுதானே மனதில் நினைத்தாலும் உடனே ஞாபகம் வரவில்லை. மன்னிக்கவும். ஒரு நாள் பார்த்தது அல்லவா' என்றேன்.

ஜெகநாதன் எனப்படும் காவலூர் ஜெகநாதன், என்னுடன் யாழ். இந்துக்கல்லூரி விடுதியில் இருந்தவர். ஒரு வகுப்பு முன்பாக படித்தாலும் ஓல்ட் போடிங் என்ற அந்த விடுதியில் எனது பக்கத்துக் கட்டில் அவருடையது. ஒன்பதாவது, பத்தாவது வகுப்புகளில் படித்தபோது எங்கள் கட்டில்களுக்கிடையே கபேட் எனப்படும் சிறிய மர அலுமாரி பிரிக்கும். படுக்கும் போதும், நித்திரையிலிருந்து விழிக்கும் போதும் ஒருவரது முகத்திலே ஒருவர் விழிப்போம். கிட்டத்தட்ட இரண்டு வருடங்கள் இப்படி அருகருகே வாழ்ந்தோம். எனது குடும்பத்தினர் எழுவைதீவில் இருந்து யாழ்ப்பாணம் வந்ததால் பிற்காலத்தில் விடுதியை விட்டு விலகினேன். அதன் பின்னர் எமக்கிடையே எந்தத் தொடர்புமில்லை.

சில வருடங்களின் பின்பாக பேராதனைப் பல்கலைக்கழகத்தில் மிருக வைத்திய பீடத்திலிருந்து நான் படித்த காலத்தில் பேராதனை சந்தியை நோக்கி எனது காதலியுடன் (தற்போதைய எனது மனைவி)

போய்க் கொண்டிருந்தபோது எதிர்பாராமல் சிரித்தபடியே வந்து கொண்டிருந்த வேட்டியணிந்த ஜெகநாதனை சந்தித்தேன். அவனைப் பார்த்து ஆச்சரியப்பட்டேன். (பேராதனையில் வேட்டியுடன் திரிபவர்கள் அரிது. குறிஞ்சிக் குமரன் கோவிலுக்கு செல்பவர்களில், மிகக் குறைந்தவர்களையே வேட்டியுடன் கண்டிருக்கிறேன்).

'என்னடாப்பா என்ன செய்கிறாய்...?'

பக்கத்தில் உள்ள விவசாயத் திணைக்களத்தை நோக்கி கையை காட்டிவிட்டு

'இங்கு வேலை செய்கிறேன்" என்றான்.

அதன் பின்பு எங்களுக்கிடையே தொடர்பு இல்லை. ஆனாலும் இந்த ஜெகநாதனே காவலூர் ஜெகநாதன் என்ற பெயரில் கதை எழுதுவது என்பதை பல வருடங்களின் பின்பு சிலர் சொல்லக் கேள்விப்பட்டேன். இலங்கையில் இருக்கும்வரை எந்த இலக்கியவாதியையோ எழுத்தாளரையோ எனக்கு அறிமுகமில்லை.

85 ஆம் ஆண்டு என நினைக்கிறேன். கோடம்பாக்கத்தில் லிபேர்ட்டி தியேட்டர் அருகே நான் குடியிருந்த காலத்தில் ஒரு நாள் நுங்கம்பாக்கம் சாலையை கடந்து சென்றபோது எனது கையை பிடித்து இழுத்தவரைத் திரும்பிப் பார்த்தால் அது நமது ஜெகநாதன். அதே வேட்டி, அதே சிரிப்பு.

வீதியில் நின்று கதைத்தபோது 'வா வீட்டுக்கு. அருகில்தான்' என பலவந்தமாக இழுத்துக்கொண்டு ஓட்டோவில் ஏறினான். பல சந்துகள் கடந்து அவனது வீட்டிற்கு சென்றோம். சிறிய வீடு. மனைவியையும் குழந்தையையும் அறிமுகப்படுத்தியதுடன் அன்று மதிய உணவும் தந்தான்.

நான் அவனது வீட்டில் சாப்பிட்ட சில காலத்தின் பின்பே அவனது மனைவியை ஈழமக்கள் புரட்சிகர முன்னணியின் எபிக் அலுவலக வாசலில் கண்டேன்.

' எதற்காக இந்த இடத்தில் நிற்கிறீர்கள்?'

'அவரை இரண்டு நாட்களாக காணவில்லை. அதுதான் இவர்களைக் கேட்க வந்தேன்.'

'யாரைப் பார்க்கவேண்டும்?'

'தலைவர் புத்மநாபாவை'

'சரி என்னுடன் வாங்கோ'

மேல் மாடிக்கு கூட்டிச் சென்றேன். அங்கு இருந்தவர்களிடம் இரஞ்சன் தோழரை பார்க்க முடியுமா? என வினவினேன் (பத்மநாபாவை இரஞ்சன் என பலர் அழைப்பார்கள்)

'அறைக்குள் இருக்கிறார்'

' நான் சென்று கதவை தட்டியபோது 'நடேசன் தோழர்' என விளித்தார்.

வேறு சிலரும் இருந்தார்கள் யார் யார் என்பது மறந்துவிட்டது.

'உங்களிடம் ஒரு விருந்தாளியை கூட்டி வந்தேன்"

'யார் அது...?'

'காவலூர் ஜெகநாதனின் மனைவி. குழந்தையுடன் வந்து வாசலில் நிற்கிறார்.'

தலையில் கை வைத்தபடி 'இதைப்பற்றி எங்களுக்குத் தெரியாது தோழர்'.

'உங்களுக்குத் தெரியாதென்றால் யாரைக் கேட்கவேண்டும் என சொல்லுங்கள். ஜெகநாதன் என் பாடசாலைத் தோழன்.' அழுத்தமாகக் கேட்டேன்.

சிறிது நேரத்தின் பின்பு, பாலகுமாரிடம் கேளுங்கள். நான் சொன்ன தாகச் சொல்லுங்கள்.'

நான் வெளியே வந்து ஜெகநாதனின் மனைவியிடம் சொன்னேன். 'இவர்கள் தங்களுக்குத் தெரியாது என்கிறார்கள் அத்துடன் ஈரோஸ் பாலகுமாரை கேட்கும்படி கூறினார்கள். எனக்கு ஒரு நம்பிக்கை இவர்களுக்கு இதில் சம்பந்தமிராது. அப்படி இருந்தால் குறைந்த பட்சம் என்னை இதில் தலையிடவேண்டாம் என சொல்லியிருப்பார்கள்'

ஈரோஸ் பாலகுமாரின் அலுவலகத்திற்கு ஓட்டோவில் கூட்டிச் சென்றேன்.

அவர்களது இடம் அதிக தூரமில்லை. வடபழனி என நினைக்கி றேன்.

நான் அவர்களது அலுவலகத்திற்குச் சென்றபோது பாலகுமார் மேல்மாடியில் நின்று என்னைப் பார்த்தார்.

'என்ன இந்தப் பக்கம்?' என மாடியில் இருந்தபடியே கேட்டபோது,

'காவலூர் ஜெகநாதனது மனைவி, கணவனைத்தேடி ஈ. பி. எல். ஆர் எஃப் அலுவலகத்திற்கு வந்தார். அங்கு பத்மநாபா உங்களை கேட்கும்படி அனுப்பினார்'

'எங்களுக்கத் தெரியாது'

'இப்படியே இருவரும் சொன்னால் என்ன செய்வது?'

'உண்மையில் எங்களுக்குத் தெரியாது' என பதிலளித்துவிட்டு உள்ளே சென்றார்.

அந்தப் பதில் எனக்கு ஈரோஸ் பாலகுமார் மீது சந்தேகத்தை வளர்த்தது. அத்துடன் பாலகுமாரின் மீது ஆத்திரத்தையும் உருவாக் கியது.

ஜெகநாதனது மனைவி அழுதபடி இருந்தபோது, எனக்கு வேறு வழி தெரியவில்லை அவரை மீண்டும் அவரது வீட்டில் விட்டு விட்டு நான் வீடு திரும்பினேன்.

எல்லா இயக்கங்களும் அங்கம் வகித்த தமிழர் மருத்துவ நிலையத்தின் காரியதரிசியாக நான் இருந்ததால் பலரோடு தொடர்பு இருந்தது. அதே நேரத்தில் இவர்களது ஆயுதப்போராட்டத்தில் நான் நம்பிக்கை கொண்டிருந்த காலம். ஜெகநாதனது விடயத்தை வேறு எப்படி மேலே எடுப்பது என புரியாததால் அதற்குப் பின்பு ஜெகநாதனது மனைவியைத் தொடர்பு கொள்ளவில்லை. பின்பு ஜெகநாதன் கொலை செய்யப்பட்டதாக அறிந்தேன். மிகவும் மனவருத்தமடைந்தேன்.

கொலைக்கான காரணங்களை பலர் பலவிதமாக கூறினார்கள். இலங்கை அரசாங்கத்தின் ஏஜண்ட். தனிப்பட்ட விவகாரம். அதைவிட பணப்பிரச்சினை என பல ஊகங்களுக்கு மத்தியில் அந்தக்கொலை மர்மமாக இருந்தது. இதே வேளையில் அவுஸ்திரேலியாவுக்கு நான் புறப்படுவதற்கு முன்பு ஈரோஸ் நான்கு கொலைகளையே அதுவும்

*மதுரையில் செய்தார்கள் என தமிழ் நாட்டு இரகசிய பொலிஸார் கூறியிருந்தார்கள்.*

*ரெலோ, விடுதலைப்புலிகள், புளட் என்பன ஏராளமான கொலை களை தமிழ்நாட்டு மண்ணில் செய்திருந்தனர்.*

*இந்திய, தமிழ்நாட்டு பொலிசார் இலங்கையர் இயக்கங்களால் கொலை செய்யப்படுவதற்கு எதிராக நடவடிக்கை எடுக்காத போதும், எங்கெங்கு எவ்வளவு பேர் கொலை செய்யப்பட்டார்கள் என்ற புள்ளி விபரங்களை சரியாக வைத்திருந்தனர். இலங்கைக்கும் இந்தியாவிற் கும் இடையில் கடல் பிரதேசத்தில் நடந்த கொலைகள் சில தப்பியிருக்கலாம்.*

*என் மனதில் காவலூர் ஜெகநாதன் விடயம் பலகாலமாக புதிராக இருந்தது. இதற்கு அப்பால் ஜெகநாதனது தம்பியான டான் தொலைக்காட்சி குகநாதன் 2009 இல் இருந்து எனக்கு நெருங்கிய நண்பராகியதும் அவருக்கு இதுவிடயத்தில் ஏதாவது துப்பு கிடைத்ததா என பலமுறை விசாரித்திருக்கின்றேன்.*

*இப்படி புதிராக இருந்த விடயத்தை, அக்காலத்தில் ரெலோவில் இருந்த ஒருவர் முகநூலில் பதிவுசெய்த குறிப்பு என்னைத் திடுக்கிட வைத்தது. அவரது கூற்றின்படி சின்மையா நகரில் வைத்து இலங்கை ஏஜென்ட் என்ற சந்தேகத்தில் காவலூர் ஜெகநாதன் ரெலோவால் கொலை செய்யப்பட்டார் எனச்சொல்லப்பட்டிருந்தது.*

*அக்காலத்தில் ரெலோவுக்கு பொறுப்பாக இருந்த சிறிசபாரட்ணம் இப்போது இல்லாதபோதிலும் அந்த இயக்கத்தின் முக்கியமானவர்கள் இன்னமும் இருக்கிறார்கள்.*

*தற்போது முள்ளிவாய்கால் விடயங்களைப் பேசும் இவர்கள் தமிழர் களில் முக்கியமானவர்களையும் அதேவேளையில் இயக்கத்துள் உட்கொலைகளையும் ஏன் செய்தார்கள் என்பதை பகிரங்கப்படுத்த வேண்டியுள்ளது.இக்கொலைகள் கால் நூற்றறாண்டுக்கு முன்னால் நடந்தவை என்றாலும் தமிழர்களை தமிழர்களே கொலை செய்த வரலாறு எமக்குண்டு.*

*போராட்ட இயக்கங்கள் என்று போதையில் இந்த இயக்கங்கள் அத்துமீறியதுதான் அந்த கறைபடிந்த வரலாறு. 90 ஆம் வருடம் வரையும் விடுதலைப்புலிகள் தவிர்ந்த மற்றைய இயக்கங்கள் சிறிதும்,*

பெரிதுமாக பல கொலைகளை செய்தன.

தற்போதைய அரசியலில் உள்ள தமிழ் இயக்கங்களின் தலைவர்கள் முள்ளிவாய்க்காலில் இராணுவத்தின் கொலைகளை கண்டிக்கிறார் கள். சிறையில் வைத்திருக்கும் தமிழ் கைதிகளைப்பற்றி பேசுகிறார்கள். அது பற்றி அறிக்கை விடுகிறார்கள். ஆனால் பழைய இயக்கங்களை மீண்டும் காவியபடியே வலம் வருகிறார்கள். இயங்கங்களின் செயல்களுக்கு விளக்கமளிப்பதுடன் கொலை செய்யப்பட்ட தமிழ் இளைஞர்கள் யுவதிகளின் தாய் தந்தை சகோதரங்களுக்கு என்ன நடந்தது என்ற விளக்கத்தையாவது வெளிப்படுத்தவேண்டிய கடப்பாடு உள்ளது.

காணமல் போன பொதுமக்களை தேடித்தருமாறு ஆணைக்குழு வின் முன்னால் உறவினர்கள் நிற்கிறார்கள். அதுபோன்று ஆயுதம் ஏந்திய தமிழ் விடுதலை இயக்கங்களினால் காணாமலாக்கப்பட்டவர் கள் பற்றி அந்த இயக்கங்களின் இன்றைய தலைவர்கள் என்ன சொல்வார்கள்?

நான் விடுதலைப்புலிகளை விட்டுவிடுகிறேன்.

விசர்நாய் வைரஸ் தொற்றிய நாய்போன்று போன்று தமக்கு உடன் பாடற்றவர்கள் என கருதியவர்களையெல்லாம் இன, மத, பாகு பாடில்லாமல் கொலை செய்தது. அதே வைரசின் தாக்கத்தால் அது பதினைந்து நாட்களில் இறந்துவிடும்.

தற்போதைய இலங்கை அரசியலில் உள்ள தமிழரசுக்கட்சி வழி வந்தவர்களைத்தவிர அவ்வாறு வராத தமிழ் விடுதலை இயக்கங்களின் தலைவர்கள் பொறுப்புக் கூறவேண்டியவர்கள். இந்தத் தமிழ் இயக் கங்கள் இலங்கையிலும் பலரை கொன்றிருக்கிறன. சில தலைவர் களிடத்தில் இரத்தத்தின் கறை படியாத போதிலும் அவர்கள் அணிந்துள்ள வேட்டிகள் சட்டைகளில் எத்தனையோ அப்பாவிகளின் இரத்தக்கறையுள்ளது.

இலங்கை அரசின் உளவாளி, சமூக விரோதிகள், துரோகிகள் முத லான குற்றச்சாட்டுக்களை சுமத்தியே பலர் இந்த இயக்கங்களினால் கொலை செய்யப்பட்டார்கள். இவ்வாறு இந்த இயக்கங்கள் முன் வைத்த குற்றச்சாட்டுகளையே பின்னாளில் விடுதலைப்புலிகள் இவர்கள் மீது வைத்தார்கள்.

இதில் இருந்து தெரிவது என்ன ?

ஒவ்வொருவரும் பலமாக இருக்கும் காலத்தில் மற்றவர்கள் மீது போடும் சட்டைகளைத்தான் தற்பொழுது விடுதலைப்புலி ஆதர வாளர்கள் அவர்கள் ஆதரித்த இயக்கத்தின் முக்கியமானவர்கள் மீது போடுகிறார்கள்

தமிழினியில் கூர்வாளின் நிழலைப் படித்தபோது ஒரு விடயம் தெளிவானது. மாத்தையாவை புலிகள் ஏன் கொலை செய்தனர் என்பது தமிழினிக்கு அப்பொழுது தெரியவில்லை. அவருக்கு மட்டுமல்ல முக்கிய அங்கத்தினரான கருணா என்ற முரளிதரனுக்கோ கே. பி. என்ற பத்மநாதனுக்கோ தெரியாது.

இதற்காக யாரையாவது பிடித்து தண்டனை கொடுக்கவேண்டும் என்பது எனது நோக்கமல்ல.

அந்தக்கொலைகளை யார் செய்தனர்?

ஏன் செய்தார்கள்? என்பதை எமது சமூகமும் கொல்லப்பட்டவர் களின் உறவினர்களும் அறிந்து கொள்வது அவசியம்.

குறைந்த பட்சமாக செய்த தவறுகளை ஒப்புக்கொள்ளவேண்டும். அத்துடன் பிராயச்சித்தமாக பழைய சட்டைகளான இயக்கங்களையும் விட்டு வெளியே வருவதன் மூலமே மக்களுக்கு நம்பிக்கை தர முடியும். இவர்களுக்கும் பாவ விமோசனம் கிடைக்கும்.

ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி தனது பெயரை மாற்றிய விடயம் வரவேற்கத்தக்கது. மற்றவர்களுக்கு இது முன்மாதிரியாக அமையவேண்டும்.

# அந்த மூன்று நாட்கள்

எழுதிய பேனையை மேசையில் வைத்துவிட்டு சுற்றியிருந்தவர்களைப் பார்த்தேன். அந்த அறையில் இருந்தவர்கள் ஈழ விடுதலைக்காக போரிட்ட இயக்கத்தின் பிரதிநிதிகள். எனக்குப் பக்கத்தில் இருந்தவர்கள் டாக்டர் சிவநாதன், டாக்டர் ஜெயகுலராஜா, டாக்டர் சாந்தி இராஜசுந்தரம்.

எனக்கு வயிற்றைக் கலக்கியது. அமைப்பின் காரியதரிசியாக இருந்து தமிழர் மருத்துவ நிலயத்தில் நடந்த கூட்டமொன்றில் விபரங்களை குறிப்பெடுத்த என்னை நிறுத்த வைத்தது.

வெளியே சென்னை வெயில் தெருச்சண்டியன் போல் ஆர்ப்பரித்தது. அவனது வார்த்தை போல் உள்ளே வந்த காற்று சூடாக இருந்து. சூளைமேடு நெடுஞ்சாலையில் போகும் வாகனங்களின் இரைச்சலும் புகையும் மேலே எழுந்து 144 இலக்க முதல் மாடியில் இருந்த எமது காது, மூக்குத் துவாரங்களை மோதி அடைந்தன.

1985 ஜூலை சென்னை மரினா கடற்கரையில் தொடர் உண்ணா விரம் நடத்த ஈழத்து இயக்கங்கள் தீர்மானித்தன. அதற்கு ஒருங்கிணைப்பாளராக தமிழ் மக்கள் விடுதலைக் கழக வாசுதேவா, என்னை முன்மொழிய விடுதலைப்புலிகளின் யோகியால் கைவிரல் மட்டும் உயர்த்தப்பட்டு அங்கீகரிக்கப்பட்டது.

ஏற்கனவே ஈபி ஆர் எல் எவ் தலைவர் பத்மநாபா இப்படி தொடர் உண்ணாவிரம் நடத்த வேண்டும் என என்னிடம் பிரஸ்தாபித்திருந்தார். அக்காலத்தில் விடுதலைப்புலிகளுடன் மற்றய இயக்கங்கள் சேர்ந்து இருந்த காலம். தங்களது ஒற்றுமையை வெளிக்காட்ட அவர்கள் செய்யும் அரசியல் முயற்சி என நினைத்து மறந்திருந்தேன்.

இதில் நான் முன் தள்ளுப்படுவேன் என எதிர்பார்க்கவில்லை. ஏற்கனவே விடுதலைப்புலிகள் ஆதரவாளர் டாக்டர் ஜெயகுலராஜா இருந்தார். அவர் எமது நிறுவனத்தின தலைவர் மடடுமல்ல வயதாலும் பெரியவர். அத்துடன் வெலிக்கடை பின்பு மட்டக்கிளப்பு சிறைகளில் இருந்தவர்.

அவரை விட்டு என்னை பிரேரித்ததை மற்றய இயக்கங்களும் அப்படியே ஏற்றுக் கொண்டனர்.

அக்காலத்தில் இயக்கங்கள் சேர்ந்திருந்தாலும் தங்களுக்குள் செல்லமாக ஒருவரை ஒருவர் சுட்டபடி இருந்தவர்கள். எல்லோரும் ஏகமனதாக ஒருவனை அங்கீகரிக்கும்போது என்னுள் பெருமைக்குப் பதிலாக பயம் ஏற்பட்டது. ஒருவிதத்தில் கிடாய் ஆட்டிற்கு மாலை போடுகிறார்களா என்ற எண்ணம் ஏற்பட்டது.

மனத்தைத் திறந்து நினைத்ததை வெளியே சொல்ல முடியாது. இயக்க ஒற்றுமைகள் பற்றி பலரிடம் நான் வலியுறுத்தியவன். வெலி கடையில் இறந்தவர்கள் பற்றிய விழிப்புணர்வை உண்ணாவிரதம் இருந்து ஏற்படுத்துவது நல்ல காரியம் என்பதாலும் ஏற்றுக்கொள்ள வேண்டியிருந்தது.

இதுவரையும் மருத்துவ விடயங்களில் ஈடுபடும்போது மனத்தில் எதுவித தயக்கமில்லை. இந்த விடயம் உண்ணாவிரதம் என்று சொன்னாலும் ஒரு அரசியல் பிரச்சாரம். அதுவும் தமிழக மக்களிடையே ஈழத்தின் தேவையை எடுத்து செல்லும் வழி என்பது புரிந்தால் தயக்கம் ஏற்பட்டது.

வேறு வழியில்லை. ஏற்றுக் கொண்டேன்.

அதற்கான வழிமுறைகள் பேசப்பட்டன. இந்தியக் கட்சிகளின் அரசியல் தலைவர்களைக் உண்ணாவிரதத்தில் கலந்து கொள்ளப் பண்ணுவது அதேபோல் தமிழ் இயக்கத் தலைவர்கள் பிரமுகர்களை அழைப்பது என முடிவு செய்யப்பட்டது. வேலைகள் பிரித்தளிக்கப்

பட்டது. என்னைப் பொறுத்தவரை அதிக வேலை இருக்கவில்லை. வருபவர்களை வரவேற்பது அவர்களுடன் பேசுவதும் கொடுக்கப் பட்டது.

எந்த இயக்கமும் நேரடியாக உண்ணாவிரதத்திற்கு சம்பந்தப்பட வில்லை.

சிலகாலம் முன்பாக யாழ்பாணத்தில் உண்ணாவிரதத்தை குழப்பிய விடுதலைப்புலிகள், உண்ணாவிரமிருந்தவர்களை இந்தியாவுக்கு தூக்கி வந்திருந்தார்கள். மற்றவர்களுக்கும் உண்ணாவிரதம் தங்களது வழியல்ல எனக்காட்ட வேண்டும். இலை குழை எங்கள் உணவு அல்ல. இது சாதாரண ஈழ மக்களின். உண்ணாவிரதம். எல்லாருக்கும் பொது வானது. இயக்க அரசியல் இல்லாதது எனக் காட்டவேண்டியிருந்தது.

மரினா கடற்கரையில் தெருவிற்கும் மணற்பிரதேசத்திற்கும் இடை யில் புல் முளைத்த பிரதேசத்தில் பந்தல் போட்டு பானர் கட்டி மூன்று நாட்கள் நடந்த இந்த உண்ணாவிரத நிகழ்சிக்கு நான் நேரடியாக பல தலைவர்களை சென்று அழைத்தேன். என் நினைவில் இருப்பவர்கள் அக்கால எதிர்க்கட்சித் தலைவர் அமிர்தலிங்கம் மற்றும் வக்கீலாக இருந்த வானமாமலை போன்ற கம்யுனிஸ்ட் கட்சித் தலைவர்.

அமிர்தலிங்கம் தம்பதியினரை மிகவும் நினைவில் இருப்பதன் காரணம் வீடு சென்ற அழைத்தபோது அவர்கள் வருவோம் என்று, சொன்ன நேரத்திற்கு பத்து நிமிடங்கள் முன்பாக வந்துவிட்டார்கள் மற்றயவர்கள் எல்லோரும் சொல்லிய நேரத்திற்கு பிந்தியே வந்தார்கள்.

கத்தரி வெயில் எரிக்கும் பகல் முழுவதும் உண்ணாவிரதம் நடக்கும். குறைந்த பட்சம் நூறு பேர்களாவது பந்தலில் எப்போதும் இருப்பார்கள். இயக்கத்தினர்கள் தமிழநாட்டு பிரமுகர்கள் பலர் வந்து அமர்ந்து பேசி செல்லுவார்கள்.

வாழ்கையில் விரதமே இருக்காத நான் உண்ணாவிரமிருந்த நாட்கள். பெரும்பாலானவர்கள் வந்து சிலமணி நேரமிருந்து போவதால் ஒரு அடையாள உண்ணாவிரதம் எனத்தான் சொல்லவேண்டும். நாங் கள் எதிர்பார்த்தபடி தமிழ்நாட்டு பத்திரிகைகள் எல்லாம் படத்துடன் பிரசுரித்தன.

இந்த நிகழ்சியை இலங்கை ஊடகங்கள் பதிவு செய்தார்களா எனத் தெரியாத போதும் ஈழவிடுதலை இயக்கங்கள் ஒன்றாக கூட்டங்களில்

கலந்து கொண்டார்கள். இவர்கள் மூன்று நாட்கள் தன்னார்வமாக இருந்ததனால் உண்ணாவிரதம் இருந்த நாட்கள் முக்கியமானது.

30 வருடங்கள் பின்பாக இந்த மூன்று நாட்களில் எனது மனத்தில் நிற்கும் இரண்டு விடயங்கள் முக்கியமானதாக கருதுகிறேன்.

உண்ணாவிரதத்தின் முதல்நாள் என்னை நோக்கி மஞ்சள் அரைக்கை சட்டையும் அழகான மீசையும் கொண்ட சிவந்த நிறமான ஒருவர் வந்து கை கொடுத்தார். நானும் கை கொடுத்தவிட்டு பக்கத்தில் நின்ற வாசுதேவாவைப் பார்தேன்.

'இவர்தான் உமா மகேஸ்வரன்' என்றார்.

நான் அது வரையிலும் உமாவை நேரில் பார்த்ததில்லை இலங்கையில் இருந்தபோது படங்களில் பார்த்திருக்கிறேன்.

அவருடன் கை குலுக்கியது எனக்குள் சந்தோசத்தை ஏற்படுத்தவில்லை.

அக்காலத்தில் தமிழர் மக்கள் விடுதலைக் கழகத்தில் நடந்த கொலைகளை கேள்விப்பட்டிருநதேன் அதைவிட எனது மனைவியின் உறவினர் மகன் உமாவின மெய்காப்பாளர்களில் ஒருவராக இருந்தார். அவரது பெற்றோர்கள் இயக்கத்தின் உட்கொலைகளினால் எப்போது மகனை யார் மூலம் இயக்கத்தில் இருந்து கழட்டி கனடா அனுப்பலாம் என்று பேசிக்கொண்டிருந்ததும், அதற்கு அவர்கள் பணம் தருவதற்கு தயாராக இருந்ததும் எனக்குத் தெரியும். இப்படியான விடயங்களால், காணாமலே உமாவின் மீது ஒரு வெறுப்பு ஏற்பட்டது.

உமா பார்பதற்கு அழகான மனிதர் மடடுமல்ல அவரது தோற்றம் தன்னம்பிக்கையை காட்டும் தன்மையுள்ளது. தலைமைக்குத் தேவையான கவர்ச்சி உள்ள மனிதர். இலங்கைத் தமிழ் அரசியல்வாதிகளில் அமிர்தலிஙகம் அவர்களுக்கு இருந்த அதே கவர்ச்சி உமாவிடம் இருந்தது. தோற்றத்தில் அப்படியானவர்கள் ஈழத்தமிழ் அரசியல் வாதிகளில்இன்னமும் நான் காணவில்லை ஆனால் அவர்கள் இருவரும் அதை சரியாக பயன்படுத்தவில்லை என்பது உண்மை.

உமா மகேஸ்வரன் மீது ஏராளமானவர்கள் நம்பிக்கை வைத்திருந்தார்கள். ஒரு காலத்தில் 15000 இளைஞர்கள் அவரை நம்பினார்கள். அதில் 6000 மேல் ஆயுதப் பயிற்ச்சி பெற்றவர்கள். அவரிடம் சிறந்த

தளபதிகளாகவும் இரண்டாம் கட்டத்தலைவர்களாக இருந்தவர்கள் பலரை தனிப்பட்டரீதியில் அறிந்தவன். தமிழ்நாட்டில் முதல்வர் எம் ஜி ஆர் கூட நம்பிக்கை வைத்திருந்தார். தன்னிடம் இருந்த சிறந்த விதை நெல்லை சோறாக்கிய மனிதர் என்பது எனது கருத்து. சமீபத்தில் அவரது இயக்கத்தில் முக்கியமான பொறுப்பில் இருந்த ஒருவரை சந்தித்தபோது அவர் சொல்லிய விடயம் ஆச்சரியம் அளிக்கவில்லை.

அவர் சொன்னார் 'தமிழ்மக்கள் விடுதலைக்கழகத்தின் மத்திய கூட்டம் நடக்கும்போது எவரும் குறிப்பு எடுப்பதில்லை காரணம் குறிப்பு லீக்காகிவிடும் என்பதால். ஆனால் உமா எழுதும்போது ஒரு பக்கத்தில் மற்றவர்கள் கருத்தை செவி மடுத்து எழுதுவார். ஒரு நாள் மற்றய அங்கத்தவர் சொன்னார் இன்றைக்குப் பார் இந்த குறிப்புக் கடுதாசிக்கு என்ன நடக்கிறது என்று.நான் தொடர்ந்து உமாவைப் பார்த்தபோது அந்த கடுதாசி ஆரம்பத்தில் மடிக்கப்பட்டது பின்பு வெளியே செல்லும் போது மிகவும் கசக்கப்பட்டு, மெதுவாக நடைபாதையில் எறியப்பட்டது'

இந்த விடயத்தை மனக்கண்ணில் கொண்டுவர வேண்டுமா?

கற்பனை தேவையில்லை.

சமிபத்தில் இராஜவரோதயம் சம்பந்தன் பத்திரிகையை பார்த்தபடி சிறையில் வாடும் கைதிகளை பற்றி பேசியது முகநூலில் உள்ளது.

நாம் நம்பிய தமிழ்த் தலைவர்கள் பெயர் மாறினாலும் ஒரே மாதிரியான நிழல்கள் போல் தொடர்வதை காட்டவே இந்த சம்பவத் தைக்குறிப்பிட்டேன்.

மனிதர்களின் நிழல்களில் உருவ வித்தியாசம் தெரிவதில்லைத் தானே?

உண்ணாவிரதத்தின் போது முதல் இரண்டு நாளிலும் விடுதலைப் புலி இயக்கத்தினரில் முக்கியமானவர்கள் வரவில்லை என்பது ஒரு குறையாகத் தெரிந்தது. அவர்களும் ஏற்றுக்கொண்டே இந்த உண்ணவிரதம் அரங்கேறியது.

தமிழகத்தில் இருந்த காலத்தில் எப்பொழுதும் சிலர் என்னுடன் இருப்பார்கள் அவர்கள் இயக்கத்தவர்களாகவோ இல்லை மருத்துவ நிலயத்தில் என்னுடன் வேலை செய்பவர்களாகவே இருக்கும்.

மூன்றாம் நாள் மாலை ஏதோ வேலை செய்து கொண்டிருந்த என்னிடம் சில மட்டக்கிளப்பு நண்பர்கள் 'அண்ணே காசியண்ணை வந்திருக்கிறார்'.

'சரி அவரை கூட்டிக்கொண்டு வந்து பந்தலில் இருந்துங்கோ. நான் வந்து பேசுகிறேன்' என்று சொல்லி விட்டு, மீண்டும் அவர்களிடம் சொன்னேன் விடுதலைப்புலிகளும் சேர்ந்து கூட்டாக இருக்கிறபோது அந்த வவுனியாவில் ஏன் ஈபி ஆர் எல் எவ் தோழர் ஒருவரை சுட்டார்கள் எனக்கேள். அவர்களும் போராடத்தானே வந்தார்கள்?'

அக்காலத்தில் வவுனியாவில் பலஸ்தீன விடுதலை இயக்கத்தில் இராணுவப் பயிற்சி பெற்ற ரீகன் என்ற தோழர் ஒருவர் எதுவித காரணமும் இன்றி விடுதலைப்புலிகளால் சுடப்பட்டிருந்தார்.

மாலை நேரமானதால் வங்காளகுடாவின் அலை மோதுவதற்கு போட்டியாக கடற்கரையில் மக்கள் வந்து கொண்டிருந்தார்கள். எங்களையும் ஆவலுடன் பார்த்தார்கள். அவர்கள் தலைவர்கள் செய்து கொண்டிருந்த விடயங்களை ஈழத்தவர்கள் ஏன் செய்கிறார்கள் என்ற கேள்வி அவர்கள் மனத்தில் எழுந்திருக்கும்.

எனது பொறுமையும் கடைசி நாளானதால் குறைந்து விட்டது.

வேலைகள் பல முடிக்கவேண்டும் என்பதால் பரபரப்படைந்தேன்.

வந்தவர்களுக்கு நன்றி கூறவேண்டும். உண்ணாவிரதத்தை முடிக்கும் நேரம் வந்து விட்டது பந்தலை கலைக்கவேண்டுமென்பதாலும் என பல விடயங்கள் மனத்தில் இருந்ததால் நம்நாட்டு புரட்சிக் கவிஞரை மறந்துவிட்டேன்.

எல்லா விடயங்கள் முடித்தபின்பு அந்த மட்டக்கிளப்பு நண்பர்களிடம் கேட்டேன் 'என்ன நடந்தது கவிஞர் காசியானந்தன் வரவில்லையா?'

'அண்ணே நீங்க என்னை வவுனியாவில் ஈபி ஆர் எல் எவ் தோழரை சுட்டது என் எனக் கேட்க சொன்னதால் நாங்கள் கேட்டோம் அதற்கு அவர் தம்பியிடம் கேட்டு சொல்கிறேன்' என வந்த ஓட்டோவில் அடையாறு திரும்பிவிட்டார்' என சிரித்தார்கள்.

பந்தலுக்கு வராமல் சென்ற காசியானந்தனை 2002ல் எஸ் போ நடத்திய சென்னை இலக்கிய மகாநாட்டில் எனது பக்கத்து சீட்டில் இருந்தபோது இன்னும் தம்பியிடம் வவுனியாவில் ஈபி ஆர் எல் எவ் தோழரை ஏன்

*சுட்டது என்று கேட்கவில்லையா எனக் கேட்க நினைத்தேன்.*

*இரண்டு விடயங்கள் என்னைத் தடுத்தன.*

*பக்கத்தில் இருந்த என் மனைவி மற்றது, அந்த கூட்டத்தில் இருந்துகாசியானந்தன் தம்பிடம் கேட்க என எழுந்துபோனால் எனது வண்ணாத்திக்குளத்தை பதிப்பித்த எஸ்போவிற்கு மனம் குழம்பி விடும் என்பதால் அவர் பக்கமே திருப்பாமல் மூன்று மணித்தியாலம் இருந்தேன்.*

*நான் நினைக்கிறேன் மீண்டும் அந்த கேள்வியைக் கேட்டால் ஆனால் 'அதற்குள் தம்பி 2009 மே18 ல் போய்விட்டது' எனப் பதில் வரலாம்.*

# தமிழர் புனர்வாழ்வுக்கழகம் – தோற்றம்

■

சென்னையில் தமிழர் மருத்துவ நிறுவனம் தொடங்கியபோது வெலிக்கடை சிறையில் இருந்து உயிர் தப்பி வந்த டாக்டர் ஜெயகுலராஜா தலைவராக இருந்தார். நான் செயலாளராக இருந்தேன். போராளி இயக்கங்கள் ஐந்து எம்மோடு இணைந்து இருந்தது. ஒரு வருடத்திற்கு இந்தக்கூட்டு முயற்சி எதுவிதத் தடையற்றும் இருந்தது. இக்காலத்திலே புளட்டைத் தவிர்ந்த மற்றைய இயக்கங்கள் இணைந்திருந்தன. இயக்கத்தினருக்கும், அகதிகளுக்கும் எமது மருத்துவசேவை கிடைத்தது. அத்துடன் இந்திய வைத்தியர்கள் மற்றும் அரசியல் பிரமுகர்களிடையே வேலை செய்ய இந்தக்கூட்டு முயற்சி இலகுவாக இருந்தது.

எமது நிறுவனம் வெளிநாட்டில் தமிழர்கள், மற்றும் தொண்டு நிறுவனங்களிடமிருந்து இருந்து பெற்றபணத்தால் வளர்ந்து வந்தது. ஒரு வருடத்தின் பின்பு 86 ஆண்டு ஆரம்பக்காலத்தில் எமது முதலாவது வருடாந்தப்பொதுக்கூட்டம் நடக்கவிருந்தது.

144 சூளைமேட்டுத்தெருவில் மேல்மாடியில் காலை பத்து மணியளவில் கூட்டம் ஒழுங்குபடுத்தப்பட்டிருந்தது. செயலாளராக நான் எல்லா விடயங்களையும் தயார் செய்துவிட்டு கூட்டத்திற்கு, அரை மணிக்கு முன்பாக மாம்பலத்தில் வசிக்கும் தலைவரை ஓட்டோவில் சென்று அழைத்துவரும்படி எங்களுக்கு உதவியாக இருந்து கருணாநிதியை

அனுப்பினேன்.

தலைவருக்கு வாகனத்தை அனுப்புவது அதுவே முதல் தடவை. வழமையாக நான் அப்படிச் செய்யமாட்டேன். ஆனால் அன்று மனத்தில் ஏதோ ஒரு பட்சி தலைவர் வருமாட்டார் எனச் சொன்னது. பத்து மணிக்கு மேலாகிவிட்டது. கூட்டம் தொடங்குவதற்கான நேரம் கடந்துவிட்டது. உபதலைவராக இருந்த டாக்டர் சாந்தி இராஜசுந்தரம் வந்து விட்டார். விடுதலைப்புலிகளைத் தவிர மற்றைய இயக்கத்தின் பிரதிநிதிகளும் கூட்டத்திற்கு வந்திருந்தார்கள். தலைவருக்காகக் காத்திருந்தோம்.

சூழைமேடு தெருவில் மேல்மாடியில் உள்ளது எங்கள் நிறுவனம் தெருவில் கார்களையும் மற்றைய வாகனங்களினதும் இரைச்சலை மீறி படிகளில் ஏறிவந்த கருணாநிதியின் செருப்பின் காலடி சத்தம் தெளிவாக கேட்டது. அடுத்த செருப்புச் சத்தத்திற்காக எனது காது கூர்மையாகியது. கருணாநிதியைத்தொடர்ந்து தலைவர் வருவார் என விழித்திருந்தபோது கருணாநிதி மட்டும் வந்து எங்களுக்கு ஏமாற்றமாக இருந்தது.

கருணாநிதி தலையை நிமிர்த்தி எம்மைப் பார்த்தபடி ‘டாக்டர் செங்கல்பட்டிலுள்ள செய்யாறு அகதிகள் முகாமிற்குப் போகவேண்டு மாம். தனக்கு வரநேரமில்லை’ என்றார். ”

எல்லோருக்கும் ஏற்பட்ட ஆச்சரியத்தை முகங்கள் காட்டிக்கொடுத் தது. ஆனால் வாய் திறக்கவில்லை. ஒரு நிறுவனத்தின் தலைவராக இருந்தவர் வருடாந்த பொதுக்கூட்டத்திற்கு வரவில்லை. அதைவிட வேறு ஒன்றிற்குப் போகவேண்டும் என்பது மிகவும் அசாதாரணமான விடயம். மற்றவர்களுக்கு ஆச்சரியம் ஏற்பட்டபோதும் எனக்கும் நிதிப்பொறுப்பாளரான டாக்டர் சிவநாதனுக்கும் அதிகம் வியப்பளிக்க வில்லை. ஆனால் அலட்சியமான தலைவரின் பதில் அவரின்மேல் வருத்தத்தை உருவாக்கியது.

அக்காலத்தில் அடையாறுக்கு அருகில் உள்ள செங்கல்பட்டு மாவட்ட புயல் பாதுகாப்பு மண்டபங்களில் இருந்த இரண்டு அகதிகள் முகாங்களுக்கு திருமதி அடல் பாலசிங்கம் போய் மருந்துகள் வினியோகிப்பதும், அவரோடு டாக்டர் ஜெயகுலராஜா செல்லுவதும், எனக்கும் டாக்டர் சிவநாதனுக்கும் தெரிந்த விடயம். அவர் அதைத் தனிப்பட்ட ரீதியாகச் செய்கிறார் என நினைத்திருந்தோம். ஆனால்

தான் தலைவராக இருந்த நிறுவனத்தை இப்படி அந்தரத்தில் கை கழுவுவார் என நாம் கனவிலும் நினைக்கவில்லை. ஆனால் இந்த உண்மையை அன்று வந்திருந்த கூட்டத்தவரிடம் நாங்கள் பகிர வில்லை. உபதலைவரை வைத்து வருடாந்தக்கூட்டத்தை நடத்தி னோம். அதன்பின் எமது நிறுவனத்தில் இருந்து விலகுவதாக டாக்டர் ஜெயகுலராஜா செய்தி அனுப்பிய பின்பு டாக்டர் சாந்தி இராஜசுந்தரம் எமது தலைவராக இயங்கினார்.

டாக்டர் ஜெயகுலராஜா, மிகவும் நேர்மையும் கனிவான உள்ளமும் கொண்டவர் . எந்த நேரத்திலும் குரலை உயர்த்திக் கூட பேசமாட்டார். அவரோடு நான் பழகிய காலத்தை இன்னமும் சந்தோசமான காலமாக நினைக்கிறேன் அப்படிப்பட்டவரது செய்கைக்கு எமக்கு விளக்கம் தெரியவில்லை. பிற்காலத்தில் அவரே தமிழ் புனர்வாழ்வுக் கழகத்தின் தலைவராகினார். ஒருநாள் அவரை சந்தித்தபோது 'ஏன் இப்படிச் செய்தீர்கள்? எங்களுக்கு சொல்லி விட்டு இராஜினாமா செய்திருக்கலாமே?' என்றபோது 'தம்பிக்கு நான் கடமைப்பட்டவன்' என்றார் சுருக்கமாக. அவரது நிலை எமக்குத் தெரியாதபோதும் இதைத் தவறாக நாங்கள் கருதவில்லை.

இந்தத் தமிழர் மருத்துவ நிறுவனத்தை ஆரம்பிப்பதற்கு 12000 இந்திய ரூபாயை அமரிக்காவில் வதியும் எனது மைத்துனர் டாக்டர் ஜெயகுலராஜாவிடம் கொடுத்தார் என்பதையும் இங்கு நினைவு கொள்ளவேண்டும். அவர் அந்தப் பணத்தை எம்மிடம் தந்து கோடம் பாக்கம் வங்கிக் கிளையில் கணக்கை ஆரம்பிக்கச்சொன்னார்.எனவே இந்த நிறுவனத்தின் முக்கிய பங்காளி அவரே.

இந்த நிகழ்வின் பின்பாக உருவாகியதே தமிழர் புனர்வாழ்வுக் கழகம். அதனது தலைவராக டாக்டர் ஜெயகுலராஜா செயல்ப்பட்டார் அவர்களிடம் வெள்ளை வான் ஒன்றிருந்தது. அந்த வானில் சென்றே விடுதலைப்புலிகள் தமிழர் நிவாரண நிதிக்காக தமிழக முதல்வர் தமிழ்நாட்டு மக்களிடம் சேகரித்த நான்குகோடியில், மூன்று கோடி ரூபாயைப் பெற்றுக்கொண்டதாக தினமணி நாளிதழில் படத்துடன் செய்தி வந்தது. இந்த நிறுவனமே பிற்காலத்தில் வெளிநாடுகளில் பெரும்பணத்தை ஆயுதத்திற்குச் சேகரிக்க உதவியது. நான் மெல்பேன் வந்தபின்பு டாக்டர் ஜோய்ஸ் மகேஸ்வரன் இந்த நிறுவனத்தின் சர்வதேசத்தலைவராகவும் பின்பு இலங்கை அரசாங்கத்துடன் நடந்த பேச்சுவார்த்தைக்குழுவில் ஒருவராகவும் இருந்தார் என்பது

குறிப்பிடத்தக்கது. ஆரம்பத்தில் விடுதலைப்புலிகள் உட்பட ஐந்து இயக்கங்களை உள்ளடக்கியிருந்ததமிழர் மருத்துவ நிறுவனத்தை வெட்டி ஓடியதுடன், அதன் தலைவராக இருந்தவரை வைத்தே தமிழ் புனர்வாழ்வுக்கழகத்தை விடுதலைப்புலிகள் உருவாக்கினார்கள். இந்த நிகழ்வின் பின்பே மற்ற இயக்கங்களுடன் மோதல் உருவாகியது. மற்றைய இயக்கங்கள் உட்கட்சிப்போராட்டத்தில் ஈடுபட்டிருந்தபோது அக்கினிக்குஞ்சு ஒன்று எமது நிறுவனத்தில் எப்படி உருவாகியது என்பதைப் பார்க்கத்தவறினர் என்பதற்காக இதை விவரித்தேன். அரசியல், சமுத்திரத்தில் பாய்மரக்கப்பல் ஓடுவது போன்றது. சிறிய அசைவுகளை கவனிக்கத் தயங்கியவர்கள் உயிர் பிழைப்பதில்லை.

அந்த வருடாந்த கூட்டத்தின் பின்பு இருந்து விடுதலைப்புலிகளின் பிரிதிநிதிகள் எமது மாதாந்தக்கூட்டங்களுக்கு வாராதபோதிலும் எமது நிறுவனம் பல அகதி முகாங்களுக்கு தொடந்து சேவை செய்தது. ஆனால் தமிழர் புனர்வாழ்வுக்கழகம் எங்களைப் போட்டியாளர்களா கப் பார்த்தார்கள்.

ஆரம்பக்காலத்தில் இந்திய கரையில் அகதிகளாக வந்தவர்கள் பெரும்பாலானவர்கள் மன்னார்கரையோரப்பகுதியை சேர்ந்தவர் களும், சிறிதளவு தொகையில் இந்திய தொடர்புடன் மன்னார் பகுதியின் விவசாயப்பிராந்தியங்களில் வசித்தவர்கள். இந்த இரு பகுதியினரும், இயக்கங்களது தொடர்புகள்கொண்டவர்கள் என்பதாக இராணுவம், கடற்படையின் நெருக்கடிக்கு உட்படுத்தியதால் வெளி யேறினவர்கள். 85ன் கடைசிக்காலத்தில் இலங்கை இராணுவத் தாக்குதலால் திருகோணமலைப் பிரதேசத்தினர் பலர் வந்து சேர்ந் தார்கள். அவர்களில் பலர் வல்வெட்டித்துறையில் கொண்டு, கொடுத்த வர்கள். இவர்கள் வந்து இறங்கியபோது நாகபட்டினம் பகுதி புயல் பாதுகாப்புமண்டபங்களில் தங்கினார்கள்.

தமிழர் மருத்துவ நிறுவனம் அவர்களில் பலருக்கு முதலுதவிகளைப் பயிற்சியை அளித்து இரு திருகோணமலையை சேர்ந்த இளைஞர் களை அங்கு நிரந்தரமாக பொறுப்பாக நியமித்தோம்.

அவர்களில் ஒருவரான ரவிச்சந்திரன் ஒரு நாள் அதிகாலையில் வந்து என்னிடம் “எங்களைப் புலிகள் இனி இந்தப்பக்கமே வரவேண் டாம். தமிழர் புனர்வாழ்வுக்கழகம் இங்கு சேவை செய்யும் எனத் துரத்திவிட்டார்கள். ஆனால் மக்கள் எங்களைத்தான் விரும்புகிறார் கள். அதிலும் யாரோ பிரபாகரனது மாமா முறையானவர் எங்கள்

சார்பாகப் பேசிய பெண்களுக்கு தூசணத்தால் பேசி நாங்கள் தான் இந்த முகங்களுக்கு இனிப்பொறுப்பு எனச் சொல்லி விட்டார். நாங்கள் பயத்தில் ஓடிவந்து விட்டோம்' என்றார்.

இது என்னடா மருத்துவசேவை செய்ய வந்து புலியோடு பிரச் சனைப்படவேண்டியுள்ளது என் உள்ளூர பயம் ஏற்பட்டது. வெளிக் காட்டமுடியாது. நான் நிறுவனத்தின் செயலாளர். ஏதாவது செய்ய வேண்டும். எனது மனப்பிராந்தியைக் காட்டாமல் ரவியிடம்

"யார் இப்பொழுது நாகபட்டினத்தில் இருப்பது?"

'டாகடர் ஜெயகுலராஜா வந்து நாகபட்டணத்தில் தங்கியிருக்கிறார்'

'சரி, அவரோடு பேசுவோம்.' என அவர்கள் மூலமாக வெள்ளிக் கிழமை வந்து பேசிப்பிரச்சனையை தீர்க்க விரும்புவதாகத் தகவல் அனுப்பினேன்.

சென்னையில் இருந்து நானும் சிவநாதனும் ரவியுமாக வியாழக் கிழமை காலை நான்கு மணிக்கு நாகபட்டினம் சென்று ஐந்து மணிக்கு டாக்டர் ஜெயகுலராஜா தங்கியிருந்த ஹோட்டல் கதவைத்தட்டினோம்.

ஒரு நாள் முந்திச் சென்றதன் காரணம் வெள்ளிக்கிழமை நாங்கள் போவதைத் தெரிந்து எங்களைக்கடலுக்குள் படகில் கொண்டு சென்று கல்லைகட்டி கடலில் தள்ளிவிட்டால் யாருக்கும் தெரியாது. ஏற்கனவே ரெலோ, புளட், புலிகள் எல்லாம் தங்களவர்களை வள்ளத்தில் நடுக்கடலில் கொண்டு போய் நடுக்கடலில் தள்ளிருக்கிறார்கள். அக்காலத்தில் இந்தியர்களுக்கு (தமிழ்நாட்டுப் புலன் ஆய்வுப்பிரிவு) கரையில் நடந்த குற்றங்களை புள்ளிவிவரத்திற்காக மட்டும் கணக்கு வைப்பார்கள். ஆனால் கடலில் நடந்த குற்றங்களுக்கு அவர்கள் கணக்கு வைப்பதில்லை. இவையெல்லாம் டாக்டர் சிவநாதனும் நானும் அறிந்து வைத்திருந்தோம்.

பயந்து பயந்துதான் நானும் சிவநாதனும் திருகோணமலை ரவியும் பஸ்சில் பிரயாணம் செய்தோம். அன்று இரவு பஸ்சில் போட்ட திரைப்படத்தின் பெயர் தெரியாது என்றால் அதற்கு மேல் எமது மனநிலையை விளக்கவேண்டியது இல்லை. இப்படியான விடயங் களை வீட்டில் சொல்லவுமில்லை.

நாகபட்டினம் பஸ்நிலயத்தில் இறங்கியபோது விடியவில்லை. ஓர் இரு கடைகள் மட்டுமே திறந்திருந்தது. அங்கு ரீ குடித்துவிட்டு ஓட்டோ வில் சென்று தட்டியபோது டாகடர் ஜெயகுலராஜா கதவைத் திறந்த தும் எங்களைப் பார்த்து திடுக்கிட்டார்.

“என்னடாப்பா இந்த வேளையில்?”

உங்கட தம்பியின்ர ஆட்களுக்கு பயந்துதான் ஒரு நாள் முதல் வந்தோம் என அவரிடம் சொல்லமுடியாது.

“வேறு வேலையுமிருந்தது. அதையும் சேர்த்து ஒன்றாக முடிப்பதற்கு வந்தோம். அதிகாலையில் வந்தால்தான் நீங்கள் இருப்பீர்கள் என்ப தால் இப்போது வந்தோம்’.

“உள்ளே வாங்கோ”

“டாக்டர் உங்களுக்குத்தெரியும்தானே இந்த முகாங்களில் நாங்கள் உங்கள் காலத்தில் இருந்தே நாங்கள் வேலை செய்வது”

“இவர்களுக்கு பேசத்தெரியது”

‘பரவாயில்லை இங்கு பத்து அகதிமுகாங்களில் ஐந்தை நாங்கள் பார்க்கிறோம்’ நீங்கள் ஐந்தைப் பாருங்கள். சமூகசேவை செய்ய வந்து ஏன் பிரச்சனை? இல்லை எல்லாவற்றையும் நீங்கள் செய்வதன்றால் நாங்கள் அடுத்த மாவட்டதிற்கு போகிறோம்’ என்றேன்.

‘பரவாயில்லை நீங்கள் ஐந்தைச் செய்யுங்கள். நான் இவர்களுடன் பேசுகிறேன்’ என்றார்.

டாகடர் ஜெயகுலராஜாஅறையை விட்டு வெளியே வரும்போது ரவி “இதுதான் எங்களை துரத்தியவர் பிரபாகரனது மாமாவாம் ”

நான் திரும்பியபோது அவர் முகத்தை திருப்பிக்கொண்டார். தொந்திக்குமேல் வெள்ளை சேட்டும் முழங்காலுக்கு மேல் உயர்த்திக் கட்டிய நீலக் கோட்டுச் சரமும் கறுத்த மயிர்கள் கொண்ட அவரது கால்களும் இன்னும் நினைவுள்ளது.

இதன் பின்பு அக்காலத்தில் தமிழர் புனர்வாழ்வுக்கழகத்தில் செயலாளராக இருந்த நாதன் என்பவர் என்னிடம் “யாழ்ப்பாணத்திற்கு வா பார்த்துக்கொள்வோம் ” என்றார்.

சிரித்தபடியே அவரை விலத்திச் சென்றேன்.

ஆனாலும் அவரது வார்தைகள் வெறுமனையானது அல்ல. பிற்காலத்தில் ஓமந்தை செக் பொயின்டில் எனது புகைப்படத்தை கொண்ட அல்பம ஒன்று வைத்திருந்ததாக அறிந்தேன். மெல்மேனில் உள்ளவர்கள் எப்படியான படத்தைக் கொடுத்தார்களோ?

அதன் பின்பு ஒரு வருடங்கள் சென்னை வீதிகளில் வெள்ளை வான் எதிரில் வந்தால் பக்கத்தில் ஏதாவது சந்து உள்ளதா எனப் பார்ப்பேன். போரை மட்டும் விடுதலைப்புலிகள் ஏகபோக குத்தகைக்கு எடுக்கவில்லை. தமிழ் மக்களுக்குச் செய்த மருத்துவச்சேவைகளுக் கும் அவர்களே ஏகபோக கொந்தராத்தை எடுக்க நினைத்தார்கள். இது தமிழ்நாட்டில் மட்டுமல்ல பிற்காலங்களில் தமிழர்கள் இருந்த எல்லா இடங்களுக்கும் விஸ்தரித்தார்கள்.

வருடங்களாகிய போதிலும், கொந்தராத்து எடுத்தவர்கள் மறைந் தாலும், கொந்தராத்து எடுத்த முறைகளின் நினைவுகள் மறைய வில்லை. இவையெல்லாம் கடந்தகாலம் மறந்துவிடவேண்டும் என்றா லும் மறைந்துவிடுமா?

# டொக்டர் பிரமோத் கரன் சேத்தி நினைவுகள்

■

தமிழர் மருத்துவ நிதியத்திற்கு சிறிது சிறிதாக பணம் சேர்ந்தபோது எமது நடவடிக்கைகளை அகலப்படுத்த முயற்சித்தோம். அப்போது எனது மனைவி சியாமளா மட்டும் மருத்துவ நடவடிக்கைகளை கவனித்தவண்ணமிருந்தார். அதிகமாக மருத்துவ வசதிகளைப் பயன்படுத்தியவர்கள் எமக்கு அருகில் இருந்த ஈழமக்கள் விடுதலை முன்னணியினர். அதைவிட அந்தப் பகுதியில் இலங்கையில் இருந்து இடம் பெயர்ந்து வந்திருந்த இலங்கைத் தமிழர்களும் சிகிச்சைக்காக வந்தார்கள். அயலில் இருந்த சென்னை வாழ் தமிழர்களும் வரும்போது எமக்கு வேலைப்பளு கூடியது.

மருத்துவ அறிவை தமிழ்நாட்டு அகதிமுகாம்களில் உள்ளவர்களுக்கு ஊட்டும் விடயத்தில் முகாம்களில் வாழும் கல்வி கற்றவர்களில் முக்கியமாக இளம்பெண்களை சென்னைக்கு அழைத்து வந்து ஒரு வாரகாலத்துள் அடிப்படையான உடல்நல விடயங்களை கற்பித்தும் மற்றும் முதல் உதவி போன்றவற்றை பயிற்றுவிப்பதற்கும் திட்டமிட்டு செயற்பட்டோம்.

அகதிமுகாமில் மருத்துவ விழிப்புணர்வூட்டிய சிலரைத் தேர்வு செய்து திருப்பூரில் உள்ள அரசுசார்பற்ற நிறுவனம் ஒன்றின் மூலம் மேலும் இரண்டு வாரகாலப் பயிற்சிக்கும் ஒரு உடன்படிக்கையைச் செய்தோம்.

அக்காலத்தில் சென்னையில் உள்ள பல மருத்துவ நிபுணத்துவம் பெற்றவர்களுக்கு நாங்கள் கடிதம் கொடுத்தபோது குறைந்த பணத் திலோ அல்லது இலவசமாகவோ செய்தார்கள். அக்காலத்தில் தமிழ் நாட்டில் ஈழம் என்ற சொல் மந்திரமாக இருந்தது. இதைத் தவறாக பாவித்தவர்களையும் முக்கியமாக சில தமிழர்கள் தம்மை அகதி எனச் சொல்லி தமிழ்நாடெங்கும் உள்ள கோயில்களுக்கு இலவசமாக இரயில்களில் யாத்திரை செய்தவர்களையும் எனக்குத் தெரியும்.

அகதி முகாம்களில் வசிப்பவர்களுக்கான மருத்துவ பயிற்சியை எனது மனைவியும் செய்யும்போது முகாம்களுக்குச் சென்று பயிற் சிக்கு ஆட்களை அழைத்துவருவதும் எனது தொழிலாகியது. கன்னியாகுமரி தூத்துக்குடி முதலான இரண்டு மாவட்டங்களையும் தவிர்த்து மற்றைய எல்லா மாவட்டங்களுக்கும் சென்றுவந்துள்ளேன். சென்னையில் இருந்து தெற்கே மண்டபம் வரையுமுள்ள தமிழ்நாட்டு கடற்கரையெங்கும் இலங்கை அகதிகள் இருந்த புயல் பாதுகாப்பு மண்டபங்களெங்கும் கால்கள் மணலில் புதைய தோளில் சுமந்த பொதியுடன் நடந்த காலங்கள் இனிமையானவை. ஏதோ ஒரு முக்கியமான கடமையை ஆற்றுவதற்காக இந்தியா வந்துள்ளேன் என நினைத்த நாட்கள் அவை.

இப்படி ஒரு நாள் நாகப்பட்டிணம் அருகே இருந்த அகதிமுகாமிற்கு போக வேண்டியிருந்தது. பஸ்சில் இருந்து இறங்கி சில கிலோ மீட்டர் நடக்கவேண்டும். அன்று என்னுடன் கருணாநிதியும் துணையாக வந்தான். எமக்கு ஈரோஸ் இயக்கத்தைச் சேர்ந்த ஒரு தோழர் (பெயர்கள் நினைவு வைக்காமல் ஈரோஸ் மற்றும் ஈ.பி.ஆர். எல். எஃப். இனரை தோழர் என்பது இலகுவானது) என்னையும் உதவியாக இருந்த கருணாநிதியையும் தனது மோட்டார் சைக்கிளில் ஏற்றிக்கொண்டு மூன்று பேராக பயணித்தார்.

மூன்று பேர் ஒன்றாக ஒரே சைக்கிளில் செல்வதால் பொலிசின் கண்களில் இருந்து விலகுவதற்காக பிரதான பாதைகளை விலக்கி தோட்டப் பிரதேசங்களுடாக சென்றபோது மதியசூரியன் சுட்டெரித் தது. சைக்கிளில் நான் நடுவே கருணாநிதி பின்னாலும் அமர்ந்திருக்க பழைய மோட்டார் சைக்கிள் சத்தமிட்டபடி அந்தப் பிரதேசத்தை ஊடறுத்துப் பயணித்தது. பனைகளும் தென்னைகளும் ஆங்காங்கு இருந்த மணல் தன்மையான தோட்டப்பிரதேசம்.

மழைக்காலத்தில் மானாவாரியாக அங்கு கச்சான் கடலை சாகுபடி செய்து அறுவடைக்கு பயிர்கள் தயாராக இருந்தது. எதிரில் இருந்து வந்த காற்றில் கலந்திருந்த உப்புச்சுவை நாக்கில் கரித்தபோது கடற் கரைக்கு சிறிது துரம்தான் இருப்பதை உணர முடிந்தது.

பல பனை மரங்கள் வரிசையாக பாதையின் இருபுறமும் அணி வகுத்திருக்கும் காவலாளிபோல் நின்றிருந்த பிரதேசத்தில் பாதையூ டாக சென்றபோது திடீரென மரத்தின் மறைவில் இருந்து பத்துக்கும் மேற்பட்ட ஆண்கள் முளைத்து எமது மோட்டார் சைக்கிளை சூழ்ந்து கொண்டதும் எமது சைக்கிள் நிறுத்தப்பட்டது. திரும்பிப்போகும்படி கூச்சலிட்டபடி வந்தவர்கள் தர்ம அடியாக கைகளினால் எங்களை அடித்தார்கள். அடிகளில் விரோதமான வேகம் இருக்கவில்லை. மோட்டார் சைக்கிளில் நான் நடுவில் இருந்ததால் பெரும்பாலான அடி கருணாநிதிக்கும ஈரோஸ் தோழருக்கும் பட்டது. கருணாநிதி இறங்கி தனது தலையை பொத்திக் கொண்டதால் அடிகள் அவனது தோளில் விழுந்தது. அடி, உதைகளை வாழ்க்கையில் பார்க்காத நான் இன்ன மும் சைக்கிளில் உறைந்து போய் இருந்தேன் ஈரோஸ் தோழர் தலை யில் ஹெல்மெட் இருந்ததால் அவர் தலை தப்பியது. ஆனால் அவருக்கு தோளிலும் நெஞ்சிலும் அடிகள் விழுந்தன. சிறிது நேரத்தில் ஏதோ நினைத்தரோ 'நாங்கள் ஈழத்தவர்' என்று அவர் கூவியபோது விழுந்த அடி மந்திரத்தால் கட்டப்பட்டதுபோல உடனே நின்றது.

அடித்தவர்கள் உடனே மன்னிப்புக் கேட்டார்கள்.

அடித்தவர்களில் வெள்ளை வேட்டி கட்டியபடி தலைமை வகித்த வர் விடயத்தை விளக்கினார்.

அந்தக் கடலைத் தோட்டத்தை அறுவடை செய்ய உள்ளூர்த் தொழிலாளர்கள் அதிக கூலி கேட்டிருக்கிறார்கள். அதைக் கொடுக்க மறுத்த தோட்ட உரிமையாளர் வெளியூரில் இருந்து கூலியாட்களை கொண்டுவர இருந்ததால் அப்படி வருபவர்களை அடித்து திருப்பி அனுப்ப உள்ளூர்த் தொழிலாளர் பனைகளிடையே மறைந்திருந்தார் கள். அந்த இடத்தில் அந்த நேரத்தில் நாம் சென்றதால் எமக்கு தர்ம அடி கிடைத்தது. அடித்தவர்கள் தங்களது வீட்டிற்கு அழைத்து எங் களை உபசரித்தார்கள். அவர்களோடு சில நிமிடங்கள் இருந்துவிட்டு அகதி மக்கள் இருந்த புயல் பாதுகாப்பு மண்டபத்திற்கு சென்றோம்.

தமிழ்நாட்டில் வசித்தபோது நான் பார்த்த ஒரு விடயம் தமிழ் நாட்டவர்களிடம் மிக இலகுவாக கூட்டமாக (mob mentality) ஒரே மனப்பான்மைக்கு சென்று விடுவார்கள். இதற்கு அதிக காரணம் தேவையில்லை. ஆனால் தனியாக இருக்கும்போதுதான் உண்மை களையும் நியாயங்களையும் புரிந்து கொள்வார்கள்.

எமது மருத்துவ நிலையத்தில் காலையில் வைத்திய சேவையளிப்பது என் மனைவியாக இருப்பதால் இரவு நேரத்திற்கு ஒருவரை நியமிப்பது என முடிவு செய்தோம். எமக்கு உதவியாக இருந்த கருணாநிதியுடன் ஒரு வைத்தியரை தொடர்ந்து வைப்பதற்கு முடிவு எடுத்தபோது அக்காலத்தில் மலையகத்தில் இருந்து வன்முறையால் பாதிக்கப்பட்ட ஒருவர் பத்மநாபாவால் அறிமுகப்படுத்தப்பட்டார். அவரது சகோதரர் ஏற்கனவே ஈழமக்கள் விடுதலை முன்னணி உறுப்பினர் அல்லது ஆதரவாளர் என நினைக்கிறேன். டொக்டர் பொஸ் எனப்படும் இவர் தோட்ட வைத்திய அதிகாரியாக இருந்தவர். 83 இல் பாதிப்படைந்தவர். இரண்டு குழந்தைகள் உள்ள குடும்பஸ்தர் என்பதால் அவரை வேலைக்கு அமர்த்திவிட்டு பகலில் எனது மனைவி கிளினிக்கைப் பார்த்துக் கொள்வார். இரவில் நீங்கள் பார்த்துக்கொள்ளுங்கள் என அவரைக்கேட்டுக்கொண்டோம். ‘எங்களால் இந்தியப்பணத்தில் 500 ரூபாய் மட்டும் தரமுடியும். இதனை உங்களுக்கான வேதனமாக நினைக்கவேண்டாம். அப்படி வேதனம் கொடுக்கும் நிலையில் நாங் கள் இல்லை. ஆனால் உங்களுக்கு இந்தப் பணம் உதவும் என்ற நம் பிக்கை உள்ளது’ என்றேன்.

டொக்டர் பொஸ் வேலையை ஏற்றுக் கொண்டார். அவர் எப்பொழுதும் மடிப்புக் கலையாத முழுக்கை சட்டையும் அணிந்து அதனை முழுநீளமாக விடுவார். மலையக சீதோஸ்ணத்தில் பழகிய பழக்கம் சென்னை வெய்யிலிலும் அதை விடமறுத்தார்.

இந்தக் காலத்தில் இயக்கங்களில் கால் இழந்தவர்களையும் எம்மால் பார்க்க முடிந்தது. அப்பொழுது எமக்கு ஜெய்ப்பூர் காலணி பற்றிய விடயங்களையும் அறிய முடிந்தது.

86 ஆம் ஆண்டில் தமிழர் மருத்துவ நிதியத்தின் செயலாளரான நானும் நண்பன் டொக்டர் சிவநாதனும் அக்காலத்தில் ஜெய்ப்பூர் செயற்கை காலை அறிந்து, அங்கு சென்றோம்.

பம்பாயில் பரதம் பயின்ற சுதா சந்திரன் திருச்சியில் நடந்த விபத்தில் காலை இழந்து ஜெய்ப்பூர் செயற்கைக் காலை பொருத்திய பின் நடனமாடி மயூரி திரைப்படத்தின் மூலம் சினிமா நடிகையாக அறியப்பட்டார். இந்த விடயம் அக்காலத்தில் மிக முக்கியமாக பேசப்பட்டது.

எலும்பு சத்திர சிகிச்சை வைத்தியரான டொக்டர் பிரமோத் கரன் சேத்தி (Dr Pramod Kran Sethi) ராம் சந்தரால் Ram Chandara)ஆரம் பத்தில் வடிவமைக்கப்பட்ட அலுமினியத்தால் ஆன இந்த செயற்கைக் கால்கள் டொக்டர் சேத்தியினால் முன்னேற்றமாக தரப்படுத்தப்பட்டு பல ருக்கும் பொருத்தப்பட்டது. இந்தக் கால்கள் காலணி அணியாதவர் களுக்கு ஏற்றபடி உள்ளதால் மூன்றாம் உலக நாடுகளில் வாழ்பவர் களுக்கு உகந்தது. மிகக் குறைந்த செலவில் தயாரிக்க முடியும். நிலத்தில் காலை மடித்தபடி இருப்பது, வயலில் இறங்கி வேலை செய் வது முதலான நடைமுறைக்கு இந்த செயற்கைக் கால்கள் இலகு வானது. அக்காலத்தில் போர் நடந்த ஆப்கானிஸ்தான் மொசாம்பிக் போன்ற நாடுகளில் மிதிவெடியால் கால்களை இழந்தவர்களுக்கு இது பெரிதும் பயன்பட்டது.

முதலாவதாக ரயிலில் டெல்லி பின்பு ஜெய்ப்பூர் சென்றது மறக்க முடியாத அனுபவம். கட்டிடங்களெல்லாம் மென்சிவப்பு நிறத்தில் இருந்ததும் வண்ணவண்ண தலைப்பாக்கள் கட்டிய மனிதர்கள் மொட்டாக்குப் போட்ட கலர்கலரான பெண்கள் பாதைகளில் ஒட்ட கங்கள் என ஜெய்ப்பூர் அக்காலத்தில் எனக்கு ஆச்சரியத்தைக் கொடுத்தது.

ஜெய்பூருக்கு இரவு சென்றதும் ஹோட்டலில் தங்கிவிட்டு மறுநாள் நாங்கள் காலையில் சேவா மான்சிங் வைத்தியசாலைக்குச் சென்று விசாரித்தோம். அங்கு உள்ளவர்கள் தொலைபேசியில் 'இலங்கைத் தமிழர்கள் இருவர் உங்களை தேடிவந்திருக்கிறார்கள்' என்றார்கள்.

'உடனே அனுப்பவும்'

அந்த இளம் காலை நேரத்தில் டொக்டர் சேத்தியின் வீட்டில் உபசரிக்கப்பட்டோம்.

டொக்டர் சேத்தி நாங்கள் சென்ற காலத்தில் தனது வேலையில் இருந்து இளைப்பாறியிருந்தாலும் தொடர்ச்சியாக ஜெய்ப்பூர்க் கால் விடயத்தில் ஈடுபாடு கொண்டிருந்தார்.

சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தின் அழைப்பில் தான் ஆப்கானிஸ்தான் சென்றதையும் அங்கே ஜெய்ப்பூர் செயற்கைக் கால் செய்வதற்கு தாங்கள் பயிற்றுவித்ததையும் எமக்குக் கூறினார் அந்த எளிமையான மனிதர்.

நாங்கள் இலங்கையில் நடக்கும் போரை விளக்கிவிட்டு 'தற்பொழுது பெருமளவில் தேவை இல்லாவிடினும் எதிர்காலத் தேவையைக்கருதி சிலரை செயற்கை கால் செய்வதில் பயிற்றுவிக்க விரும்புகிறோம்' என்றேன்.

அதற்கான ஆவன செய்வதாக உறுதியளித்தார். காலையுணவை அவரது வீட்டில் உண்ட பின்பு வெளியேறினோம்.

சில மணி நேரம் அவருடன் பேசியதில் அவரது எளிமையும் மனிதாபிமான உணர்வும் சேவை மனப்பான்மையும் என்னை மிகவும் கவர்ந்தது.

உலகப் புகழ் பெற்ற ஒதோபீடிக் சேர்ஜன் என்பதற்கான தன்மை எதுவும் அவரது வார்த்தையில் வெளிவரவில்லை. மருத்துவ சொற்கள் எதுவும் பாவிக்காது சாதாரண மனிதராக அவர் பேசினார்.

இறுதியில் 'நீங்களா இந்த ஜெய்ப்பூர் காலை வடிவமைத்தது? என்ற எனது கேள்விக்கு அமைதியாக 'அதன் பெருமை ராம் சந்தருக்கே சேரும் என்றார்'

டொக்டர் சேத்தி காசியில் பிறந்தவர் மருத்துவராகிய பின்பு எடின்பெரோவில் எலும்பு முறிவு சத்திரசிகிச்சையில் பயிற்றப்பட்டவர். ஆரம்பத்தில் மரத்திலும் இரப்பரிலும் ஜெய்ப்பூர் காலை வடிவமைத்த ராம் சந்தரின் வடிவமைப்பை பிற்காலத்தில் நாங்கள் பார்த்தபோது அலுமீனியத்தை உபயோகித்து அக்கால்களின் நிறையை குறைத்தார்கள்.

அதன் பின்பு மூன்றுதடவை ஜெய்ப்பூர் சென்று 18 இலங்கைத் தமிழர்களை பயிற்றுவித்தோம். இதன் பின்பே இலங்கையர் பலர் அரசாங்கத்தின் சார்பில் பயிற்றப்பட்டனர்.

எலும்பு சத்திரசிகிச்சை மருத்துவராகிய டொக்டர் பிரமோத் கரன் சேத்தி பேராசிரியராக இருந்து இளைப்பாறியவர். இவரது சேவைக்காக இந்திய அரசாங்கத்தால் பத்மஸ்ரீ விருதும், பிலிப்பைன்ஸ் அரசால்

*ராமன் மாக்சேசே விருதும் அளித்தும் கௌரவிக்கப்பட்டவர்.*

*இந்தியாவுக்கு மட்டுமல்ல உலகத்துக்கே சொந்தமான டொக்டர் சேத்தி தனது **80** ஆவது வயதில் **2008** ஜனவரி **6** ஆம் திகதி காலமானார்.*

# கெடுகுடி சொற்கேளாது

■

ஜனநாயகமான கட்டமைப்பற்ற ஆயுத அமைப்புகள் தங்களுக்குள் பிரிவதும் அழிவதும், தாயின் வயிற்றில் குறைபாடான கருவொன்று அபோர்சனாக வெளியேற்றப்படுவது போன்ற இயற்கைச் செயல்பாடாகும். அது போல் இயற்கையின் வலிமையானவை நிலைப்பதும், நலிந்தவை அழிவதுமான டரர்வினியன் தத்துவமாகும்.

சகோதர இயக்கங்கள் விடுதலைப்புலிகளால் அழிக்கப்பட்டது என்று பலராலும் கூறப்பட்டாலும், அது மிகையானது. ஆனால் அந்த இயக்கத்தில் இருந்தவர்கள் விடுதலைப்புலிகளால் வேட்டையாடப் பட்டார்கள் என்பதே உண்மையாகும்.

இரண்டிற்கும் என்ன வித்தியாசம் எனக் கேட்கலாம்.

மற்ற இயக்கங்கள் உள்ளக உடைவு (Implosion) மூலம் ஏற்கனவே தங்கள் தலைகளில் துப்பாக்கியால் சுட்டுக் கொண்டு விட்டார்கள். இது இயக்க வரலாறு தெரிந்தவர்களுக்குத் தெரியும். ஆனால் இன விடுதலையை நோக்கமாக மட்டுமே வந்த இளைஞர்களைத் துடி துடிக்கச் சுட்டு எரித்ததே விடுதலைப்புலிகள் செய்த பாவகாரியம்.

அந்தப் பாவங்கள் அவர்களை நிழலாகத் தொடர்ந்தது. இறுதியில் மற்றவர்களுக்கு அவர்கள் செய்தது, அவர்களுக்கு இலங்கை அரசால்

நடந்தது.

சிலருக்கு வேறுவிதமாக நடந்தது. ரெலோ இளைஞர்களைக் கொலைசெய்த கிட்டு, மாத்தையா என்பவர்கள் வயதாகி இறக்க வில்லை. அதேபோல் முள்ளிவாய்க்காலில் நிட்சயமாக பிரபாகரன் சிறிசபாரத்தினத்தின் இறுதி கணங்களை நினைக்காமல் இருந்திருக்க முடியாது. ஒருவேளை 'இராஜபக்சாவிடம் நான் பேசிப் பார்க்கிறேன்' என ஒரு இலங்கை இராணுவத் தளபதியிடம் சொல்லியிருக்கலாம்.

86களில் மிகவும் பலமாக இருந்த ரெலோ இயக்கம் இரண்டாகப் பிரிந்து தனது அழிவைத் தேடிக்கொண்டது. இந்தியாவில் இருந்த போது அதைப் பார்த்தேன்கேட்டேன் ஓரளவு தடுப்பதற்கும் முயன் றேன். கெடுகுடி சொற்கேளாதென்ற வார்த்தைக்கு அர்த்தத்தைப் புரிந்து கொண்டேன்.

எனது அக்கால நினைவுகளை மீட்டும் போது வயிற்றுப் பேதிக்காக இரவு குடித்த கசப்பு மருந்து வாயில் வருவது போன்ற உணர்வுகள் ஏற்படும்.

86ம் ஆண்டுகளில் நானும் டாக்டர் சிவநாதனும் தமிழர் மருத்துவ நிலையத்தின் வேலைகளோடு ஒரு வித கட்டைப் பஞ்சாயத்து வேலை என இந்தியத் தமிழிலும், ஊர் விதானை வேலை என நம் ஊர்த் தமிழிலும் சொல்லக்கூடிய வேலைகளில் ஈடுபட்டிருந்தோம். அவை நாங்களாக விரும்பிச் செய்த வேலைகளில்லை. அத்துடன் எமது தொழித் திறமைக்கு உட்பட்டவையல்ல. எந்த லாபமும் இல்லை. ஆனால் இறுதியில் மனக்குழப்பத்தை உருவாக்கி, அன்றிரவு கைக்காசை செல வழித்து மதுவின் மடியில் இருவரையும் கொண்டு நிறுத்தியிருக்கும்.

மதுவைப்பற்றிச் சொல்லாது என் இந்திய நினைவுகளைக் கடந்து போக முடியாது.

மதுவில் இலங்கைக்கும் இந்தியாவிற்கும் நியாயமான வித்தியாச முள்ளது. இலங்கையில் வடிசாராயம் கூட பக்தி சிரத்தையோடு வடிக்கப்பட்டிருக்கும். அதிலும் தென்னிலங்கையர்களின் கைபக்குவம் விஷேசமானது. தங்கொட்டுவ பகுதியில் வடிக்கப்பட்டவை. தற் போதைய சிங்கிள் மோல்ட்டைவிடச் சிறந்தவை. ஆனால் இந்தியாவில் எல்லாவற்றையும் குடிக்க முடியாது. இன்றுபோல் வெளிநாட்டு மதுக் கள் இல்லாத காலம். அடுத்தநாள் தலையிடிக்காது. எழும்பி வேலைக் குச் செல்லவேண்டுமென்ற ஆவலில் எமக்குப் பொருந்திவந்த

இந்திய குடிபானம் ரோயல் சாலஞ் எனப்படும் விஸ்கிதான். விலை அதிகமானது. பார்லியில் இருந்து வடிப்பது விஸ்கி. ஆனால் ரோயல் சாலஞ் பெரும்பாலும் இருப்பது கரும்பிலிருந்து வரும் மதுசாரமே - அப்படியென்றால் ரம் அல்லது சாராயம் என்றுதானே போடவேண்டும்? இந்தியாவில் பார்லி விளையாது - கரும்பு ஏராளம். இறக்குமதியான பார்லியுடன், கரும்பில் இருந்துவரும் மதுசாரத்தைக் கலந்து தயாரித் தார்கள். அக்காலத்தில் எமக்குத் ரோயல் சாலஞ் தரமானதாகத் தெரிந்தது. அத்துடன் எனக்குப் புகைபிடிக்கும் பழக்கமும் இருந்தது.

நாங்கள் இருவரும் செய்த விதானை வேலைகள் பல தரப்படும்.

சம்பந்தப்பட்டவர்களது பெயர்களை சொல்லமுடியாததால் தொழில் வகையறாக்களை இங்கு தருகிறேன்.

பல முறை இலங்கையில் இருந்து ஐரோப்பாவுக்குச் சென்னை யூடாக செல்லவிருந்த ஆண்கள், பெண்களுக்கு உதவி செய்தோம். அக்காலத்தில் இயக்கங்களில் உள்ளுடைவுகளால் ஒரு சாரரும், விடுதலைப்புலிகளால் அழிக்கப்பட்ட இயக்கங்களில் இருந்து கூட்டில் கலைந்த தேனிகளாக மற்றொரு தொகையினரும் சென்னையில் இருந்து வெளிநாடு செல்லத் தவித்தார்கள். போலிக் கடவுச் சீட்டுகள், எக்சிட் பேர்மிட்டுகள் பலரது தேவைகளாக இருந்தது.

தூள் வியாபாரம் செய்த ஒருவரிடம் விடுதலை இயக்கம் ஒன்று, சென்னையில் பணம் கேட்பதற்காகக் கடத்திவிட்டார்கள் அவரின் மனைவியர் தனது கைக்குழந்தையுடன் எங்களுடன் வந்து கெஞ்சிய போது அவர்கள் கேட்ட தொகையைப் பல மடங்கு குறைக்க உதவினோம்.

எம்மோடு நண்பனாக இருந்த ஒருவனை பின்பு இங்கிலாந்து கடவுச் சீட்டில் கனடா செல்வதற்கு உதவினோம். மெல்பேனில் பிற்காலத்தில் ரைம்ஸ் சஞ்சிகை தபாலில் எனது வீட்டுக்கு வரும்போது ஒரு காலத் தில் ஆப்பிரிக்க இனத்தவனது ஆங்கில கடவுச்சீட்டு ரைம்ஸ் சஞ்சிகை யின் நடுப்பக்கத்திற்குள் வந்ததை இன்னமும் நினைக்க வைக்கிறது.

விடுதலைப்புலிகள் தமிழகத்தில் பத்து அணிகளைப் பயிற்றுவித்தார் கள். அதில் கடைசி அணியில் இருந்து பலர் விலகினார்கள். தப்பி வந்தவர்கள், மற்றும் தண்டிக்கப்பட்டதால் ஓடியவர்கள் எனப் பலருக்கு உதவினோம்.

சில காதல் பிரச்சனைகள் கூட எம்மிடம் வந்தது. அவையே மிகவும் கடினமானதாக இருந்தது.

நான் குடும்பமாக இருந்ததால் பெரும்பாலான விடயங்களை நேரடியாக என்னிடம் வருவதில்லை. பல விடயங்களை டாக்டர் சிவநாதன் கொண்டு வந்து சேர்ப்பார். அவைகள் இறுதியில் எம்மிருவரது பிரச்சனையாகிவிடும். விடுதலை இயக்கங்களில் உள்பிரச்சனைகள் ஏற்படும்போது அவை எம்மிடம் தேடிவரும். நாங்களும் தேடிப் போவதுண்டு.

86ம் ஆண்டு மே மாதம் ஆறாம் திகதி ரெலோ சிறிசபாரட்ணம் இறந்த நாளாகும். இதற்குச் சரியாக ஒரு மாதத்திற்கு முன்பு நடந்த சம்பவம் இது.

இரவு பத்து மணிக்குச் சென்னை நகரம் இராட்சத மிருகமாக ஒலி, ஒளியுடன், தூசியையும் துர்மணத்தையும் எழுப்பியபடி அசைந்து கொண்டிருந்தது. லிபேட்டி தியேட்டரருகே இருந்த வீட்டிற்குச் செல்வதற்காக எனது பழைய TVS 50 பெரிய பாதையை கடந்து வீட்டிற்குச் செல்லும்போது EPIC தகவல் நிலையத்தருகே கருப்பு பாண்டும், வெள்ளை சட்டை அணிந்து சிந்தனை தேங்கிய முகத்துடன் என்னெதிரே நடந்து வந்துகொண்டிருந்த கொண்டிருந்த ஈழமக்கள் விடுதலை முன்னணித் தலைவர் பத்மநாபாவைக் கண்டதும் வண்டியை நிறுத்தினேன். வழக்கமாக யாரோடாவது சேர்ந்து நடப்பவர் தனிமனிதராக நடந்து வந்து கொண்டிருந்தார் என்பது ஆச்சரியத்தைக் கொடுத்தது.

“ரஞ்சன் ரெலோவிற்குள் பிரச்சனை போலிருக்கு, தாசிற்கும் பொபிக்கும் நல்லா இல்லை போலிருக்கு (ரெலோவின் ராணுவ பொறுப்பாளர் இருவரும்).

“நானும் அப்படித்தான் நினைக்கிறேன்” வருகிறீர்களா சிறியிடம் போவோம்?

“ஓம்” எனத் தலையசைத்ததும் உடனே எனது TVS 50 இல் ஏறிவிட்டார் பத்மநாபா. தலைக்கு ஹெல்மெட் இல்லை என்பதால் எங்கள் TVS 50 மெதுவாகச் சென்றது. அல்லாவிட்டாலும் அது பழைய வண்டி வேகமாகப்போகாது. போகிற வழியில் கேட்டேன் ‘பாதுகாப்புக்கு ஏதாவது ஆயுதம் உள்ளதா?’

‘இல்லை. தோழர் நாம் ஏன் பயப்பட வேண்டும்?’

அப்பொழுது எனது உடல் விறைத்தது. இதயத்துடிப்பு பல மடங் காகியது.

எவ்வளவு விரைவாக சாலிக்கிராமம் செல்லமுடியும்? மாரி காலத்து நத்தைமாதிரி ஊர்கிறதே TVS 50! இதைவிட வேகமாகச் செல்லாது. குறுக்கு வழியில் சாலிக்கிராமம் செல்வோமா? வழியில் ஒரு ஓட்டோக் காரன் சாலையைக் கடந்தவனை ‘ஏய் வூட்டை சொல்லினையா’ என்றபோது வீட்டில் நானும் எதுவும் சொல்லாது வந்தது நினைவு வந்தது.

எனப்பல நினைவுகளுடன் மவுனமாகினேன். மனத்தில் பயம் போகவில்லை. ஏற்கனவே இயக்கங்கள் இந்திய மண்ணில் கொசு அடிப்பது போல் தங்களுக்குள்ளும் மற்றவர்களையும் கொலைகள் செய்து விட்டிருந்தார்கள். அதை விட கடற்கரைவரையும் கடத்திச் சென்று நடுக்கடலில் புள்ளிவிவரமற்று கல்லில் கட்டி இறக்கியும், கொலை செய்யும் காலத்தில் இந்த மனிதன் தனது பாதுகாப்பைப் பற்றி கவலைப்படவில்லை. இதில் நானும் மாட்டிக் கொண்டேனே! மனத் தின் எண்ணங்கள் ஒளியின் வேகத்தில்ப்பாய, ரெலோ அலுவலகம் இருந்த சாலிக்கிராமம் நோக்கி ஊர்ந்தோம்.

ரெலோ அலுவலகத்திலிருந்தபோது இரவு பத்தரை மணியிருக்கும். அடுத்த வீட்டிலிருந்து ஒரு குழந்தையைக் கையில் ஏந்தியபடி சிறி சபாரட்ணம் வந்தார். அருகில் காண்பது முதல்தடவை. நீலக்கோட்டுச் சட்டை நினைவிருக்கிறது. அந்தப்பிள்ளை ஏற்கனவே இறந்த ரெலோ அங்கத்தவரது பிள்ளையென்றார்.

நாலுமணிவரையும் பத்மநாபாவும் சிறிசபாரத்தினமும் பல விடயங் களைப் பேசினார்கள். இப்படி எழுதுவேன் என்றால் குறித்து வைத் திருப்பேன்.

ஈழவிடுதலையில் இவர்கள் முக்கியமானவர்கள் என்ற எண்ணம் மனத்தில் ஓடியது. நான் இயக்கத்தைச் சாராதவன் என்ற எந்தத் தயக்கமுமின்றி நேரங்கள், காலங்கள், எதிர்காலத் திட்டங்களைப் பற்றி பேசிக்கொண்டிருந்தார்கள். இருவரிலும் மதிப்பு வைத்திருந்தேன். பேசாமல் பார்த்துக்கொண்டிருந்தேன். எனது இதயத்தில் முழுக்க ரெலோ உடையப் போகிறது. இந்தச்சந்திப்பால் ஏதாவது சுமுகமான முடிவு வரவேண்டும் என்பதே நிறைந்திருந்தது. பாலஸ்தீன இயக்கங்கள்

உடைபட்ட கதையை படித்திருந்தேன்.

ஐந்து மணிநேரம் பத்மநாபா சிறியிடம் பேசியது "உங்கள் உட்பிரச் சனையை பேசித் தீருங்கள்" என்பதுதான். அமைதியாகத் தலை யாட்டியபடி கேட்ட சிறிசபாரத்தினம் அன்று காலையில் கடற்கரை செல்வதாக சொன்னார். நானும் பத்மநாபாவுடன் ஏதோ ஒன்றைச் செய்துவிட்ட திருப்தியில் ஒளியற்ற அதிகாலையில் கோடம்பாக்கம் திரும்பினோம். இரவில் வீடு வராததால் முகம் சுருங்கிய மனைவி மீண்டும் சுமுக நிலையடைவதற்கு பல நாட்கள் சென்றன. வீட்டில் மனைவிக்கு மகிழ்சியைத்தர ஏதாவது செய்ய வேண்டுமென்ற எண்ணத்தில் சிகரெட்டைப் புகைப்பதை அந்த ஒரு மாதகாலமாக நிறுத்தியிருந்தேன். மனைவிக்கு எனது இருமலைக் கேட்காத ஒரு மாதகாலமது.

அந்த மாதத்தில் ஒருநாள் விடுதலைப்புலிகள் ரெலோவை அடிப்ப தாக செய்தி வந்தது. ஈழமக்கள் விடுதலை முன்னணியினர் வயலஸ் தொலைவாங்கி வைத்திருந்த இடத்திற்குப் போனேன். அங்கிருந்த வர்கள் எனது காதில் ஒலிவாங்கியை வைத்தார்கள். அது ஒரு அதி காலை நேரம். ஒரு மணி நேரமாகக் காதில் வைத்து இலங்கையில் விடுதலைப்புலிகளுக்கும் அடையாற்றில் உள்ள விடுதலைப்புலி களுக்கும் நடந்த சம்பாசணையை கேட்க முடிந்தது. கிழக்கு மாகாணத்தில் மூதூர் விடுதலைப்புலிகளுக்குப் பொறுப்பான கணேஸ் என்பவர் ஏற்கனவே கிழக்குமாகாணத்தவர்கள் பலர் யாழ்ப்பாணத்தில் கொலை செய்யப்பட்டதால் மேலும் அவர்களைக் கொலை செய்வ தற்குத் தயங்கிய விடயம் எனக்கு அவர்கள் பேச்சில் தெரிந்தது. ஆனால் அதற்கு எதிராகப் பல தூசண வார்த்தைகள் அடையாற்றில் இருந்து தெற்கு நோக்கி வானலைகளில் அனுமானாகப் பறந்தது.

மிகவும் மனமுடைந்து அந்த இடத்தைவிட்டு வெளியே வந்தேன். எதிரில் இருந்த ஒருவரிடம் பில்டர் அற்ற சார்மினார் சிகரட் வாங்கி நெஞ்சுக்குள் பலமாக இழுத்தேன். புகையும் நிக்கொட்டினும் ஒரு மாதத்திற்குப்பின் புது அனுபவமாக இருந்தது. சென்னையில் அதி காலையில் மட்டுமே சிகரட்டை அனுபவிக்கமுடியும்.

யாழ்ப்பாணம் சென்ற சிறிசபாரத்தினம் தாசை யாழ்ப்பாணம் ஆஸ் பத்திரியில் கொலை செய்ததும் பின்பு சிறியுடன் இருநூறுக்கு மேற் பட்டவர்களைப் புலிகள் சுட்டுக் கொன்றதும் சரித்திரமான சம்பவங் களாகும்.

*ஈழமக்கள் விடுதலை முன்னணியினர் பலர் கொதித்தபடி விடுதலைப் புலித்தலைவர் பிரபாகரனை தூக்கியாவது இந்தக் கொலைகளை நிறுத்த முயன்றபோது பத்மநாபாவால் அது தடுக்கப்பட்டதாக அறிந்தேன். சிறி அன்றிரவு பேசிய போது சக்தி வாய்ந்த பல ஆயுதங் களை இந்தியர்கள் தந்ததாகவும் அவற்றை திருகோணமலை பிரதேசத்தில் பாவிக்கும்படி சொல்லியதாக கூறியதைக் கேட்டேன். மேலும் சிறியினது வார்த்தையில் இலங்கைக்குப் போகும்படி ரோவின் (இந்திய உளவுத்துறை) அறிவுறுத்தல் என்பதே எனக்குப் புரிந்தது. இப்படியானபோது விடுதலைப்புலிகள், ரெலோ இயக்கத்தை அழித் ததை இந்தியர்களால் தடுத்திருக்கமுடியும். குறைந்தபட்சமாக சிறி சபாரட்ணத்தைப் பாதுகாத்திருக்க முடியும். ஆனால் அவர்கள் எதுவும் செய்யவில்லை. ரோவின் அலுவலகத்தில் ரெலோவின் கெஞ்சியதாக நாராயணசாமியின் ரைகேர்ஸ் ஒவ் லங்காவில் உள்ளது.*

*ரெலோ விடயத்தில் **86** ல் அப்படி நடந்துகொண்ட இந்தியா, **2009** ல் வேறுவிதமாக நடந்துகொள்வார்கள் என விடுதலைப்புலி ஆதரவாளர்களோ விடுதலைப்புலிகளையோ நினைப்பது முரண்ண கையல்லவா? பலமானவை பலமற்றவைகளை அழிப்பது விதி யல்லவா? வரலாறு அதையே காட்டியுள்ளதல்வா?*

# தமிழ் மக்கள் விடுதலைக் கழகத்தின் பிடிபட்ட ஆயுதங்கள்

சென்னையின் வெப்பகாலம். ஒரு மதிய நேரத்தில் டாக்டர் சிவநாதன் வேர்வை முகத்தில் சிந்தியபடி வந்து, "இவன் முகுந்தனோடு பெரிய கரைச்சல்" என்றபோது அவரது முகம் அட்ட கோணத்தில் இருந்தது.

ஆரம்பத்தில் புரியவில்லை. தமிழ் மக்கள் விடுதலை இயக்கத்தின் தலைவர் உமா மகேசுவரனைக் குறிப்பிடுகிறார் எனப்புரிந்ததும் "ஏன் என்ன நடந்தது?' என்று விசாரித்தேன்

"புளட் - ஒஃபீசில் வேலை செய்த பிள்ளையொன்று இங்கு வந்து வேலை கேட்கிறது. அங்கே இருக்கமுடியாது என்று அழுகிறது."

"நாமள் அதுக்கு என்ன செய்வது?"

"பாவம் கலியாணம் கட்டாத பிள்ளை. இவங்களுக்கு நிக்கவரட்டிய வங்கிக் கொள்ளையில் உதவியதால் அங்கிருக்க முடியாது இந்தியா வந்திருக்கு."

"உதவியவர்களுக்கு உதவாத இவன்கள் எப்படி மக்களுக்கு உதவப் போகிறார்கள்" என்று எனது ஆற்றாமையை வெளியிட்டேன்.

எங்களது மருத்துவ நிலயத்தில் ஏற்கனவே ஒரு பெண் லிகிதர் வேலை செய்கிறார். அதற்கு மேல் ஒருவரை நியமித்து பணம் கொடுக்க

வழியில்லை.

மாதத்தில் ஒரு நாள் நடக்கும் கூட்டத்தில் நியமனங்கள் மற்றும் முக்கிய முடிவுகளின் அங்கீகாரம் அவர்களிடம் பெறவேண்டும் அக் காலத்தில் இருந்த ஐந்து பெரிய இயக்கங்களில் இருந்தவர்களும் அந்த நிர்வாக சபையில் இயக்குநர்களாக இருந்தார்கள். அதில் புளட் இயக்கத்தினரும் இருந்தார்கள். புளட் இயக்கத்தில் இருந்து விலகி வந்த ஒருவர் எங்களிடம் வேலை செய்யும்போது நிட்சயமாக எதிர்ப்பார்கள் என்பது எங்களுக்குத் தெரியும்.

பெயர் நினைவில்லாத, போதும் சராசரிக்கு மேற்பட்ட அழகான அந்தப் பெண்ணின் சோகமான முகம் எனக்கு இன்னமும் நினைவிற்கு வருகிறது.

எனது இதயமும் அனலிடை மெழுகாகியது. குறைந்த பட்சம் அடுத்த கூட்டம் நடக்க ஒரு மாதமிருக்கிறது. அத்துடன் கூட்டத்தை கொஞ்சம் பின் தள்ள முடியும். அந்த இடைவெளியில் வேறு இடத்தில் அந்தப் பெண்ணால் வேறு வேலை தேடமுடியம். இது ஒரு அவசரமான தேவைக்கான வேலை என்று மனத்தைத் சமாதானப் படுத்திக் கொண்டு வேலை கொடுத்தோம். மாதத்திற்கு முன்நூறு இந்திய ரூபாய்கள் கொடுக்க முடிந்தது.

சொல்லி வைத்தாற்போல் எமது கூட்டம் நடந்தது. அதற்கு ஐந்து இயக்கத்தினரும் வந்திருந்தனர் .

காரியதரிசி என்ற முறையில் மற்ற விடயங்ககளை) எல்லாம் என்னால் எடுத்து கூட்டத்தில் பேசமுடிந்தது இந்த நியமன விடயத்தை இறுதியில் எடுப்பதென்ற நோக்கத்தோடு நான் இருந்தேன்.

புளட்டின் சார்பாக வந்த வாசுதேவாவிற்கு எனது தாமதம் பிடிக்க வில்லை. நான் பேசியதை இடைநிறுத்தி, “இயக்கத்தில் இருந்து விலகியவர்களுக்கு நீங்கள் ஆதரவு கொடுக்கக்கூடாது. இப்படி நடந் தால் எங்கள் ஒற்றுமை குலையும். மற்றவர்களும் இதேபாணியில் வெளிக்கிடுவார்கள்” என்றார்.

எங்களது கூட்டத்தில் பேசும் விடயங்களைக் கேட்டபடி அந்தப் பெண் பக்கத்து அறையில் இருக்கிறார்.

எனக்குப் படு ஆத்திரம். ‘அக்காலத்தில் ஏற்கனவே 250 பேருக்குமேல்

ஓரத்த நாட்டில் நீங்கள் கொலைகளை செய்துவிட்டிருந்தீர்கள். இயக்க ஒற்று மையைப் பற்றி நீங்கள் பேசுகிறீர்கள். அதைவிடத் தீப்பொறி குழு என்று புளட்டில் இருந்து பிரிந்து வெளியே சென்ற காலம். பல விடயங்களைக் கேட்க நினைத்தாலும் கேட்க முடியாதவாறு எனது வாய் கட்டப்பட்டிருந்தது.

மேசையைச் சுற்றி இருந்தவர்களில் என்னெதிரே இருந்த டாக்டர் சிவநாதனைப் பார்த்தேன். அவர் கீழே பார்த்தபடியிருந்தார்.

கோபம் வந்தால் அவருக்கு வார்த்தைகள் தடக்குப்படுவதுடன் தூசணமும் வெளிவரும். பேசாதிருப்பது நல்லது. தலைவரான டாக்டர் சாந்தி இராஜேந்திரமும் பேசவில்லை.

நான் சொன்னேன்.

“உங்கள் இயக்கத்திலிருந்து பிரிந்து வந்ததாக எங்களுக்குத் தெரியாது. இலங்கையைச் சேர்ந்த ஒருவர் உதவி கேட்டபோது செய்தோம் அதுவும் இடைக்கால உதவியாக.”

உமா மகேசுவரனுக்கு வாசுதேவா இறுதிவரையும் உண்மையாக இருந்த ஒருவர். மற்றவர்கள் பிரிந்தபோது கடைசிவரையும் துணையாக இருந்தவர் என்பதால் நிட்சயமாக இது உமாவின் அறிவுறுத்தலாகத் தான் இருக்கும். அப்பொழுது ஊரில் கொம்பேறிமூக்கனைப்பற்றி ஒரு கதை சொல்லுவார்கள். அது நினைவுக்கு வந்து தொலைத்தது. அந்தப் பாம்பு ஒருவனைக் கொத்தினால் அவன் இறந்தபின் சுடுகாட்டில் எரிவதை மரத்தில் இருந்து பார்க்குமென்பார்கள்.

எங்களது கூட்டம் முடிந்ததும் அந்தப் பெண் கலங்கிய கண்களுடன் வெளியே சென்ற காட்சி என் மனதில் நிழலாகப் படிந்திருக்கிறது. என்னை ஒரு கையாலாகாதவன்போல் உணர்ந்தேன்.

உண்மை, நியாயம் என்பவற்றைவிட இயக்கங்களினது ஒற்றுமையை நினைத்தால் நாங்கள் அன்று கோழையாகினோம் .

கூட்ட முடிவில், புளட் இலங்கையில் எதுவிதமான இராணுவத் தாக்குதலில் ஈடுபடாத போதிலும் அன்று பெரிய விடயத்தை சாதித்த நினைவோடு வாசுதேவா போயிருக்கலாம்.

---------------------

*இந்த விடயம் நடந்து சில காலங்கள் உருண்டோடின. ஒரு நாள் வாசுதேவா தனியாக வந்தபோது, நானும் டாக்டர் சிவநாதனும் பேசினோம். ஆனால் வாசுதேவாவுக்கு வார்த்தைகளை நாங்கள் வினாத்தாளில் கோடிட்ட இடத்தில் நிரப்புவது போன்று நிரப்ப வேண்டியிருந்தது. உடல் அடித்துக் கொன்று மூலையில் எடுத் தெறியப்பட்ட பிராணி போன்று என் முன்னால் நின்றார்.*

*ஏற்கனவே தமிழ்நாட்டில் உமாமகேசுவரன் சென்ற கார் சாலை விபத்தில் தப்பித்தது கேள்விப்பட்டேன். ஆனால் அதில் வாசுதேவாவும் சென்றிருந்ததாக அன்றே அறிந்தேன்.*

*சிவநாதன் அவர்களோடு பழகியவர். என்னிடம் தனியே வந்து 'அவன் முகுந்தன் காசில்லை என்று கையை விரித்து விட்டானாம் வாசுதேவாவிற்கு மருத்துவ சிகிச்சைக்கு காசு தேவையாம்' என்றதும் நான் சிவநாதனை முறைத்தேன்.*

*இதுவரை மருந்துகள் மற்றும் சிகிச்சையாக இயக்கத்தவர்களுக்கு உதவி செய்திருக்கிறோம். ஆனால் பணமாக கொடுப்பதற்கு விதியு மில்லை. விதியை நெளிப்பதற்கு எனக்கு மனமுமில்லை.*

*சிவநாதன் எனது தோளில் கையைப் போட்டு "அவனது குடும்பம் மிகவும் கஷ்டப்படுகிறது. இரண்டு பிள்ளைகளுக்கு நோயிருப்பதால் வாசுவின் மனைவி பாவம்."*

*மருத்துவ நிலையத்தின் நிர்வாகப்பொறுப்பில் இருந்து வாசுவின் வக்கீல் ஆகினார்.*

*மூவாயிரம் ரூபாயை எடுத்து வாசுவிடம் கொடுத்தேன்.*

*உமாமகேஸ்வரனுக்கு தன்னோடு சென்று காயமடைந்த வாசுதேவா வின் மருத்துவத்திற்குச் செலவழிக்க பணமில்லையா? அல்லது மன மில்லையா என்ற கேள்வி இன்றுவரை நிழலாக தொடருகிறது.*

\-\-\-\-\-\-\-\-\-\-\-\-\-\-\-\-\-\-

*85 ஆண்டு ஏப்ரில் மாதம் இந்திய சுங்கத்திணைக்களம் சென்னை யில் தமிழ் மக்கள் விடுதலைக் கழகம் என்ற புளட் இயக்கத்திற்கு இத யத்தில் ஆப்பொன்றை வைத்தார்கள். 1400 துப்பாக்கிகளும் 300 இயந் திரத் துப்பாக்கிகளும் மேலும் பல தகவல் தொடர்பு உபகரணங்கள் ஒரு கன்ரயினரில் வந்த போது இந்திய சுங்க உத்தியோகத்தினர்*

*அதைத் திறந்து பார்த்து விட்டு, அதைப் பறிமுதல் செய்து விட்டார்கள். அதன் பெறுமதி 300000 அமெரிக்க டொலர்கள். இது எல்லோருக்கும் தெரிந்த கதை . இதன் பின் 300000 டொலர்களை ஒரு பாலஸ்தீன ஆயுத வியாபாரியிடம் கொடுத்து ஏமாந்ததாக பின்பு படித்தேன் .*

*இந்த ஆயுதப் பறிமுதலுக்கு பின்னணியில் இதயத்தை உருக்கும் ஒரு கதை என்னிடம் உள்ளது.*

*86 களில் அடிக்கடி ஒருவர் வருவார். அக்காலத்தில் 40 வயதிருக்கும். சுத்தமான வெள்ளை சேர்ட் அணிந்திருப்பார். அவரைப் பார்த்தால் மதிப்போடு பேசத் தோன்றும். கனவானாகத் தோற்றமளிப்பார். அமைதி யாக சொற்களைக் கோர்த்து பேசுவார்.*

*அவர் எந்த வைத்தியத் தேவைகளுக்கும் வரவில்லை. எங்களோடு பேச மட்டும் வருவார். அதுவும் என்னோடு அதிகம் பேசுவார். அவர் புளட்டில் இருந்து விலகியவர் என்று என்னோடு பேசியபின்பு தெரிந்தது.*

*அக்காலத்தில் பல சிறிய ஈழவிடுதலை இயக்கங்கள் தீபாவளி பட்டாசாக உடைந்து சென்னையெங்கும் சிந்தியது. அந்த இயக் கங்களில் இருந்தவர்கள் விநாயகர் சதுர்த்தியின் பின்பாக கடலில் எறிந்த பிள்ளையார் சிலைகளாகினர். அப்படியானவர்கள் சிலர் எங்க ளோடு ஆறுதலாக வந்து பேசிப்போகும் ஆலமரமாக இருந்தோம். அதிலும் டாகடர் சிவநாதன் சீனசார்பு இடதுசாரியாகவும் அவர் பிறந்த இடம் கரவெட்டியானதால் பலர் தேடி வருவார்கள்*

*இந்த வெள்ளை சேர்ட் மனிதர் பேசிய பின்பு, அவரது பூர்வீகம் மனைவியின் ஊராகிய காங்கேசன்துறை எனத்தெரிந்தது. பாடசாலை கள் ஊர்கள் என வரும்போது யாழ்ப்பாணத்தவர்களாக நாங்கள் நெருங்கிப் பேசும் போது எங்களுக்கு உள்ளே ஓடும் இரத்தம் மெதுவா கச் சூடேறும். இதயத்தால் நெருங்கி உண்மைகளைப் பேசுவோம். இக்காலத்தில் எப்படியோ தெரியாது.*

*இந்த மனிதர் புளட்டிற்கு வந்த கதையை எனக்குச் சொன்னார் .*

*தோற்றம் இலங்கையராக இருந்தாலும் சிங்கப்பூரில் மிகவும் வசதி யாக வாழ்ந்தவர். ஈழப்போராட்ட அபிமானத்தில் புளட்டோடு தொடர்பு வைத்துக்கொண்டதுடன் இந்த ஆயுத கடத்தலிலும் சம்பந்தப்பட்டார்.*

*தாய்வானில் இருந்து சிங்கப்பூருக்கு கொண்டு வந்த ஆயுதங்கள் மீண்டும் பழைய காகிதங்கள் கொண்ட ஒரு கன்டயினருக்கு இரவிர வாக சிங்கப்பூரில் மாற்றப்பட்டது. அதைத் தனியாக பலரைச் சேர்த்து வேலைசெய்யமுடியாத காரியம் என்பதால் அதைத் தனது கையால் இரவோடு இரவாகச் செய்ததாகக் கூறினார்.*

*சிங்கப்பூரில் இருந்து வந்த கன்ரயினர் சென்னையில் பிடிபட்ட செய்தி வந்ததும் இந்த மனிதர் உடனே கைது செய்யப்பட்டு சித்திரவதை செய்யப்பட்டார். அந்தச் சித்திரவதையில் ஒரு பகுதியாக குளிர்அறை யில் பல மணி நேரம் அடைக்கப்பட்டார். இறுதியில் மரணதண்டனை விதிக்கப்பட்டார்.*

*அக்காலத்தில் சிங்கப்பூரில் ஜனாதிபதியாக இருந்த ஒருவர் உடனடி யாக பதவி விலகப்பணிக்கப்பட்டபோது அந்த ஜனாதிபதி ஏற்கனவே இவரை அறிமுகமாக இருந்ததால் தனது பதவிக்காலத்தின் இறுதி நாளில் ஜனாதிபதி மன்னிப்பு கொடுத்தார்.*

*இவர் விடுதலையாகும்போது இவருக்கு மோதிர விரலில் ஒரு சிறிய பகுதியும் ஒரு கடவாய் பல்லும் காணாமல் போய்விட்டது. அவரது கதையை அவர் சொல்லியதாக நான் இங்கு எழுதிய போதிலும் அவரது தொலைந்த அங்கங்களை நான் பார்த்தேன்.*

*இந்த மனிதருக்கு மன்னிப்புக் கொடுத்தாலும் அவரது பணம் சொத்துகள் எல்லாம் சிங்கப்பூர் அரசால் பறிமுதல்செய்யப்பட்டது. இவர் நாடு கடத்தப்படவேண்டும் என்ற விதிப்படி அவரிடம் இலங்கையா அல்லது இந்தியாவா எனக்கேட்டபோது இந்தியா என்றார் .*

*விமானம் வரையும் வந்து வழியனுப்பிய காவலர்களுக்கு நான் இந்தச் சிங்கப்பூருக்கு தமிழ் ஈழத்தின் தூதுவராக வருவேன் என்று சொல்லி விட்டு வந்ததாகக் கூறினார் .*

*அப்பொழுது எனது கண்கள் கலங்கியது. எப்படியான வாழ்க்கையை ஒரு மனிதன் தியாகம் பண்ணியிருக்கிறான் என்பதைவிட அவருக்கு ஈழவிடுதலையில் இருந்த ஆழமான நம்பிக்கை என்னைப் புல்லரிக்க வைத்தது.*

*“நான் மலையாக நம்பிய உமா எவனையும் சந்தேகத்துடன் பார்க்கிறான். தேநீர்கூட பிளாஸ்கில் எடுத்து வைத்துக் குடிக்கிறான். வாகனத்தில் போனாலும் சாரதிக்குப் பின்னால் ஒருவரை அமர்த்திவிட்டு*

அடுத்த பக்கத்தில் இருக்கிறான்" என்றார்.

இறுதியாக நான் சந்தித்தபோது சென்னையில் தோசைக்கடை யொன்று போட இருப்பதாகச் சொல்லிவிட்டுச் சென்றார். இவ்வளவு விடயங்களைச் சொன்ன மனிதர் தனது குடும்ப விடயங்களைப் பற்றி எதுவும் பேசவில்லை. அவர் மட்டுமல்ல ஏராளமானவர்கள் தாய், தந்தை, மனைவி, பிள்ளைகள் என்று குடும்பங்களையும் உயிர்களை யும் ஒறுத்து வேள்வியில் குதித்தார்கள்.

ஆனால் பலன்?

கடைசியாக, விரக்தியோடு அந்த மனிதன் எமது சூளைமேட்டு கட்டி டத்தில் இருந்து வெளியேறி நடப்பதை மாடியில் நின்று அதிக நேரம் பார்த்துக்கொண்டிருந்தேன்.

# மீண்டும் வெளியேறுதல்

■

ஈழத்திலிருந்து இந்தியா வந்த அகதி மக்களுக்காகவும், ஈழ விடுதலை இயக்கங்களின் தேவைக்காகவும் அமைந்த எமது நிறுவனம், மேலும் போரில் அங்கங்களை இழந்தவர்களுக்கும் உதவ விரும்பினோம். காலிழந்தவர்களுக்கான சேவையை அளிப்பதற்காக ஜெய்ப்பூர் காலை உருவாக்க,அதைத் தயாரித்த மருத்துவர் சேத்தியை சந்தித்து செய்த உடன்படிக்கையில் ஜெய்ப்பூர் வைத்தியசாலையில் பல இளைஞர்களுக்கு செயற்கைக் கால்களை செய்வதற்குப் பயிற்று வித்தோம். அவர்களில் பலரை அழைத்துக்கொண்டு ஜெய்ப்பூர் சென்றோம். ஆனால் நானும் டாக்டர் சிவநாதனும் அக்காலத்தில் பலதடவை சென்றபோது கூட ஜெய்ப்பூர் நகரத்தில் எந்த இடத்தையும் பார்க்கவில்லை. இப்பொழுது நினைத்துப் பார்த்தால் கொஞ்சம் ஆச்சரியமாக இருக்கிறது.

இரு காரணங்கள் - எமது சேவையில் ஒரு முகப்பட்டிருந்தோம். இரண்டாவது பொதுப்பணத்தில் எமது பிரயாணம் அமைந்திருந்தது. பிற்காலத்தில் அவுஸ்திரேலியா வந்தபின் இரு முறை உல்லாசப் பிரயாணியாக ஜெய்ப்பூர் சென்று பார்த்தேன்.

ஜெய்ப்பூருக்கு செல்வது இரண்டு நாட்கள் நீண்ட இரயில்ப் பயணம். இரயிலில் செல்லும்போது இடையில் புதுடில்லியில் தங்கி நிற்பது வழக்கம். அது பற்றிய சில நினைவுகளை எழுதுவது இங்கு

பொருத்தமாக இருக்கும்.

ஒரு முறை புதுடில்லியில் கோடைக்காலம். மணலுடன் போட்ட வேர்க்கடலைபோல் வெயில் எம்மை வறுத்துவிடும்.

நாம் தங்கிய இடங்களில் காற்றாடியோ குளிரூட்டியோ இருக்க வில்லை. பாதைகளில் நடக்கும்போது அடிக்கடி தண்ணீர் குடித்தபடி இருக்க வேண்டும். அங்குதான் மிளகு போட்டு தண்ணீர் குடிக்கலாம் என அறிந்துகொண்டேன். முகத்தைத் தழுவும் அனல்க்காற்று, அனலைதீவு புகையிலைச் சூளையை நினைவுக்குக் கொண்டு வரும். ஆனால் என்ன, இங்கு புகையில்லை. மணல் இருந்தது. தார் பாலைவனத்து மணலென்றார்கள். இரவில் படுத்தால் நித்திரை வராது. ஒரு நாள் படுக்கும் போது நிலத்தில் தண்ணீரை ஊற்றிவிட்டு அதில் பொலித்தீன் விரிப்பை போட்டுப் படுத்தது நினைவுக்கு வருகிறது.

புது டெல்லியில் நின்ற பெரும்பாலான நாட்களில், காலையும் மாலையும் சப்பாத்தியும் பருப்பும் கிடைக்கும். அல்லது பாண் கிடைக் கும். பல இடங்களில் உணவுண்பதற்கு பயம். ஏற்கனவே இலங்கையில் நோய் வந்து அனுபவப்பட்டதால் இந்தியாவில் இருந்த நாட்களில் தைபோயிட்டோ அல்லது ஈரல் அழற்சியோ வரக்கூடாது என்பதில் கவனமாக இருந்தேன். அதற்காகப் பட்டினியாக இருந்த நேரங்கள் உண்டு. ஒரு நாள் நண்பரொருவரோடு புதுடெல்லி ஆந்திரா பவனுக்கு சென்றேன். உணவு உருசியாக இருந்தது, ஆனால் அழுதபடி சாப் பிட்டேன். இந்தியாவில் இருந்த காலத்தில் இலங்கையில் அம்மா இறந்துபோது அம்மாவின் உடலைப் பார்க்க முடியாததால் அழுதேன். பல இரவுகள் தலையணையை நனைப்பேன். ஆனால் என்னைப் பகலில் கண்ணீரைவிட வைத்தது ஆந்திராபவனின் மதிய உணவே.

புதுடெல்லியில் நின்ற ஒரு நாள் கனவில் கருங்கண்ணிப்பாரை மீன் அலைக்கழித்தது. காலையில் உடுத்திருந்த சாரத்துடன் மீன் வாங்குவதற்காகற்காக ஓட்டோவில் அலைந்தோம். நியுடெல்லியில் இறுதியில் ஆக்கிமிடிஸ்போல் கூவாத குறையாக மீன் விற்குமிடத் தைக் கண்டுபிடித்தோம்

பெரிய மார்கட் அல்ல. சில பெண்கள் மீன்களைக் கூடையுடன் விற்றுக்கொண்டிருந்தார்கள். பார்ப்பதற்குக் கடல் மீனாகத் தெரிய வில்லை – குளத்து மீன். மற்ற காலங்களில் நெருங்கியிருக்கமாட்டேன். நான் இதுவரை யாழ்ப்பாணத்தில் தின்ற நல்ல மீன்களையும், சோற்றில்

கூழ்போல் படிந்து, உள்ளிறங்க மறுக்கத் தேங்காய் பாலில் செய்த தீவுப்பகுதி மீன் குழம்பையும் கற்பனை செய்தபடி, அந்த மீன் வியா பாரப் பெண்ணை அணுகியபோது அந்தப் பெண் எனது சாரத்தை பிடித்த படி ஏதோ கேட்டார். அதில் கல்கத்தா என்ற வார்த்தை மட்டும் புரிந்தது.

நான் சாரம் கழலாமல் இருக்க இரு கைகளாலும் இறுக்கிப் பிடித்த படி அந்தப் பெண்ணை முழித்தேன். எங்களது யாழ்ப்பாண வழக்கப்படி சாரம் அணிந்திருந்தேன்-உள்ளே ஒன்றுமில்லை. படுக்கையில் எழுந் ததும் மீன் நினைவு வந்ததால் உடனே போயிருந்தேன். அத்துடன் நம்மை இங்கு யாருக்குத் தெரியும் என்ற நினைப்பு

பக்கத்தில் நின்ற என் இந்திய நண்பன் சிரித்தபடி விளக்கம் சொன்னான். "எப்போது கல்கத்தாவில் இருந்து வந்தாய் ? அங்கு என்ன புதினமென இந்தப் பெண் கேட்டார்."

"அதைச் சாரத்தை இழுக்காமல் கேட்டிருக்கலாமே? "

"இப்படிக் கோடிட்ட சரத்தை இங்கு வங்காளிகளே உடுப்பார்கள் அவர்கள் இந்தக்கோட்டு துணியில் உள்ளேயும் போட்டிருப்பார்கள். இங்கு மீன் உண்பவர்களும் விற்பவர்களும் வங்காளிகளே. சாரத்துடன் வந்திருப்பதால் அவர்களில் ஒருவன் என்று நினைத்து விட்டார்" என்றான்.

இதே அனுபவம் சென்னையில் நடந்தது. ஆரம்பத்தில் பலர் மீன் வாங்கும்போது மலையாளமா எனக் கேட்பதுண்டு. சிரித்து விட்டு விலகி விடுவேன் பிற்காலத்தில் பல இலங்கையர்கள் தமிழகம் வந்ததால் சிலோனா என்பார்கள். அதன் பின்பாக சென்னைவாசிகள் பலர் சிலோன்காரர் வந்து மீன்விலையை ஏற்றியதாகத் திட்டியதையும் கேட்டபடி நகர்ந்துள்ளேன்.

இப்படி ஒரு நாள் புது டெல்லியில் நானும் டாகடர் சிவநாதனும் தங்கியிருந்தபோது பத்மநாபாவிடமிருந்து ஒரு செய்தி வந்தது.

'அசோகா ஹோட்டலுக்கு வரவும். இங்கு ஏராளமான பியர்கள் உள்ளன'

அப்பொழுது ஐந்து ஈழ இயக்கத்தினரும் புதுடில்லி வந்துள்ளார்கள் என்பது எங்களுக்குத் தெரியும். 32 வருடங்களின் பின்பு எழுதுவதால்

காலங்கள் சரியாக நினைவில்லை. இலங்கை – இந்திய ஒப்பந்தத்திற்கு முன்னோடியான காலம். ரெலோ இயக்கத்தை விடுதலைப்புலிகள் அழித்த பின்பான காலம்.

ரோ எனப்படும் இந்திய உளவுத்துறையைச் சேர்ந்த ஒருவர் கறுப்புக் காரில் வந்து எங்களை அழைத்துச் சென்றார். அந்த ஹோட்டல் புது டெல்லியில் எந்தப்பகுதி என்பது தெரியாது. முன்னிரவு நேரம் நானும் சிவநாதனும் பின் சீட்டில் இருந்தபடி பிரயாணித்தோம்.

புது டெல்லியில் ஹோட்டலுக்கு நாங்கள் வந்ததும் பத்மநாபாவுடன் சாந்தன், யோகசங்கரி வந்து எங்களைக் கூட்டிச் சென்றனர். அதன்பின் என்னைப் பார்த்து பேசியவர்கள் ஈரோஸ் பாலகுமாரன், ரெலோ செல்வம் என்பவர்கள். அப்பொழுது போதையில் மிதந்தபடி ஈரோசின் ஸ்தாபகராகிய இரத்தின சபாபதியும் வந்தார். ஏற்கனவே சிவநாதனு டன் அடே எனப்பேசும் நட்புக்கொண்டவர். நான் அவரிடம் கொஞ்சம் விலகியே இருப்பவன்.

எங்களை வந்து பார்க்காதவர்கள் பிரபாகரனும் உமாமகேஸ்வர னும்தான். ஆனால் இருவருக்கும் அருகருகே அறைகள் கொடுக்கப் பட்டிருந்தன.

எனக்கு மனதில் திக்கென்றது. இருவரும் எப்ப இந்த இடத்தை விட்டுப் போகலாம் என நினைவில் இருப்பார்கள் என நினைத்துக்கொண் டேன்.

இந்திய உளவுத்துறையின் கண்காணிப்பில் ஹோட்டலில் அறை களில் இருக்கிறார்களே! தமது மக்களுக்காக ஏன் ஒன்றாக இருக்க மறுக்கிறார்கள்?

சில நிமிடத்தில் முன்னுக்குப்பின் முரணான சிந்தனைகள் வந்து போனது.

அந்த நேரத்தில் இரத்தினசபாபதி “வாங்கடா நான் தம்பியையும் உமாவையும் பார்க்கலாம். அழைத்துச் செல்கிறேன்” என இருவரையும் கையில் பிடித்து இழுத்தார். உமாவை உண்ணாவிரதகாலத்தில் சந்தித்தாலும் பிரபாகரனை அருகில் சென்று சந்திக்காதவன்.

‘இல்லை நான் வரவில்லை’ என்றேன். என்னைப் பார்த்தபின் டாக்டர் சிவநாதனும் போகவில்லை.

*அதன் பின்பு எனது பாடசாலை நண்பனாகிய யோகசங்கரி தனது அறையின் உள்ளே அழைத்துச் சென்றார். அன்னியோன்னியமாக அவரது படுக்கையில் இருந்து பேசிவிட்டு அங்கிருந்த சில பியர் போத்தல்களுடன் வெளியேறிய நாம் மீண்டும் காரில் எமது இடத் திற்கு வந்தோம்.*

*அன்றிரவு உமாவையும் பிரபாகரனையும் அறையில் சந்திக்க மறுத் தது என்னைப் பொறுத்தவரையும் இன்றும் பெருமையான ஒரு எதிர்ப் பாக நினைக்கிறேன். காரணம் மற்றைய தலைவர்களும் கொலை செய்யக் கட்டளை இட்டிருக்கலாம். ஆனாலும் இவர்கள் இருவரும் நேரடியாக இரத்தக்கறைபடிந்தவர்கள் என்ற எண்ணம் எண்பது களிலே என் மனதில் ஏற்பட்டுவிட்டது.*

*நண்பர் யோகசங்கரி விடுதலைப்புலிகளால் பிற்காலத்தில் கொலை செய்யப்பட்டபோது அன்று அசோகா ஹோட்டலில் கட்டிலில் இருந்து இருவரும் பேசியது மேலும் நினைவுக்கு வந்த துக்கத்தை அதிகப்படுத்தியது.*

*நான் சென்னையில் இருந்த இறுதி நாட்களில் ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்ணணி பிரிந்தது. அவர்களது சென்னை அலுவலகத் தில் எனது நண்பர்களாக இருந்து மித்திரன், மகேஸ்வரராஜா போன்றவர் கள் டக்ளஸ் தேவானந்தாவோடு சென்றனர். அதற்குப்பின்பாக நடந்த சூளை மேட்டுச் சம்பவத்தை பற்றிக் கேள்விப்பட்டேன். ஒருநாள் அவர்களது எபிக் என்ற அலுவலகத்திற்குச் சென்றபோது சில நிமிடங்களுக்கு முன்பு தான் டக்ளஸ் தேவானந்தா வந்ததாகவும் வாய்த்தர்க்கம் நடந்ததாகவும் அறிந்தேன்.*

*அக்காலத்தில் அவர்களது பிரிவு கவலையைக் கொடுத்தபோதும் குறைந்த பட்சமாக பிரிந்து, ஆட்சேதமற்று செல்லக்கூடிய ஒரு கலாச்சாரத்தை உருவாக்கியிருந்தார்கள் என்பது மகிழ்வாக இருந்தது. மற்றைய தமிழ் இயக்கங்கள் மட்டுமல்ல, தமிழ் அரசியல்கட்சிகள் பிரிந்தவர்ககளைத் துரோகிகளாக மாற்றினார்களே!*

*ஈழப்போராட்டம் மட்டுமல்ல, இந்தியப் பின்தளம் மற்றும் தமிழ் இயக்கங்கள் எல்லாம் முடிவுக்கு வரும் என்பது அதிக அரசியலறிவற்ற எனக்கு புரியத் தொடங்கியது. அதுவரையும் அவுஸ்திரேலியாவுக்கும் அமெரிக்காவிற்கும் செல்வதற்கான அழைப்பு இருந்த போதிலும் புலப்பெயர்வை பின்போட்டபடியிருந்தேன். மனைவியின் பெற்றோர்*

மகளையும் பிள்ளைகளையும் நான் கொடுமைப்படுத்துவதாக குற்றஞ் சாட்டிவிட்டு அவுஸ்திரேலியாவுக்குச் சென்று விட்டதோடு தொடர்ச் சியான அழுத்தத்தை மனைவியிடம் கொடுத்தனர்.

இறுதியில் 87 மத்தியில் அவுஸ்திரேலியா கிளம்புவதற்கு தயாரான காலத்தில், எனது பாடசாலை நண்பனும் பிற்கால வட கிழக்கு மாகாணசபைக்கான நிதியமைச்சருமான கிருபாகரன், இந்தியப் படைகள் இராமநாதபுரத்தின் கரைப்பகுதில் இருப்பதாகச் சொன்னான்.

விமான நிலையம் வந்து என்னை வழியனுப்பவிருந்த செந்தில் என்ற குண்சி 'மச்சான் நான் வர ஏலாது. இந்தியர்கள் எங்களை அழைக்கிறார்கள்' என்று சொன்னபோது, நான் இருந்த வீட்டின் திறப்பை அவனிடம் கொடுத்துவிட்டு விமான நிலையத்திற்குப் புறப்பட்டேன் .

தமிழர் மருத்துவ நிறுவனத்தில் டாக்டர் தணிகாசலம் வந்து தொடர்ச்சியான மருத்துவ வேலைகள் நடந்தது. தலைமைப் பொறுப் பில் டாக்டர் சாந்தி இராஜசுந்தரம், நிதிப்பொறுப்பில் டாக்டர் சிவ நாதனும் இருந்தார்கள் ஒரு லட்சத்திற்குக் கீழே பணமும் இருந்தது.

எனது செயலாளர் பொறுப்பை எனது சிறுவயது நண்பனாகிய டாக்டர் பொன் இரகுபதியிடத்தில் (பிற்காலத்தில் பேராசிரியர்) கொடுத்தேன்.

மூன்று வருடங்களும் இரண்டு மாதங்களும் இந்தியாவில் இருந்த காலம் பேராதனையில் நான்கு வருடங்கள் மிருகவைத்தியம் கற்றது போன்று புதிய பாடங்களைக் கற்பித்தது. நான் திறந்த மனதுடன் இருந்ததால் நான் சென்ற இடங்கள், சந்தித்த மனிதர்கள், எல்லோருமே எனக்கு ஆசிரியர்களாகினர்கள். மூன்று வருடத்தின் முன்பு தலைமன்னாரில் கப்பல் ஏறியபோது இருந்த கலங்கிய மனம்தான் சென்னையில் விமானமேறியபோது இருந்தாலும் நான் அவுஸ்திரேலியாவிற்கு விமானமேறும்போது இந்தியாவில் பெற்ற அனுபவம் என்பனவே கூட வந்தது. எனது மனைவியும் குழந்தைகளும் அவுஸ்திரேலியாவைப்பற்றிய பிரகாசமான எணணத்தில் என்னைத் தொடர்ந்தனர்.